**24.06.2024 திங்கட்கிழமை**

**காலை 10.00 மணிக்கு**

**நடைபெற்ற சாதாரண**

**மன்றக்கூட்ட தீர்மானங்கள்**

**<u>ம.அ.3 ந.க.எண்.1244 /2024</u>**

**<u>கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.03.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:109/2024** **பொருள் எண்.01**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 3, பகுதி – 6, வார்டு -24, திருவீதி அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 3, பகுதி – 6, வார்டு-24 திருவீதி அம்மன் கோயில் தெருவில் 115.44 ச.மீ பரப்பளவு நிலத்தில் உள்ள பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் கட்டப்பட உள்ளது.

மேற்படி கட்டிடம் மாதவரம் நகராட்சியால் 1995 - 1996 ஆம் ஆண்டு கட்டப்பட்டது என தெரியவருகிறது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் இக்கட்டிடத்தினை இடித்து அகற்றிவிட்டு புதியதாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் கட்ட வேண்டியுள்ளது.

மேலும் 1995 - 1996 ஆம் ஆண்டு அப்போதைய மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்ட கட்டிடத்தின் விவரம் ஏதும் ஒப்படைக்கப்படாத நிலையில் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பீடு ரூ.60,000.00/- இதை தவிர்த்து மற்ற விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-3, பகுதி-6, வார்டு-24க்குட்பட்ட திருவீதி அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1995-1996 ஆம் ஆண்டு மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்டது என தெரியவருகிறது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 115.44 சமீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 49.5 சமீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ. 60,000.00/- |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதியதாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் கட்டப்பட உள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளது. |

| | | |
|---|---|---|
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர் - *3* |
| 10 | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | எண்.558 நாள் 12.07.2023 |

எனவே, மண்டலம்-3, பகுதி-6, வார்டு-24, திருவீதி அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உபயோகத்தில் இல்லாத அங்கன்வாடி மையக் கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 33/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5.ந.க.எண்.0682 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.02.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:110/2024** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, பகுதி - 14, வார்டு -62, கலவை தெரு வேதகிரி தெரு சந்திப்பில் அமைந்துள்ள பழைய கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்- 5, பகுதி-14, வார்டு-62, கலவை தெரு வேதகிரி தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய கோட்ட அலுவலக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்- 5, பகுதி-14, வார்டு-62, கலவை தெரு வேதகிரி தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய கோட்ட அலுவலக கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1979 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | பழைய கோட்டம் அலுவலககட்டிடத்தின் பரப்பளவு<br>தரைத்தளம் - 148.50 ச.மீ |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.3574.73 |
| 5 | கட்டிடத்தை இடிப்பதற்கு காரணம். | இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் இக்கட்டிடம் அபாயகரமாக உள்ளதால் அச்சாலை வழியாக செல்லும் பொதுமக்களுக்கு உயிர்சேதம் ஏற்படாமல் இருக்க அவசிய அவசரம் கருதி இக்கட்டிடம் இடித்து அகற்ற வேண்டிள்ளது. |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இக்கட்டிடத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் புதியதாக மகளிர் உடற்பயிற்சி கூட கட்டிடம் மதிப்பிற்குரிய மாமன்ற உறுப்பினர் கோட்டம்-62 அவர்களின் நிதியில் கட்டப்பட உள்ளது. |
| 7 | பழைய கோட்டம் அலுவலக கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்-5 |
| 8 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்: | எண்.039, நாள் :23.01.2024 |

எனவே, மண்டலம்- 5, பகுதி-14, வார்டு-*62*. கலவை தெரு வேதகிரி தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய கோட்ட அலுவலக கட்டிடத்தின் தரைதளத்தில் சில இடங்கள் இடிந்துள்ளது மற்றும் சுவர்களில் மரம் வளர்ந்து பல இடங்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. ஆகையால் அச்சாலை வழியாக செல்லும் பொதுமக்களுக்கு உயிர்சேதம் ஏற்படாமல் இருக்க இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 30/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**
**********

**ம.அ.6.ந.க.எண்.இ2/1043 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.03..2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:111/2024** **பொருள் எண்.03**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -6, பகுதி-17A, கோட்டம்-71, பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு) ராஜீவ் காந்தி பூங்கா அருகிலுள்ள பழுதடைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தை (அங்கன்வாடி எண் : 33603070301 , 33603070303 ) இடிப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6, பகுதி-17, வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு) ராஜீவ் காந்தி பூங்கா அருகிலுள்ள பழுதடைந்துள்ள அங்கன்வாடி கட்டிடம் (அங்கன்வாடி எண்:33603070301, 33603070303) சுமார் 81.83 சதுர மீட்டர் நிலப்பரப்பில் தரைதளம் 1988 ஆம் ஆண்டு கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், பள்ளி குழந்தைகள் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் 1000 சதுர அடி வரை கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6 பகுதி-17, வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு) ராஜீவ் காந்தி பூங்கா அருகிலுள்ள பழுதடைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தின் (அங்கன்வாடி எண் : 33603070301, 33603070303) விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-6, பகுதி-17, வார்டு-71க்குட்பட்ட பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு) ராஜீவ் காந்தி பூங்கா அருகிலுள்ள பழுதடைந்துள்ள அங்கன்வாடி கட்டிடம் ( அங்கன்வாடி எண் : 33603070301, 33603070303 ) |
| 2 | அந்தக் கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1988ஆம் ஆண்டு. |
| 3 | அந்தக் கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைத்தளம் : 81.83 சதுர மீட்டர் |
| 4 | அந்தக் கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 337 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 96,798.30/- |
| 6 | அந்தக் கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் |
| 7 | அந்தக் கட்டிடம் இடிப்பதற்கு முன் அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | அங்கன்வாடி கட்டிடம் |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்துள்ளது. |

| | | |
|---|---|---|
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் | மாமன்ற உறுப்பினர் அவர்கள் |

எனவே, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு) ராஜீவ் காந்தி பூங்கா அருகிலுள்ள பழுதடைந்துள்ள அங்கன்வாடி கட்டிடம் (அங்கன்வாடி எண் : 33603070301, 33603070303) மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.37/2024, நாள்.19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.6நக.எண்.இ2/1043/1 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03..2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:112/2024** **பொருள் எண்.04**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -6, பகுதி-17A, கோட்டம்-71, பெரம்பூர் நெடுஞ்சாலையில் (தெற்கு) உள்ள நியாய விலை கடை கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலையில் (தெற்கு) உள்ள நியாய விலை கடை கட்டிடம் சுமார் 81.83 சதுர மீட்டர் நிலப்பரப்பில் தரைதளம் மற்றும் முதல் தளம் 2013 ஆம் ஆண்டு கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும், இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அங்கு பணிபுரியும் அலுவலர், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் 1000 சதுர அடி வரை கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6, பகுதி-17, வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலையில் (தெற்கு) உள்ள நியாய விலை கடை கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-6, பகுதி-17, வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலையில் (தெற்கு) உள்ள நியாய விலை கடை கட்டிடம் . |
| 2 | அந்தக் கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1985ஆம் ஆண்டு. |
| 3 | அந்தக் கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைத்தளம் :81.83 சதுர மீட்டர் |
| 4 | அந்தக் கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 137.56 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 1,27,131.35 /- |
| 6 | அந்தக் கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் |
| 7 | அந்தக் கட்டிடம் இடிப்பதற்கு முன் அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது/ |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மாமன்ற உறுப்பினர் அவர்கள் |
| 10 | வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள் | எண்.846/2024 நாள் 14.02.2024 |

எனவே, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-71, பெரம்பூர் நெடுஞ்சாலையில் (தெற்கு) உள்ள நியாய விலை கடை கட்டிடம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 38/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.6.ந.க.எண்.இ1/ 2168 /1/2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.03.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:113/2024** **பொருள் எண்.05**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-17, வார்டு-72 கன்னிகாபுரத்தில் விளையாட்டு திடலினை தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் திட்ட பணிகள் மேற்கொள்ளபடவுள்ளதால், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தடையில்லா சான்றிதழ் மற்றும் உள்நுழைவு அனுமதி வழங்கி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது - கன்னிகாபுரம் விளையாட்டு மைதானத்தில் உள்ள உட்கட்டமைப்புகளை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-72, கன்னிகாபுரத்தில் பெரம்பூர் கிராமம் புல எண் 135/2, பிளாக் எண் 6ல் உள்ள விளையாட்டு திடல் நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள ரூ.15.15 கோடி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் பணி மேற்கொள்ள சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தடையில்லா சான்றிதழ் மற்றும் உள்நுழைவு அனுமதியானது மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட கன்னிகாபுரம் விளையாட்டு திடலானது 3.84 ஏக்கரில் உள்ள உட்கட்டமைப்புகளை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் 11.09.2023 நாளிட்ட செயல்முறை ஆணையில், கன்னிகாபுரம் விளையாட்டு திடலில் உள்ள உட்கட்டமைப்புகளை இடிக்கும் பணியானது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் மேற்கொள்ள இருப்பதால், 01.09.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் உள்ளவாறு மதிப்பீட்டினை நிர்ணயிக்க வேண்டியுள்ளதால் விளையாட்டு திடலில் உள்ள உட்கட்டமைப்புகளை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.00/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6, பகுதி-17, வார்டு-72, கன்னிகாபுரத்தில் உள்ள விளையாட்டு திடலினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் தர நிலை உயர்த்தும் பணிக்காக அந்த விளையாட்டு திடலில் உள்ள உட்கட்டமைப்புகளின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| 1. நடைபாதை இடிக்கும் பணி | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72க்குட்பட்ட கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள நடைபாதை |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 2011 – 2012 ஆம் ஆண்டு. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 1922.09 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 1922.09 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.17,98,870.97/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் இல்லை |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் *Circle II. CW Letter No.SE.II/CW/DB/F1392/2023 Dated 14.03.2024* |

| **2. இருப்பு அறை இடிக்கும் பணி** | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72 கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள இருப்பு அறை |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1990 - 1991 ஆம் ஆண்டு. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 16.03 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 16.03 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. 93,020.70/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் Circle II, CW Letter No.SE.II / CW/DB/F1392/2023 Dated 14.03.2024 |

| **3. உடற்பயிற்சி கூடம் இடிக்கும் பணி** | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72க்குட்பட்ட கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள உடற்பயிற்சி கூடம் |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1990 – 1991 ஆம் ஆண்டு. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 88.04 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 88.04 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. 2,88,051.17/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் Circle II, CW Letter No.SE.II CW/DB/F1392/2023 Dated 14.03.2024 |

| 4. கழிப்பறை கட்டிடம் இடிக்கும் பணி | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72, கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள கழிப்பறை கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2011 – 2012 ஆம் ஆண்டு. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 13.04 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 13.04 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. 2,87,819.35/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் Circle II. CW Letter No.SE.II CW/DB/ F1392/2023 Dated 14.03.2024 |

| 5. பார்வையாளர் அமருமிடம் (Gallery) இடிக்கும் பணி | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72, கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள பார்வையாளர் அமருமிடம் (Gallery) |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1997 – 1998 ஆம் ஆண்டு. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 802.86 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 802.86 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. 2,52,403.07/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் Circle II. CW Letter No.SE.II / CW/DB/ F1392/2023 Dated 14.03.2024 |

| **6. பெர்கோலா *(Pergollah)* இடிக்கும் பணி** | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72க்குட்பட்ட கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள பெர்கோலா *(Pergollah)* இரண்டு எண்ணிக்கைகள் |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2011 – 2012ஆம் ஆண்டு. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | *79.27* சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | *79.27* சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. *86,345.81/-* |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் *Circle II. CW Letter No.SE.II / CW/DB/ F1392/2023 Dated 14.03.2024* |

| **7. சறுக்கு மேடை *(Skating Rink)* இடிக்கும் பணி** | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72, கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள சறுக்கு மேடை *(Skating Rink)* |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2011 – 2012 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | *350.52* சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | *350.52* சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. *2,51,841.94/-* |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் *Circle II. CW Letter No.SE.II / CW/DB/F1392/2023 Dated 14.03.2024* |

| **8. கீழ்நிலை நீர் தேக்க தொட்டி இடிக்கும் பணி** | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72, கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள கீழ்நிலை நீர் தேக்க தொட்டி. |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1989 – 1990 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 18.65 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 18.65 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. 39,163.83/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ளபட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் Circle II, CW Letter No.SE.II / CW/DB/ F1392/2023 Dated 14.03.2024 |

| **9. மின்னணு கழிப்பறை (E- Toilet) இடிக்கும் பணி** | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72க்குட்பட்ட கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள மின்னணு கழிப்பறை (E- Toilet) |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2011 – 2012 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 3 எண்ணிக்கை |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 3 எண்ணிக்கை |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. 2,15,864.52/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ளபட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் Circle II, CW Letter No.SE.II / CW/DB/ F1392/2023 Dated 14.03.2024 |

| **10. கொடிமரம் மற்றும் மேடை *(Flag Post and Platform)* இடிக்கும் பணி** | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-72, கன்னிகாபுரம் பிரைட்டன் தெருவில் உள்ள கொடிமரம் மற்றும் மேடை *(Flag Post and Platform)* |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1989 – 1990 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 11.00 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 11.00 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ. 10,306.27/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | தர நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பட இருக்கிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் செயற்பொறியாளர் அவர்களின் *Circle II. CW Letter No.SE.II / CW/DB/F1392/2023 Dated 14.03.2024* |

எனவே, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-72, கன்னிகாபுரத்தில் உள்ள விளையாட்டு திடல் நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ள பழுதடைந்துள்ள உட்கட்டமைப்புகளான நடைபாதை, இருப்பு அறை, உடற்பயிற்சி கூடம், கழிப்பறை கட்டிடம், பார்வையாளர் அமருமிடம் *(Gallery)*, பெர்கோலா *(Pergollah)*, சறுக்கு மேடை *(Skating Rink)*, கீழ்நிலை நீர் தேக்க தொட்டி, மின்னணு கழிப்பறை *(E- Toilet)* மற்றும் கொடிமரம் & மேடை *(Flag Post and Platform)* ஆகியவற்றை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.31/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.6.ந.க.எண்.இ1/0994 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.02.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:114/2024** **பொருள் எண்.06**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-72, அம்பேத்கர் நகர் 1 வது தெருவில் பழுதடைந்துள்ள பொது கழிப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-72, அம்பேத்கர் நகர் 1 வது தெருவில் பழுதடைந்துள்ள பொது கழிப்பறை கட்டிடம் (PC) சுமார் 93.00 சதுர மீட்டர் நிலப்பரப்பில் 2000ஆம் ஆண்டு கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், பள்ளி குழந்தைகள் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

தற்போதுள்ள கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் 1000 சதுர அடி வரை கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-72, அம்பேத்கர் நகர் 1 வது தெருவில் பழுதடைந்துள்ள பொது கழிப்பறை (PC) கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-72, அம்பேத்கர் நகர் 1 வது தெருவில் பழுதடைந்துள்ள பொது கழிப்பறை கட்டிடம் (PC). |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2000 ஆம் ஆண்டு. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 93.00 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 224.00 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ.1,11,721.35/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் |

எனவே, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-72, அம்பேத்கர் நகர் 1 வது தெருவில் பழுதடைந்துள்ள பொது கழிப்பறை (PC) கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 32 /2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.1.ந.க.எண். பி2/01254 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:115/2024** **பொருள் எண்.07**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 1, பகுதி 1, வார்டு 1,2 (ம) 4 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட 13 எண்ணிக்கையிலான பணியாளர்கள் - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 01.11.2023 முதல் 30.04.2024 வரை நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிக்காலம் 30.04.2024 அன்று முடிவடைகிறது - 01.05.2024 முதல் 30.04.2025 வரை தற்காலிக பணியாளர்கள் பணி அமர்த்தி தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1, பகுதி 1,2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ளடக்கிய கோட்டங்களாகும் இப்பகுதிகள் 26.96 ச.கி.மீ பரப்பளவு உள்ளடக்கியது ஆகும். வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ள பகுதிகள் மொத்த சாலைகள் 1498 இதில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 87,418 ஆகும். சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் 25.10.2011ல் திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் நகராட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. நகராட்சியாக செயல்பட்ட போது மேற்கு பகுதிகளில் வார்டு எண் 1 முதல் 7 வரை உள்ள பகுதிகள் பாதாள சாக்கடை கட்டமைப்பு இல்லாததாலும் மற்றும் வார்டு எண் 8 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை கட்டமைப்பு ஒரு சில பகுதிகளை தவிர தேவையான அளவு உள்ளதாலும் தற்போது மண்டலம் 1ல் பயன்பாட்டிலுள்ள பக்க கால்வாய்கள் எண்ணிக்கை 360 (54.15கி.மீ) அமைக்கப்பட்டு மழைநீர் சிறு பாலங்கள் வழியாக பொதுப்பணித்துறை பக்கிங்காம் கால்வாய் வழியே கடலில் சென்று அடைகிறது.

மண்டலம்1, வார்டு எண் 1, *2* (ம) 4 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் சேர்ந்துள்ளதால் மழை நீர் தேக்கம் அடைந்து, சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இவற்றை தவிர்த்திட போர்கால அடிப்படையில் பக்க கால்வாய்களில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுகளால் கொசு உற்பத்தி ஆகாமல் தடுத்திடவும் அக்கால்வாய்களில் தூர்வாரி அகற்றிட தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* கீழ் தினக்கூலி அடிப்படையில் ஆறு மாதத்திற்கு (01.11.2023 முதல் 30.04.2024) கூடுதல் தலைமை செயலர் /ஆணையர் அவர்களின் 16.10.2023 நாளிட்ட அனுமதி பெற்று பணிகள் நடைபெற்று வரும் நிலையில் 30.04.2024 தேதியில் பணிக்காலம் முடிவடைகிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அரசாணையில் திருத்திய குறைந்தபட்ச ஊதியம் *for employment under any local authority of different classes of employees* தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட *(gazette Publications)* நாள் 05.07.2023 முதல் அமல்படுத்தப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட குறிப்பின்படி மண்டலம் 1, கோட்டம் 1 முதல் 14 வரையிலான தற்காலிக பணியாளர்களுக்கு *G.O No.36 (2D) Labour welfare and skill Development*. நாள். 16.06.2023ன் படி தமிழ்நாடு அரசிதழ் வெளியிட்ட ஆணையின்படி நாள் ஒன்றுக்கு ரூ.*687/-* என மன்றத்தில் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தேவைப்படும் பணியாளர்களின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண் | வார்டு எண் | தெருக்களின் எண்ணிக்கை | தெருக்களின் நீளம் மீ | கால்வாய்களின் எண்ணிக்கை | பக்க கால்வாயின் நீளம் | பக்க கால்வாய் / தூர்வாரும் பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 119 | 18779 | 61 | 10869 | 5 | 10869÷500மீ÷3=5 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 2 | 106 | 11009 | 93 | 10110 | 6 | 10110÷500மீ÷3=6 |
| 3 | 3 | 104 | 21017 | 0 | 0 | 0 | |
| 4 | 4 | 148 | 18805 | 80 | 11135 | 2 | 11135÷500மீ÷3=2 |
| மொத்தம் | | 477 | 69610 | 234 | 32114 | 13 | |

மேலே பட்டியலில் குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி வார்டு 1, *2* மற்றும் 4 வரையிலான 477 தெருக்களில் உள்ள பக்க கால்வாய்களின் நீளம் *32114* மீ உள்ளது. இக்கால்வாய்களில் உள்ள மண் மற்றும் சேரும் கழிவுகள் அகற்றிட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் *(NULM)* தினக்கூலி அடிப்படையில் 01.05.2024 முதல் 30.04.2025 வரையிலான ஒரு வருட காலத்திற்கு பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மண்டலம் 1, வார்டு எண் 1, 2 மற்றும் 4 வரையிலான பகுதிகளில் உள்ள பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றும் 13 தற்காலிக பக்க கால்வாய் பணியாளர்களின் பணிக்காலம் 30.04.2024 தேதியில் முடிவடைகிறது. தற்போது பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் வார்டு குழு 1ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 01.05.2024 முதல் 30.04.2025 வரை ஒரு ஆண்டு பணியமர்த்தி தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1, பகுதி 1, வார்டு 1, 2 (ம) 4 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* கீழ் 365 நாட்களுக்கு 13 தற்காலிக பணியாளர்களை பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள் அளித்துள்ள விலை விவரப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு) ரூ.687/- வீதம் (ரூ.687 *X 13* நபர்கள் *X* 365 நாட்கள் = ரூ.32,59,815) ரூ.32,59,815/-க்கு *01.05.2024* முதல் 30.04.2025 வரை ஒரு வருட காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள ஆணை வேண்டியும்,
2) மேற்குறிப்பிட்ட பணிக்கு ரூ.32,59,815/- (ரூபாய் முப்பத்தி இரண்டு இலட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரத்து எண்நூற்று பதினைந்து மட்டும்) ரூ32.59 இலட்சம் நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,
3) இப்பணிக்கு பிரிவு எண் 40-*41*-03, கணக்கு குறியீட்டு எண் 210-*100*-601ல் பட்டிகள் தீர்வு செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 39/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**<u>ம.அ1நக.எண் பி1/ 01731/2024</u>**

**<u>கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.06.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:116/2024** **பொருள் எண்.08**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 1, பகுதி 1,2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள் மற்றும் மண்டல அலுவலகம் - பணிபுரியும் 15 எண்ணிக்கையிலான புள்ளிவிவர குறிப்பாளர்கள் - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 01.11.2023 முதல் 30.04.2024 வரை நிர்வாக அனுமதி பெறப்பட்டது - 30.04.2024 பணிக்காலம் முடிவடைகிறது - 01.05.2024 முதல் 30.04.2025 வரை தற்காலிக பணியாளர்கள் பணி அமர்த்தி தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள அனுமதி.</u>**

மண்டலம்-1ல் வார்டு எண்-1 முதல் 14 வரையிலான கோட்டங்கள், பகுதி அலுவலகங்கள் 1, *2*, 3 மற்றும் மண்டல அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் (உதவியாளர்கள்) பணியமர்த்தப்படாததால் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* கீழ் தற்காலிக பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது 23.02.2021ல் *ENVRO Solution* தனியார் வசம் துப்புரவு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* கீழ் பணிபுரிந்து வந்த அனைத்து பணியாளர்களும் நிறுத்தி வைக்கப்பட்டதால் மீண்டும் இப்பணியாளர்களை பணியமர்த்தி அலுவலக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியது அவசியமாகிறது.

மண்டலம்-1 கோட்டம் 1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் ஒப்ப பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல், கணினியில் பதிவேற்றம் செய்தல், நகரமைப்பு பிரிவில் கட்டிடம் தொடர்பான பதிவுகள் *(Building plan permission)* மழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் தினசரி அறிக்கைகள் அனுப்புதல், ஆய்வு கூட்டங்களுக்கு அறிக்கை தயாரித்தல் மற்றும் கொரோனா தொற்று நோய் *(Covid*-19) தொடர்பான தடுப்பு பணிகள் கணினியில் பதிவேற்றம் செய்தல், புள்ளிவிவர குறிப்புகள் அனுப்புதல் போன்ற பணிகள் தொய்வு இல்லாமல் இப்பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் 29.11.203 நாளிட்ட ஆணை பெறப்பட்டு, மன்ற தீர்மான எண்.597/2023, நாள்.*30.11.2023* அன்று மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மண்டலம் 1, பகுதி 1,2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள், மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *((NULM)* கீழ் 01.11.2023 முதல் 30.04.2024 வரை 6 மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.677/- வீதம் (ரூ.677 *X 15 X182=*ரூ.18,48,210/-) ரூ.18,48,210/-க்கு (ரூபாய் பதினெட்டு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து இருநூற்று பத்து மட்டும்) நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது.

மேற்படி மண்டலம் 1, பகுதி 1, 2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை பணிபுரியும் தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்களின் பணிக்காலம் 30.04.2024 அன்று பணி முடிவடையும் நிலையில் 01.05.2024 முதல் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 13.06.2023 நாளிட்ட செயல்முறை ஆணையில் புள்ளிவிவர குறிப்பாளர்களுக்கு *(Data Entry Operator) 2022*-23 ஆம் ஆண்டு *0*1.04.2023 முதல் 31.03.2024 வரை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.677/- ஆக விலைவிவர பட்டியலின்படி (வ.எண் 85)ல் *(COMPUTER OPERATOR / DATA ENTRY OPERATOR)* ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம் 1, பகுதி 1,2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை பணிபுரியும் 15 தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்களின் பணிக்காலம் 30.04.2024 தேதியில் முடிவடைகிறது தற்போது பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் வார்டு குழு 1ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 01.05.2024 முதல் 30.04.2025 வரை ஒரு ஆண்டு பணியமர்த்தி தொடரந்து பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 பகுதி அலுவலகங்கள் 1, 2 (ம) 3க்கு, மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் *(Data Entry Operators)* தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* கீழ் 01.05.2024 முதல் 30.04.2025 வரை ஒரு வருட காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.677/- வீதம் (ரூ.677 *X 15 X 365=*. ரூ.37,06,575/- (ரூபாய் முப்பத்தி ஏழு இலட்சத்து ஆறாயிரத்து ஐந்நூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

2) மண்டலம்1க்கு *2024-25* ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் பிரிவு எண்20-*21-06*, கணக்கு குறியீட்டு எண்220-*110*-314ல்/- பட்டிகள் தீர்வு செய்திட ரூ. 37,06,575/-ஐ நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,

3) சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் புள்ளிவிவர குறிப்பாளர்களுக்கு *(Data Entry Operator) 2024-25* ஆம் ஆண்டு *DATA ENTRY OPERATOR*/புள்ளி விவரகுறிப்பாளர்களுக்கு உயர்த்தப்படும் தொகைக்கு ஊதியம் வழங்கிட அனுமதியும்,

4) மண்டலம் 1ல், 01.05.2024 முதல் 31.04.2025 வரை ஒரு வருட காலத்திற்கு தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 40/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**E.L.D.C.No/SMII/P10/6396/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:117/2024** **பொருள் எண்.09**

**Greater Chennai Corporation – Electrical Department – Administration sanction obtained – Tender called for Operation and Maintenance of street lamp post and high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones 7& 14 as 2 separate tenders- For approval**

Administrative Sanction was accorded vide Council Resolution No.68/2024, for Operation and Maintenance of street lamp post and high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones 7 & 14 as 2 separate tenders. The first call for these tenders were opened on 29.02.2024 and cancelled due to administrative reasons.

Chief Engineer (Electrical) order dated 22.02.2024, Short E-tenders has been floated with due date of opening on 19.03.2024 for the work "Operation and Maintenance of street lamp post and high mast including manpower , Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones 7 & 14 "as 2 separate tenders in tn.tenders.gov.in website .

Subsequently e-Tenders have been called for the above work in two cover system and the Tender notice were published in the English daily Deccan Chronicle , Tamil daily Hindu Tamil Thisai on 12.03.2024 and the Greater Chennai Corporation News Bulletin on 14.03.2024 respectively. Due to General Elections to Lok Sabha 2024 the tenders were opened on 01.04.2024.

The Financial Bids of the technically qualified bidders were opened on 10.04.2024.The details of the bidders, their quoted rates for the 2 separate tenders for the Operation and Maintenance of street lamp post and high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones 7 & 14 is as listed below:

TABLE 1:'

| Sl. No. | File No. | Name of work | Tender value (incl. Of 18% GST) in Rs. | Name of Participated bidders | L1 Bidder | Quoted amount of L1 bidder& Percentage when compared to the tender value (incl.of 18% GST) in Rs. |
|---|---|---|---|---|---|---|
| 1 | E.L.D.C.NO./ SM II/P10/ 6396/2023 | Operation and Maintenance of 26235 nos. of street lamp post and 48 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone7 | 3,48,25,660.06 | 1. M/s. Hi-Tech Tronics 2. M/s. Murugan Electrical Traders 3. M/s. V.K. Contractors | M/s. Hi-Tech Tronics | 3,78,20,666.83 (+) 8.60% |
| 2 | E.L.D.C.NO./ SM II/P10/ 6399/2023 | Operation and Maintenance of 22298 nos. of street lamp post and 18 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone14 | 3,06,69,952.82 | 1. M/s. Kumaran Industries 2. M/s. Murugan Electrical Traders 3. M/s.R.K.M Electricals | M/s.R.K. M Electricals | 3,35,83,598.34 (+)9.50% |

The reduced rates of the L1 bidders were obtained Online through tn.tenders website dated 12.04.2024, 16.04.2024, 18.04.2024, 30.05.202 & 31.05.2024. The details of the final negotiated rate given by the L1 bidders after 6th negotiation is as listed below:

TABLE 2:

| Sl. No. | File No. | Name of work | Tender value (incl. Of 18% GST) in Rs. | L1 Bidder | Quoted rate of L1 bidder& Percentage when compared to the tender value (incl.of 18% GST) in Rs. | Reduced rate of L1 bidder after 6th negotiation & Percentage when compared to the tender value (incl.of 18% GST) in Rs. |
|---|---|---|---|---|---|---|
| 1 | E.L.D.C.NO./ SM II/P10/ 6396/2023 | Operation and Maintenance of 26235 nos. of street lamp post and 48 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone7 | 3,48,25,660.06 | M/s. Hi-Tech Tronics | 3,78,20,666.83 (+) 8.60% | 3,48,22,177.49 (-) 0.01% |
| 2 | E.L.D.C.NO./ SM II/P10/ 6399/2023 | Operation and Maintenance of 22298 nos. of street lamp post and 18 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone14 | 3,06,69,952.82 | M/s.R.K.M Electricals | 3,35,83,598.34 (+)9.50% | 3,06,63,818.83 (-) 0.02% |

The reduced offers of L1 bidders are(-) 0.02% to (-)0.01% lesser than the estimated cost.

The O&M contractor shall rectify the defect / fault within 24 hours of complaint received. If he fails to comply, the penalty is imposed as follows:

i) Beyond 24hrs - 5% of total cost per pole /year{(Tender value)/(Total no. of street lamp post + No. of Highmast)}

ii) Beyond 36 hrsUpto48hrs - 10% of total cost per pole/year{(Tender value)/(Total no. of street lamp post + No. of Highmast)}

iii) Beyond 48hrs - 15% of total cost per pole /year{(Tender value)/(Total no. of street lamp post + No. of Highmast)}per day thereafter will be recovered until rectified.

iv) If on any day, less no. of persons are noticed, in that case the penalty at Rs.1600/- per person / day for Electrician and Rs. 1300/- for Electrical Helper will be recovered. And if the agency fails to provide no. of mention ladder mounted vehicle / vehicles in healthy condition, then the Rs.4000/- per day per Aluminium ladder vehicle, Rs.5000/- per day for 7 mtr hydraulic ladder and Rs. 7000/-per day for 12 mtrHydraulic ladder vehicle will be deducted from the monthly bill of the agency.

v) Maintaining all the luminaries, Junction boxes, poles, Feeder pillar, cable termination with glands and lugs, etc. as specified in the tender documents.

Any incomplete work will be considered as non-working of light and penalty cause as per non working street light shall be applicable.

vi) Switching ON and OFF of street light poles as per schedule given by Chennai Corporation and the contractor has to submit the report of the same in every fifteen days time. If not followed the same, the penalty of Rs.500/- per day will be charged.

The subject was placed in Tender Scrutinizing Committee (TSC) on 07.06.2024. The TSC recommended for the approval of the above reduced offers of L1 bidders shown in TABLE 2

As per the amendments issued to the Tamil Nadu Urban Local Bodies Rules,2023 vide G.O.(Ms) No.89, Municipal Administration and Water Supply Department, dated 04.07.2023, orders of the Standing Committee Works is requested for the following:

1. To accept the reduced offer of the L1 bidders recommended by the Tender Scrutinizing Committee for 2 separate tenders for the Operation and Maintenance of street lamp post and high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zones 7 & 14 as shown below:

| Sl. No. | File No. | L1 Bidder | Reduced rate of L1 bidder after 6th negotiation & Percentage when compared to the tender value (incl.of 18% GST) in Rs. |
|---|---|---|---|
| 1 | E.L.D.C.NO./SM II/ P10/6396/2023 | M/s. Hi-Tech Tronics | 3,48,22,177.49 (-) 0.01% |
| 2 | E.L.D.C.NO./SM II/ P10/6399/2023 | M/s.R.K.M Electricals | 3,06,63,818.83 (-) 0.02% |

2. To issue work order for the above 2 works in anticipation of approval, since the existing contract expires on 12.06.2024 for Zone 7 & 11.06.2024 for Zone 14.

3. To meet out the expenditure for the above work from the Revenue Budget head of the Electrical Department from the respective financial years.

Sl.No.1 to 3 above, standing committee(Works) approval is requested and subsequently to be placed in the Council for record.

“19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 34/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**பே.சா.து.ந.க.எண். பி4/6176/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.02.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:118/2024** **பொருள் எண்.10**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - 2023-24 சிட்கோ - அம்பத்தூர் மற்றும் கிண்டி தொழிற்பேட்டை பகுதிகளில் உள்ள பல்வேறு சாலைகளை சீரமைக்கும் பணிக்காக TANSIDCO (Tamilnadu Small Industries Development Corporation Limited) மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள் சீரமைக்கும் பணிக்கு 2023-24 மூலதன நிதியின் கீழ், 3 தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு 3 சிப்பங்களாக ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி**

கூடுதல் தலைமைச் செயலர் / வளர்ச்சி ஆணையர், அவர்களின் தலைமையில் 23.11.2023 அன்று கிண்டி மற்றும் அம்பத்தூரில் உள்ள தொழிற்பேட்டை சாலைகள் பராமரிப்பு குறித்து கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. சுமார் 15 கி.மீ., தொழிற்பேட்டை சாலைகள் (கிண்டி தொழிற்பேட்டை - 4 கி.மீ. மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டை - 11 கி.மீ) தூரத்தை சீரமைக்கும் பணிக்காக சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி மேம்பாட்டு கழகம் நிர்வாக இயக்குனருக்கு கூடுதல் தலைமை செயலர்/ வளர்ச்சி ஆணையரால் உத்தரவிடப்பட்டது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி மேம்பாட்டு கழகம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 11.12.2023 அன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் கள ஆய்வுக்குப் பிறகு, கிண்டி மற்றும் அம்பத்தூரில் மொத்தம் 21 சாலைகளில் 1527000 நீளத்திற்கு சாலைகள் இருப்பது கண்டறியப்பட்டது. இதில் சேமடைந்த 7 எண்ணிக்கையிலான சாலைகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முறையான நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இப்பணிகளுக்கு 2023-24 மூலதன நிதியின் கீழ், 3 தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு 3 சிப்பங்களாக ஒப்பம், "இரண்டு உறைகள்" என்ற முறையில் ஒப்பம் இறுதி கோரப்பட்டு ஒப்ப இறுதி நாள் 27.12.2023 என ஒப்ப அறிவிப்பு தமிழ் நாளிதழ் "தினமலர்" ஆங்கிலம் நாளிதழில் "The Hindu" பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஒப்பந்தபுள்ளி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்டது. மேலும், நிர்வாக நலன் கருதி ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய நாள் 27.12.2023 லிருந்து 03.01.2024 என்றும், ஒப்ப திறப்பு நாள் 28.12.2023 லிருந்து 04.01.2024 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஒப்ப நாளான 04.01.2024 அன்று 3 உட்புற தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு, **3** சிப்பங்களாக திறக்கப்பட்டதில் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் 05.01.2024 அன்று தேர்வு செய்யப்பட்டார்கள். குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

**சாலைகள் சீரமைக்கும் பணி (அட்டவணை-I)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Zone (4) | No. of Roads (5) | No.of Bidder Participated (6) | Name of the Bidder (L1) (7) | Work Value Including GST 18% (Rs.) (8) | Quoted % (9) | Quoted Amount (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | BRR.C.No .B4/6176/ 2023 | 1 | 7 | 1 | 1 | KSM CONSTRUCTION PRIVATE LIMITED | 23836825.24 | (+)6.50 | 25386218.89 |
| 2 | BRR.C.No .B4/6176/ 2023 | 2 | 7 | 1 | 1 | RVS CONSTRUCTIONS | 19180788.18 | (+)4.90 | 20120646.80 |
| 3 | BRR.C.No .B4/6176/ 2023 | 3 | 7 | 1 | 1 | R Ramarao | 29818314.94 | (+)5.12 | 31345012.67 |

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது *2023-24*ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்குப்பின் ஒப்பந்ததாரின் ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**(அட்டவணை-*II*)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Zone (4) | Name of the Bidder (L1) (6) | Work Value Including GST 18% (7) | Quoted % (8) | Offered After 1st Negotiation (9) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | BRR.C.No.B4/ 6176/2023 | 1 | 7 | KSM CONSTRUCTION PRIVATE LIMITED | 23836825.24 | (+)6.50 | (+)4.69 |
| 2 | BRR.C.No.B4/ 6176/2023 | 2 | 7 | RVS CONSTRUCTIONS | 19180788.18 | (+)4.90 | (+)4.69 |
| 3 | BRR.C.No.B4/ 6176/2023 | 3 | 7 | R Ramarao | 29818314.94 | (+)5.12 | (+)4.70 |

மேலும் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2023-*24*ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு , குறைந்த ஒப்பப்புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக் குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**அட்டவணை - *III***

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Zone (4) | No.of Bidder Participated (5) | Name of the Bidder (L1) (6) | Quoted % (7) | Offered 1st Negotiation (8) | Offered 2ND Negotiation (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | BRR.C.No.B4/ 6176/2023 | 1 | 7 | 2 | KSM CONSTRUCTION PRIVATE LIMITED | (+)6.50 | (+)4.69 | (+)3.95% |
| 2 | BRR.C.No.B4/ 6176/2023 | 2 | 7 | 3 | RVS CONSTRUCTIONS | (+)4.90 | (+)4.69 | (+)3.99% |
| 3 | BRR.C.No.B4 /6176/2023 | 3 | 7 | 3 | R RAMARAO | (+)5.12 | (+)4.70 | (+)3.99% |

மேலும் இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் 05.02.2024 நாளிட்ட அறிவுறுத்தலின் பேரில் மறுவிலைக்குறைப்புக் கோரி ஒப்பந்ததாரரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் வழங்கியுள்ள விலைக்குறைப்புக்கான ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**அட்டவணை - *IV***

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Zone (4) | No.of Bidder Participated (5) | Name of the Bidder (L1) (6) | Quoted % (7) | Offered 1st Negotiation (8) | Offered 2ND Negotiation (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | BRR.C.No.B4/ 6176/2023 | 1 | 7 | 2 | Ksm Construction Private Limited | (+)6.50 | (+)3.95% | (+)3.44% |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | BRR.C.No.B4/ 6176/2023 | 2 | 7 | 3 | Rvs Constructions | (+)4.90 | (+)3.99% | (+)3.47% |
| 3 | BRR.C.No.B4/ 6176/2023 | 3 | 7 | 3 | R Ramarao | (+)5.12 | (+)3.99% | (+)3.47% |

மேலும் ஒப்பந்ததாரர்கள் தங்களது கடிதத்தில் தற்போதைய சந்தை நிலவரப்படி இதற்கு மேற்கொண்டு விலை குறைப்பு செய்ய இயலாது என்றும், தற்சமயம் குறைத்து அளித்துள்ள விலைப்புள்ளிக்கே பணியினை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

எனவே, இந்த ஒப்பங்கள்சம்மந்தமாக கீழ்க்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்குசமர்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னனு *(e-tender)* முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.
2) மேலும் ஒப்பந்ததாரர்கள் தங்கள் விலைக்குறைப்பு கடிதத்தில், மூலப்பொருள்கள் விலை ஏற்றம், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, மற்றும் போக்குவரத்து வாகன செலவு மற்றும் சுங்க சாலை கட்டணம் உயர்வினை கருத்தில் கொண்டு பணிகள் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த மேற்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க *19.02.2024* அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது. அதன் விவரம் அட்டவணை 5ல் பின்வருமாறு.

**அட்டவணை - *V***

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Zone (4) | No. of Roads (5) | No.of Bidder Participated (6) | Name of the Bidder (L1) (7) | Offere after 1ST Negotiation (8) | Offered after 2nd Negotiation (9) | Offered after 3rd Negotiation (10) | Amt after Negotiation (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | BRR.C.No. B4/6176/2023 | 1 | 7 | 1 | 2 | KSM construction private limited | (+)4.69 | (+)3.95% | (+)3.44% | 24656812.03 |
| 2 | BRR.C.No. B4/6176/2023 | 2 | 7 | 1 | 3 | RVS constructions | (+)4.69 | (+)3.99% | (+)3.47% | 19846361.53 |
| 3 | BRR.C.No. B4/6176/2023 | 3 | 7 | 1 | 3 | R Ramarao | (+)4.70 | (+)3.99% | (+)3.47% | 30853010.47 |

எனவே,

1) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை-5ல் கலம் எண்-10ல் உள்ள ஒப்பப்புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்-11ல் உள்ள ஒப்பத் தொகைக்கு *(18% GST* வரி சேர்த்து*)* பணியினை வழங்கவும்,
2) மேலும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்காணும் பணிக்கு ஒப்பந்தாரருக்கு பணியாணை வழங்குவதற்கு அனுமதியும்,
3) மேற்காணும் பணிகளுக்கான நிதியினை பெருநகர சென்னை மாநகராட்சியின் *2023-2024* ஆம் ஆண்டின் மூலதன நிதியிலிருந்து ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.36/2024, நாள்.19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ .6.ந.க.எண்.இ1/627/2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:119/2024** **பொருள் எண்.11**

**ஒப்பம் – பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, ரங்கசாயி தெருவில் புதியதாக சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணிக்காக இரண்டு உறை முறையில் (Two Cover System) மின்னணு திறந்தவெளி ஒப்பம் (Online Open e-Tender) கோரப்பட்டு ஒப்பங்கள் பெறப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். KSK Engineers அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, ரங்கசாயி தெருவில் புதியதாக சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | ------ |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-6 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2023-24ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை: | **ரூ.3,00,00,000.00** |
| அ) | பணிசெலவீனம் | ரூ. 2,18,38,411.68 |
| ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 39,30,914.10 |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1% | ரூ. 2,18,384.12 |
| ஈ) | ஆலோசனை கட்டணம் 2.5% | ரூ. 5,45,960.29 |
| உ) | சிறு மேற்பார்வை செலவு 2.5% | ரூ. 5,45,960.29 |
| ஊ) | தரக்கட்டுபாட்டு செலவு 1% | ரூ. 2,18,384.12 |
| எ) | மேலான மேற்பார்வை செலவு 10% | ரூ. 21,83,841.17 |
| ஏ) | மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 5,18,144.23 |
| | **மொத்தம்** | **ரூ.3,00,00,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | 1. தமிழ் நாளிதழ் - இந்து தமிழ் திசை நாள்.14.02.2024<br>2. ஆங்கிலம் நாளிதழ் - Deccan Chronicle நாள்.14.02.2024<br>3.பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள்.15.02.2024, |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 05.03.2024 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | ஆம். கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை நாள்.09.02.2024 |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | 3 ஒப்பங்கள் பெறப்பட்டது. |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, ரங்கசாயி தெருவில் புதியதாக சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணிக்கு 2023-24ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி ரூ.3,00,00,000/- மதிப்பீட்டிற்கு கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 13.02.2024 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு மன்ற தீர்மான எண்.56/2024, நாள்.22.02.2024 மூலம் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும். மண்டலம்-6ன் மூலம் **"இரண்டு உறை முறையில்"** குறுகிய கால ஒப்பங்கள் கோரி, மண்டலம்-6ன் மூலம் **"ஒப்பங்கள் முடிவு செய்ய"** கூடுதல் தலைமை செயலாளர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையில் **"இரண்டு உறை முறைகள்"** என்ற முறையில் ஒப்பம் கோரப்பட்டு இறுதி நாள்.01.03.2024 என்ற ஒப்ப அறிவிப்பு தமிழ் நாளிதழ் " இந்து தமிழ் திசை" மற்றும் ஆங்கிலம் நாளிதழ்" Deccan Chronicle" 14.02.2024 நாளிட்ட நாளிதழில், 15.02.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்டது.

இதனிடையே நிர்வாக நலன் கருதி ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய நாள். 29.02.2024லிருந்து 05.03.2024 என மாற்றம் செய்யப்பட்டும், ஒப்பம் திறக்கப்படும் நாள் 01.03.2024லிருந்து 06.03.2024 எனவும் திருத்தம் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஒப்ப திறப்பு நாளான 06.03.2024 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டதில் திரு.A.அசோக்குமார், திருவாளர்கள்.KSK Engineers மற்றும் திருவாளர்கள்.PTM Projects Pvt Ltd ஆகிய 3 ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் பெறப்பட்டன.

மேலும், பெறப்பட்ட 3 ஒப்பங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அவற்றில் திரு.A.அசோக்குமார் அவர்கள் சமர்ப்பித்த தொழில்நுட்ப ஆவணங்களில் ஒத்த தன்மை உள்ள பணியின் விவரம் வழங்கப்படவில்லை மற்றும் Performenceக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், ஒப்ப விதிகளின்படி கருதப்படாத நிலையிலும், மேலும் திருவாளர்கள்.PTM Projects Pvt Ltd அவர்கள் ஒப்பத்தின்போது கோரப்பட்ட சில தொழில்நுட்ப ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தினாலும், மேற்கண்ட இருவரின் ஒப்பங்களும் Technical Bid Evaluation-ல் நிராகரிக்கப்பட்டது. மேலும், ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.KSK Engineers அவர்களின் ஒப்பம் மட்டுமே, Technical Bid Evaluation-ல் 14.03.2024 அன்று ஒப்புதல் பெறப்பட்டு, 16.03.2024 அன்று நிதி ஆவணம் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர்கள் | பணிக்கு அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை | 2023-24ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ஒப்ப சதவீதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள். KSK Engineers | ரூ.2,18,38,411.68 | ரூ.2,32,57,908.44 | (+) 6.50 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு திறக்கப்பட்ட நிதி ஆவணத்தில் திருவாளர்கள். KSK Engineers அவர்கள் குறைந்த ஒப்ப சதவீதம் அளித்துள்ளார். ஒப்பந்ததாரர் அவர்கள் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.2,32,57,908.44 ஆகும். இத்தொகை 2023-24ஆம் ஆண்டு அலுவலக விலைபட்டியல்படி (+) 6.50 % கூடுதலாகும்.

குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். KSK Engineers, அவர்களிடம், 16.03.2024 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் விலைக்குறைப்பு செய்ய முதற்கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில், ஒப்பந்ததாரர் திருவாளர்கள். KSK Engineers, அவர்கள் ஒப்ப சதவீதத்தில் இருந்து குறைத்து (+)2.45 சதவீதத்தில் பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து 16.03.2024 அன்று கடிதம் அளித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம். 16 .03.2024 அன்று முதற் கட்ட பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் | ரூ.2,23,73,452.77 ஆகும், இத்தொகை 2023-2024ஆம் ஆண்டு அலுவலக விலையின்படி (+) 2.45 % கூடுதல் ஆகும். |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவு | வகுப்பு-1 |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம் | 20-21-07 / 412-40-04-02 ( Middle School) |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 3 மாதங்கள் |
| 15 | பணி காலம் | 18 மாதங்கள். |

மேற்கண்ட ஒப்ப விவரங்களின் அடிப்படையில் மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, ரங்கசாயி தெருவில் புதியதாக சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணிக்கான ஒப்பத்திற்கு அலுவலக விலையில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். KSK Engineers, அவர்கள் அளித்த ஒப்பத்தொகையான ரூ.2,23,73,452.77, (+) 2.45% கூடுதல் மற்றும் அதற்கான சரக்கு மற்றும் சேவை வரி (GST 18%) ரூ.40,27,221.50/-ம் சேர்த்து மொத்தம் ரூ.2,64,00,674/-ற்கு (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தி நான்கு இலட்சத்து அறுநூற்றி எழுபத்தி நான்கு மட்டும்) திருவாளர்கள். KSK Engineers, அவர்களுக்கு ஒப்பத்தினை வழங்க நிலைக்குழு (பணிகள்) அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.45/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ .6ந.க.எண்.இ1/626/2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:120/2024** **பொருள் எண்.12**

**ஒப்பம் - பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, அகரம், சோமையா தெருவில் புதியதாக சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணிக்காக இரண்டு உறை முறையில் (Two Cover System) மின்னணு திறந்தவெளி ஒப்பம் (Online Open e-Tender) கோரப்பட்டு ஒப்பங்கள் பெறப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். RTI Foundation அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, அகரம், சோமையா தெருவில் புதியதாக சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | ----------- |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-6 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2023-24ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை: | **ரூ.2,75,00,000.00** |
| அ) | பணிசெலவீனம் | ரூ. 2,01,10,904.00 |
| ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 36,19,963.00 |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1 % | ரூ. 2,01,109.04 |
| ஈ) | ஆலோசனை கட்டணம் 2.5% | ரூ. 5,02,773.00 |
| உ) | சிறு மேற்பார்வை செலவு 2.5% | ரூ. 5,02,773.00 |
| ஊ) | தரக்கட்டுபாட்டு செலவு 1% | ரூ. 2,01,109.04 |
| எ) | மேலான மேற்பார்வை செலவு 10% | ரூ. 20,11,090.40 |
| ஏ) | மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 3,50,278.52 |
| | **மொத்தம்** | **ரூ. 2,75,00,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | 1. தமிழ் நாளிதழ் - இந்து தமிழ் திசை நாள்.14.02.2024<br>2. ஆங்கில நாளிதழ் - Deccan Chronicle நாள்.14.02.2024<br>3.பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள்.15.02.2024, |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 05.03.2023 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | ஆம். கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை நாள்.09.02.2024 |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | 3 ஒப்பங்கள் பெறப்பட்டது. |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, அகரம், சோமையா தெருவில் புதியதாக சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணிக்கு 2023-24ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி ரூ.2,75,00,000/- மதிப்பீட்டிற்கு கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 13.02.2024 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு மன்ற தீர்மான எண்.*55/2024*, நாள்.*22.02.2024* மூலம் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் மண்டலம்-6ன் மூலம் "இரண்டு உறை முறையில்" குறுகிய கால ஒப்பங்கள் கோரி, மண்டலம்-6ன் மூலம் "ஒப்பங்கள் முடிவு செய்ய" கூடுதல் தலைமை செயலாளர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையில் "இரண்டு உறை முறைகள்" என்ற முறையில் ஒப்பம் கோரப்பட்டு இறுதி நாள்.*01.03.2024* என்ற ஒப்ப அறிவிப்பு தமிழ் நாளிதழ் " இந்து தமிழ் திசை" மற்றும் ஆங்கிலம் நாளிதழ்" Deccan Chronicle" *14.02.2024* நாளிட்ட நாளிதழில், *15.02.2024* அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்டது.

இதனிடையே நிர்வாக நலன் கருதி ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய நாள். *29.02.2024* லிருந்து *05.03.2024* என மாற்றம் செய்யப்பட்டும், ஒப்பம் திறக்கப்படும் நாள் *01.03.2024* லிருந்து *06.03.2024* எனவும் திருத்தம் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஒப்ப திறப்பு நாளான *06.03.2024* அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டதில் திரு.*V*.கருத்திருமன், திருவாளர்கள்.*RTI Foundation* மற்றும் திருவாளர்கள். *PTM Projects Pvt Ltd* ஆகிய *3* ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் பெறப்பட்டன.

மேலும், பெறப்பட்ட *3* ஒப்பங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அவற்றில் திருவாளர்கள்.*PTM Projects Pvt Ltd* அவர்கள் ஒப்பத்தின்போது கோரப்பட்ட சில தொழில்நுட்ப ஆவணங்கள் கணினி மூலம் சமர்ப்பிக்காத நிலையிலும் மற்றும் திரு.*V*.கருத்திருமன் அவர்களின் ஆண்டு தணிக்கை அறிக்கை ஒப்பத்தில் கேட்கப்பட்டதற்கு போதுமானதாக இல்லாத காரணத்தினாலும், மேற்படி இருவரின் ஒப்பம் மேற்கொண்டு பரிசீலிக்க இயலாத நிலை ஏற்பட்டு, மீதமுள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.*RTI Foundation* அவர்களின் ஒப்பம் மட்டுமே நிதி ஆவணம் திறக்க 08.03.2024 அன்று ஒப்புதல் பெறப்பட்டு *13.03.2024* அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர்கள் | பணிக்கு அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை | *2023-24*ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ஒப்ப சதவீதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| *1.* | திருவாளர்கள்.*RTI Foundation* | ரூ.2,01,10,904.00 | ரூ.2,25,24,212.48 | (+) 12.00 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு திறக்கப்பட்ட நிதி ஆவணத்தில் திருவாளர்கள். RTI Foundation அவர்கள் குறைந்த ஒப்ப சதவீதம் அளித்துள்ளார். ஒப்பந்ததாரர் அவர்கள் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.*2,25,24,212.48* ஆகும். இத்தொகை *2023-24*ஆம் ஆண்டு அலுவலக விலைபட்டியல்படி *(+) 12.00%* கூடுதலாகும்.

குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். RTI Foundation, அவர்களிடம், *14.03.2024* நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் விலைக்குறைப்பு செய்ய முதற்கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில், ஒப்பந்ததாரர் திருவாளர்கள். RTI Foundation, அவர்கள் ஒப்ப சதவீதத்தில் இருந்து குறைத்து ***(+)6.50*** சதவீதத்தில் பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து 14.03.2024 அன்று கடிதம் அளித்துள்ளார்.

மேலும், குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். RTI Foundation, அவர்களிடம், *14.03.2024* நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் விலைக்குறைப்பு செய்ய இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில், ஒப்பந்ததாரர் திருவாளர்கள். RTI Foundation, அவர்கள் ஒப்ப சதவீதத்தில் இருந்து குறைத்து ***(+)3.85*** சதவீதத்தில் பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து 14.03.2024 அன்று கடிதம் அளித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம்.<br>14 .03.2024 அன்று முதற் கட்ட பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.<br>(ம)<br>14 .03.2024 அன்று இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) | ரூ.2,08,85,173.80 ஆகும்.<br>இத்தொகை 2023-2024ஆம் ஆண்டு அலுவலக விலையின்படி (+) 3.85 % கூடுதல் ஆகும். |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவு | வகுப்பு-1 |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம் | 20-21-07 / 412-40-04-03 ( High School) |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 3 மாதங்கள் |
| 15 | பணி காலம் | 18 மாதங்கள். |

மேற்கண்ட ஒப்ப விவரங்களின் அடிப்படையில் மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, அகரம், சோமையா தெருவில் புதியதாக சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணிக்கான ஒப்பத்திற்கு அலுவலக விலையில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். RTI Foundation, அவர்கள் அளித்த ஒப்பத்தொகையான ரூ.2,08,85,173.80 (+) 3.85% கூடுதல் மற்றும் அதற்கான சரக்கு மற்றும் சேவை வரி (GST 18%) ரூ.37,59,331.28/-ம் சேர்த்து மொத்தம் ரூ.2,46,44,505/-ற்கு (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தி ஆறு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்தி ஐநூற்றி ஐந்து மட்டும்) திருவாளர்கள். RTI Foundation, அவர்களுக்கு ஒப்பத்தினை வழங்க நிலைக்குழு (பணிகள்) அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 46/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**S.P.D.C.GPL.A1/330/2022**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:121/2024** **பொருள் எண்.13**

**Greater Chennai Corporation – Special Projects Department – Safe City Project for Women's Safety in Public Places in Chennai – Nirbhaya Fund – Gender and Policy Lab – Creation of post of "Program Coordinator" and Recruitment through open market – For approval**

G.O (2D) No.10, dated.07.02.2023 Municipal Administration and Water Supply(M.C.1) Department and The World Bank to Principal Secretary / Commissioner and Deputy Commissioner(works) E.mail dated 19.07.2021, the Gender and Policy Lab was established in the Greater Chennai Corporation with approval for 3 consultants and 2 interns with support of Rs. 4.03 crores from the Nirbhaya funds. The 3 consultant positions were advertised through Tamil and English newspapers on November 24th, 2021 with detailed job descriptions.

1. Gender and M&E Subject Matter Expert
2. Policy Subject Matter Expert
3. Communication, consultations and training Expert

The following candidates were recruited through a process of written test and interview conducted in December 2021.

1. Ms Meera Sundararajan, Gender and M&E Subject Matter Expert
2. Ms Vaishnavi Chidambara Nathan, Policy Subject Matter Expert
3. Ms Steffi M Cherian, Communication Consultations and Training Subject matter Expert

Ms. Steffi M Cherian, Communication, Consultations and Training Expert resigned on 30th Nov, 2023 and orders were obtained S.P.D.C GPL A1/330/2022 from Additional Chief Secretary/Commissioner dated 12th January 2024 to advertise for the post in newspapers, following with advertisement was published on 4th February 2024 in English and Tamil newspapers. An interview and written test was conducted and Deputy Commissioner(Education) for appointing Ms. S.Sri Uthra has been recruited as Communications, Consultant and Training Expert and she has joined from 16th March, 2024.

The Gender and Policy Lab team at the moment consists of the following team members

1. Ms Meera Sundararajan, Gender and M&E Subject Matter Expert
2. Ms Vaishnavi Chidambara Nathan, Policy Subject Matter Expert
3. Ms S. Sri Uthra Communication Consultations and Training Subject matter Expert
4. Ms Kiran Caroline B, Intern/ Program Associate
5. Ms. Kiran Caroline B, Intern was recruited under the TULIP program of the Ministry of Housing and Urban Affairs, Govt of India, through the Chennai Smart City Limited for a period of one-year from February 2022 to February 2023 with salary of Rs 25,000 / month. Based on the performance of the Intern, the contract was renewed and redesignated as "Program Associate" for the year February 2023 to February 2024; February 2024 to July 2024 with increase in salary of Rs 28,000 per month.

6. This being the 3rd year for the Gender and Policy Lab, the number of projects implemented by the Gender and Policy Lab has increased as per the instructions from GCC and the World Bank. Additional funding has also been allocated by TNIDB approval to the Gender and Policy Lab to the tune of Rs.10 crores requiring the need to implement and manage more projects on the ground. During the review meeting dated 20.03.2024 conducted by DC Education it was instructed to create the new post of “Program Coordinator” who can assist in the implementation, management and monitoring of the projects implemented in the coming year . The position can be advertised and selection can be done through the open market for recruitment on a contractual basis for a period of one year. The tenure may be renewed with annual increment based on the performance.

**Proposed Job Description for the “Program Coordinator”**

| Role | Qualifications | Relevant Experience | Job Description |
|---|---|---|---|
| Program Coordinator<br><br>No of post requested 1 | Masters in Social Work or equivalent<br><br>(minimum 2 years’ work experience)<br><br>Ability to speak, read and write in Tamil<br><br>Knowledge of computer usage and research analysis packages | • Experience in implementation of social development projects relating to Gender / Women’s empowerment in government and/or NGOs<br>• Experience in stakeholder management- NGO/ government, elected representation<br>• Experience in training program management and supporting social campaigns<br>• Data collection and data management<br>• Reporting writing and documentation<br>• Budget tracking and reporting<br>• Strong skills in use of technology such as MS office, Excel and PowerPoint, SPSS, Google forms etc<br>• Good Proficiency in reading, writing and speaking in Tamil. | • Support on ground level implementation of projects with different departments.<br>• Coordinate with different stakeholders like Working Group and Voluntary Advisory committee on project planning and implementation<br>• Manage logistics during training programs and workshops<br>• Support on the ground for campaigns implementation<br>• Tracking action plans and budgets and provide financial reports for projects / programs<br>• Creating and managing project implementation data<br>• Coordination of Primary and Secondary data collection support for research studies<br>• Monthly and quarterly up dation on action plan achievements and budget spend<br>• Drafting and following up on required approvals for project implementation. |
| Salary: Rs 50,000 (all inclusive) per month for one year on a contract basis to be renewed based on performance. | | | |

Hence,

1. To provide administrative sanction and approve the creation of post of “Program Coordinator” for the Gender and Policy Lab on a contractual basis for one year at an estimated cost of Rs 6,00,000. The tenure may be renewed with annual increment based on the performance.

2. To approve the Job Description along with the salary of Rs 50,000 (all inclusive) per month for the post of Program Coordinator.
3. To approve advertising for the post of “Program Coordinator” for the Gender and Policy Lab on the GCC website and/or in 1 Tamil and 1 English, state level newspaper in the Chennai City edition.
4. To Conduct an interview for the short-listed applicants for the post through a panel consisting of Deputy Commissioner (Works), Deputy Commissioner (Education), Superintending Engineer (Special Projects), Executive Engineer (Special Projects), External member (Educational Institution) and Gender and M&E Expert and based on the performance select the best Candidate as “Program Coordinator” and issue letter of contract for the selected candidates.
5. To meet the expenditure from the Nirbhaya funds.

Sl.No.1 to 5 above, Standing Committee(Works) approval is requested and subsequently to be placed in the Council for record.

“19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 43/2024, நாள். 19.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**பா.து.ந.க.எண்.பி3/0223/2022**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.02.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:122/2024** **பொருள் எண்.14**

**பெருநகர சென்னை மாநகராட்சி – பாலங்கள் துறை - மண்டலம்-1, வார்டு-5ல் ஏற்கனவே உள்ள மாணிக்கம் நகர் சுரங்கப்பாதையில் நீர் சேகரிக்கும் தொட்டி அமைத்தல் மற்றும் மேற்பரப்பினை மறுசீரமைக்கும் பணி - ரூ.1,42,07,000/- நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

கீழ்க்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 01. பணியின் பெயர் | : | மண்டலம்-1, வார்டு-5ல் ஏற்கனவே உள்ள மாணிக்கம் நகர் சுரங்கப்பாதையில் நீர் சேகரிக்கும் தொட்டி அமைத்தல் மற்றும் மேற்பரப்பினை மறுசீரமைக்கும் பணி. |
| 02. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 03. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பாலங்கள் துறை |
| 04. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | கண்காணிப்பு பொறியாளர் (பாலங்கள்), நாள். 24.01.2024 |
| 05. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2023-2024 |
| 06. மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 1,42,07,000.00 |
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 1,12,09,409.18 |
| (ஆ)பொருட்கள் மற்றும் சேவை வரி 18% | : | ரூ. 20,17,693.65 |
| (இ)தரக்கட்டுப்பாடு 1% | : | ரூ. 1,12,094.09 |
| (ஈ)தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1% | : | ரூ. 1,12,094.09 |
| (உ)மின்விளக்குகள் செலவு | : | ரூ. 5,00,000.00 |
| (ஊ) எதிர்பாரா செலவினம் 2.5% | : | ரூ. 2,55,708.99 |
| மொத்தம் | : | ரூ. 1,42,07,000.00 |
| 07. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | - |
| 08. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | : | ஆம் |
| 09. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | வார்டு குழுவின் தீர்மான எண். நாள்.: |
| 10. நிதியின் மூலத்தன்மை | : | |
| (அ) வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2022-2023 | : | - |
| (ஆ)மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | : | - |
| (இ) மீதம் உள்ள நிதி (அ-ஆ) | : | - |
| (ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ.1,42,07,000.00 |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,42,07,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**பா.து.ந.க.எண்.பி3/1028/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.02.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:123/2024** **பொருள் எண்.15**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம்-10, வார்டு-132 (ம) 133ல் உள்ள ரங்கராஜபுரம் மேம்பாலத்திற்கு எபாக்ஸி வர்ணம் பூசும் பணி - ரூ.1,70,20,000/- மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

கீழ்க்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 01. பணியின் பெயர் | : | மண்டலம்-10, வார்டு-132 (ம) 133ல் உள்ள ரங்கராஜபுரம் மேம்பாலத்திற்கு எபாக்ஸி வர்ணம் பூசும் பணி. |
| 02. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 03. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பாலங்கள் துறை |
| 04. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | கண்காணிப்பு பொறியாளர்(பாலங்கள்), நாள். 06.10.2023 |
| 05. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2023-2024 |
| 06. மதிப்பீட்டின் தொகை | : | ரூ.1,70,20,000.00 |
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ.1,39,01,513.92 |
| (ஆ)தரக்கட்டுப்பாடு 1% | : | ரூ. 1,39,015.14 |
| (இ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1% | : | ரூ. 1,39,015.14 |
| (ஈ) எதிர்பாரா செலவினம் 2.5% | | ரூ. 3,38,183.30 |
| (உ)பொருட்கள் மற்றும் சேவை வரி 18% | : | ரூ. 25,02,272.50 |
| மொத்தம் | : | ரூ.1,70,20,000.00 |
| 07. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | - |
| 08. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | : | ஆம் |
| 09. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | வார்டு குழுவின் தீர்மான எண். நாள்: பின்னர் பெறப்படும் |
| 10. நிதியின் மூலத்தன்மை | : | |
| (அ) வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2023-2024 | : | - |
| (ஆ)மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | : | - |
| (இ) மீதம் உள்ள நிதி (அ-ஆ) | : | - |
| (ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ.1,70,20,000/- |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,70,20,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ7/0523/2024</u>**

**<u>கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.02.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:124/2024** **பொருள் எண்.16**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம்-2 (மணலி) - மண்டலம்-1 முதல் 8 வரையில் உள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-1) ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணி (Operating and Maintenance (O&M) Contract ) – மதிப்பீடு தொகை ரூ.1,68,50,000-க்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டலம்-2 (மணலி)ல் மண்டலம்-1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-1) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு, 50 மெட்ரிக்டன் திறன் கொண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு (Phase-1) செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ரெயின்போ எண்டர்பிரைசஸ் அவர்கள் மூலம் 18.03.2023 அன்று முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்த பணிக்காலம் வரும் 29.03.2024 அன்றுடன் முடிவடைய உள்ளதாலும், பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் 2024 நடைபெற உள்ள காரணத்தினாலும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக இப்பணிக்கு மேலும் ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. மேலும், ஒப்பந்ததாரர் மக்கும் கழிவுகளை உள்ளீடு செய்யும் அளவினை பொறுத்து கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக Proc/C2/16317/2021 நாள்: 13.16.2023 மற்றும் துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் சுற்றறிக்கை, M.E.D.C. No. M1/1584/2022 நாள் 11.10.2022ன்படி விலை விகிதத்தின் அடிப்படையில், ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான (Operating and Maintenance (O&M) Contract) மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டுத் தொகை- சுருக்கம் | | |
|---|---|---|
| அ) | 32 – எண்ணிக்கை பணியாளர்கள் செலவின தொகை | ரூ.81,49,523/- |
| ஆ) | Mini Truck (1 No.) வாடகை கட்டணம் | ரூ.9,51,552/- |
| இ) | Skid Steer Loader (2 Nos.) – வாடகை கட்டணம் | ரூ.50,97,600 |
| ஈ) | உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் நலபொருட்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் | ரூ.2,66,500 |
| உ) | Supply of EM Solution. Annual Maintenance for Machines | ரூ.23,81,250.00 |
| Total Estimate Cost including GST (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | | ரூ.1,68,46,425/- |
| Rounded off to Rs.1,68,50,000/- (Rupees One Core Sixty Eight Lakhs and Fifty Thousand Only) | | |

எனவே,

1) மண்டலம்-2, (மணலி)ல் மண்டலம் 1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் *(Phase-1)* ஒரு வருட காலத்திற்கு *(Operating and maintenance (O&M) Contract)* செயல்படுத்துதல் மற்றும் உள்ளீடு செய்யும் மற்றும் பராமரித்தல் பணி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.1,68,50,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2) இப்பணிக்கான திடக்கழிவு மேலாண்மை துறையின் வருவாய் நிதி கணக்கு தலைப்பு எண் *Other operating and Maintenance Expenses & Other Expenses*-ல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/0524/2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.02.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:125/2024** **பொருள் எண்.17**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம்-2 (மணலி) - மண்டலம்-1 முதல் 8 வரையில் உள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase- 2) ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணி (Operating and Maintenance (O&M) Contract ) – மதிப்பீடு தொகை ரூ.1,68,50,000-க்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டலம்-2 (மணலி)ல் மண்டலம்-1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-2) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு, 50 மெட்ரிக்டன் திறன் கொண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு (Phase-2) செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ரெயின்போ எண்டர்பிரைசஸ் அவர்கள் மூலம் 18.03.2023 அன்று முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்த பணிக்காலம் வரும் 29.03.2024 அன்றுடன் முடிவடைய உள்ளதாலும், பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் 2024 நடைபெற உள்ள காரணத்தினாலும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக இப்பணிக்கு மேலும் ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. மேலும், ஒப்பந்ததாரர் மக்கும் கழிவுகளை உள்ளீடு செய்யும் அளவினை பொறுத்து கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக Proc/C2/16317/2021 நாள்: 13.16.2023 மற்றும் துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் சுற்றறிக்கை, M.E.D.C. No. M1/1584/2022 நாள் 11.10.2022ன்படி விலை விகிதத்தின் அடிப்படையில், ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான (Operating and Maintenance (O&M) Contract) மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டுத் தொகை- சுருக்கம் | | |
|---|---|---|
| அ) | 32 – எண்ணிக்கை பணியாளர்கள் செலவின தொகை | ரூ.81,49,523/- |
| ஆ) | Mini Truck (1 No.) வாடகை கட்டணம் | ரூ.9,51,552/- |
| இ) | Skid Steer Loader (2 Nos.) – வாடகை கட்டணம் | ரூ.50,97,600 |
| ஈ) | உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் நலபொருட்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் | ரூ.2,66,500 |
| உ) | Supply of EM Solution. Annual Maintenance for Machines | ரூ.23,81,250.00 |
| Total Estimate Cost including GST (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | | ரூ.1,68,46,425/- |
| Rounded off to Rs.1,68,50,000/- (Rupees One Core Sixty Eight Lakhs and Fifty Thousand Only) | | |

எனவே,

1) மண்டலம்-2, (மணலி)ல் மண்டலம் 1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் *(Phase-2)* ஒரு வருட காலத்திற்கு *(Operating and maintenance (O&M) Contract)* செயல்படுத்துதல் மற்றும் உள்ளீடு செய்யும் மற்றும் பராமரித்தல் பணி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ. 1,68,50,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2) இப்பணிக்கான திடக்கழிவு மேலாண்மை துறையின் வருவாய் நிதி கணக்கு தலைப்பு எண் *Other operating and Maintenance Expenses &Other Expenses*-ல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3 /5241/2024</u>**

**<u>கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.06.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:126/2024** **பொருள் எண்.18**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.</u>**

அரசாணை (வா) எண்.693, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்.14.02.2024, தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை Rc.No.00001/GB VII(2)/2024-04, நாள்: 31.01.2024, அரசாணை (வா) எண்.772, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 16.02.2024, அரசாணை (2டி) எண். 39, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 07.02.2024, அரசாணை (2டி) எண். 79, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 29.02.2024, தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை Rc.No.20/NGB III (3)/2024, நாள்: 08.02.2024 மற்றும் மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை A1/e-1657679/2024, நாள்: 31.05.2024ன்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | அரசாணை எண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | டாக்டர். வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., கூடுதல் ஆணையர்(சுகாதாரம்) பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வா) எண். 693, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 14.02.2024 | 19.02.2024 மு.ப. |
| 2 | திரு. கே. ஜெகதீஸ்வரன் விழிப்பு அலுவலர் விழிப்பு குழுமம் பெருநகர சென்னை மாநகராட்சி | தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை Rc. No. 00001/GB VII (2)/2024-04, நாள்: 31.01.2024 | 12.02.2024 மு.ப. |
| 3 | திருமதி. ஜி. சோபியா ஜோதிபாய் மாவட்ட வருவாய் அலுவலர், அம்மா உணவகம் பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வா) எண். 772, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 16.02.2024 | 20.02.2024 மு.ப. |
| 4 | திருமதி. ஜெ. கார்குழலி துணை ஆட்சியர் (நிலம் (ம) உடைமை) வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம் பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (2டி) எண். 39, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 07.02.2024 | 12.02.2024 மு.ப. |
| 5 | திரு. வி. விமல்குமார் துணை ஆட்சியர் (நிர்வாகம்) வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம் பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (2டி) எண். 79, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 29.02.2024 | 04.03.2024 மு.ப. |

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | அரசாணை எண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 6 | திரு. எஸ். சரவண பிரபு<br>விழிப்பு ஆய்வாளர்<br>விழிப்பு குழுமம்<br>பெருநகர சென்னை மாநகராட்சி | தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை *Rc. No. 20/NGB III(3)/ 2024*, நாள்: *08.02.2024* | *19.02.2024*<br>பி.ப. |
| 7 | திரு. டி. அசோகன்<br>விழிப்பு ஆய்வாளர்<br>விழிப்பு குழுமம்<br>பெருநகர சென்னை மாநகராட்சி | தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை *Rc. No. 20/NGB III(3)/ 2024*, நாள்: *08.02.2024* | *07.03.2024*<br>மு.ப. |
| 8 | திரு. என். கோவிந்தராஜ்<br>தனி வட்டாட்சியர் (நிலம் (ம) உடைமை)<br>வட்டார அலுவலகம்(தெற்கு)<br>பெருநகர சென்னை மாநகராட்சி | மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை *A1/e-1657679/ 2024*, நாள்: *31.05.2024* | *31.052024*<br>பி.ப. |

"இதனை நியமனக்குழு பதிவுசெய்து, மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**ம.அ.1ந.க.எண்.பி1/578/2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.02.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:127/2024** **பொருள் எண்.19**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1, பகுதி-3, வார்டு-11, வேதாச்சலம் அவென்யூ வில் உள்ள பொதுக் கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-3, வார்டு-11, வேதாச்சலம் அவென்யூவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பறை 1981 ஆம் ஆண்டு 42 வருடங்களுக்கு முன்னால் திருவொற்றியூர் நகராட்சியால் கட்டப்பட்ட பொதுக்கழிப்பறை ஆகும். இப்பொதுக்கழிப்பறை சிதிலம் அடைந்து புதுபிக்க முடியாத நிலையில் உள்ளதால் இப்பொதுக்கழிப்பறை கட்டிடம் இடிக்கப்பட வேண்டும்.

வார்டு-11, வேதாச்சலம் அவென்யூவில் உள்ள பொதுக்கழிப்பறை கட்டிடத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் புதியதாக உடற்பயிற்சி கூடம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, பழைய பொதுக்கழிப்பறை கட்டிடம் சிதிலமடைந்து இருப்பதால் இடிப்பதற்கு பரிந்துரைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பொதுக்கழிப்பறை கட்டிடத்தின் விவரங்கள்</u>

| வ. எண் | வார்டுஎண்.11 | மண்டலம்-1 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-1, பகுதி-3, வார்டு-11, வேதாச்சலம் அவென்யூ வில் உள்ள பொதுக்கழிப்பறை கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1981 ஆம் ஆண்டு திருவொற்றியூர் நகராட்சியால் கட்டப்பட்டது. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் மற்றும் முதல் தளம் சேர்த்து 748 சதுர அடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 748 சதுர அடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ 25,000/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் இல்லை |
| 7. | அந்தகட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | உடற்பயிற்சி கூடம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | வேதாச்சலம் அவென்யூ வில் உள்ள பொதுக்கழிப்பறை கட்டிடம் மிகவும் சிதிலமடைந்து உள்ளது. |
| 9. | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள் | வார்டு குழு தீர்மான எண்.101, நாள்.10.06.2022 |
| 10 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார்? | மண்டல அலுவலர், மண்டலம்-1 அவர்கள் |

எனவே, மண்டலம்-1, பகுதி-3, வார்டு-11, வேதாச்சலம் அவென்யூவில் உள்ள பொதுக் கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.27/2024, நாள்.20.06.2024-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) உறுப்பினர்களின் பெரும்பான்மையான கருத்தின்படி, மேற்கண்ட பொது கழிப்பிட கட்டடம் இடித்ததற்கு பிறகு அந்த இடத்தில் பொது சுகாதாரத்துறை சார்ந்த கட்டடம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3/10814/2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 11.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:128/2024** **பொருள் எண்.20**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, பகுதி–11, வார்டு– 45, சுந்தரம் பிரதான சாலையில் உள்ள பொதுகழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னைமாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-11, வார்டு-45, சுந்தரம் பிரதான சாலையில் சிதிலமடைந்த நிலையில் உள்ள உபயோகமற்ற பொதுகழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் -4 | வார்டுஎண்- 45 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | சுந்தரம் பிரதானசாலையில் உள்ள பழுதடைந்த பொதுகழிப்பிட கட்டிடம். |
| 2 | பொது கழிப்பிட கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1987 ஆம் ஆண்டு |
| 3 | பொதுகழிப்பிட கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைத்தளம் 147.20.மீ. |
| 4 | பொது கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.1,42,764.00/- |
| 5 | பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது |
| 6 | பொது கழிப்பிட கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 7 | பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்-4 |
| 8 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்: | தீர்மான எண். 07, நாள் :12.01.2024 |

மேலே குறிப்பிட்டுள்ள சுந்தரம் பிரதான சாலையில் சிதிலமடைந்த நிலையில் உள்ள உபயோகமற்ற பழைய பொதுக் கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் அப்பகுதி பொது மக்கள் பயன் பெறும் வகையில் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியில் ரூபாய்.25 இலட்சம் ஒதுக்கி கடிதம் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அப்பகுதியில் அனைத்து வீடுகளிலும் கழிவறை வசதியுடன் வீடுகட்டி வாழ்ந்து வருவதால் அங்கு பொதுகழிப்பிடம், மறுபடியும் கட்டுவது அவசியமற்றது என்பது குறிப்பிடதக்கது.

எனவே, மண்டலம்-4, பகுதி-11, வார்டு-45, சுந்தரம் பிரதான சாலையில் உள்ள பழுதடைந்த பொதுக் கழிப்பிட கட்டித்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.28/2024, நாள்.20.06.2024-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) உறுப்பினர்களின் பெரும்பான்மையான கருத்தின்படி, மேற்கண்ட பொது கழிப்பிட கட்டடம் இடித்ததற்கு பிறகு அந்த இடத்தில் பொது சுகாதாரத்துறை சார்ந்த கட்டடம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.நக.எண்.பி3/2130/2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 11.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:129/2024** **பொருள் எண்.21**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, பகுதி–11, வார்டு– 45, ரங்கநாதபுரத்தில் உள்ள பொதுகழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, பகுதி-11, வார்டு–45, ரங்கநாதபுரத்தில் அமைந்துள்ள சிதிலமடைந்த நிலையில் உள்ள உபயோகமற்ற பொது கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் - 4 | வார்டுஎண் - 45 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | ரங்கநாதபுரத்தில் உள்ள பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடம் |
| 2 | பொது கழிப்பிட கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1994ஆம் ஆண்டு. |
| 3 | பொதுகழிப்பிட கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைத்தளம் 147.20மீ. |
| 4 | பொது கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.57090.49 /- |
| 5 | பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. |
| 6 | பொது கழிப்பிட கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 7 | பொது கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்-4 |
| 8 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்: | தீர்மான எண். 07, நாள்: 12.01.2024 |

மேலே குறிப்பிட்டுள்ள ரங்கநாதபுரத்தில் சிதிலமடைந்த நிலையில் உள்ள உபயோகமற்ற பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் அப்பகுதி பொதுமக்கள் பயன் பெறும் வகையில் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியில் ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கி கடிதம் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அப்பகுதியில் அனைத்து வீடுகளிலும் கழிவறை வசதியுடன் வீடு கட்டி வாழ்ந்து வருவதால் அங்கு பொதுகழிப்பிடம், மறுபடியும் கட்டுவது அவசியமற்றது என்பது குறிப்பிடதக்கது.

எனவே, மண்டலம்-4, பகுதி-11, வார்டு-45, ரங்கநாதபுரத்தில் உள்ள பழுதடைந்த பொதுக் கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.29/2024, நாள்.20.06.2024-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) உறுப்பினர்களின் பெரும்பான்மையான கருத்தின்படி, மேற்கண்ட பொது கழிப்பிட கட்டடம் இடித்ததற்கு பிறகு அந்த இடத்தில் பொது சுகாதாரத்துறை சார்ந்த கட்டடம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.10 ந.க.எண் அ1/1804/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.02.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:130/2024** **பொருள் எண்.22**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10 – வார்டு-140, கோவிந்தன் சாலையில் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-10, வார்டு-140ல் கோவிந்தன் சாலையில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. இக்கட்டிடத்தை இடிப்பதற்கு 19.01.2024 அன்று நடைபெற்ற வார்டுகுழு தீர்மான எண்.202ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இடிக்கப்பட்டவேண்டிகட்டிடத்தின் விவரம்

| வ. எண். | மண்டலம் - 10 | வார்டு-140 |
|---|---|---|
| 1 | வார்டு எண். | வார்டு எண். 140 |
| 2 | கட்டிடம் அமைந்துள்ள இடம் | கோவிந்தன் சாலையில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம். |
| 3 | கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 23-01-1983ஆம் ஆண்டு |
| 4 | கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக | தரைதளம் = 181.50 ச. மீ<br>முதல் தளம் = 181. 50 ச.மீ<br>இரண்டாம் தளம் = 79.208 ச.மீ |
| 5 | கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு | 450.00 ச.மீ |
| 6 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 11,89,558.34/- |
| 7 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் |
| 8 | கட்டிடம் இடித்தபின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| 9 | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண் 202, நாள். 19.01.2024 |

எனவே, மண்டலம்-10, பகுதி-30, வார்டு-140, கோவிந்தன் சாலையில் உள்ள பழுதடைந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.30/2024, நாள்.20.06.2024-ன்படி மேற்குறிப்பிட்ட கட்டிடம் இடித்ததற்கு பிறகு புதிய கட்டடம் தேசிய தர உறுதி தரத்தின்படி *(National Quality Assurance Standards)* இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**ந.து.ந.க.எண்.D1/SD/WDCN01/00273/2024**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 06.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:131/2024** **பொருள் எண்.23**

## தானப்பத்திரம்

மண்டலம்-01, கோட்டம்-10ல் M/s. Cove Holdings Pvt Ltd., & M/s. Rai Developers Private Limited represented by General Power of Attorney Holder M/s. Radiance Realty Developers India Limited represented herein its Authorized Signatory Mr.V.Balaji அவர்கள் Old S.No.493, 517/1, 2A, 2B, 3, 528A/1 part, 528A & 528/2B, T.S.No.30/1 part, 8, 9, 10 and 31/1, Block No.1, Ward-H of Thiruvottiyur Village, Thiruvottiyur Taluk, Chennaiல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN01/00273/2024, நாள்:15.04.2024ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

இம்மனைஉட்பிரிவுக்கான திட்டஅனுமதி ஒப்புதல் உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண். Layout-1/0328/2023, நாள்:28.03.2024ன்படி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) M/s. Cove Holdings Pvt Ltd., & M/s. Rai Developers Private Limited represented by General Power of Attorney Holder M/s. Radiance Realty Developers India Limited represented herein its Authorized Signatory Mr.V.Balaji என்பவர் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 28173.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலை மற்றும் சாலை சீரமைப்புக்காக 522.00 சதுர மீட்டர் நிலமும் (இதில் 88.00 சதுர மீட்டர் நிலம் இணைப்புச் சாலைக்காகவும், 89.00 சதுர மீட்டர் நிலம் சாலை சீரமைப்புக்காகவும் ஆக மொத்தம் 177.00 சதுர மீட்டர் நிலம் மட்டுமே சென்னை மாநகராட்சியால் தானமாக பெற்றுக்கொள்ளப்படும் மீதமுள்ள 345.00 சதுர மீட்டர் சாலை சீரமைப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிலமானது (திருவொற்றியூர் நெடுஞ்சாலை) நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகிறது), திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான 2786.00 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்காக TANGEDCO விற்கு 139.00 சதுர மீட்டர் நிலமும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 139.00 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சார் பதிவாளர், திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பத்திர பதிவு எண்.:2465/2024, நாள்: 26.04.2024.

(ஆ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளரே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர் தாங்களே சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்.

(இ) அபிவிருத்தியாளர் தங்களின் கடிதத்தில் 88.00 சதுர மீட்டர் இணைப்புச் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் அவர்களே இன்னும் மூன்றுவார காலத்திற்குள் ஏற்படுத்தி விடுவதாகவும், ஆகவே ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஈ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி விடுவதால் M/s. Cove Holdings Pvt Ltd., & M/s. Rai Developers Private Limited represented by General Power of Attorney Holder M/s. Radiance Realty Developers India Limited represented herein its Authorized Signatory Mr.V.Balaji அவர்களிடம் இருந்து தானபத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(உ) 89.00 சதுர மீட்டர் சாலை சீரமைப்புக்காக (Street alignment) ஒதுக்கப்பட்ட நிலத்தை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணபதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்.

எனவே,

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர் 10 அவர்களின் 20.02.2024 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, பொது சுகாதாரத்துறை, கோட்டம்-133, சிவஞானம் சாலை, தி.நகர், சென்னை - 17 என்ற முகவரியில் கடந்த 19.02.2013 அன்று அம்மா உணவகம் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட முதல் அம்மா உ ணவகம் நல்ல விற்பனையுடன் இயங்கி வருகிறது. மேலும், அம்மா உணவகம் செயல்படும் கட்டிடம் 30 வருடத்திற்கு மேல் உள்ள பழைய கட்டிடம் என்பதால் கட்டிடத்தை இடித்து NHM நிதியில் புதிய கட்டிடம் கட்ட அறிவிப்பு வழங்கப்பட்டு, இதன் தொடர்ச்சியாக இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதிய நகர்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தை இடிக்கும் போது அருகில் உள்ள அம்மா உணவக கட்டிடமும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் முன்னெச்சரிக்கை காரணமாக சிவஞானம் சாலை, தி.நகர் சென்னை–17 என்ற முகவரியில் செயல்படும் அம்மா உணவகத்தினை அருகில் உள்ள பிரகாசம் சாலை, தி.நகர் சென்னை-17 என்ற முகவரியில் செயல்படும் அம்மா உணவகத்துடன் இணைத்து செயல்படுத்த அனுமதி அளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, வார்டு-133, சிவஞானம் சாலை தி.நகர், சென்னை–17ல் இயங்கி வரும் அம்மா உணவகத்தின் செயல்பாட்டினை நிறுத்தம் செய்யவும் மற்றும் மேற்படி அம்மா உணவகத்தினை பிரகாசம் சாலை தி.நகர், சென்னை-17ல் இயங்கி வரும் அம்மா உணவகத்துடன் இணைத்து செயல்படுத்த அனுமதியும்,
2. மேற்கண்ட அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை விற்பனை விகிதத்தின்படி அருகில் உள்ள பிற அம்மா உணவகங்களுக்கு மாற்றம் செய்ய அனுமதியும்,
3. மேற்கண்ட அம்மா உணவகத்தில் பயன்பாட்டில் இருக்கும் பாத்திரங்கள், இயந்திரங்கள் மற்றும் மளிகைப்பொருட்களை மண்டலம் 10ல் உள்ள, வார்டு-133 பிரகாசம் சாலை, தி.நகர், சென்னை-17, உள்ளிட்ட பிற அம்மா உணவகங்களுக்கு மாற்றம் செய்ய அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.33/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**இ.பொ.து.ம.செ.ப.ந.க. எண். சி1/ 178 / 2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:145/2024** **பொருள் எண்.37**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய வாகன பணிமனை - இரண்டாம் நிலை குப்பைகள், மண்டலம்-6 புளியந்தோப்பு குப்பை மாற்று நிலையத்திலிருந்து (TPF) கொடுங்கையூர் குப்பை மாற்று வளாகம் கொண்டு செல்வது - 365 நாட்களுக்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர்) உபயோகித்து ரூ.3,84,71,000/-க்கு வாடகை முறையில் பணி அமர்த்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வாகன பணிமனை, மண்டலம்- 6க்கு உட்பட்ட தெருக்களில் இருந்து குப்பைகளை முதன்மையாக சேகரித்து, கனரக மற்றும் இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் கொண்டு புளியந்தோப்பு குப்பை மாற்று நிலையத்தில் (TPF) கொட்டப்படுகின்றது. மண்டலம்- 6 ன் தினசரி குப்பை சேகரிப்பு இலக்கு 350 மெட்ரிக்டன் ஆகும். ஆனால் தற்போது 400 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. அதில் 60 மெட்ரிக்டன் நெகிழி மற்றும் மறுசுழற்சி கழிவாகவும் தரம் பிரிக்கப்பட்டு பின்னர் 340 மெட்ரிக்டன் குப்பை புளியந்தோப்பு குப்பை மாற்று நிலையத்தில் கொட்டப்படுகிறது. குப்பைமாற்று வளாகத்தில் கொட்டப்படும் இந்த குப்பைகள் டாரஸ் வாகனங்களை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகின்றது. மேலும் குப்பை மாற்று வளாகத்திலிருந்து டாரஸ் குப்பைகளை ஏற்றுவதற்கும், குப்பைகளை ஒழுங்குபடுத்தி வைப்பதற்கும் ஹைட்ராலிக் எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மண்டலம் 6 லாரி நிலையத்தில் 4 எண்ணிக்கையிலான டாரஸ் வாகனங்களை கொண்டு மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு மூன்று வேளைகள் இயக்கப்பட்டு வந்தது. இவ்வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாகவும், மேலும் 2.5 இலட்சம் கி.மீ. தூரத்தை கடந்து, பராமரிக்க உகந்ததாக இல்லாததாலும் தமிழ்நாடு அரசு அரசாணை நிலை எண்.2275 உள்துறை (போக்குவரத்து-E), நாள்.10.10.1990யின் வழிகாட்டுதலின் படி தற்போது நிறுத்தப்பட்டுவிட்டன. இதன் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மண்டலம் | வாகன எண் | வாங்கிய வருடம் | வாகனத்தின் வயது | கொள்முதல் செலவு | இதுவரை செலவு | இதுவரை கிலோமீட்டர் ஓடியது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | TN04 AD 3314 | 24-Apr-09 | 13 Years 2 months | 2017999 | 2952847 | 3,51,262 |
| 2 | 6 | TN22 CV 4844 | 01-Sep-11 | 10 Years 10 months | 4533998 | 2716006 | 2,97,841 |
| 3 | 6 | TN04 AD 3306 | 24-Apr-09 | 13 Years 2 months | 2047999 | 3483759 | 3,49,432 |
| 4 | 6 | TN22 BR 9031 | 18-Mar-11 | 10 Years 7 months | 1851475 | 3885464 | 2,83,385 |

மேலும், மேற்குறிப்பிட்ட வாகனங்கள் குப்பை மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் சரியான சாலை மற்றும் வடிகால் அமைப்புகள் சீராக இல்லாத நிலையில் இயங்குவதால் வாகனங்களின் டயர்கள் மிகுந்த தேய்மானத்திற்கு உள்ளாகிறது. மேலும் மழைக்காலங்களில் வாகனங்களின் கியர்பாக்ஸ், கிளட்ச் அசெம்பிளி, PTO பம்ப், சஸ்பென்ஷன் அசெம்பிளிகள் போன்றவை விரைவில் பழுதடைகின்றது. இதன் காரணமாக, மேற்கண்ட வாகனங்களின் பழுது மற்றும் பராமரிப்புக்கான செலவினங்கள் அதிகம் ஏற்படுகின்றது.

தமிழ்நாடு அரசு அரசாணை நிலை எண்.2275 உள்துறை (போக்குவரத்து-E), நாள்.10.10.1990-ன்படி, அரசுத் துறைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் வயது, வாகனம் ஓடும் கிலோமீட்டர்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சான்றுகளின் கீழ் லாரி போன்ற டீசல் வாகனங்கள் 10 ஆண்டுகள் அல்லது 2.5 லட்சம் கிலோமீட்டர்கள் நிறைவடைந்து

இருந்தால் (சாதாரண சாலை நிலைகளின் ஓட்டம்) அவ்வாகனங்களை கழிவு செய்யலாம் (Condemnation) என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதின் பேரில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் கழிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் குப்பை மாற்று நிலையத்தில் 24 மணி நேரமும் இயங்கும் எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி போன்ற உபகரணங்களும் 10 வருடங்களைக் கடந்து பணி செய்து கொண்டிருந்ததால் அவைகளும் அடிக்கடி பழுதடைந்து அவற்றை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு அதிகப்படியான செலவீனங்கள் ஏற்பட்டு குப்பைகள் அதிகம் தேக்கமடைந்து சுற்று சூழல் மாசு ஏற்பட்டதையடுத்து அவைகளும் கழிவு செய்யப்பட்டு விட்டன.

மேற்கூறிய நிகழ்வுகளினால், மண்டலம்-6ன் குப்பை மாற்று நிலையத்தில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை பழைய வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு சரிவர கொண்டு செல்ல முடியாத நிலையில் குப்பை மாற்று நிலையத்தில் பெருமளவு குப்பை தேக்கமடைந்தது. அதனால் சுற்றுச்சூழல் பாதித்து அருகில் உள்ள பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். இந்தச் சூழ்நிலையை சமாளிக்க, புதிய டாரஸ் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொள்முதல் செய்ய மாநகராட்சிக்கு கீழ்கண்டவாறு பெரும் செலவீனம் ஆகுமென விரிவாக கணக்கிடப்பட்டது.

| வரிசை எண் | வாகனம் / உபகரணங்கள் வகை | தயாரிப்பு | தேவையான எண். | தற்போதைய சந்தை விலை சரக்கு மற்றும் சேவை வரி உட்பட | மொத்த செலவு |
|---|---|---|---|---|---|
| 1 | Double Axle HMV Taurus | Ashok Leyland | 4 | Rs. 48,60,000 | Rs.1,94,40,000/- |
| 2 | Hydraulic Excavator with back hoe | BEML | 1 | Rs. 71,40,000/- | Rs. 71,40,000/- |
| 3 | Bobcat Backhoe Loader B900 With Standard tyre – CEV Stage | JCB | 1 | Rs. 37,36,800/- | Rs. 37,36,800/- |
| | | | | Grand Total | Rs.3,03,16,800/- |

இந்நிலையில் ஒரு வருட காலத்திற்கு குப்பை மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு குப்பைகளை எடுத்து செல்ல ஒரு மெட்ரிக் டன் எடைக்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆகும் தோராயமான இயக்கச் செலவு ரூ.332.64/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) மற்றும் 2021 ஆம் வருட பருவகால பேரிடர் காலத்தில் இவ்வாறு பெருமளவு தேங்கிய குப்பையை அகற்ற தனியாருக்கு வாடகை முறையில் டிப்பர் வாகனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 175/- / மெட்ரிக்டன் (உபகரணங்கள் இல்லாமல்) மேலும், ஒரு எக்ஸ்கவேட்டர் வாகனத்திற்கு ஒரு ஷிப்டுக்கு (8 மணி நேரம்) ரூ. 12600/- மற்றும் முன்பளு தூக்கி இயந்திரத்திற்கு ஒரு ஷிப்டுக்கு (8 மணி நேரம்) வாடகை ரூ. 6080/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) என்ற முறையில் கணக்கிட்டபோது குப்பையை அகற்ற ஒரு மெட்ரிக்டன்னுக்கு ரூ. 255.68/- (அல்லது) 256/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) மட்டுமே ஆனதாக கணக்கிடப்பட்டது. இந்த விலை அன்றைய எரிபொருள் விலையில் கணக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஒரு வருடத்திற்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு எடுப்பதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியால் தொகை சேமிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய தரவுகளை கருத்தில் கொண்டு, மாநகராட்சி வாகனங்கள் மூலம் குப்பைகளை அகற்றுவதற்கு ஆகும் செலவு, தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி குப்பைகளை எடுக்க ஏற்படும் செலவை விட சுமார் 29% அதிகம் என தெரியவந்ததையடுத்து தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு எடுப்பது மிகவும் சிக்கனமானது என்பதையும், கணிசமான அளவு பணத்தை மிச்சப்படுத்துவது மட்டுமின்றி, குப்பைமாற்று

வளாகத்தில் எந்தத் தேக்கமும் இல்லாமல் குப்பைகளை அகற்ற முடியும் என்பதையும் மேற்கண்ட கணக்கீடுகள் தெளிவாகக் காட்டுகிறது. எரிபொருள் (Diesel), மசகு எண்ணெய் (Oil) செலவு, வாகன உதிரி பாகங்கள், பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவுகள் போன்றவற்றில் ஏற்படும் செலவீனத்தில் சேமிக்கவும் அதன்பின் குப்பை மாற்று நிலையத்தில் குப்பைகள் தேங்காமல் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கவும் முடியும் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டு மேற்பார்வை பொறியாளர்(இ) அவர்களின், 09.06.2023 நாளிட்ட பணி ஆணையின்படி தனியார் நிறுவனத்திற்கு 13.06.2023 முதல் 365 நாட்களுக்கு மண்டலம் -6ன் குப்பை மாற்று நிலையத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு கண்காணித்ததில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது அதனடிப்படையில் மண்டலம்-6ன் குப்பை மாற்று நிலையத்திற்கு ஒரு மெட்ரிக்டன்னிற்கு ரூ. 302.08/-(சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) ஒரு வருட காலத்திற்கு தனியார் வாகனங்களை கொண்டு குப்பைகளை அகற்றலாம் என முடிவு செய்து அவ்வாறே மின்னணு ஒப்பம் கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி எந்தவித பிரச்சனையுமின்றி அன்றைய குப்பைகள் அன்றைக்கே அகற்றப்பட்டு குப்பை மாற்று வளாகம் தூய்மையாக பராமரிக்கப்பட்டது. மேலும் மேற்கூறிய ஒப்பம் கோரப்பட்ட நாள் முதல் தற்போது வரை எரிபொருள் உபயோகம் மிகவும் கணிசமாக குறைந்துள்ளது, ஒப்பம் கோரப்பட்டதிலும் (-33.26%) கணிசமான தொகை சேமிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆணை 07.05.2024 அன்று முடிவுற்றது.

புதிய பணி ஆணை மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால், (இ.பொ..து. ம.வா.ப . ந.க.எண்.சி1/075/2024) 14.03.2024 அன்று 180 நாட்களுக்கு (61200 M Ts) வழங்கப்பட்டு 08.05.2024 அன்று முதல் நடைமுறையில் உள்ளது. தற்போதைய ஒப்பம் தோராயமாக வரும் 03.11.2024 உடன் முடிவடைய உள்ள நிலையில் 03.11.2024க்கு பிறகு அல்லது ஒப்பத்தொகை முடிவுறும் போது மேலும் 365 நாட்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். எனவே, மண்டலம்-6 குப்பை மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் கொட்டும் குப்பை வளாகத்திற்கு தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி) வாடகை முறையில் இயக்க தலா ஒரு மெட்ரிக்டன் ரூ. 310/- வீதம் (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) 365 நாட்களுக்கு (ரூ.310 x 124100 மெட்ரிக்டன் = ரூ.3,84,71,000/- (18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஒன்றாயிரம் மட்டும்) ஆகும்.

மேற்கண்ட செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் .40-41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-80-04-00 Hiring charges என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்.

எனவே,

1. மண்டலம்-6 குப்பை மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை வளாகத்திற்கு குப்பையை மாற்ற தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி) வாடகை முறையில் அமர்த்தி தலா ஒரு மெட்ரிக் டன்னிற்கு ரூ.310/- வீதம் ஒரு நாளைக்கு 340 மெட்ரிக்டன் என்ற அளவில் 365 நாட்களுக்கு 124100 மெட்ரிக்டன் குப்பையை அகற்ற (365 days x Rs.310/- x 340 MTs) ரூ.3,84,71,000/- (18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஒன்றாயிரம் மட்டும்) செலவீனத்தில் தகுதி வாய்ந்த மற்றும் குப்பை அகற்றும் பணியில் முன்அனுபவம் பெற்ற ஒப்பந்ததாரர்களை மின்னணு ஒப்பம் மூலமாக நியமித்து பணி மேற்கொள்ளவும்,

2. இதற்கான செலவீனம் ரூ.3,84,71,000/- ஐ (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஒன்றாயிரம் மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) இயந்திர பொறியியல் துறையின். *2024-25* ஆம் நிதி ஆண்டிற்கான, ஆய்வுவாகனப் பணிமனை *(40-41-10)* கணக்கு குறியீட்டு எண்.*230-80-04-00 Hiring Charges* என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.45/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண் எல்இ1/440/2024**

**கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 25.04.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:146/2024** **பொருள் எண்.38**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-5, கோட்டம்-58ல், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையத்திற்கு " முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை (Muthamizharignar Kalaignar Mu. Karunanidhi Maaligai) " என பெயர் சூட்ட அரசாணை பெறப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

கண்காணிப்பு பொறியாளர், சிறப்பு திட்டங்கள் துறை அவர்களின் 27.02.2024 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-58ல் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையம் ரூ.57.76 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டி முடிக்கப்பட்டு, 24.02.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நெம்மேலியிலிருந்து காணொலி காட்சி மூலமாக திறக்கப்பட்டது. அவ்விழாவின் போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையத்திற்கு **"முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை *(Muthamizharignar Kalaignar Mu. Karunanidhi Maaligai)* "** என பெயர் சூட்ட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையத்திற்கு **" முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை** ( ***Muthamizharignar Kalaignar Mu. Karunanidhi Maaligai )"*** என பெயர் சூட்ட அரசாணை பெற கூடுதல் தலைமச் செயலர் / ஆணையர் அவர்கள் மூலம், அரசின் பரிந்துரையை பெற கடிதம் அனுப்ப மேல் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022ஐ பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-58ல் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **" முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை *(Muthamizharignar Kalaignar Mu. Karunanidhi Maaligai)*"** என பெயர் சூட்டப்படும் என தெரிவித்துள்ளதாலும், இது குறித்து உரிய அரசாணை வெளியிடுமாறும், மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மாமன்றத்தில் பின்னேற்பு தீர்மானம் நிறைவேற்றிட அனுமதி வழங்குமாறும் வேண்டி மாண்புமிகு மேயர் அவர்களின் ஒப்புதலுடன் அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக மூலம் கடிதம் அனுப்பப்பட்டது.

அரசாணை (4ப) எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.12.03.2024ல் கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையரின் கருத்துரு மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறையின் இசைவு ஆகியவற்றின் அடிப்படையில், இதனை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 5, கோட்டம்-58 ல் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும்

கட்டளை மையத்திற்கு **“முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை *(Muthamizharigar Kalaignar Mu. Karunanidhi Maaligai)”*** என பெயரிடுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 5, கோட்டம்-58 ல் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையத்திற்கு “**முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை *(Muthamizharigar Kalaignar Mu. Karunanidhi Maaligai)”*** என பெயர்சூட்ட அரசாணை பெறப்பட்டதனை தொடர்ந்து, மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.40/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்எல்இ1/046/2024**

**கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 20.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:147/2024** **பொருள் எண்.39**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-9, நுங்கம்பாக்கம், Pycrofts Garden சாலைக்கு "டாக்டர் எஸ்.எஸ்.பத்ரிநாத் சாலை (Dr.S.S.Badrinath Road)" என பெயர் சூட்ட அரசாணை பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

டாக்டர்.டி.எஸ்.சுரேந்திரன், தலைவர், இயக்குநர் - குழந்தைகள் கண் மருத்துவம் சங்கர நேத்ராலயா அவர்கள் மாண்புமிகு மேயர் அலுவலகத்தில் 08.01.2024 நாளிட்ட அளிக்கப்பட்ட மனுவில், பிப்ரவரி24, 2024 அன்று சங்கர நேத்ராலயாவை நிறுவிய டாக்டர். பத்ரிநாத் அவர்களின் 84வது பிறந்த நாள் எனவும், அன்றைய தினம் டாக்டர் எஸ் எஸ் பத்ரிநாத் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கௌரவிக்கும் பொருட்டு, நுங்கம்பாக்கம், கல்லூரி சாலையை "டாக்டர் எஸ் எஸ் பத்ரிநாத் சாலை *(Dr S S Badrinath Road)"* என பெயர் மாற்றம் செய்து சங்கர நேத்ராலயா நிறுவனர் மற்றும் ஆசிரியரை கௌரவிக்கும் வகையில் ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-னை பின்பற்றி, மேற்படி சாலையினை புலத்தணிக்கை மேற்கொண்டு விரிவான அறிக்கை அனுப்புமாறு 29.01.2024 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக, 29.02.2024 அன்று மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலக துணை ஆட்சியர், தனி வட்டாட்சியர், உரிமம் பெற்ற நில அளவையர் மற்றும் கோட்ட உதவி பொறியாளர் ஆகியோரால் புலத்தணிக்கை செய்யப்பட்டது. மத்திய வட்டார துணை ஆணையர், அலுவலக துணை ஆட்சியர் மற்றும் தனி வட்டாட்சியரின் 04.03.2024 நாளிட்ட புலத்தணிக்கை அறிக்கையில் *Haddows Road* முதல் *Wallace Garden* 2வது தெரு வரை உள்ள இடைப்பட்ட 400 மீட்டர் நீளத்தில் உள்ள *Pycrofts Garden* சாலைக்கு "டாக்டர். எஸ். எஸ். பத்ரிநாத் சாலை *(Dr S S Badrinath Road)"* என பெயர் சூட்ட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்வலுவலக 04.03.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக மண்டலம்-*9*, *Haddows Road* முதல் *Wallace Garden* 2வது தெரு வரை உள்ள இடைப்பட்ட 400 மீ நீளத்தில் உள்ள *Pycrofts Garden* சாலைக்கு "டாக்டர் எஸ் எஸ் பத்ரிநாத் சாலை *(Dr S S Badrinath Road)"* என பெயர் சூட்டுவதற்கு, உரிய அரசாணை வெளியிடுமாறும், மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மாமன்றத்தில் பின்னேற்பு தீர்மானம் நிறைவேற்றிட அனுமதி வழங்குமாறும் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டு டாக்டர்.எஸ்.எஸ்.பத்ரிநாத் என்பதற்கு விரிவாக்கமாக,

"டாக்டர். செங்கமேடு ஸ்ரீனிவாச பத்ரிநாத்"

*"Dr. Sengamedu Srinivasa Badrinath "*

என்ற விவரத்தினை முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

அரசாணை(4ப) எண்.9 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்-0703.2024ல் கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையரின் கருத்துரு மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் இசைவு ஆகியவற்றின் அடிப்படையில், இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, நுங்கம்பாக்கம் *Haddows Road* முதல் *Wallace Garden* 2வது தெரு வரை உள்ள இடைப்பட்ட 400 மீட்டர் நீளத்தில் உள்ள *Pycrofts Garden* சாலைக்கு மருத்துவர் எஸ் எஸ் பத்திரிநாத் சாலை *(Dr S S Badrinath Road)* என்று பெயர் மாற்றம் செய்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடப்பட்டதனைத் தொடர்ந்து *Dr. S. S. Badrinath* அவர்களின் பெயர் மேற்படி சாலைக்கு சூட்டப்பட்டது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, நுங்கம்பாக்கம் *Haddows Road* முதல் *Wallace Garden* 2வது தெரு வரை உள்ள இடைப்பட்ட 400 மீட்டர் நீளத்தில் உள்ள *Pycrofts Garden* சாலைக்கு மருத்துவர் எஸ் எஸ் பத்திரிநாத் சாலை *(Dr S S Badrinath Road)* என்று பெயர் சூட்டப்பட்டதற்கு அரசாணை பெறப்பட்டதனை தொடர்ந்து, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.58/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

******

**ம.க.கு.ந.க.எண்.அ7/ 939 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:148/2024** **பொருள் எண்.40**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் -2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு அகவிலைப்படி வீதங்கள் 01.01.2024 முதல் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.*204*, நிதி (படிகள்)த் துறை, நாள்:*11.06-2024* ன்படி, 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்திய அகவிலைப்படிகளின் வீதங்கள் கீழ்கண்டவாறு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| *2016*-ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் / தர ஊதியம் | |
|---|---|
| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அக விலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
| *(1)* | *(2)* |
| *01.07.2023* | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் ***230*** சதவீதம் |

2. முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்.கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்ட வீதங்களில் அகவிலைப்படிகளை அனுமதித்து அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:-

| *2016*-ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் / தர ஊதியம் | |
|---|---|
| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அக விலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
| *(1)* | *(2)* |
| *01.01.2024* | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் ***239*** சதவீதம் |

3. ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2024 ஆம் மாதத்திற்கான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னனு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும் திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் என்றும் அவ்வரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*4)* அரசாணை (நிலை) எண்.*204*, நிதி (படிகள்)த் துறை, நாள்:*11.06-2024* ன்படி 2016ற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் அலுவலர்களின் அகவிலைப்படி உயர்வு குறித்ததான அரசாணையை, பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, மன்றத்தின் அனுமதி பெற்று நிறைவேற்றிட ஜுன் 2024-ஆம் மாத மன்றக் கூட்டத்தில் சமர்பிக்கப்பட்டு, மன்றத்தின் அனுமதி பெற்று கோப்பு கிடைக்கப்பெற 2024 ஜுன் 25 அல்லது 26 தேதி ஆகும் சூழ்நிலையில், 2024 ஜுன் மாத சம்பளம் தொடர்பான பணிகள் 2024 ஜுன் 25ம் தேதி முடிவடைந்துவிடும் என்பதால், உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினை 2024 ஜூலை மாதம் ஊதியத்தில் வழங்கவும், மற்றும் ஜனவரி முதல் ஜுன் 2024ஆம் மாதம் வரை உள்ள உயர்த்தப்பட்ட அகவிலைப்படி நிலுவைத் தொகையினை நிலுவைப்பட்டியாக வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, அரசாணை (நிலை) எண். 204, நிதி (படிகள்)த் துறை, நாள். 11.06.2024-ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.70/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.க.கு.ந.க.எண்.அ7/ 940 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:149/2024** **பொருள் எண்.41**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் -2006 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் – அலுவலர்களுக்கு அகவிலைப்படி வீதங்கள் 01.01.2024 முதல் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி**

அரசாணை (நிலை) எண். 205 நிதி(படிகள்)த் துறை, நாள்:11.06-2024 ன்படி, 2006 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு அகவிலைப்படிகளின் வீதங்கள் கீழ்கண்டவாறு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| **2006-ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்** | |
|---|---|
| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **அக விலைப்படி வீதம்** (மாதம் ஒன்றுக்கு) |
| *(1)* | *(2)* |
| ***01.07.2023*** | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் ***427*** சதவீதம் |

2. முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்.கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்ட வீதங்களில் அகவிலைப்படிகளை அனுமதித்து அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:-

| **2006-ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்** | |
|---|---|
| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **அக விலைப்படி வீதம்** (மாதம் ஒன்றுக்கு) |
| *(1)* | *(2)* |
| ***01.01.2024*** | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் ***443*** சதவீதம் |

3. ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2024 ஆம் மாதத்திற்கான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும் திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் என்றும் அவ்வரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) அரசாணை (நிலை) எண். 205 நிதி (படிகள்)த் துறை, நாள்:11.06-2024 ன்படி, 2006ற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் அலுவலர்களின் அகவிலைப்படி உயர்வு குறித்ததான அரசாணையை, பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, மன்றத்தின் அனுமதி பெற்று நிறைவேற்றிட ஜுன் 2024-ஆம் மாத மன்றக் கூட்டத்தில் சமர்பிக்கப்பட்டு, மன்றத்தின் அனுமதி பெற்று கோப்பு கிடைக்கப்பெற 2024 ஜுன் 25 அல்லது 26 தேதி ஆகும் சூழ்நிலையில், 2024 ஜுன் மாத சம்பளம் தொடர்பான பணிகள் 2024 ஜுன் 25ம் தேதி முடிவடைந்துவிடும் என்பதால், உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினை 2024 ஜுலை மாதம் ஊதியத்தில் வழங்கவும், மற்றும் ஜனவரி முதல் ஜுன் 2024ஆம் மாதம் வரை உள்ள உயர்த்தப்பட்ட அகவிலைப்படி நிலுவைத் தொகையினை நிலுவைப்பட்டியாக வழங்கலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, அரசாணை (நிலை) எண். 205, நிதி (படிகள்)த் துறை, நாள். 11.06.2024-ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.71/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**<u>ம.க.கு.ந.க.எண். அ7/477 / 2024</u>**

**<u>கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:150/2024** **பொருள் எண்.42**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - படிகள் - அகவிலைப்படி - 01.01.2024 முதல் 50 சதவிகிதம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி</u>**

அரசாணை (நிலை) எண்.132, நிதி (படிகள்)த் துறை, நாள்:12.03.2024ன்படி, மாநில அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 46 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக அகவிலைப்படியை 01.01.2024 முதல் 4 சதவீதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, அனுமதித்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது,

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படிவீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| (1) | (2) |
| 01-01-2024 | அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதம் |

2) ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் 2024 வரைக்கான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னனு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும் எனவும், அதுவே, 50 காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்படவேண்டும் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மேலும், அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், சில்லரைச்செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேர பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4) இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவுத்திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்கள்/ எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5) இந்த அகவிலைப்படி உயர்வினால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு (தோராயமாக) <u>3.00 கோடி (மூன்று கோடி மட்டும்)</u> எனவும், நடப்பு 2023 2024ஆம் நிதியாண்டில் <u>9 கோடி(ஒன்பது கோடி மட்டும்)</u> எனவும் கூடுதல் செலவு ஏற்படும் என கருதப்படுகிறது.

6) எனவே, இவ்வரசாணையின் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, வழங்க, கூடுதல் தலைமைச்செயலர்/ ஆணையர் அவர்களின் அனுமதி 15.03.2024 அன்று பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள், மற்றும் மண்டல அலுவலர்கள் (1 முதல் 15 வரை) ஆகியோருக்கு, 15.03.2024 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

*7)* தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.*132* நிதி (படிகள்)த் துறை, நாள்¦.*12.03.2024*.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.72/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

******

**ம.க.கு.ந.க.எண். அ7/614 / 2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:151/2024** **பொருள் எண்.43**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - தனிப்பட்ட உயர்வு - திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு 01.01.2024 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

அரசாணை (நிலை) எண்.133, நிதி (படிகள்)த் துறை, நாள்.12.03.2024ல், தனிப்பட்ட உயர்வு, திருத்தப்பட்ட தொகுப்பூதியம் *(Consolidated Pay)* / நிலையான ஊதியம் *(Fixed Pay)* / மதிப்பூதியம் *(Honorarium)* பெறும் பணியாளர்களுக்கு *01.01.2024* முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு *(Ad-hoc Increase)* அனுமதித்து அரசாணை பிறபிக்கப்பட்டுள்ளது.

அரசாணையின் விவரம் கீழ்கண்டவாறு:-

## FINANCE [Allowances] DEPARTMENT

**G.O.(Ms).No.133 Dated:12th March 2024.**

*(Masi -29, Thiruvalluvar Aandu 2055)*

**ABSTRACT**

**AD-HOC INCREASE** - Employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium - Another Ad-hoc Increase from **01-01-2024** - Orders - Issued.

---

**Read the fo11owing:-**

1. G.O.(Ms).No.311, Finance (Allowances) Department, dated: 27-10-2023.
2. G.O. (Ms).No.132, Finance (Allowances) Department, dated: 12-03-2024.

-o0o-

**ORDER:**

In the Government Order first read above, orders were issued sanctioning another Ad-hoc Increase in respect of employees those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium as shown below:-

| With effect form | Ad-hoc Increase | |
|---|---|---|
| | Employees drawing upto Rs.2500/p.m. | Employees drawing above Rs. 2500/p.m. |
| (1) | (2) | (3) |
| 01-07-2023 | Rs. 50 | Rs. 100 |

2. In the Government Order second read above, orders were issued enhancing the Dearness Allowance payable to Government employees who are drawing pay in Levels of Pay Matrix with effect from 01-01-2024.

3. Government has therefore, decided to grant another Ad-hoc Increase to those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium with effect from 01-01-2024. Accordingly, Government direct that employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium be allowed another Ad-hoc Increase with effect from 01-01-2024 as detailed below:-

| With effect form | Ad-hoc Increase | |
|---|---|---|
| | Employees drawing upto Rs. 2500/p.m. | Employees drawing above Rs. 2500/p.m. |
| (1) | (2) | (3) |
| 01-01-2024 | Rs. 50 | Rs. 100 |

4. The arrears of Ad-hoc Increase for the month of January, February and March 2024 shall be drawn and disbursed by existing cashless mode of Electronic Clearance System (ECS).

5. This order shall also apply to the employees of Local Bodies, and Sweepers working in Rural Development and Panchayat Raj Department.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T. UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

2) **எனவே, இவ்வரசாணையின் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, வழங்க, கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையர் அவர்களின் அனுமதி** 08.05.2024 **அன்று பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வட்டார துணை ஆணையர்** (**வடக்கு / மத்தியம் / தெற்கு**) / **அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள்** (1 **முதல்** 15 **வரை**) **ஆகியோருக்கு,** 08.05.2024 **அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.**

*3)* **தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக, அரசாணை** (**நிலை**) **எண்.***133* **நிதி** (**படிகள்**)**த்துறை, நாள்**.*12.03.2024***ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

"21.06.2024 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (**வ.வி.ம.நி.**) **கூட்டத்தில் தீர்மான எண்**.73/2024, **நாள்**.21.06.2024**ன்படி இதற்கு நிலைக்குழு** (**வ.வி.ம.நி.**) **பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**"

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**
**********

**ம.க.கு.ந.க.எண். அ7/967/ 2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:152/2024** **பொருள் எண்.44**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்ப நிதி (தமிழ் நாடு) 01.04.2024 முதல் 30.06.2024 வரை (Q1) உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என நிர்ணயித்து அரசாணை வழங்கப்பட்டது - இவ்வரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.210, நிதி(படிகள்)த்துறை நாள்.14.06.2024 அரசாணையில், தமிழ்நாடு பொது வருங்கால வைப்புநிதிக்கு *(2024*-2025) 01.04.2024 முதல் 30.06.2024 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரசாணையின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## FINANCE [Allowances] DEPARTMENT

**G.O.Ms.No.210, Dated 14th, June,2024.**

*(kurothi,vaikasi-32, Thiruvalluvar Aandu 2055)*

ABSTRACT

Provident Fund - General Provident Fund (Tamil Nadu) - Rate of interest for the financial year 2024-2025 with effect from 01.04.2024 to 30.06.2024 - Orders - Issued

---

***Read the following:-***

1. G.O Ms. No.115, Finance (Allowances) Department, dated .25.04.2023.
2. G.O Ms. No. 225, Finance (Allowances) Department, dated.17.07.2023.
3. G.O Ms. No. 299, Finance (Allowances) Department, dated.12.10.2023.
4. G.O Ms. No. 13, Finance (Allowances) Department, dated. 08.01.2024
5. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution F.No.5(3)-B(PD) / 2023, dated:10.06.2024.

-OOO-

**ORDER:**

In the Government Order first, second, third, and four read above, orders were issued fixing the rate of interest on the accumulation at the credit of the subscribers of General Provident Fund (Tamil Nadu) during the financial year-2023-2024 as detailed below:

| Sl.No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1. | I | 01-04-2023 to 30-06-2023 | 7. 1% |
| 2. | II | 01-07-2023 to 30-09-2023 | 7. 1% |
| 3. | III | 01-10-2023 to 31-12-2023 | 7. 1% |
| 4. | IV | 01-01-2024 to 31-03-2024 | 7. 1% |

**2.** The Government of India, in its resolution fifth read above, announced that during the financial year 2024-2025, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7**.1**% (Seven point one percent) with effect from 1st April 2024 to 30th June 2024(Q1).

**3.** The Government now direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of **7.1%** (Seven point one percent) with effect from1st April 2024 to 30th June 2024(Q1).

**4.** The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

***(BY ORDER OF THE GOVERNOR)***

**T.UDHAYACHANDRAN**
**PRINCIPAL SCRETARY TO GOVERNMENT**

2) எனவே, அரசாணை (நிலை) எண்.210, நிதி(படிகள்)த்துறை நாள்:14.06.2024.ஐ சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் நடைமுறைப்படுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக) மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.74/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**வ.து.ந.க.எண்.ஜி1/6743/2008**

**கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 08.03.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:153/2024** **பொருள் எண்.45**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - சொத்துவரி - பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டது -- தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சான்று (DISH Certificate) பெற்ற தொழிற்சாலை கட்டிடங்கள் - தொழிற்சாலை வகையின் (Industrial Category) கீழ் வரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருதல் - தமிழ்நாடு மின்சார வாரியத்தால் இனம் (Category) III (B)-ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள தொழிற்சாலை கட்டிடங்களையும் - தொழிற்சாலை பயன்பாட்டு இனங்களாக (Industrial Usage) கருதிடவும் - தொழிற்சாலை கட்டணத்தின்படி (Industrial Rate) வரி மதிப்பீடுகள் மேற்கொள்ளவும் - சிறப்பு நிகழ்வாக மன்றத்தின் அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சியின் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளில், குடியிருப்புகள், குடியிருப்பு அல்லாதவை மற்றும் சிறப்பு வகை என்பதன் அடிப்படையில், வகைப்படுத்தப்பட்ட கட்டிடங்களுக்கு, அவற்றிற்குரிய வரி வீதத்திலும் *(Tariff)* மற்றும் கடந்த 2011 ஆம் ஆண்டில், மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட முந்தைய உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில், குடியிருப்பு, குடியிருப்பு அல்லாதவை மற்றும் தொழிற்சாலை என்பதன் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட கட்டிடங்களுக்கு, அவற்றிற்குரிய வரி வீதத்திலும் *(Tariff)* சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கடந்த 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி பொது சீராய்வில், இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளில், அரசால் 'தொழிற்பேட்டைகள்' என வரையறுக்கப்பட்ட பகுதிகளில், 'தொழிற்சாலைகளாக *(Industries)*' செயல்படும் கட்டிடங்களுக்கு மட்டும் குடியிருப்புக்கான கட்டணத்தில் குறிப்பிட்ட *(2.5)* மடங்கு உயர்த்தி சொத்துவரி விதிப்பும், இதர தொழிற்சாலைகளுக்கு, 'குடியிருப்பு அல்லாத பகுதி *(Non-Residential)*' என்பதன் அடிப்படையில் *(அதாவது முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளில் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளுக்கு சொத்துவரி மதிப்பீடு செய்வதைப் போன்று)* சொத்துவரி மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கடந்த 2019 ஆம் ஆண்டு, அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.11.2019ல், சொத்துவரி பொது சீராய்வு நிறுத்தம் செய்து உத்தரவிடப்பட்டது. அரசாணையினைத் தொடர்ந்து, முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகள் மற்றும் இணைக்கப்பட்ட முந்தைய உள்ளாட்சி அமைப்புகளில், ஏற்கனவே பின்பற்றப்பட்டு வந்த அடிப்படை தெரு கட்டணங்களின்படியே, அனைத்து வகையான கட்டிடங்களுக்கும் சொத்துவரி மதிப்பீடுகள்/திருத்திய மதிப்பீடுகள் 2/2021 - 22 ஆம் அரையாண்டு வரை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கடந்த 2022 ஆம் ஆண்டு, அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 30.03.2022ல், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும், சொத்துவரி பொது சீராய்வினை மேற்கொள்வது தொடர்பாக வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கி ஆணையிடப்பட்டது.

அரசாணை தொடர்ச்சியாக, மன்றத் தீர்மானம் எண்.63/2022, நாள்:30.05.2022ல், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வகையான சொத்துக்களுக்கும் (குடியிருப்புகள்/ குடியிருப்பு அல்லாதவை/ சிறப்பு வகை கட்டிடங்கள்/கல்வி நிறுவன கட்டிடங்கள்/தொழிற்சாலை இனங்கள் ஆகியவற்றிற்கும்), 1/2022-23 முதல் பொது சீராய்வு நடைமுறைப்படுத்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி மேற்படி வகையான கட்டிடங்களுக்கு, 1/2022-23 ஆம் அரையாண்டு முதல் சொத்துவரி மதிப்பீடுகள்/திருத்திய வரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மன்றத் தீர்மானம் எண். 63/2022, நாள்: 30.05.2022ல், தொழிற்சாலை கட்டிடங்களுக்கு பொது சீராய்வு மேற்கொள்வது தொடர்பாக தீர்மானிக்கப்பட்ட இனம்-8ல், " பெருநகர சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளிலுள்ள தொழிற்சாலை இனங்களுக்கு, சொத்துவரி சீராய்வானது தற்போது அடிப்படை தெரு கட்டணத்தில் முறையே 1.75 மற்றும் 2.00 என உயர்வு காரணி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், சொத்துவரி விதிப்புகள் 'கட்டிடங்களின் உபயோகம்' அடிப்படையில் விதிக்கப்படுவதால், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தால், தொழிற்சாலை சட்டம் 1948-ன்படி, உரிமம் வழங்கப்பட்ட இனங்களுக்கு மட்டுமே " தொழிற்சாலை உபயோகம்" என்பதன் அடிப்படையில், சொத்துவரி சீராய்வு மற்றும் புதிய சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளவும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், கிண்டி தொழிற்பேட்டை (முந்தைய சென்னை மாநகராட்சி பகுதி), அம்பத்தூர் தொழிற்பேட்டை (இணைக்கப்பட்ட முந்தைய உள்ளாட்சி அமைப்பு பகுதி) ஆகியவை ஏற்கனவே, அரசால் தொழிற்பேட்டை பகுதிகளாக வரையறுக்கப்பட்டு, இப்பகுதிகளில் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மேலும், முந்தைய மாநகராட்சியின் சில பகுதிகளிலும், இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளிலும் தொழிற் உற்பத்தி நிறுவனங்கள் *(Manufacturing Units)* செயல்பட்டு வருகின்றன.

அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் *(AIEMA)*, கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களுக்கு அளித்துள்ள 08.02.2024 நாளிட்ட கடிதத்தில், சங்கத்தின் கீழ் உள்ள உறுப்பினர்களின் தொழிற்சாலைகளுக்கு *(units)*, சொத்துவரியானது, தொழிற்சாலைக்குண்டான வரி விகிதத்திற்கு திருத்தப்படவில்லை என்றும், பிற பகுதிகளில் உள்ள வணிக நிறுவனங்களை காட்டிலும் மிகுதியாக சொத்துவரி செலுத்துவதாகவும், இந்தநிலையில், உறுப்பினர்களின் தொழிற்சாலைகளுக்கு *(Units)*, தொழிற்சாலை வகையின் கீழ் சொத்துவரி நிர்ணயம் செய்யுமாறு கோருவதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சங்கம், ஏற்கனவே கடந்த 14.09.2022 தேதியிட்டு அளித்த மனுவில், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள சிறு குறு நிறுவனங்கள் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தின் ( *Directorate of Industrial and Safety and Health (DISH))* கீழ் வருவதில்லை என்றும், இவற்றை, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் *(TNEB)*, உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்படும், வகை *III (B)*ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள சான்றின் அடிப்படையில், தொழிற்சாலைகளாக கருதிடவும், மேற்படி, தொழிற்சாலை இனங்களுக்கு சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ள, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தின் *(DISH)* சான்று இருக்க வேண்டும் என்பதிலிருந்து, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தின் சான்று *(DISH) /* தமிழ்நாடு மின்சார வாரியத்தால் உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வகை *III (B)*ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள சான்று என மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கை தொடர்பாக, இவ்வலுவலக 24.09.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம், மாமன்றத்தின் முன்பு இப்பொருள் குறித்து சமர்ப்பித்து, முடிவு எடுக்கப்படும் என அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

- The Factories Act, 1948, Chapter IX, Special Provisions, **section 85**. *Power to apply the act to certain premises (1)*- " *The State Government may, by notification in the Official Gazette, declare that all or any of the provisions of this Act shall apply to any place wherein a manufacturing process is carried on with or without the aid of power or is so ordinarily carried on, notwithstanding that-*

- *i) the number of persons employed therein is less than ten, if working with aid of power and less than twenty if working without the aid of power, or* என குறிப்பிடப்பட்டுள்ளது.

- மேற்படி சட்ட பிரிவு மூலமாக, *மின் திறன் அல்லது மின் திறனின்றி உற்பத்தி பணிகளை மேற்கொள்ளும் எந்தவொரு இடத்திற்கும், தொழிற்சாலை சட்டம் அல்லது சட்டத்தின் ஏதேனும் வழிமுறைகள் பொருந்தும் என மாநில அரசால் அரசிதழ் மூலம் அறிவிப்பு செய்யலாம்.*

- தமிழ்நாடு மின்சார வாரியமானது *(TNEB)*, குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், விவசாயம் மற்றும் தொழிற்சாலை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு, வெவ்வேறு வகையின் கீழ், மின் திறன் இணைப்புகள் வழங்கி வருகிறது. அதன்படி, தொழிற்சாலைகளை, மின்சார வாரியமானது "வகை *III (B)*"ன் கீழ் மின் திறன் இணைப்புகள் வழங்கி வகைப்படுத்துகிறது.

தொழிற்சாலை கட்டிடங்களுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியம் *(TNEB)*, தொழிற்சாலை *(Industry)*, வகை *III (B)* என வகைப்படுத்தி, மின் திறன் இணைப்பு வழங்குவதால், அதனடிப்படையில், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் கோரிக்கையினை பரிசீலித்து, வகை *III(B)*ன் கீழ் மின் இணைப்பு பெற்றுள்ள உற்பத்தி தொழிற் நிறுவனங்களை *(Manufacturing Units)*, தொழிற்சாலைகளாக கருதி, தொழிற்சாலை இனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படை தெரு கட்டணத்தின் *(Industrial Tariff)* அடிப்படையில், சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

- மேலும், முந்தைய சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919-ல்,

  - ✓ பிரிவு எண்.*98*ன்படி, சொத்து வரி விதிக்க மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.
  - ✓ பிரிவு எண்.*99*ல், ***If the council by a resolution determines that a property tax shall be levied, such tax shall be levied on all buildings and lands within the city*, என குறிப்பிடப்பட்டுள்ளது.**
  - ✓ சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், *1919*, பிரிவு *100*ன்படி, அனைத்து கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் மீது ஆண்டு வாடகை அடிப்படையில் சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
  - ✓ அட்டவணை. IV, பிரிவு-138, விதி(3)3ன்படி, சொத்துவரி விதிப்பு குறித்து, மன்றத்தால், வழிகாட்டுதல்கள் வெளியிட வழிவகை உள்ளது.

- தற்போது, அரசால் வெளியிடப்பட்டுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம்-1998ல்,

  - பிரிவு எண். 80 (1) The Council shall have the power to levy the following taxes namely:- (a)Property tax, (b) ……

    (2)-ல், The levy, assessment and collection of taxes mentioned in sub-section (1) shall be in accordance with the provisions of this Act and the rules made thereunder: என குறிப்பிடப்பட்டுள்ளது.
  - 81. (1) For the purpose of imposing a tax under this Act, the council shall pass a resolution determining the levy of tax specifying the rate at which and the data from which such tax shall be levied.

(1 A)-The taxes shall be levied at such percentage of the annual value of the building and land which is occupied by, or adjacent and appurtenant to, the building or both as may be fixed by the council based on the floor rates fixed by the Government. என குறிப்பிடப்பட்டுள்ளது.

- 82 (1) The Property tax shall be levied on all lands, buildings, telecommunication towers and storage structures built on, or attached to, land within the municipality. என குறிப்பிடப்பட்டுள்ளது.
- பிரிவு-83-ல் சொத்துவரி மதிப்பீடு மற்றும் ஆண்டு மதிப்பு நிர்ணயம் செய்வது தொடர்பாக வழிவகைகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ தற்போது, அரசால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள்-2023, விதி எண்.-

- 262 (2) (c) The basic zonal values may be determined separately for residential, non-residential, ***industrial,*** educational or any other category of lands, buildings, storage structures ***as determined by the council*** and may vary with the size of the properties.- என குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண். 63/2022, நாள்: 30.05.2022ல், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநகரத்தால் *(DISH)*, தொழிற்சாலை சட்டம் 1948-ன்படி, உரிமம் வழங்கப்பட்ட இனங்களுக்கு மட்டுமே, " தொழிற்சாலை உபயோகம்" என்பதன் அடிப்படையில், சொத்துவரி சீராய்வு மற்றும் புதிய சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், *" தொழிற்சாலை சட்டம், 1948, பிரிவு 85 (1) (i)-ல், மின் திறன் அல்லது மின் திறனின்றி உற்பத்தி பணிகள் மேற்கொள்ளும் இடங்கள் தொழிற்சாலைகளாக கருத வழிவகை வழங்கப்பட்டுள்ளதாலும், முந்தைய சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919 மற்றும் தற்போது அரசால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 ஆகிய சட்டங்களில், சொத்துவரி விதிக்க, மன்றம் அதிகாரம் பெற்றுள்ள நிலையிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தால், தொழிற்துறைகளுக்கு, வகை III (B)ன் கீழ் வகைப்படுத்தி, மின் திறன் இணைப்பு சான்று வழங்குவதாலும், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் கோரிக்கையினை பரிசீலித்து,* **பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கு,** தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநகரத்தால், தொழிற்சாலை சட்டம் 1948-ன்படி, உரிமம் **(அல்லது)** தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கும், வகை *III (B)*ன் கீழ் வகைப்படுத்தி வழங்கும் சான்று *(DISH Certificate / TNEB Power Connection Certificate (Category - III (B))* ஆகியவற்றின் அடிப்படையில், சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ள சிறப்பு நிகழ்வாக மன்றத்தின் அனுமதி பெறலாம்.

எனவே,

1) **பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கு *(Industrial)***, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநகரத்தால் *(DISH)*, தொழிற்சாலை சட்டம் 1948-ன்படி, வழங்கப்படும் உரிமத்தின் அடிப்படையில், சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்வதைப் போன்று, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் *(TNEB)*, உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு, வகை *III (B)*ன் கீழ் வகைப்படுத்தி, வழங்கப்பட்ட/வழங்கப்படும் சான்றின் அடிப்படையில், தொழிற்சாலைகளாக *(Industrial)* கருதி, இவ்வகையான இனங்களுக்கும் *(TNEB - Tariff III (B) Certificate)*, தொழிற்சாலை வரிவிகிதத்தின் *(Industrial Rate)* கீழ் புதிய/திருத்திய சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளவும் ,

(உ.ம். *DISH Certificate / TNEB Power Connection Tariff (Category – III (B))* ஆகியவற்றின் அடிப்படையில், தொழிற்சாலை கட்டிடங்களுக்கு, தொழிற்சாலை வரி விகிதத்தின் கீழ், சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளவும்)

*2)* தமிழ்நாடு மின்சார வாரியம் *(TNEB)*, தொழிற்சாலைகளுக்கு *(Industry)*, மின்திறன் வகை *III (B*)ன் கீழ் வகைப்படுத்தி, வழங்கப்பட்ட சான்றின்படி *(TNEB Power Connection Tariff (Category – III (B))*, தொழிற்சாலை வரிவிகிதத்தின் *(Industrial Rate)* கீழ், மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாத, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தொழிற்சாலை கட்டிடங்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998ல், வழங்கப்பட்டுள்ள வழிவகைகளை பின்பற்றி, தொழிற்சாலை வரி விகிதத்தின் *(Industrial Rate)* கீழ், சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளவும்,

*3)* இனம்-2ல் கண்டுள்ளவாறு, தொழிற்சாலை வரி விகிதத்தின் கீழ், சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளும் தொழிற்சாலை கட்டிடங்களுக்கு, சொத்துவரி பொது சீராய்வை, *1/2022-23* ஆம் அரையாண்டு *(General Revision of property tax for Industrial category assessments from 1/2022-23)* முதல் நடைமுறைப்படுத்திடவும்,

மன்றத் தீர்மானம் எண்.63/2022, நாள்: 30.05.2022ன் தொடர்ச்சியாக, சிறப்பு நிகழ்வாக, தொழிற்சாலை கட்டிடங்களுக்கு, மேற்கண்ட இனம்-*1*, இனம்-2 மற்றும் இனம்-3 ஆகியவற்றின் அடிப்படையில், சொத்துவரி மதிப்பீடு மற்றும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள, நிலைக்குழு *(*வரிவிதிப்பு மற்றும் நிதி*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.*)* கூட்டத்தில் தீர்மான எண்.43/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.*”*

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**வ.து.ந.க.எண்.தொ.உ./331/2023-24**

**கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 19.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:154/2024** **பொருள் எண்.46**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை -தொழில் உரிமம் புதுப்பிக்க கால நீட்டிப்பு வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998(ம) திருத்தப்பட்ட சட்டம் 2022 மற்றும் அதற்கான தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, நாள்.13.04.2023 முதல் அமுலுக்கு வந்தது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 290ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் / வணிக நிறுவனங்கள் தொழில் உரிமம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட தொழில் உரிமங்கள் ஒவ்வொரு ஆண்டும் உரிமம் காலம் ( மார்ச் 31) முடிவதற்கு, மூன்று மாதத்திற்கு முன்னர் தொழில் உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு புதுப்பிக்கப்படாத தொழில் உரிமங்கள் தன்னிச்சையாகவே ஏப்ரல் 1ம் தேதி முதல் காலாவதியாகும் என செய்தித்தாள் வாயிலாக வணிகர்களுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டு புதுப்பிக்க வேண்டிய தொழில் உரிமம் 72,733 ஆகும். அவற்றில் 43,792 தொழில் உரிமங்கள் மட்டுமே 31.03 2024 வரை புதுப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமிழ்நாடு வணிகர் சங்கத்தின் தலைவர் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை நேரில் சந்தித்து தொழில் உரிமம் புதுப்பிக்கும் நிகழ்வுகளில் சில பிரச்சனைகள் உள்ளது எனவும், அவற்றை தளர்வு செய்யவும் மற்றும் ஒரு மாத கால அபராதமின்றி நீட்டிப்பு செய்து தருமாறு 04.03.2024 அன்று கடிதம் அளித்ததை தொடர்ந்து தமிழ்நாடு வணிகர் சங்கத்தின் கோரிக்கைக்கிணங்க, தொழில் உரிமம் புதுப்பிக்க ஒரு மாத கால நீட்டிப்பு செய்யவும் (01.04.2024 முதல் 30.04.2024வரை), அபாரதமின்றி தொழில் உரிமம் புதுப்பிக்கவும் மற்றும் இவ்விவரத்தினை செய்தித் தாள்களில் வெளியிடவும், மண்டலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பவும், மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களிடம் 30.03.2024 அன்று ஆணை பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஒரு மாத கால நீட்டிப்பு செய்து உரிமம் புதுப்பிக்கப்பட்டு வந்த நிலையில், 72,115 தொழில் உரிமங்களில், ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வரை 58,341 உரிமங்கள் மட்டுமே புதுப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மீண்டும் தமிழ்நாடு வணிகர் சங்கத்தின் தலைவர் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை நேரில் சந்தித்து பாராளுமன்றத் தேர்தல் பணி மற்றும் இதர காரணங்களுக்காக தொழில் உரிமம் புதுப்பிப்பதற்கு அபராதமின்றி மேலும் ஒரு மாத காலம் நீட்டிப்பு (09.05.2024 முதல் 31.05.2024 ) வழங்குமாறு *08.05.2024* அன்று கடிதம் அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு வணிகர் சங்கத்தின் கோரிக்கைக்கிணங்க, தொழில் உரிமம் புதுப்பிக்க அபராதமின்றி மேலும் ஒரு மாத கால நீட்டிப்பு செய்து (09.05.2024 முதல் 31.05.2024 வரை), தொழில் உரிமம் புதுப்பிக்கவும் மற்றும் இவ்விவரத்தினை செய்தித் தாள்களில் வெளியிடவும், மண்டலங்களுக்கு சுற்றறிக்கை ஆனுப்பவும், மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறவும், கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களிடம் 11.05.2024 அன்று ஆணை பெறப்பட்டு தொழில் உரிமம் புதுப்பிக்கப்பட்டு வந்தது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்படி உரிமம் புதுப்பிக்க 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என வழிவகை உள்ள நிலையில், உரிமம் புதுப்பிக்க ஓராண்டு/இரண்டாண்டு/மூன்றாண்டு என நிர்ணயிக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு ஆணை எதிர்நோக்கி வரும் நிலையில் வணிகர்களின் கோரிக்கையினை கருத்தில் கொண்டும் *2024*-2025ஆம் ஆண்டிற்கான உரிமம் ஓராண்டு புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் மொத்தமுள்ள 72,733 உரிமங்களில் இரண்டு முறை காலநீட்டிப்பு செய்தும் இதுவரை 61,475 உரிமங்கள் மட்டுமே 31.05,2024 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11,207 எண்ணிக்கையிலான தொழில் உரிமங்கள் புதுப்பிக்கப்படாத நிலையில் தொழில் உரிமமின்றி செயல்படுவதாகவும் மற்றும் வணிகங்கள் மூடப்பட்டதாக கருதப்படுகிற நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 304ன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் தொழில் உரிமம் அபராதமின்றி புதுப்பிக்க கால நீட்டிப்பு செய்த காலமான 01.04.2024 முதல் 31.05.2024 வரை வழங்கப்பட்டதற்கும் 2024-2025 ஆம் ஆண்டிற்கான உரிமம் ஓராண்டு அரசு ஆணை எதிர்நோக்கி உரிமம் புதுப்பித்தற்கும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.56/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

******

**வ.து.ந.க.எண்.ஜி1/2669/2024**

**கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 19.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:155/2024** **பொருள் எண்.47**

**சொத்துவரி - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நிறுவன கட்டிடம் (சொத்துவரி எண். 05-059-08663-000) – காலம் தாழ்த்தி செலுத்தப்பட்ட சொத்துவரி மீது விதிக்கப்பட்ட தனிவட்டிக்கு விலக்கு கோரியது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு - விதி 268 (4) (a) ன்படி தனிவட்டி தொகை ரூ.4,29,268/-க்கு விலக்கு அளிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

அரசாணை எண்.44, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:12.04.2023ன்படி, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1998, வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டம் 13.04.2023 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பெற்றுள்ளது.

மேலும், அரசாணை எண்.45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:12.04.2023ன்படி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, உருவாக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு சொந்தமான கட்டிடங்கள் மீது விதிக்கப்பட்ட தனிவட்டியை தளர்வு செய்வது தொடர்பாக, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி 268 (4) *(a)*-ல், *Reduction or waiver of interest amount,- In the case of assessments of Central Government and State Government buildings or their public sector undertakings, the municipality shall not reduce or waive the interest levied except with the previous approval of the Council;* என குறிப்பிடப்பட்டுள்ளது.

துணை பொது மேலாளர் (என்.இ.), பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)*, சென்னை தொலைபேசியகம், சென்னை 600 001, அவர்களின் 01.04.2024 தேதியிட்ட கடிதத்தில் கீழ்கண்ட கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டது.

- முதன்மைச் செயலர் / ஆணையர், அவர்களின் நேர்முக கடிதத்தின்படி, பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)* நிறுவனத்திற்கான தனிவட்டி தொகையை, தள்ளுபடி செய்திட வேண்டும்.
- பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்தின் *(BSNL), Flower Bazaar T/E*–சொத்துக்கான (சொத்துவரி எண்.05-*059-08663*-000) சொத்துவரியினை, 1/2024-25 வரை தனிவட்டி தொகையுடன் சேர்த்து (*I/2016*-17 முதல் *II 2022*-23 வரை) செலுத்தியுள்ளதால், மேற்படி தனிவட்டி தொகையினை வருங்கால சொத்துவரி கேட்பில் நேர்செய்திட வேண்டும்.
- *II/2023-2024 & I/2024-2025* ஆகிய காலங்களுக்கு, அந்தந்த அரையாண்டின் முதல் 30 நாட்களுக்குள் சொத்து வரி செலுத்தப்பட்டுள்ளதால், "தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், *2023* விதி 268(2)ன் படி, ஒரு மதிப்பீட்டிற்கு ஐந்து சதவிகித ஊக்கத்தொகை ரூ.5000/- வரை வழங்கிட பரிசீலிக்க வேண்டும்.

மேற்படி கோரிக்கை தொடர்பாக குறிப்பிடுவது யாதெனில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -5, வார்டு- 59, சென்னை – 600 001, எடபாளையம், பூக்கடை *(Flower Bazaar)*, என்.எஸ்.சி. போஸ் சாலை, எண்.1 என்ற முகவரியில், பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)*, நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடம் இயங்கி வருகிறது. இக்கட்டிடத்திற்கு சென்னை மாநகராட்சி சட்ட விதிகளின்படி, வரிமதிப்பீடு செய்யப்பட்டு, பட்டி எண்.05-*059-08663*-000க்கு, அரையாண்டு சொத்துவரி 1/2014-15 முதல் ரூ.14,57,13*0/-*என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பின்னர், சொத்துவரி பொது சீராய்வின்படி, அரையாண்டு சொத்துவரி *I/2022*-23 முதல் ரூ.35,33,545/-என

நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி சொத்திற்கு, *I/2024*-25 அரையாண்டு வரை நிலுவையின்றி சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி, மண்டலம்-5, வார்டு-59ல் உள்ள பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)* நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடத்திற்கு (சொத்துவரி எண்.05-*059-08663-000)*, மாநகராட்சியால் விதிக்கப்பட்ட தனிவட்டியை தளர்வு செய்யுமாறு கோரியது குறித்து, கீழ்கண்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகிறது.

*1)* பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனம் *(BSNL)*, இந்திய அரசின் கீழ் இயங்கும் அரசு நிறுவனமாகும்.

*2)* கடந்த 05.04.2023 அன்று துணை ஆணையர் (வ(ம)நிதி) அவர்களின் தலைமையில், பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவன *(BSNL)* அலுவலர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் இடையே கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு, இக்கூட்டத்தின் முடிவில், *BSNL* நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு, விதிக்கப்பட்ட தனிவட்டியை, தளர்வு செய்ய கோருவது குறித்த முன்மொழிவுகள், <u>மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது.</u>

*3)* சென்னை – 600 001, எடபாளையம், பூக்கடை *(Flower Bazaar)*, என்.எஸ்.சி. போஸ் சாலை, எண்.1 ல் அமைந்துள்ள பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)*, நிறுவன கட்டிடத்திற்கு *II/2023*-24 வரை நிலுவையின்றி சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது.

*4)* தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி 268 (4) *(a)*-ல், *Reduction or waiver of interest amount,- In the case of assessments of Central Government and State Government buildings or their public sector undertakings, the municipality shall not reduce or waive the interest levied except with the previous approval of the Council;* என குறிப்பிடப்பட்டுள்ளது.

*5)* மத்திய அரசு நிறுவனம் என்பதன் அடிப்படையில், ஏற்கனவே, மத்திய சேமிப்பு கிடங்கு *(M/S CENTRAL WARE HOUSING CORP.)* சொத்துவரி மதிப்பீட்டின் (எண்.*05-050-02492*-000) மீது, விதிக்கப்பட்ட தனி வட்டி தொகைக்கு, தளர்வு அளித்து, சிறப்பு அதிகாரி-மன்ற தீர்மான எண்.*038/2022*, நாள் 15.01.2022ன் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)* என்பது, மத்திய அரசின் கீழ் செயல்படும் தொலைத் தொடர்பு சேவை நிறுவனம் என்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 விதி 268 (4) *(a)*ல், மத்திய/மாநில அரசு நிறுவன கட்டிடங்களுக்கு, தனிவட்டி தொகையை குறைக்க அல்லது விலக்களிக்க மன்றத்தின் அனுமதி பெற வழிவகைகள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும், துணை பொது மேலாளர் (என்.இ.), பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட் *(BSNL)*, சென்னை, அவர்களின் 01.04.2024 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கோரிக்கையினை பரிசீலித்து, சென்னை – 600 001, எடபாளையம், பூக்கடை *(Flower Bazaar)*, என்.எஸ்.சி. போஸ் சாலை, எண்.1 என்ற முகவரியில் உள்ள பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)*, நிறுவன கட்டிடத்திற்கு (வரி எண். 05-*059-08663-000)*, *II/2016*-17 முதல் *II/2022*-23 வரையிலான காலத்திற்குரிய தனிவட்டி தொகை ரூ.4,29,268/-க்கு, தளர்வளிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் .

நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக *(Parliament Election of 2024, Model Code of Conduct Rules, implemented on 16.03.2024)*, மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி 268 (4) *(a)* ன்படி, பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)*, நிறுவன கட்டிடத்திற்கு (வரி எண். *05-059-08663-*000), விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை ரூ.4,29,268/-க்கு விலக்கு அளிக்கலாம்.

அதன்படி, பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)*, நிறுவன கட்டிடத்திற்கு (வரி எண். *05-059-08663*-000) விதிக்கப்பட்ட தனிவட்டி தொகை ரூ. 4,29,268/-க்கு, தளர்வு அளிப்பது தொடர்பாக, மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, கீழ்கண்ட இனம்- (1) மற்றும் இனம்-

(2)ன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள, கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 16.04.2024 தேதியிட்ட ஆணை பெறப்பட்டது.

1) 'பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)* என்பது மத்திய அரசு துறையின் கீழ் இயங்கி வரும் நிறுவனம் என்பதால்,இந்நிறுவனத்திற்கு சொந்தமான, மண்டலம்-*5*, வார்டு- 59, சென்னை – 600 001, எடபாளையம், பூக்கடை *(Flower Bazaar)*, என்.எஸ்.சி.போஸ் சாலை, எண்.1 என்ற முகவரியில் உள்ள கட்டிடத்திற்கு *(05-059-08663-000)*, விதிக்கப்பட்ட தனிவட்டி *(I-2016*-17 அரையாண்டு காலம் முதல் *II/2022*-23 அரையாண்டு காலம் வரை) தொகை ரூ.*4,29,268/*-க்கு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி எண்.268 (4) *(a)*ன்படி விலக்களிக்கவும்,

2) மேற்படி முகவரியில் (சென்னை-*1*, பூக்கடை *(Flower Bazaar)*, என்.எஸ்.சி. போஸ் சாலை, எண்.1) அமைந்துள்ள கட்டிடத்திற்கு *(05-059-08663-000)*, கூடுதலாக சொத்துவரி செலுத்தப்பட்டிருப்பின், அத்தொகையினை எதிர்வரும் காலங்களில் செலுத்தப்பட வேண்டிய சொத்துவரியில் நேர் செய்திடவும்,

எனவே, மேற்படி இனம்- (1) மற்றும் இனம் (2) ஆகியவற்றின் அடிப்படையில், மண்டலம் -*5*, வார்டு- 59, சென்னை – 600 001, எடபாளையம், பூக்கடை *(Flower Bazaar)*, என்.எஸ்.சி. போஸ் சாலை, எண்.1 என்ற முகவரியில் உள்ள பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் *(BSNL)* நிறுவன கட்டிடத்திற்கு (05-*059-08663*-000), பெருநகர சென்னை மாநகராட்சியால் விதிக்கப்பட்ட தனிவட்டி *(I-2016*-17 அரையாண்டு காலம் முதல் *II/2022*-23 அரையாண்டு காலம் வரை) தொகை ரூ.*4,29,268/*-க்கு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி எண்.268 (4) *(a)* ன்படி, விலக்களித்து நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.57/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.14.வதுநக.எண்.ஆர்2/0603/2017**

**கூடுதல் தலைமைச் செயலர் /ஆணையர் அவர்களின் 06.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:156/2024** **பொருள் எண்.48**

**பெருநகர சென்னை மநாகராட்சி - மண்டலம் 14 – வருவாய் துறை – புதிய வார்டு 182 – கந்தன் சாவடி அண்ணா நெடுஞ்சாலையில் உள்ள வணிக வளாகத்தின் 15 கடைகளுக்கு மறு ஏலம் விட ஆணை பெறப்பட்டது - அதில் வணிக வளாகம் // ல் உள்ள 1 முதல் 5 கடைகளை அங்கன்வாடி மையத்திற்கு ஒதுக்கீடுசெய்யவும். வணிக வளாகம் /ல் உள்ள 10 கடைகளை மட்டும் மறு ஏலம் விடவும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, பழைய வார்டு 184, புதிய வார்டு 182க்கு உட்பட்ட கந்தன்சாவடி, அண்ணா நெடுஞ்சாலையில் உள்ள வணிக வளாகம் / ல் 10 கடைகளும் மற்றும் வணிக வளாகம் // ல் 10 கடைகளும் ஆக மொத்தம் 20 கடைகள் உள்ளது . அதில் வணிக வளாகம் // ல் 6 முதல் 10 வரையிலான 5 கடைகள் அம்மா உணவகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 கடைகளையும் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மலரில் பிரசுரம் மற்றும் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டு, கடந்த 03.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பிரிக்கப்பட்டு, 15 கடைகளுக்கும் ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டது .

15 கடைகளின் ஒதுக்கீட்டாளர்கள் 12 மாத வாடகை கட்டணத்தில் 25% தொகை செலுத்தியது போக மீதமுள்ள 75% தொகையை எவரும் செலுத்தவில்லை. மேலும் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை பத்திரத்தையும் சமர்ப்பிக்கவில்லை .

எனவே, அந்த 15 கடைகளும் மூடிய நிலையில் உள்ளதாலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுவதாலும் அந்த 15 கடைகளின் ஒதுக்கீட்டினை இரத்து செய்யவும், மீண்டும் மறு ஏலம் விடவும் வட்டார துணை ஆணையர் (தெ) அவர்களின் 22.11.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டது .

இந்நிலையில் முரசொலி தமிழ் நாளிதழில் மட்டும் விளம்பரம் செய்யப்பட்டு, ஆங்கில நாளிதழ்களில் விளம்பரப்படுத்தப்படாத காரணத்தினால் மேலும் பல ஒப்பந்ததாரர்கள் பங்கேற்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாலும் மீண்டும் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய உத்தேசிக்கப்பட்டு 27.09.2023 புதன்கிழமை மாலை 03.30 மணியளவில் நடைபெற இருந்த ஒப்பந்தப்புள்ளி திறப்பு வட்டார துணை ஆணையர் (தெ) அவர்களின் 27.09.2023 நாளிட்ட ஆணையின்படி நிறுத்திவைக்கப்பட்டது .

இந்நிலையில் மாமன்ற உறுப்பினர் திரு. K.P.K.சதீஷ்குமார் அவர்களின் 09.11.2023 நாளிட்ட கடிதத்தில், வணிக வளாகம் 2ல் உள்ள 1 முதல் 5 வரையிலான கடைகளை அங்கன்வாடி மையத்திற்கு ஒதுக்கீடு செய்ய ஆவன செய்யுமாறு கோரியுள்ளார் .

உதவி செயற் பொறியாளர் அவர்களின் 28.11.2023 நாளிட்ட குறிப்பிலும், கந்தன்சாவடி பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தால் வணிக வளாகம் 2ல் உள்ள 1 முதல் 5 வரையிலான கடைகளை அங்கன்வாடி மையத்திற்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது . (தீர்மான எண் . 593, நாள் . 12.02.2024 )

மேலும், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், திட்டம் 16, ஆலந்தூர் (இ) பல்லாவரம் அவர்களின் கடிதத்திலும், கல்லுக்குட்டை 1 மற்றும் 2ல் செயல்படும் பகுதி இடவசதி இல்லாத காரணத்தால் இந்த 5 கடைகளை அங்கன்வாடி மையங்களாக செயல்படுவதற்கு ஒதுக்கீடு செய்து உதவுமாறு கோரப்பட்டுள்ளது .

அதனடிப்படையில் வட்டார துணை ஆணையர் (தெ) அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில், கடைகளை அங்கன்வாடி மையத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு வார்டு குழுவில் ஒப்புதல் பெற்று அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் 14வது மண்டலம் வார்டு குழுவில் தீர்மான எண்.593, நாள்.12.02.2024ன்படி தீர்மானம் பெறப்பட்டுள்ளது .

எனவே,

அ) மண்டலம் - *14*, வார்டு 182க்கு உட்பட்ட அண்ணா நெடுஞ்சாலையில் உள்ள வணிக வளாகம் 1 ல் உள்ள 10 கடைகளையும், *II* ல் உள்ள 5 கடைகளையும் (1 முதல் *5* வரை*)* ஆக மொத்தம் 15 கடைகளை மறு ஏலம் விட பெறப்பட்ட 22.11.2022 நாளிட்ட ஆணையை ரத்து செய்யவும்,

ஆ) மண்டலம் 14, வார்டு குழுத் தீர்மான எண். 593, நாள்.12.02.2024ன்படி வணிகவளாகம் *II* ல் உள்ள 5 கடைகளை (1 முதல் 5 வரை ) அங்கன்வாடி மையத்திற்கு ஒதுக்கீடு செய்யவும் ,

இ ) வணிக வளாகம் *I* ல் உள்ள 10 கடைகளை மட்டும் (கடை எண் 1 முதல் 10 வரை*)* தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதி 2023 - பிரிவு 316ன்படி மீண்டும் மறு ஏலம் விடவும் ,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .

> “21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*வ.வி.ம.நி.*)* கூட்டத்தில் அங்கன்வாடி மையத்திற்கு ஒப்படைக்கப்படவுள்ள கடைகளை அங்கன்வாடி மையம் செயல்படுவதற்கு தேவையான அனைத்து விதமான உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திய பின்னர் அங்கன்வாடி மையத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.41/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.*”*

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**ம.அ.14வ.துந.க.எண்.ஆர்2/1312/2022**

**கூடுதல் தலைமைச் செயலர் /ஆணையர் அவர்களின் 07.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:157/2024** **பொருள் எண்.49**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - மண்டலம்- 14, வார்டு 189, துலுக்காணத்தம்மன் கோயில் தெரு வணிக வளாகம் – 8 கடைகளுக்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது – 24.01.2024 அன்று ஏலம் விடப்பட்டது - ஏலம் எடுத்த G1 மற்றும் G2ஆகிய கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யவும் - ஒப்பந்த புள்ளி கோராத 6 கடைகளை மறு ஏலம் விடவும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளை ஒரே முறையில் மெகா ஏலம் *(One time mega auction for vacant shop)* விடும் பட்சத்தில் பொதுமக்கள் பயன்பெறுவதற்கும் மற்றும் மாநகராட்சியின் வருவாயை பெருக்குவதற்கும் உகந்ததாக இருக்கும் என, மன்றத் தீர்மான எண்.384/2022, நாள்.30.08.2022ல் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் வட்டார துணை ஆணையர் (தெ) அவர்களின் 22.09.2023 நாளிட்ட ஆணையின்படி, மண்டலம்-*14*, வார்டு-*189* துலுக்காணத்தம்மன் கோயில் தெரு, வணிகவளாகத்தின் கடை எண் *G1, G2, F2, F3, F4, F5, F6 & F7* ஆக மொத்தம் *8* கடைகளை *24.01.2024* அன்று மாலை 3.30 மணியளவில் ஏலம் விட செய்தி மலரில் பிரசுரமும், செய்தித் தாள்களில் விளம்பரமும் செய்யப்பட்து.

ஆனால் *G1, G2* கடைகளை தவிர மற்ற *6* கடைகளை ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை. எனவே, *G1 , G2* கடைகளை ஏலம் எடுத்த ஒப்பந்ததாரர்களுக்கு அவரவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கீழ்கண்டுள்ள அட்டவணையின்படி கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ எ ண் | கடை எண் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நபரின் பெயர் திருமதி / திரு | கடையின் ச அடி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட விலை ச அடி ஒன்றிற்கு ரூ. | ஒப்பந்தப் புள்ளி கோரியவர் குறிப்பிட்ட விலை ச அடி ஒன்றிற்கு ரூ. | மாத வாடகை ரூ | GST | மொத்தம் | 25% தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | G1 | உ. பர்சானா பேகம் | 100 | 52+GST | 90+GST | 9000 | 1620 | 10,620 | ரூ.31,860/- ரொக்கம் |
| 2 | G2 | மு. ஹமீதா பானு | 100 | 52+GST | 81+GST | 8100 | 1458 | 9558 | ரூ. 28,680/- ரொக்கம் |

எனவே,

**அ)** பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் *14*, வார்டு *189* துலுக்காணத்தம்மன் கோயில் தெரு, வணிகவளாகத்தின் கடை எண். *G1 , G2* ஆகிய இரு கடைகளை மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு கலம் 7ல் குறிப்பிட்டுள்ள மாத வாடகை தொகை மற்றும் கலம் 8ல் குறிப்பிட்டுள்ள சேவை வரியையும் சேர்த்து வாடகையாக நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யவும்,

ஆ) அதன் அடிப்படையில் மண்டல அலுவலர் / மண்டலம் – 14 அவர்களின் ஒப்பத்துடன் இரு ஒதுக்கீட்டாளர்களுக்கும் ஒதுக்கீட்டு ஆணையினை தனித்தனியே வழங்கிடவும் ,

இ) 24.01.2024 அன்றைய ஏலத்தில் எவரும் ஒப்பந்தப்புள்ளி கோராத கடைகளான *F2* , *F3* ,*F4*,*F5*,*F6* & *F7* ஆகிய 6 கடைகளை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதி *2023* பிரிவு *316*ன்படி மீண்டும் மறு ஏலம் விடவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.42/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/ 5005 /2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:158/2024** **பொருள் எண்.50**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 35 மேல்நிலைப்பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலமாக ஜுன் 2024 முதல் ஏப்ரல்2025 வரை ஆசிரியர்களை தலைமை ஆசிரியர் மூலமாக நியமிக்கவும் மற்றும் அவர்களுக்கு ஊதியம் வழங்க தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக தலைமை ஆசிரியர்களுக்கு ECS மூலம் பள்ளிகளுக்கு வழங்குவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகளும், 130 நடுநிலைப்பள்ளிகளும், 46 உயர்நிலைப்பள்ளிகளும், 35 மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் 32 மேல்நிலைப்பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை இக்கல்வியாண்டிலும் அதிகரித்ததை தொடர்ந்து 11 மற்றும் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக்குழு மூலம் தற்காலிகமாக நியமிப்பது மிகவும் அவசியமாகிறது. தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் இளங்கலை மற்றும் முதுகலைப்பட்டத்துடன் *B.Ed* தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் நலன் கருதி அப்பள்ளிகளில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களின் தேவை உள்ளது.

| S.NO | AEO | NAME OF THE SCHOOL | NO OF STUDENT 11 & 12 | NO OF PG EXISTING | NAME OF THE SUBJECT NEED | NO OF NEED | PTA OF 24-25 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | CHSS LAKSHMI PURAM | 176 | 3 | TAMIL | **1** | **1** |
| 2 | 2 | CHSS LAKSHMI PURAM | | | ENGLISH | **1** | **1** |
| 3 | 2 | CHSS LAKSHMI PURAM | | | PHYSICS | **1** | **1** |
| 4 | 2 | CHSS LAKSHMI PURAM | | | CHEMISTRY | **1** | **1** |
| 5 | 2 | CHSS LAKSHMI PURAM | | | ACCOUNTANCY & COMMERCE | **1** | **1** |
| 6 | 2 | CHSS LAKSHMI PURAM | | | ECONOMICS | **1** | **1** |
| 7 | 2 | CHSS LAKSHMI PURAM | | | HISTORY | **1** | **1** |
| 8 | 3 | CHSS T H ROAD | 835 | 10 | TAMIL | **1** | **1** |
| 9 | 3 | CHSS T H ROAD | | | BOTANY | **1** | **1** |
| 10 | 3 | CHSS T H ROAD | | | COMPUTER APPLICATION | **2** | **1** |
| 11 | 3 | CHSS T H ROAD | | | ACCOUNTANCY & COMMERCE | **3** | **2** |
| 12 | 3 | CHSS T H ROAD | | | ECONOMICS | **2** | **1** |
| 13 | 3 | CHSS T H ROAD | | | AUDITING PRACTICAL I | **1** | **1** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 14 | 3 | CHSS PATEL NAGAR | 216 | 8 | ENGLISH | **1** | **1** |
| 15 | 3 | CHSS PATEL NAGAR | | | ACCOUNTANCY & COMMERCE | **1** | **1** |
| 16 | 3 | CHSS PATEL NAGAR | | | ECONOMICS | **1** | **1** |
| 17 | 3 | CHSS PATEL NAGAR | | | AUDITING | **1** | **1** |
| 18 | 3 | CHSS KALYANAPURAM | 63 | 4 | ENGLISH | **1** | **1** |
| 19 | 3 | CGHSS BUDDHA STREET | 705 | 13 | TAMIL | **1** | **1** |
| 20 | 3 | CGHSS BUDDHA STREET | | | ENGLISH | **1** | **1** |
| 21 | 3 | CGHSS BUDDHA STREET | | | PHYSICS | **1** | **1** |
| 22 | 3 | CGHSS BUDDHA STREET | | | B.MATHS | **1** | **1** |
| 23 | 3 | CGHSS BUDDHA STREET | | | EMPLOYABILITY SKILL | **2** | **1** |
| 24 | 3 | CGHSS BUDDHA STREET | | | ACCOUNTANCY & COMMERCE | **4** | **3** |
| 25 | 3 | CGHSS BUDDHA STREET | | | ECONOMICS | **2** | **1** |
| 26 | 3 | CGHSS BUDDHA STREET | | | POLITICAL SCIENCE | **1** | **1** |
| 27 | 3 | CGHSS BUDDHA STREET | | | FSM | **1** | **1** |
| 28 | 3 | CGHSS BUDDHA STREET | | | AUDITING | **1** | **1** |
| 29 | 4 | CGHSS ROTLER STREET | 304 | 14 | EMPLOYABILITY SKILL | **1** | **1** |
| 30 | 4 | CGHSS ROTLER STREET | | | ACCOUNTANCY | **1** | **1** |
| 31 | 4 | CGHSS ROTLER STREET | | | FSM | **1** | **1** |
| 32 | 4 | CGHSS ROTLER STREET | | | NURSING | **1** | **1** |
| 33 | 4 | CHSS APPASAMY STREET | 168 | 6 | TAMIL | **1** | **1** |
| 34 | 4 | CHSS APPASAMY STREET | | | ACCOUNTANCY & COMMERCE | **1** | **1** |
| 35 | 4 | CHSS APPASAMY STREET | | | ECONOMICS | **1** | **1** |
| 36 | 5 | CGHSS M H ROAD | 1174 | 18 | TAMIL | **2** | **1** |
| 37 | 5 | CGHSS M H ROAD | | | ENGLISH | **2** | **1** |
| 38 | 5 | CGHSS M H ROAD | | | PHYSICS | **1** | **1** |
| 39 | 5 | CGHSS M H ROAD | | | CHEMISTRY | **2** | **1** |
| 40 | 5 | CGHSS M H ROAD | | | BIOLOGY | **1** | **1** |
| 41 | 5 | CGHSS M H ROAD | | | ZOOLOGY | **2** | **1** |
| 42 | 5 | CGHSS M H ROAD | | | B.MATHS | **1** | **1** |
| 43 | 5 | CGHSS M H ROAD | | | "COMPUTER APPLICATION" | **2** | **1** |
| 44 | 5 | CGHSS M H ROAD | | | ACCOUNTANCY & COMMERCE | **3** | **2** |
| 45 | 5 | CGHSS M H ROAD | | | ECONOMICS | **3** | **2** |
| 46 | 5 | CGHSS M H ROAD | | | "POLITICAL SCIENCE" | **1** | **1** |
| 47 | 5 | CGHSS M H ROAD | | | AUDITING | **1** | **1** |
| 48 | 5 | CGHSS M H ROAD | | | TDD | **1** | **1** |
| 49 | 5 | CGHSS MARKET ST | 427 | 6 | TAMIL | **1** | **1** |
| 50 | 5 | CGHSS MARKET ST | | | ENGLISH | **1** | **1** |
| 51 | 5 | CGHSS MARKET ST | | | CHEMISTRY | **1** | **1** |
| 52 | 5 | CGHSS MARKET ST | | | MATHS | **1** | **1** |
| 53 | 5 | CGHSS MARKET ST | | | "COMPUTER SCIENCE" | **1** | **1** |
| 54 | 5 | CGHSS MARKET ST | | | ACCOUNTANCY & COMMERCE | **4** | **3** |
| 55 | 5 | CGHSS MARKET ST | | | ECONOMICS | **2** | **1** |
| 56 | 5 | CGHSS MARKET ST | | | HISTORY | **1** | **1** |
| 57 | 5 | CGHSS MARKET ST | | | FSM | **1** | **1** |
| 58 | 5 | CGHSS MARKET ST | | | HOME SCI | **1** | **1** |
| 59 | 5 | CGHSS MARKET ST | | | TDD | **1** | **1** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 60 | 5 | CHSS KOLATHUR | 323 | 5 | TAMIL | **1** | **1** |
| 61 | 5 | CHSS KOLATHUR | | | COMPUTER SCIENCE | **2** | **1** |
| 62 | 5 | CHSS KOLATHUR | | | ACCOUNTANCY & COMMERCE | **2** | **1** |
| 63 | 5 | CHSS KOLATHUR | | | ECONOMICS | **1** | **1** |
| 64 | 5 | CHSS BUNDER GARDEN | 346 | 7 | MATHS | **1** | **1** |
| 65 | 5 | CHSS BUNDER GARDEN | | | COMPUTER SCIENCE | **1** | **1** |
| 66 | 5 | CHSS BUNDER GARDEN | | | ACCOUNTANCY & COMMERCE | **2** | **1** |
| 67 | 5 | CHSS BUNDER GARDEN | | | ECONOMICS | **1** | **1** |
| 68 | 6 | CHSS BUNDER GARDEN | | | GEOGRAPHY | **1** | **1** |
| 69 | 6 | CHSS KORATTUR | 148 | 2 | TAMIL | **1** | **1** |
| 70 | 6 | CHSS KORATTUR | | | ENGLISH | **1** | **1** |
| 71 | 6 | CHSS KORATTUR | | | CHEMISTRY | **1** | **1** |
| 72 | 6 | CHSS KORATTUR | | | BIOLOGY | **1** | **1** |
| 73 | 6 | CHSS KORATTUR | | | ACCOUNTANCY & COMMERCE | **1** | **1** |
| 74 | 6 | CHSS KORATTUR | | | ECONOMICS | **1** | **1** |
| 75 | 6 | CHSS KORATTUR | | | HISTORY | **1** | **1** |
| 76 | 6 | CHSS ATHIPET | 110 | 4 | TAMIL | **1** | **1** |
| 77 | 6 | CHSS ATHIPET | | | PHYSICS | **1** | **1** |
| 78 | 6 | CHSS ATHIPET | | | CHEMISTRY | **1** | **1** |
| 79 | 6 | CHSS ATHIPET | | | BIOLOGY | **1** | **1** |
| 80 | 6 | CHSS ATHIPET | | | ACCOUNTANCY & COMMERCE | **1** | **1** |
| 81 | 7 | CHSS ATHIPET | | | ECONOMICS | **1** | **1** |
| 82 | 7 | CHSS SUBBARAYAN | 279 | 4 | BIOLOGY | **1** | **1** |
| 83 | 7 | CHSS SUBBARAYAN | | | MATHS | **1** | **1** |
| 84 | 7 | CHSS SUBBARAYAN | | | COMPUTER SCI | **2** | **1** |
| 85 | 7 | CHSS SUBBARAYAN | | | ACCOUNTANCY & COMMERCE | **2** | **1** |
| 86 | 7 | CHSS SUBBARAYAN | | | ECONOMICS | **1** | **1** |
| 87 | 7 | CHSS AYANAVARAM | 259 | 7 | PHYSICS | **1** | **1** |
| 88 | 7 | CHSS AYANAVARAM | | | B MAT | **1** | **1** |
| 89 | 7 | CHSS AYANAVARAM | | | ACCOUNTANCY & COMMERCE | **1** | **1** |
| 90 | 7 | CHSS AYANAVARAM | | | ECONOMICS | **1** | **1** |
| 91 | 7 | CGHSS PULLA AVENUE | 657 | 14 | TAMIL | **2** | **1** |
| 92 | 7 | CGHSS PULLA AVENUE | | | ENGLISH | **2** | **1** |
| 93 | 7 | CGHSS PULLA AVENUE | | | "COMPUTER APPLICATION" | **2** | **1** |
| 94 | 7 | CGHSS PULLA AVENUE | | | ACCOUNTANCY & COMMERCE | **3** | **3** |
| 95 | 7 | CGHSS PULLA AVENUE | | | ECONOMICS | **3** | **2** |
| 96 | 7 | CGHSS PULLA AVENUE | | | HOME SCI | **1** | **1** |
| 97 | 7 | CGHSS PULLA AVENUE | | | TDD | **1** | **1** |
| 98 | 7 | CBHSS G KOIL | 238 | 9 | ACCOUNTANCY & COMMERCE | **1** | **1** |
| 99 | 8 | CBHSS G KOIL | | | AUDITING | **1** | **1** |
| 100 | 8 | CGHSS NUNGAMBAKKAM | 184 | 9 | MATHS | **1** | **1** |
| 101 | 8 | CGHSS NUNGAMBAKKAM | | | FSM | **1** | **1** |
| 102 | 8 | CBHSS NUNGAMBAKKAM | 151 | 14 | NO NEED | | |
| 103 | 8 | CHSS CHOOLAIMEDU | 129 | 6 | TAMIL | **1** | **1** |
| 104 | 8 | CHSS CHOOLAIMEDU | | | MATHS | **1** | **1** |
| 105 | 8 | CHSS CHOOLAIMEDU | | | ACCOUNTANCY & COMMERCE | **1** | **1** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 106 | 8 | CHSS LLOYDS ROAD | 37 | 1 | Tamil | **1** | **1** |
| 107 | 8 | CHSS LLOYDS ROAD | | | "Computer Application" | **1** | **1** |
| 108 | 8 | CHSS LLOYDS ROAD | | | Accountancy &Commerce | **1** | **1** |
| 109 | 8 | CHSS LLOYDS ROAD | | | Economics | **1** | **1** |
| 110 | 8 | CHSS ALWARPET | 144 | 7 | Biology | **1** | **1** |
| 111 | 8 | CHSS ALWARPET | | | Computer Sci | **1** | **1** |
| 112 | 8 | CHSS ALWARPET | | | Accountancy & Commerce | **1** | **1** |
| 113 | 9 | CHSS ALWARPET | | | Geography | **1** | **1** |
| 114 | 9 | CGHSS SAIDAPET | 669 | 17 | Tamil | **1** | **1** |
| 115 | 9 | CGHSS SAIDAPET | | | English | **1** | **1** |
| 116 | 9 | CGHSS SAIDAPET | | | Maths | **1** | **1** |
| 117 | 9 | CGHSS SAIDAPET | | | Computer Sci | **1** | **1** |
| 118 | 9 | CGHSS SAIDAPET | | | Accountancy & Commerce | **3** | **2** |
| 119 | 9 | CGHSS SAIDAPET | | | Economics | **1** | **1** |
| 120 | 9 | CGHSS SAIDAPET | | | Geography | **1** | **1** |
| 121 | 9 | CGHSS SAIDAPET | | | Fsm | **1** | **1** |
| 122 | 9 | CBHSS SAIDAPET | 523 | 15 | Computer Sci | **1** | **1** |
| 123 | 9 | CBHSS SAIDAPET | | | Maths | **1** | **1** |
| 124 | 9 | CBHSS SAIDAPET | | | Accountancy & Commerce | **4** | **2** |
| 125 | 9 | CHSS KOYEMBEDU | 194 | 4 | Physics | **1** | **1** |
| 126 | 9 | CHSS KOYEMBEDU | | | Chemistry | **1** | **1** |
| 127 | 9 | CHSS KOYEMBEDU | | | Maths | **1** | **1** |
| 128 | 9 | CHSS KOYEMBEDU | | | Accountancy & Commerce | **2** | **1** |
| 129 | 9 | CHSS WESTMABALAM | 169 | 8 | Biology | **1** | **1** |
| 130 | 9 | CHSS CIT NAGAR | 75 | 5 | Economics | **1** | **1** |
| 131 | 9 | CHSS NESAPAKKAM | 182 | 5 | Chemistry | **1** | **1** |
| 132 | 9 | CHSS NESAPAKKAM | | | Maths | **1** | **1** |
| 133 | 9 | CHSS NESAPAKKAM | | | Accountancy & Commerce | **1** | **1** |
| 134 | 9 | CHSS NESAPAKKAM | | | Economics | **1** | **1** |
| 135 | 9 | CHSS M G R NAGAR | 372 | 6 | Tamil | **2** | **1** |
| 136 | 9 | CHSS M G R NAGAR | | | English | **1** | **1** |
| 137 | 9 | CHSS M G R NAGAR | | | Maths | **1** | **1** |
| 138 | 9 | CHSS M G R NAGAR | | | Accountancy & Commerce | **2** | **1** |
| 139 | 9 | CHSS M G R NAGAR | | | Economics | **1** | **1** |
| 140 | 9 | CHSS VIRUGAMBAKKAM | 346 | 9 | Maths | **1** | **1** |
| 141 | 9 | CHSS VIRUGAMBAKKAM | | | Computer Sci | **1** | **1** |
| 142 | 9 | CHSS VIRUGAMBAKKAM | | | Accountancy & Commerce | **1** | **1** |
| 143 | 9 | CHSS PULIYUR | 165 | 9 | No Need | | |
| 144 | 10 | CHSS THARAMANI | 414 | 8 | Tamil | **1** | **1** |
| 145 | 10 | CHSS THARAMANI | | | English | **1** | **1** |
| 146 | 10 | CHSS THARAMANI | | | Chemistry | **1** | **1** |
| 147 | 10 | CHSS THARAMANI | | | Computer Sci | **1** | **1** |
| 148 | 10 | CHSS THARAMANI | | | Accountancy & Commerce | **2** | **1** |
| 149 | 10 | CHSS THARAMANI | | | Economics | **1** | **1** |
| 150 | 10 | CHSS THIRUVANMIYUR | 654 | 9 | Tamil | **2** | **1** |
| 151 | 10 | CHSS THIRUVANMIYUR | | | English | **2** | **1** |
| 152 | 10 | CHSS THIRUVANMIYUR | | | Maths | **1** | **1** |
| 153 | 10 | CHSS THIRUVANMIYUR | | | Computer Sci | **1** | **1** |
| 154 | 10 | CHSS THIRUVANMIYUR | | | Accountancy & Commerce | **5** | **4** |
| 155 | 10 | CHSS THIRUVANMIYUR | | | Economics | **3** | **2** |
| 156 | 10 | CHSS THIRUVANMIYUR | | | History | **1** | **1** |
| 157 | 10 | CHSS THIRUVANMIYUR | | | Geography | **1** | **1** |
| 158 | 10 | CHSS VELACHERY | 417 | 6 | Tamil | **2** | **1** |
| 159 | 10 | CHSS VELACHERY | | | English | **1** | **1** |
| 160 | 10 | CHSS VELACHERY | | | Maths | **1** | **1** |
| 161 | 10 | CHSS VELACHERY | | | Computer Sci | **2** | **1** |
| 162 | 10 | CHSS VELACHERY | | | Accountancy &Commerce | **2** | **1** |
| 163 | 10 | CHSS VELACHERY | | | Economics | **2** | **1** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 164 | 10 | CHSS MADUVINKARAI | 437 | 10 | Tamil | **1** | **1** |
| 165 | 10 | CHSS MADUVINKARAI | | | English | **1** | **1** |
| 166 | 10 | CHSS MADUVINKARAI | | | Computer Sci | **1** | **1** |
| 167 | 10 | CHSS MADUVINKARAI | | | Accountancy & Commerce | **2** | **1** |
| 168 | 10 | CHSS MADUVINKARAI | | | Economics | **1** | **1** |
| 169 | 10 | CHSS MADUVINKARAI | | | Statistics | **1** | **1** |
| | | | **11690** | **282** | | **223** | **183** |

**GCC Schools Fixation for PG Teachers Abstract**

| S. NO | SCHOOL TYPE | STUDENTS STRENGTH XI - XII | ELIGIBLE | EXISTING | NEED (as per fixation) | NEED (Compulsory need) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| 1 | Higher Secondary (XI AND XII | 11690 | 505 | 282 | 223 | 183 |

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் மாணவர்களின் எண்ணிக்கை கணக்கீடு செய்யப்பட்டு மாணவர்கள், ஆசிரியர்களின் விகிதாச்சார அடிப்படையில் 505 முதுகலைபட்டதாரி ஆசிரியர்கள் மேல்நிலைப்பள்ளிகளுக்கு தேவை என்ற நிலையில் 282 ஆசிரியர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். மேலும், *223* முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படும் பட்சத்தில், தற்போது மிகவும் தேவைப்படும் பள்ளிகள் என்ற அடிப்படையில் *183* முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தேவைப்படுகிறது.

*2024*-2025ஆம் கல்வியாண்டில் 35 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 183 தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களை அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்கள் மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

கீழ்கண்ட அட்டவணையின்படி பணியமர்த்தப்படும் தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஜுன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை *(11)* மாதங்களுக்கான ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

| **வ. எண்** | **தற்காலிக பதவியின் பெயர் பணியிடங்களின் விவரங்கள்** | **தேவைப்படும் தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை** | **மாத தொகுப்பு ஊதியம் (ரூபாய்)** | **ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய கால அளவு (ஜுன் மாதம் 2024 முதல் மார்ச் 2025 வரை)** | **மொத்த ஊதியம் (கலம் எண் *3 x 4 x 5 =6)*** |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மேல்நிலை பள்ளிகளுக்கு மட்டும் | 183 | 18,000 | *11* மாதங்கள் | 3,62,34,000/- |

மேற்சொன்னதின் அடிப்படையில், 2024 - 2025ஆம் கல்வியாண்டில் 10.06.2024 முதல் அனைத்து பள்ளிகளும் திறக்கப்பட உள்ளதைத் தொடர்ந்து, உடனடியாக பள்ளிகளில் தற்காலிகமாக பணியமர்த்தப்படும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியமர்த்துவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் 35 மேல்நிலைப்பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலமாக ஜூன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை தற்காலிகமாக பணியமர்த்துவதற்கும் அவர்களுக்கு தேவைப்படும் நிதியினை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் கல்வி அலுவலர் வாயிலாக மேற்கொள்வதற்கு அனுமதியும்,
2. ஜூன் மாதம் 2024 முதல் மார்ச் 2025 வரை பணியமர்த்தப்படும் தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியரின் ஒரு மாத ஊதியம் ரூ.18,000/- என நிர்ணயம் செய்து ரூ.18,000 X 183 X 11 = ரூ.3,62,34,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து இரண்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரம் மட்டும்) தொகையினை உயர்/மேல்நிலைப்பள்ளி கணக்கு குறியீடு எண்.80-82-01, 230-11-02-02 கல்வி செலவீனங்கள் என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் கல்வி அலுவலர் வாயிலாக செலவீனம் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டுத்திடல்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.13/2024,நாள்.18.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.44/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**க.து.ந.க.எண். அ1/5004 /2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:159/2024** **பொருள் எண்.51**

**பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை-சென்னைத் தொடக்கம்/ நடுநிலை / உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக்கட்டிடம், உட்கட்டமைப்பு மற்றும் பள்ளிகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பதற்கான தேவைகளை அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்வதற்கு பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்துவதற்கு அனுமதி - 2024-2025ஆம் கல்வியாண்டில் ஜுன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை (11 மாதங்களுக்கு) ஊதியம் வழங்குவதற்கு தலைமையாசிரியர்களுக்கும் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்குவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அனைத்து பள்ளிகளிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியமாகும். 2023-2024ஆம் கல்வியாண்டில் கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் 26.06.2023 நாளிட்ட அனுமதியும் மற்றும் மன்றத்தீர்மான எண்.371/2023, நாள்.30.06.2023ன்படி மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டு 426 தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

மேற்குறிப்பிட்ட தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 8700/- என ஜுன் 2023 முதல் மார்ச் 2024 வரை துணை ஆணையர்(கல்வி) அவர்களின் 27.07.2023, 28.08.2023, 01.11.2023, 11.12.2023, 12.01.2024 (ம) 05.02.2024 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டது. மேலும், கூடுதல் ஆணையர்(வ(ம)நி) அவர்களின் 17.05.2024 நாளிட்ட அனுமதி பெற்று ஏப்ரல் 2024ஆம் மாதத்திற்கு ஊதியம் வழங்கப்பட்டது.

தற்போது, 2024-2025ஆம் கல்வியாண்டில் சென்னைத் தொடக்க / நடுநிலை / உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக்கட்டிடம், உட்கட்டமைப்பு மற்றும் பள்ளிகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பதற்கு ஜுன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிகமாக பணியமர்த்துவதற்கும் அவர்களுக்கான ஊதியமாக ரூ-8,700/- என ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஜுன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை (11 மாதங்களுக்கான) ஊதியம் வழங்கப்பட வேண்டிய விவரம்

| வ. எண். | பள்ளிகளின் விவரம் | பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாதத்திற்கான ஊதியம் (ரூ.8700) | ஜீன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை | மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை தொடக்க / நடுநிலைப்பள்ளிகள் | 308 | 8700 | 11 | 2,94,75,600 |
| 2 | சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் | 168 | 8700 | 11 | 1,60,77,600 |
| | மொத்தம் | 476 | | | 4,55,53,200 |

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி 2024-2025 ஆம் கல்வியாண்டில் 476 தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஜுன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை (11 மாதங்களுக்கு) பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தப்பட்டு ரூ.4,55,53,200/- தொகையில் ஊதியம் வழங்குவதற்கு தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் வாயிலாக வழங்குவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. சென்னைப் பள்ளிகளில் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளி சார் உட்கட்டமைப்பு, பொருட்களின் பாதுகாப்புத் தேவைகளை சந்தித்திட மாணவ / மாணவியர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே நேரடியாக 476 தற்காலிக பாதுகாவலர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்தி பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜுன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை (11 மாதங்களுக்கு) மேற்கொள்ள அனுமதியும்,

2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதியும்,

3. இச்செலவினங்களுக்காக ரூ.4,55,53,200/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) வழங்க அனுமதியும்,

4. இத்தொகையை தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண்.80-82-07, 220-11-03-11 Security Expenses என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையை பெறுவதற்கும் மற்றும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீடு எண். 80-82-01, 220-11-03-12 Security Expenses என்ற நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“18.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.14/2024,நாள்.18.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.45/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**க.து.ந.க.எண்.பி5/4134/2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:160/2024** **பொருள் எண்.52**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – மழலையர் பிரிவில் (**LKG and UKG) **பணிபுரியும் தற்காலிக ஆசிரியர்கள் மற்றும் தற்காலிக ஆயாக்களுக்கு மழலையர் வகுப்புகள் 2024-2025 ஆம் ஆண்டு துவங்கும் நாள் முதல் கல்வியாண்டின் இறுதி நாள் வரை ஊதியம் வழங்க – அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்கள் மூலம் தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களுக்கு தேவைப்படும் நிதியினை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் மேற்கொள்ள அனுமதி – தலைமையாசிரியர்களுக்கு தேவைப்படும் நிதியினை உதவி கல்வி அலுவலர்-6 அவர்கள் மூலம் நேரடியாக வழங்க அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் செயல்படும் *119* தொடக்க பள்ளிகளும் *92* நடுநிலைப்பள்ளிகளும் *38* உயர்நிலைப்பள்ளிகளும் *32* மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் *281* பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் தொடங்கப்பட்ட மழலையர் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

**மழலையர் பள்ளி தொடங்கப்பட்ட ஆண்டு மற்றும் பள்ளிகளின் எண்ணிக்கைகளின் விவரங்கள்**

| வ.எண் | ஆண்டு | தொடங்கப்பட்ட மழலையர் பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | 1997-1998 | 10 |
| 02. | 1998-1999 | 20 |
| 03. | 2013-2014 | 10 |
| 04. | 2014-2015 | 25 |
| 05. | 2015-2016 | 100 |
| 06. | 2016-2017 | 35 |
| 07. | 2020-2021 | 11 |
| மொத்தம் | | 211 பள்ளிகள் |

| S.No | AEO | Zone | Div | Name of The School |
|---|---|---|---|---|
| 1 | 1 | 4 | 34 | CPS CHINNA KODUNGAIYUR |
| 2 | 1 | 4 | 35 | C.P.S.ERUKENCHERY |
| 3 | 1 | 4 | 35 | CPS KODUNGAIYUR |
| 4 | 1 | 4 | 36 | C.P.S.SHARMA NAGAR |
| 5 | 1 | 4 | 37 | CPS KANNADASAN NAGAR |
| 6 | 1 | 4 | 37 | C.P.S.M.G.R.NAGAR – II |
| 7 | 1 | 4 | 37 | C.P.S.MKB NAGAR |
| 8 | 1 | 4 | 37 | C.P.S.R.R.NAGAR |
| 9 | 1 | 4 | 37 | CPS UDAYASURIYAN NAGAR |
| 10 | 1 | 4 | 38 | C.P.S.PATEL NAGAR |
| 11 | 1 | 4 | 39 | CPS CHERIAN NAGAR |
| 12 | 1 | 4 | 39 | CUGPS CHERIAN NAGAR |
| 13 | 1 | 4 | 39 | CPS MPT COLONY |
| 14 | 1 | 4 | 39 | CPS NEW MARKETFARM |
| 15 | 1 | 4 | 39 | CPS.731.T.H.ROAD |
| 16 | 1 | 4 | 40 | CPS.THIRUVALLUVAR NAGAR |
| 17 | 1 | 4 | 41 | CPS.ANNA NAGAR |
| 18 | 1 | 4 | 41 | CPS J J NAGAR |
| 19 | 1 | 4 | 41 | C.P.S.M.G.R.NAGAR – I |
| 20 | 2 | 4 | 42 | CPS, SENIAMMAN KOIL STREET |
| 21 | 2 | 4 | 45 | CPS,GANESAPURAM |
| 22 | 2 | 4 | 46 | CPS,MAGAZINEPURAM |
| 23 | 2 | 4 | 47 | CPS, OLK AREA |
| 24 | 2 | 4 | 47 | CPS, HARINARAYANAPURAM |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | 2 | 5 | 49 | CPS,KAPPALPOLU STREET |
| 26 | 2 | 5 | 50 | CUGPS, ARTHOON ROAD |
| 27 | 2 | 5 | 51 | CPS, MM STREET 6TH LANE |
| 28 | 2 | 5 | 51 | CPS,CEMETRY ROAD |
| 29 | 2 | 5 | 51 | CTBPS WASHERMANPET |
| 30 | 2 | 5 | 52 | CTPS, ANJENAYA NAGAR |
| 31 | 3 | 5 | 53 | CPS C.B.ROAD |
| 32 | 3 | 5 | 53 | CUBPS KATHPADA |
| 33 | 3 | 5 | 53 | CPS BOJARAJA NAGAR |
| 34 | 3 | 5 | 59 | CPS SAIVA MUTHIAH |
| 35 | 3 | 5 | 61 | CUGPS T.LIGHTS |
| 36 | 3 | 5 | 63 | CPS GOYATHOPE |
| 37 | 4 | 6 | 64 | CPS, KOLATHUR - II |
| 38 | 4 | 6 | 64 | CPS, KOLATHUR - I |
| 39 | 4 | 6 | 65 | CPS, G.K.M. COLONY - II |
| 40 | 4 | 6 | 65 | CPS, SRINIVASA NAGAR |
| 41 | 4 | 6 | 67 | CPS, G.K.M. COLONY - I |
| 42 | 4 | 6 | 68 | CPS, CUPS SEMBIUM |
| 43 | 4 | 6 | 68 | CPS, T.V.K. NAGAR |
| 44 | 4 | 6 | 68 | CPS, MADURAISAMY MADAM |
| 45 | 4 | 6 | 70 | CPS, 2A SCHOOL ROAD |
**கல்வித்துறையில் பணிபுரியும் கல்வி அலுவலர், கூடுதல் கல்வி அலுவலர், 1 முதல் 10 வரை உள்ள உதவி கல்வி அலுவலர்கள், கணக்குப் பிரிவு மற்றும் பணியமைப்பு பிரிவுகளுக்கு 36 கணினி உதவியாளர்கள்**

| S.No | AEO | NO OF SCHOOLS | Total |
|---|---|---|---|
| 1 | EO | - | 2 |
| 2 | ADDL EO | - | 3 |
| 3 | | - | 2 |
| 4 | ACCOUNT SECTION | - | 1 |
| 5 | ESTT SECTION | - | 2 |
| 6 | AEO-1 | 26 | 2 |
| 7 | AEO-2 | 30 | 2 |
| 8 | AEO-3 | 46 | 3 |
| 9 | AEO-4 | 42 | 2 |
| 10 | AEO-5 | 51 | 3 |
| 11 | AEO-6 | 47 | 3 |
| 12 | AEO-7 | 29 | 2 |
| 13 | AEO-8 | 53 | 3 |
| 14 | AEO-9 | 37 | 2 |
| 15 | AEO-10 | 59 | 2 |
| 16 | AEO-10 A | | 2 |
| | **TOTAL** | | **36** |

**<u>தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு ஜூன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை ஊதியம் வழங்கப்பட வேண்டிய விவரம்</u>**

| வ.எண். | பதவி | தற்காலிக கணினி உதவியாளர்கள் பணியாளர்களின் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் (மாவட்ட ஆட்சியரின் 13.06.2023 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி) | மாத ஊதியம் | ஊதியம் வழங்க அனுமதி ஜூன் 2024 முதல் ஏப்ரல் மாதம் 2025 வரை | 11 மாதத்திற்கான ஊதியம் (கலம் எண் 3 x 5 x 6 = 7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | தற்காலிக கணினி உதவியாளர்கள் | 167 | ரூ. 677/- | ரூ. 17602 /- (677 x 26 நாட்களுக்கு) | 11 | 3,23,34,874/- |

மேலும், 2024-2025ஆம் கல்வியாண்டில் தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு மேற்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு ஜூன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை (11 மாதங்களுக்கு) பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தப்பட்டு ரூ.3,23,34,874/- தொகையில் ஊதியம் வழங்குவதற்கு தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் வாயிலாக வழங்குவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவயர்களின் நலன்கருதி கற்றல், கற்பித்தல், அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளி சார் பணிகளினை மேம்படுத்திட, 2024-2025 ஆம் கல்வியாண்டில் ஜூன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை 11 மாதங்களுக்கு 167 கணினி உதவியாளர்களை பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் தற்காலிகமாக பணியமர்த்துவதற்கும், அவர்களுக்கு ஊதியம் வழங்க தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் வாயிலாக வழங்குவதற்கு அனுமதியும்,

2. மேற்குறிப்பிட்ட தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை Proc.C2/16317/2021, நாள்: 13.06.2023ன்படி நாள் ஒன்றுக்கு ரூ.677/- என ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு ஒரு மாதத்திற்கு 26 நாட்களுக்கான ஊதியம் (26 X 677) ரூ.17,602/- என நிர்ணயம் செய்வதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்ட தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு ஜூன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை 11 மாதங்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு தேவைப்படும் தொகையான (ரூ.17,602 X 167 X 11 மாதங்கள்) ரூ.3,23,34,874/-(ரூபாய் மூன்று கோடியே இருபத்து மூன்று இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து எண்ணூற்று எழுபத்து நான்குமட்டும்) தொகையினை கணக்கு குறியீட்டு எண்.80-82-01, 230-11-02-02 கல்விச் செலவினங்கள் என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.20,00,00,000 நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"18.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.18/2024,நாள்.18.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.49/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.2ந.க.எண்.சி1/549/2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.03.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:164/2024** **பொருள் எண்.56**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்–2 - கோட்டம்-15 முதல் 22 வரை உள்ள மாநகராட்சி மற்றும் அரசு பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணிக்காக 01.06.2024 முதல் 30.04.2025 வரையிலான காலத்திற்கு 46 நபர்கள் SHG (SELF HELP GROUPS) சுய உதவி குழுக்கள் மூலம் நியமிக்க நிர்வாக அனுமதி.**

துணை ஆணையர் (கல்வி) அவர்களின் 23.01.2017 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை சென்னை மாநகராட்சி, மண்டலம்-2 (மணலி), பகுதி-4 மற்றும் 5, வார்டு-15 முதல் 22 வரை உள்ள மாநகராட்சி மற்றும் அரசு பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் சுத்தம் செய்யும் பணிக்காக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் உறுப்பினர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட வார்டு-15 முதல் 22 வரை உள்ள மாநகராட்சி மற்றும் அரசு பள்ளி வளாகங்கள் சுத்தம் செய்ய 46 நபர்கள் (SHG) சுய உதவிக்குழுக்கள் மூலமாக சுத்தம் செய்யும் பணிக்கு தேவைப்படும் தற்காலிக தூய்மை பணியாளர்களின் விவரங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளது.

1. **Corporation School**

| Sl. No. | Div | Name of the School | No. of Students | No. of Class Rooms | No. of Toilet | No. of Toilet urinals | No. of Sweeper | No. of Scavenger | Additional requirement Labours | | Total No. of Labours required |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | No. of Sweeper | No. of Scavenger | |
| 1. | 15 | CPS School Edayanchavadi Main Road at New Nappalayam | 42 | 3 | 1 | - | 1 | - | - | - | 1 |
| 2. | 15 | CPS School at Old Nappalayam | 48 | 3 | 2 | 3 | 1 | - | - | - | 1 |
| 3. | 15 | CPS School at Manali New Town | 544 | 13 | 6 | 1 | 1 | - | 1 | - | 2 |
| 4. | 16 | CPS School at Kanniammanpet | 30 | 6 | 8 | - | 1 | - | - | - | 1 |
| 5. | 16 | CMS School at Sadayankuppam | 102 | 3 | 4 | 4 | 1 | - | - | - | 1 |
| 6. | 16 | CPS School at Kulakarai | 55 | 6 | 8 | - | 1 | - | - | - | 1 |
| 7. | 16 | CMS School at Dwaraka Nagar | 72 | 2 | 4 | - | 1 | - | - | - | 1 |
| 8. | 16 | CMS at Andarkuppam | 160 | 5 | 4 | 4 | 1 | - | - | - | 1 |
| 9. | 17 | CPS School at Ariyallur | 16 | 2 | 2 | 2 | 1 | - | - | - | 1 |
| 10. | 17 | CMS School at Kosapur | 156 | 6 | 8 | - | 1 | - | - | - | 1 |
| 11. | 17 | CMS School at Theeyambakkam | 39 | 1 | 4 | - | 1 | - | - | - | 1 |
| 12. | 17 | CPS School at Vadaperumbakkam | 47 | 1 | 3 | - | 1 | - | - | - | 1 |
| 13. | 18 | CPS at Amullaivoyal | 35 | 2 | 3 | - | 1 | - | - | - | 1 |
| 14. | 19 | CMS at Manjambakkam | 85 | 4 | 10 | - | 1 | - | - | - | 1 |
| 15. | 19 | CPS School MMDA 59th st | 395 | 9 | 10 | 4 | 1 | 1 | - | - | 2 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16. | 21 | CPS at Padasalai Street, Manali | 706 | 14 | 20 | 20 | 1 | 1 | 1 | 1 | 4 |
| 17. | 22 | CPS at Devaraj Street | 234 | 7 | 3 | 3 | 1 | 1 | - | - | 2 |
| **Total ( A)** | | | **2766** | **87** | **100** | **41** | **17** | **3** | **2** | **1** | **23** |

**2. Government School**

| Sl. No. | Div | Name of the School | No. of Students | No. of Class Rooms | No. of Toilet | No. of Toilet urinals | No. of Sweeper | No. of Scavenger | Additional requirement Labours | | Total No. of Labours required |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | No. of Sweeper | No. of Scavenger | |
| 1. | 15 | Jaya gopal Korodiya secondary school, Manali New Town 2nd block 30 feet 9th street | 723 | 16 | 12 | 80 | 1 | 1 | 1 | - | 3 |
| 2 | 15 | Old nappalayam Government High school | 116 | 5 | 5 | 4 | 1 | 1 | - | - | 2 |
| 3 | 15 | GHS School at Manali New Town | 495 | 10 | 10 | 45 | - | 1 | 1 | - | 2 |
| 4 | 16 | TNHB Phase I GHSS | 168 | 5 | 5 | - | 1 | - | - | - | 1 |
| 5 | 17 | GMS at Adhi Dravida Vadaperumbakkam | 38 | 2 | 3 | - | 1 | - | - | - | 1 |
| 6 | 19 | GHSS MMDA 3rd main road | 743 | 14 | 6 | 12 | 1 | 1 | 1 | - | 3 |
| 7 | 21 | GHSS Padasalai street | 3032 | 68 | 25 | 34 | 2 | 1 | 5 | 1 | 9 |
| 8 | 22 | GHS at Devaraj Street | 392 | 11 | 4 | 12 | 1 | 1 | - | - | 2 |
| | | **Total ( B)** | **5707** | **131** | **70** | **187** | **8** | **6** | **8** | **1** | **23** |
| | | **Grand Total (A+B)** | **8473** | **218** | **170** | **228** | **25** | **9** | **10** | **2** | **46** |

மன்றத் தீர்மான எண்.252/2023, நாள்.28.04.2023ன்படி, மண்டலம்-2, பகுதி-4 மற்றும் 5, வார்டு-15 முதல் 22 வரை உள்ள அரசு மற்றும் மாநகராட்சி பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் சுத்தம் செய்யும் பணிக்கு (SELF HELP GROUPS) சுயஉதவிகுழுக்கள் மூலம் 34 SHG பணியாளர்களை 01.06.2023 முதல் 30.04.2024 வரை மாதத்தின் 26 (வார விடுமுறை நீங்கலாக) நாட்கள் பணிகள் செய்ய மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் இப்பணியானது 30.04.2024 அன்றுடன் முடிவடையவுள்ளது.

மன்றத் தீர்மான எண்.014/2024, நாள்.31.01.2024ன்படி, மற்றும் கல்வி அலுவலர் (பொ) அவர்களின் 07.02.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, சென்னை பள்ளிகள் / அரசு பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை, கழிப்பறைகளின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக தேவைப்படும் தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி அப்பணியாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.687/- வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மண்டலம்-2ல் உள்ள சென்னை பள்ளிகள் / அரசு பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, வகுப்பறைகளின் எண்ணிக்கை, கழிப்பறைகளின் எண்ணிக்கைக்கேற்ப ஏற்கனவே பணிபுரியும் 34 தூய்மை பணியாளர்களுடன் தற்போது கூடுதலாக 12 தூய்மை பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 46 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் சென்னை பள்ளிகள் / அரசு பள்ளிகளில் தூய்மை பணிகள் செய்ய தேவைப்படுகிறார்கள்.

எனவே,

1. மண்டலம்-2, பகுதி-4 மற்றும் 5, வார்டு-15 முதல் 22 வரை உள்ள மாநகராட்சி மற்றும் அரசு பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் சுத்தம் செய்யும் பணிக்காக SHG (Self Help Groups) சுய உதவி குழுக்கள் உறுப்பினர்கள் மூலம் மாணவர்களின் எண்ணிக்கை, வகுப்பறை மற்றும் கழிப்பறைகளின் எண்ணிக்கைகேற்றவாறு மொத்தம் 46 பணியாளர்களை 01/06/2024 முதல் 30/04/2025 வரையிலான காலத்திற்கு பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும், மன்றத்தின் ஆணை வேண்டியும்,

2. மேற்கண்ட பணியாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.687/- வீதம் 46 தூய்மை பணியாளர்களுக்கு 01/06/2024 முதல் 30/04/2025 வரையிலான காலத்திற்கு (26 நாட்கள் வாரவிடுமுறை நாட்கள் நீங்கலாக) ஆகும் செலவு தொகை ரூ.687 X 46 நபர்கள்X 26 நாட்கள் X 11 மாதங்கள் = ரூ.90,38,172 /- (ரூபாய் தொண்ணூறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூற்று எழுபத்து இரண்டு மட்டும்) இக்கணக்கு குறியீடு எண்.20-21-07, கணக்கு தலைப்பு எண் 230 - 150 - 500, ன் கீழ் மேற்கொள்ளவும்,

3. மேற்கண்ட 46 தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ஆகும் செலவு தொகை ரூ.90,38,172 /- (ரூபாய் தொண்ணூறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூற்று எழுபத்து இரண்டு மட்டும்) (ரூ.687 X 46நபர்கள்X 26 நாட்கள் X 11மாதங்கள் = ரூ.90,38,172 /- (ரூபாய் தொண்ணூறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூற்று எழுபத்து இரண்டு மட்டும்) நிதிஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு பெற நிர்வாக அனுமதி வேண்டியும்,

4. எதிர்வரும் காலங்களில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் உயர்த்தி அரசினால் நிர்ணயம் செய்யப்படின், பணியாளர்களுக்கு தினக்கூலி ஊதியத்தை உயர்த்தி வழங்க சிறப்பு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"18.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.19/2024,நாள்.18.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.50/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.2நக.எண். சி1/1578 / 2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:165/2024** **பொருள் எண்.57**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2 – கோட்டம்–15 முதல் 22 வரை - சுயஉதவி குழுக்கள் திட்டத்தின்கீழ் (SHG) கோட்ட அலுவலகம், பகுதி அலுவலகம், மண்டல அலுவலகம், பூங்கா தூய்மை செய்யும் பணி மற்றும் லாரி நிலையம் ஆகிய இடங்களில் பணிபுரியும் மொத்தம் 85 தற்காலிக தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 07.06.2024 அன்று முடிவடையவுள்ளது - இந்த பணியாளர்களின் பணிக்காலத்தினை 11.06.2024 முதல் 10.06.2025 வரை பணிநீடிப்பு செய்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாகராட்சி, மண்டலம்-2ல் (மணலி), பகுதி-4 மற்றும்-5, வார்டு-*15* முதல் 22 வரை, மண்டலத்தில் 10 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1157 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும், பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தின் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது. மண்டலம்-2 (மணலி) வார்டு-15 முதல் 22 வரை உள்ள பகுதியில் தோராயமாக 60 மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் சேகரிக்கப்படுகிறது. வார்டு-15 முதல் 22 வரை 8 வார்டுகளில் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு 233 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே.) அவர்களின், 10.03.2021 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-2ல் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தனியார் மயமாக்கப்படுள்ளதால், மண்டலங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளுக்கு 113 பணியாளர்களை ஒதுக்கீடு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டது.

ஆனால் மண்டலம்-2ல் தற்காலிக பணியாளர்கள் எவரும் நியமிக்கப்படாததால், கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், 07.06.2023 நாளிட்ட நிர்வாக அனுமதியின்படி, சுய உதவிக்குழுக்கள் திட்டத்தின் *(SHG)* கீழ் 85 தற்காலிக பணியாளர்களை கொண்டு 08.06.2023 முதல் 07.06.2024 வரை பணிபுரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணியானது 07.06.2024 அன்றுடன் முடிவடையவுள்ளது. எனவே, அப்பணியாளர்களின் பணிக்காலத்தினை 11.06.2024 முதல் 10.06.2025 வரை பணிநீடிப்பு செய்ய நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

தலைமை பொறியாளர் (பூங்கா) அவர்களின், 31.03.2023 நாளிட்ட வாய்மொழி உத்தரவில், மண்டலம்-1 முதல் 15 வரை அமையப்பெற்ற பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடங்களை தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தம் விடப்பட்டுள்ளதால் பொதுக்கழிப்பிடங்களில் பணிபுரிந்த 43 *SHG* தூய்மை பணியாளர்களை மண்டலம்-2க்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் பணிபுரிய ஆணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், 22 எண்ணிக்கை சென்னை மாநகராட்சி பூங்காக்களில் 43 *SHG* பொதுக்கழிப்பிட தூய்மை பணியாளர்கள், பூங்காக்கள் தூய்மை செய்யும் பணியாளர்களாக 05.04.2023 முதல் பணிபுரிந்து வருகின்றனர்.

அரசாணை (நிலை) எண்.2*D*. எண்.36, தொழிலாளர் நலன் மற்றும் திறன் வளர்ச்சி(*J1*) துறை நாள். 16.06.2023-ன்படி திருத்திய குறைந்தபட்ச ஊதியம் *for employment under any local authority of different classes of employees* அனைத்து மாநகராட்சிகள், நகராட்சி, பஞ்சாயத்து ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு வெவ்வேறு சராசரி குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, இதன் பொருட்டான அரசாணையில், தெரிவிக்கப்பட்ட விவரங்கள் தமிழ்நாடு அரசின் அரசிதழ் வெளியிடும் *(Gazette Publication)* நாள்.05.07.2023 முதல் அமுல் படுத்துமாறு

தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, மண்டலம்-2ல் பணிபுரியும் *SHG* தினக்கூலி பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு தினக்கூலி ஊதியம் ரூ.687/- ஆக வழங்கப்பட்டு வருகிறது.

மண்டலம்-2ல் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் பணிபுரியும் தற்காலிக *SHG* தூய்மை பணியாளர்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | பணிபுரியும் இடம் | தற்போது பணிபுரியும் மற்றும் பணி நீட்டிப்பு செய்ய வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கோட்ட அலுவலகம் (வார்டு -15 முதல் 22 வரை) மற்றும் மண்டல அலுவலகம் | 28 நபர்கள் |
| 2. | பகுதி அலுவலகம் 4 மற்றும் 5 | 4 நபர்கள் |
| 3. | பூங்கா பராமரிப்பு மற்றும் பூங்கா தூய்மை பணி (22 பூங்காக்கள்) | 43 நபர்கள் |
| 4. | *MCC* | 5 நபர்கள் |
| 5. | பூங்கா தூய்மை பணி (மியா வாக்கி) | 3 நபர்கள் |
| 6. | லாரி நிலையம் தூய்மை பணி | 2 நபர்கள் |
| | மொத்தம் | 85 நபர்கள் |

எனவே,

1. மண்டலம்-2, பகுதி-4 மற்றும் 5, வார்டு -15 முதல் 22 வரை பகுதிகளில் கோட்ட அலுவலகம், பகுதி அலுவலகம், மண்டல அலுவலகம், பூங்கா பராமரிப்பு மற்றும் பூங்கா தூய்மை பணி, *MCC* மற்றும் லாரிநிலையம் ஆகிய இடங்களில் பணிபுரியும் மொத்தம் 85 தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு 11.06.2024 முதல் 10.06.2025 வரை பணிபுரிய பணிநீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி 11.06.2024 முதல் பணியினை மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட பணியாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.687/- வீதம் 85 பணியாளர்களுக்கு 11.06.2024 முதல் 10.06.2025 வரை ரூ.687 *X 85* நபர்கள் *X 365* நாட்கள் = ரூ.2,13,14,175/- (ரூபாய் இரண்டு கோடியே பதிமூன்று இலட்சத்து பதிநான்காயிரத்து நூற்று எழுபத்து ஐந்து மட்டும்) கணக்கு குறியீடு 40 - *41* - 03, கணக்கு தலைப்பு எண் எண்.210-*100-601 (Payment to Casual Staff Conservancy Works)* கீழ் மேற்கொள்ளவும். மேற்கண்ட தொகையினை நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

3. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.687/- என்பது *2023*-2024 ஆம் ஆண்டு அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம், எதிர்வரும் காலங்களில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் அரசினால் உயர்த்தி நிர்ணயம் செய்யப்படின், அவ்வாறு உயர்த்தி வழங்கும் தினக்கூலி ஊதியத்தை வழங்க, சிறப்பு அனுமதி வேண்டியும்,

**மேற்கண்ட** *1* **முதல்** *3* **வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)** **மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டிசமர்ப்பிக்கப்படுகிறது.**

"20.06.2024 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (**பொது சுகாதாரம்**) **கூட்டத்தில் தீர்மான எண்.**42/2024, **நாள்.**20.06.2024-**ன்படி இதற்கு நிலைக்குழு** (**பொது சுகாதாரம்**) **பரிந்துரை செய்து நிலைக்குழு** (**வரி விதிப்பு மற்றும் நிதி**)**வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**"

"21.06.2024 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (**வ.வி.ம.நி.**) **கூட்டத்தில் தீர்மான எண்**.65/2024, **நாள்**.21.06.2024**ன்படி இதற்கு நிலைக்குழு** (**வ.வி.ம.நி.**) **பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**"

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.2நக.எண்.எச்2/675/2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.03.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:166/2024** **பொருள் எண்.58**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2(மணலி), கோட்டம் 15 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக - தற்காலிக தினக்கூலி அடிப்படையில் SHG (SELF HELP GROUPS) சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்தப்பட்ட 78 கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணிக்காலம் 16.04.2024ல் முடிவடைகிறது -- மேலும் வளர்ந்து வரும் மண்டலமாக இருப்பதாலும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும், தேவையின் அடிப்படையில் கூடுதலாக 17 தற்காலிக தினக்கூலி பணியாளர்களுடன் மொத்தம் 95 பணியாளர்களை 20.04.2024 முதல் 19.04.2025 வரை ஒரு வருட காலத்திற்கு பணியில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2(மணலி)ல் கோட்டம்-15 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் வீடுவீடாக சென்று கொசுப்புழு கண்டறிந்து அழித்தல் மருந்து ஊற்றுதல் தற்காலிக கொசுப்புழு உற்பத்தி ஆதாரங்களை கண்டறிந்து அப்புறப்படுத்துதல் வீடு மற்றும் மழைநீர் வடிகால்வாய்களில் புகைப்பரப்புதல், கொசுப்புழுக் கொல்லி மருந்து தெளித்தல் முதலிய கொசுவினால் பரவக்கூடிய மலேரியா டெங்கு, சிக்கன் குனியா முதலிய தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பணிகளோடு எலி தடுப்பு பணி மற்றும் கால்நடை பிடிக்கும் பணிகளையும் 16 நிரந்தர பணியாளர்களையும் 78 *SHG* தற்காலிக தினக்கூலி பணியாளர்களையும் கொண்டு மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் *78 NULM* தற்காலிக பணியாளர்களின் பணிக்காலம் வரும் 16.04.2024 அன்று முடிவடைகிறது.

மேலும், 18 நிரந்தர பணியாளர்களில் ஒரு நபர் இரண்டு வருட காலத்திற்கும் மேல் எவ்வித தகவலும் இன்றி விடுப்பில் உள்ளார். ஒருவர் பணி ஓய்வு பெற்றுவிட்டார். ஒருவர் இன்னும் 3 மாத காலத்தில் ஓய்வு பெற உள்ளார். இம்மூன்று நபர்கள் தவிர்த்து 15 நிரந்தர பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். மேலும் 10 வருடங்களுக்கு முன்பு கணக்கீடு செய்யப்பட்ட 78 தற்காலிக பணியாளர்களே இந்நாள் வரை பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப குடியிருப்புகளின் எண்ணிக்கையும் 34437ல் இருந்து சுமார் 40,000 வீடுகளாக பெருகியுள்ளது. கூடுதலாக்கப்பட்ட வீடுகள் மற்றும் குடும்பங்களுக்கு ஏற்பவும், தொழிற்சாலைகளிலும் மேற்படி பணிகளை மேற்கொள்ளவும், கால்நடை பிடிக்கும் பணிக்காகவும், ஏற்கனவே பணிபுரிந்து வரும் 78 பணியாளர்களோடு கூடுதலாக 17 நபர்கள் (கொசு ஒழிப்பு மற்றும் கால்நடை பிடிக்கும் பணி) மொத்தம் 95 நபர்களை நியமிப்பது அவசியமாகிறது.

இதன் விவரம் பின்வருமாறு

| வ. எண் | வார்டு | தற்போது பணிபுரிந்து வரும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரிந்து வரும் *(SHG)* தற்காலிக பணியாளர்கள் | கூடுதலாக தேவைப்படும் *(SHG)* தற்காலிக பணியாளர்கள் | மொத்தம் தேவைப்படும் *(SHG)* தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (4+5) |
| 1 | 15 | 1 | 11 | 2 | 13 |
| 2 | 16 | 1 | 12 | 1 | 13 |
| 3 | 17 | 1 | 9 | 1 | 10 |
| 4 | 18 | 2 | 12 | 2 | 14 |
| 5 | 19 | 6 | 12 | 2 | 14 |
| 6 | 20 | 2 | 8 | 1 | 9 |
| 7 | 21 | 1 | 8 | 1 | 9 |
| 8 | 22 | 2 | 6 | 2 | 8 |
| 9 | 15 to 22 | மாடு பிடிக்கும் பணி | | 5 | 5 |
| மொத்தம் | | **16** | **78** | **17** | **95** |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2ல் கொசு ஒழிப்பு பணிக்காக 16 நிரந்தர பணியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் கொசு ஒழிப்பு பணியின் அவசர அவசியம் கருதி 95 SHG தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது பணிபுரிந்து வரும் 78 SHG தற்காலிக தினக்கூலி பணியாளர்களின் பணிக்காலம் வரும் 16.04.2024 அன்று முடிவடைகிறது.

எனவே, மேற்படி பணி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு 20.04.2024 முதல் 19.04.2025 வரை ஓராண்டிற்கு கால நீட்டிப்பு செய்து 95 பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின், 13.06.2023 நாளிட்ட செயல்முறை ஆணையில் ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ.687/- என்ற அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | ஒப்பந்தம் காலம் | தினக்கூலி | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | சுகாதாரப் பணிகள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் | 95 | 20.04.2024 முதல் 19.04.2025 வரை 365 நாட்கள் | ரூ.687/- | ரூ.2,38,21,725/- |

இப்பணியினை மேற்கொள்ள 14.02.2024 அன்று நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2(மணலி) வார்டு குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**இனம் –அ**

1. மண்டலம்-2-ல் 20.04.2024 முதல் 19.04.2025 வரை கொசு ஒழிப்பு பணி கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள 95 பணியாளர்களை SHG(SELF HELP GROUPS) சுயஉதவி குழுக்களின் மூலம் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,
2. இந்த பணியாளர்களுக்கு 20.04.2024 முதல் 19.04.2025 வரை தேவையான செலவீனத் தொகை ரூ.687 X 95 X 365 = ரூ. 2,38,21,725/-ஐ (Rupees Two crore thirty eight lakhs twenty one thousand seven hundred and twenty five only) கணக்கு தலைப்பு எண். 30-32-02 (ANTI MOSQUITO OPERATION) 210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS)–ன் கீழ் செலவினம் செய்யவும்,
3. SHG சுய உதவிக்குழு இயக்கத்தின் கீழ் உள்ள குழு உறுப்பினர்கள் இருப்பதால் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்து மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4. 95 சுகாதார பணியாளர்களை சுகாதார பணியில் ஈடுபடுத்தவும்,
5. சுகாதார பணிக்கான குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு, மன்றத் தீர்மான எண்.516/2023, நாள்.29.09.2023-ன்படி நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.687/- ஐ வழங்குவற்கு நிர்வாக அனுமதியும்,
6. தற்போது சுகாதார நல பணியாளர்களுக்கு 2023- 2024 ஆம் ஆண்டில் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி 687/- வழங்கப்பட்டு வருகிறது அடுத்த ஆண்டு 2024-2025 ஆம் ஆண்டிற்கான சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்து உயர்த்தி வழங்கும் தொகையை வழங்கவும்,

**<u>இனம் -ஆ</u>**

1. மண்டலம்-2-ல் 20.04.2024 முதல் 19.04.2025 வரை கொசு ஒழிப்பு பணி கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள 78 பணியாளர்களை SHG சுய உதவிக் குழுக்களின் மூலம் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,
2. இந்த பணியாளர்களுக்கு 20.04.2024 முதல் 19.04.2025 வரை தேவையான செலவீனத் தொகை ரூ.687 X 78 X 365 = ரூ. 1,95,58,890/-ஐ(Rupees One crore Ninty five lakhs Fifty Eight thousand Eight Hundred and ninety Only) கணக்கு தலைப்பு எண். 30-32-02 (ANTI MOSQUITO OPERATION) 210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS)–ன் கீழ் செலவினம் செய்யவும்,
3. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள குழு உறுப்பினர்கள் இருப்பதால் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்து மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4. 78 சுகாதார பணியாளர்களை சுகாதார பணியில் ஈடுபடுத்தவும்,
5. சுகாதார பணிக்கான குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு மன்றத் தீர்மான எண்.516/2023, நாள்.29.09.2023-ன்படி நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.687/- ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
6. தற்போது சுகாதார நல பணியாளர்களுக்கு 2023- 2024 ஆம் ஆண்டில் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி 687/- வழங்கப்பட்டு வருகிறது அடுத்த ஆண்டு 2024-2025 ஆம் ஆண்டிற்கான சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்து உயர்த்தி வழங்கும் தொகையை வழங்கவும்

மேற்கண்ட இனம் 'அ' அல்லது இனம் 'ஆ'விற்கு கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில், **வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 11.03.2024 நாளிட்ட மேற்குறிப்பில், இனம் "அ" வை அனுமதிக்கலாம் என தெரிவித்துள்ளார்.**

எனவே, மேற்கண்ட இனம் 'அ'வில் உள்ள 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.43/2024, நாள்.20.06.2024-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) உறுப்பினர்களின் பெரும்பான்மையான கருத்தின்படி, மாடு பிடிக்கும் பணிக்கு அனைத்து மண்டலங்களுக்கும் கூடுதலாக பணியாளர்கள் நியமனம் செய்திட தனியாக கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இக்கோப்பில் கோரியவாறு மாடு பிடிக்கும் பணிக்கு மண்டலம்-2ல் கூடுதல் நபர்கள் தேவை இல்லை. எனவே, இனம் 'அ' வில் குறிப்பிட்டுள்ள 95 தற்காலிக பணியாளர்கள் என்பதற்கு பதிலாக 90 நபர்களை பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று அனுமதி அளித்து இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.68/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.சி2 /1842 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.03.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:167/2024** **பொருள் எண்.59**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் KDGல் தூய்மை பணி - போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் – அன்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் 1147 தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2024 உடன் முடிவடைவதால் மேலும் நான்கு மாத காலம் 01.04.2024 முதல் 31.07.2024 வரை மொத்தம் 1147 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் தற்காலிக தூய்மை பணிகளை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற முக்கிய பகுதிகளை உள்ளடக்கியதாகும். மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 35.5 கி.மீ நீளமுள்ள 49 பேருந்து சாலைகள் மற்றும் 393.65 கி.மீ நீளமுள்ள 2,846 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் அரசு சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, தண்டையார்பேட்டை ரயில் நிலையம், முல்லைநகர் பேருந்து நிலையம், காசிமேடு சுடுகாடு, முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக் கழிப்பிடங்கள்(சுலாப்), மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம்–4, கோட்டம்–34 முதல் 48 வரை மற்றும் KDGல் பணிபுரியும் 567 நிரந்தர பணியாளர்களில் ஒய்வு மற்றும் இறப்பு காரணமாக 6 பணியாளர்கள் போக மீதம் உள்ள 561 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 1147 தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மன்றத் தீர்மான எண்.107/2024, நாள்.22.02.2024-ன்படி, மண்டலம்–4, தூய்மை துறையில் கோட்டம்–34 முதல் 48 வரை மற்றும் KDGல் மேற்கண்ட தூய்மை பணிகள் மேற்கொள்ள 1147 NULM தூய்மை பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில்(NULM) குழுக்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.03.2024 முதல் 31.03.2024 வரை ஒரு மாத காலத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

தலைமை பொறியாளர் (தி.க.மே) அவர்களின் 10.08.2023 நாளிட்ட சுற்றறிக்கையின் படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள NULM தூய்மை பணியாளர்கள் (4469 நபர்கள்) மண்டலம் 2,3,11,12,14 மற்றும் 15 ல் பணிபுரியும் NMR பணியாளர்களுக்கு (471 நபர்கள்) அரசாணை எண் G.O.No.36 (2D) Labour Welfare and Skill Development நாள் 16.06.2023-ன்படி தமிழ்நாடு அரசிதழ் வெளியிட்ட 05.07.2023 நாள் முதல் நாளொன்றுக்கு தினக்கூலி ரூ.522/- லிருந்து ரூ.687/- ஆக வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்–4 அவர்களின் 05.03.2024 நாளிட்ட ஒப்புதலில் மேற்கண்ட 1147 NULM தூய்மை பணியாளர்களின் (NULM) பணிக்காலம் 31.03.2024 அன்றுடன் முடிவடைவதால், மேலும் நான்கு மாத காலத்திற்கு (01.04.2024 முதல் 31.07.2024 வரை) மொத்தம் 1147 (NULM) பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுப்படுத்த கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களுக்கும் மற்றும் மன்றத் துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர்–4 அவர்களின்

ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை</u>**

**<u>துப்பரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு:</u>**

| வ.எண் | கோட்டம் | மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | தேவைப்படும் *NULM* பணியாளர்கள் எண்ணிக்கை | தலைமை பொறியாளர் (*SWM*) அவர்களின் சுற்றறிக்கை நாள். 10.08.2023 (தி.க.மே.து.ந.க.எண்.அ3 /*3974/2023*) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | *(6)* | *(7)* |
| 1 | 34 | 165 | 32 | 133 | | |
| 2 | 35 | 150 | 42 | 108 | | |
| 3 | 36 | 129 | 22 | 107 | | |
| 4 | 37 | 137 | 25 | 112 | | |
| 5 | 38 | 102 | 33 | 69 | | |
| 6 | 39 | 86 | 35 | 51 | | |
| 7 | 40 | 93 | 38 | 55 | | |
| 8 | 41 | 101 | 55 | 46 | | |
| 9 | 42 | 102 | 55 | 47 | **ரூ. 687/-** | **ரூ. *687/-x1147* (*NULM* தூய்மை பணியாளர்கள்) *x 122* நாட்கள்= ரூ.*9,61,34,658/-*** |
| 10 | 43 | 100 | 32 | 68 | | |
| 11 | 44 | 94 | 25 | 69 | | |
| 12 | 45 | 114 | 30 | 84 | | |
| 13 | 46 | 99 | 22 | 77 | | |
| 14 | 47 | 88 | 37 | 51 | | |
| 15 | 48 | 93 | 55 | 38 | | |
| 16 | KDG | 55 | 23 | 32 | | |
| **TOTAL** | | **1714** | **561** | **1147** | | |

எனவே, மண்டலம்–*4*, துப்பரவுத்துறை, கோட்டம் *34* முதல் *48* வரை மற்றும் *KDG*ல் மேற்கண்ட தூய்மை பணிகள் மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதாரம் இயக்கத்தில் (*NULM*) குழுக்கள் மூலமாக 1147 *NULM* தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள *01.04.2024* முதல் *31.07.2024* வரை நான்கு மாத காலத்திற்கு நிர்வாக அனுமதியும் வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டலம்-*4*, துப்பரவுத்துறை, கோட்டம் *34* முதல் *48* வரை மற்றும் *KDG*ல் மேற்கண்ட தூய்மை பணிகள் மேற்கொள்ள *1147 NULM* பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (*NULM*) குழுக்கள் மூலமாக *01.04.2024* முதல் *31.07.2024* வரை நான்கு மாத காலத்திற்கு எடுத்துக் கொண்டதற்கு பின்னேற்பு அனுமதியும், |
| (ஆ) | தலைமை பொறியாளர் (தி.க.மே) அவர்களின் *10/08/2023* நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.*687/-* வீதம் *1147* நபர்கள் *x 122* நாட்கள் *x* ரூ*687/-* = **ரூ.*9,61,34,658/-***க்கு (ரூபாய் ஒன்பது கோடி அறுபத்து ஒரு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறுநூற்று ஐம்பத்து எட்டு மட்டும்) அனுமதியும், |
| (இ) | தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் *NULM* தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை மண்டல அலுவலர்–*4*, அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |

| | |
|---|---|
| (ஈ) | **தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* மூலம் மண்டல அலுவலர்-*4* அவர்கள் மூலமாக பணியமர்த்திக்கொள்ளவும்,** |
| (உ) | **தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை/சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும்,** |
| (ஊ) | **நிதி ஆலோசகர் மூலமாக ரூ.*9,61,34,658/-*** (**தலைப்பு எண்.***40-41-03 Payment to Casual Staff Conservancy Works* **கணக்கு குறியீடு** *210-100-601)* **நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்.** |

**மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

"20.06.2024 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (**பொது சுகாதாரம்**) **கூட்டத்தில் தீர்மான எண்.**41/2024, **நாள்.**20.06.2024**-ன்படி இதற்கு நிலைக்குழு** (**பொது சுகாதாரம்**) **பரிந்துரை செய்து நிலைக்குழு** (**வரி விதிப்பு மற்றும் நிதி**)**வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**"

"21.06.2024 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** (**வ.வி.ம.நி.**) **கூட்டத்தில் தீர்மான எண்.**67/2024, **நாள்.**21.06.2024**ன்படி இதற்கு நிலைக்குழு** (**வ.வி.ம.நி.**) **பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**"

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******

<u>ம.அ.6.ந.க.எண்.அ4/3174/2024</u>

<u>கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.06.2024 நாளிட்ட குறிப்பு</u>

**தீர்மான எண்:168/2024** **பொருள் எண்.60**

<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6 – கோட்டம்-64 முதல் 78 வரை - அண்டை வீட்டு குழுவின் கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள் 1111 நபர்கள் கொண்டு 03.06.2024 முதல் 30.09.2024 வரை (120 நாட்களுக்கு) தொய்வின்றி தூய்மை பணிகளை தொடர்ந்து செயல்படுத்திட ஆணை பெறப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-15, 16 மற்றும் 17-க்குட்பட்ட வார்டு-64 முதல் 78 வரை உள்ள 15 வார்டுகளில் ஏற்கனவே ஓய்வு பெற்ற தூய்மை பணியாளர்களின் காலிப்பணியிடங்கள், தற்போதுள்ள பணியாளர்களுக்குரிய வார விடுமுறை, தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு, ஈட்டா விடுப்பு, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை போன்ற காரணங்களாலும், தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் தூய்மை பணியாளர்களை பணியில் அமர்த்தி குப்பைகளை அகற்ற ஏதுவாகவும், ஆட்டிறைச்சி கூடம், ஓட்டேரி குப்பை கொட்டும் வளாகத்திலும் மற்றும் அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படாதவாறும், பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் முழுமையாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள மண்டலம்-6ல் உள்ள 15 வார்டுகளுக்கும் சுமார் 1111 பணியாளர்களை (NULM) தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் பணிபுரியவும், ஒரு தூய்மை பணியாளருக்கு அன்றைய அலுவலக அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.687/- வீதம் 121 நாட்களுக்கு (01.02.2024 முதல் 31.05.2024 வரை) பணி செய்திட மன்ற தீர்மான எண்.10/2024, நாள்-31.01.2024-ன்படி அனுமதி பெறப்பட்டது. இப்பணியாளர்களை பணியமர்த்தும் அனுமதி காலம் 31.05.2024 அன்றுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், தூய்மை பணியாளர்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் தூய்மைப்பணிகள் சென்னை மாநகராட்சியின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், தற்போது தூய்மை இந்தியா திட்டம் மூலம் சென்னை மாநகராட்சி பிளாஸ்டிக் இல்லா மாநகராட்சியாக மாற்ற குப்பை தரம் பிரித்தல் (Source Segregation) போன்ற பணிகள் மண்டலம்-6ல் தொய்வின்றி நடைபெற ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 1785 ஆகும்.

மொத்த நிரந்தர பணியாளர்கள் 1785ல், தற்போது 646 தூய்மை பணியாளர்கள் மட்டுமே உள்ளதாலும், மேலும் 21 பணியாளர்கள் வயது முதிர்வு ஓய்வு, 2 பணியாளர்கள் பதவி உயர்வு, 1 பணியாளர் பணியறவு மற்றும் 4 பணியாளர்கள் பணியிடையில் காலமானதாலும் மொத்தம் 28 காலி பணியிடங்கள் ஏற்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின்படி 01.06.2024 முதல் 30.09.2024 வரைக்கான (122 நாட்களுக்கு) நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஏற்படும் காலி பணியிடங்களை பூர்த்தி செய்ய 1139 தற்காலிக தூய்மை பணியாளர்கள் வார்டு வாரியாக கீழ்கண்ட அட்டவணையின்படி தேவைப்படுகிறார்கள்.

| வ. எண் | வார்டு எண் | ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் | **31.05.2024** வரை ஏற்பட்டுள்ள காலி பணியிடத்திற்கு தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 64 | 139 | 62 | 77 |
| 2 | 65 | 132 | 63 | 69 |
| 3 | 69 | 88 | 38 | 50 |
| 4 | 66 | 110 | 38 | 72 |
| 5 | 67 | 107 | 45 | 62 |
| 6 | 68 | 120 | 41 | 79 |
| 7 | 70 | 117 | 58 | 59 |
| 8 | 71 | 120 | 48 | 72 |
| 9 | 74 | 72 | 23 | 49 |
| 10 | 72 | 124 | 15 | 109 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 73 | 116 | 31 | 85 |
| 12 | 75 | 132 | 50 | 82 |
| 13 | 76 | 120 | 30 | 90 |
| 14 | 77 | 115 | 34 | 81 |
| 15 | 78 | 102 | 48 | 54 |
| 16 | S.H | 59 | 18 | 41 |
| 17 | ODG | 12 | 4 | 8 |
| மொத்தம் | | 1785 | 646 | 1139 |

பெருநகர சென்னை மாநகராட்டசி, 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.924/2024, நாள்.12.03.2024-ன்படி மண்டலம்-6ல் கோட்டம் 64 முதல் 78 வரையுள்ள கோட்டங்களுக்கு 1139 தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுவின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த 01.06.2024 முதல் 30.09.2024 வரைக்கான (122 நாட்களுக்கு) ஆகும் செலவினம் ரூ.9,54,64,146/-க்கு நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

மேலும், காலிப்பணியிடங்களுக்கு திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலம் நிரந்தர தூய்மைப் பணியாளர்களை பணியமர்த்தும் வரை குப்பைகளை அகற்றி தூய்மைப் பணி செய்திட அண்டை வீட்டு குழுவின் கீழ் தற்காலிக தூய்மை பணியாளர்களை பணியமர்வு செய்யலாம். கடந்த 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் நிதியாண்டுகளில் தற்காலிகமாக 1111 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அவற்றில் 1063 பணியாளர்கள் மட்டும் பணியமர்த்தப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே,

1. நிதி ஆலோசகர் அவர்களின் மேற்குறிப்பின்படி 03.06.2024 முதல் 30.09.2024 வரை (120 நாட்களுக்கு) பணிநீட்டிப்பு வழங்க தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் அரசாணை எண் (2D)36, நாள்.16.06.2023ன்படி தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.687/- வீதம் (687 x 1111 x 120) ரூ.9,15,90,840/- (ரூபாய் ஒன்பது கோடியே பதினைந்து இலட்சத்து தொண்ணூறாயிரத்து எண்ணூற்று நாற்பது மட்டும்) செலவினத்திற்கு கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 07.06.2024 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
2. 03.06.2024 முதல் 30.09.2024 வரை கால நீட்டிப்பு பெற்று துப்புரவு பணிகளை தொய்வின்றி மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
3. மேற்கண்ட பணிக்கான ரூ.9,15,90,840/- செலவினத்தை வரவு செலவு திட்ட மதிப்பீடு 2024-2025 ஆம் நிதியாண்டில் கணக்கு பிரிவு எண் 40-41-03ல் பணியாளர்களுக்கான கட்டணம் - துப்புரவு பணி (PAYMENT TO CASUAL STAFF-CONSERVANCY WORKS)210-100-601 என்ற கணக்கு தலைப்பின் கீழ் நிதி நிர்வாக பிரிவு மூலம் நிதி ஒதுக்கீடு செய்திட பின்னேற்பு அனுமதியும்,
4. நிரந்தர பணி அமர்வு ஏற்படும் வரை அவசர அவசியம் கருதி தற்போதைய நடைமுறையிலுள்ளவாறு துப்புரவு பணி தொடர அனுமதிக்கவும்,
5. 60 வயதுக்கு மேற்பட்ட NULM பணியாளர்களை ஏற்கனவே விடுவித்ததாலும், ஏற்கனவே நிரந்தர பணியாளர்கள் காலியாக உள்ள இடத்திலும், அவர்களுக்கு பதிலாக புதியதாக 1111 தூய்மை பணியாளர்களைஅண்டை வீட்டு குழுவின் கீழ் குழுக்களின் மூலம் பணியமர்த்தி மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ளும்படி ஆணை பெற்றமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.44/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.69/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.12.ந.க.எண்.இ1/ 7546/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.03.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:169/2024** **பொருள் எண்.61**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-12, பகுதி-35, வார்டு-156 - போரூர் ஏரியின் கரையில் (தெற்கு பகுதி) புதியதாக பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ள மூலதன நிதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.5,74,00,000/-க்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, பகுதி-35, வார்டு-156ற்குட்பட்ட போரூர் ஏரியின் சுற்று வட்டார பகுதியில் உள்ள அம்மன் நகர், பெல் நகர், ஜோதி நகர் மற்றும் மௌலிவாக்கம் போன்ற பகுதிகளில் வசித்துவரும் பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்வதற்கும், இளைப்பாறுவதற்கும் தகுந்த பூங்கா மற்றும் இடவசதி இல்லாத காரணத்தாலும் போரூர் ஏரியின் கரைப்பகுதியில் சுற்று சுவர் இல்லாததால் ஆக்கிரமிப்பு ஏற்படுவதாலும் மற்றும் அடையாளம் தெரியாத நபர்கள் ஏரியின் கரைப்பகுதியில் அமர்ந்து தேவையற்ற செயல்களில் ஈடுபடுவதாலும், அப்பகுதி பொதுமக்கள் மதிப்பிற்குரிய தலைமை செயலர் அவர்களிடம் சுற்று சுவருடன் கூடிய பூங்கா அமைத்து தருமாறு முறையிட்டனர்.

இதன் பொருட்டு மதிப்பிற்குரிய தலைமை செயலர் அவர்கள் 09.07.2023 அன்று வார்டு-156ல் உள்ள முகலிவாக்கம் பகுதி கள ஆய்வின் போது போரூர் ஏரியினையும் கள ஆய்வு மேற்கொண்டு ஏரியின் தெற்கு பகுதியில் நடைபாதை, இயற்கையை ரசித்தல், மின்விளக்குகள், ஏரியின் கரைப்பகுதியில் தடுப்பு சுவர் மற்றும் சுற்றுச் சுவருடன் கூடிய புதிய பூங்கா அமைத்து மேம்படுத்துமாறும் இதற்கான மதிப்பீட்டினை கட்டிடக் கலை கலந்தாளுனர் மூலம் மண் பரிசோதனை செய்து வடிவமைப்புடன் கூடிய விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து மண்டல அளவில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு போரூர் ஏரியின் தெற்கு பகுதியில் பூங்கா அமைப்பது தொடர்பாக மண் பரிசோதனை செய்து வடிவமைப்புடன் கூடிய விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்ய கைவிலைப்புள்ளி மூலம் கலந்தாளுநரை நியமிக்க வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் 02.08.2023 நாளிட்ட நிர்வாக அனுமதி பெற்று திருவாளர்கள் வேல் சிட்டி நிறுவனத்திற்கு பணி மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் போரூர் ஏரியின் தெற்கு பகுதியில் பூங்கா அமைக்க மண் பரிசோதனை மற்றும் வடிவமைப்புடன் கூடிய விரிவான திட்ட அறிக்கையினை கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை 2023-24ஆம் ஆண்டு அலுவலக விலைபட்டியலின் அடிப்படையில் மூலதன நிதியில் மேற்கொள்ளும் வகையில் ரூ.5,74,00,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்து பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்.

| Sl.No | Description | Quantity | Unit | Amount |
|---|---|---|---|---|
| 1 | Site Clearance | 2400 | Rmt | 279998.75 |
| 2 | Walkway paver block 2.5 m wide | 2400 | Rmt | 10267680.00 |
| 3 | Kerb wall on each side | 3600 | Rmt | 10959375.36 |
| 4 | Landscape | 3600 | Rmt | 2951576.40 |
| 5 | Chain Link Fence with RCC post | 3000 | Rmt | 3746741.83 |
| 6 | Lighting facilities | 100 | Nos | 4810500.00 |
| 7 | Compound Wall | 700 | Rmt | 9502457.53 |
| | Work Value | | | 42518329.87 |
| | GST 18% | | | 7653299.38 |
| | Supervision Charges 10% | | | 4251832.99 |
| | Petty Supervision Charges 2.5% | | | 1062958.25 |
| | Quality Controll 1% | | | 425183.30 |
| | Tamil Nadu Labour Welfare Fund 1% | | | 425183.30 |
| | Contigency 2.5% | | | 1063212.91 |
| | Grant Total | | | 57400000.00 |

எனவே,

(அ) மண்டலம்-12, பகுதி-35, வார்டு-156ற்குட்பட்ட போரூர் ஏரியின் தெற்கு பகுதியில் நடைபாதை, இயற்கையை ரசித்தல், மின்விளக்குகள், ஏரியின் கரைப்பகுதியில் தடுப்பு சுவர் மற்றும் சுற்றுச் சுவருடன் கூடிய புதியதாக பூங்கா அமைக்க 2023-24ஆம் ஆண்டு அலுவலக விலைபட்டியலின் அடிப்படையில் மூலதன நிதியில் மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.5,74,00,000/க்கு நிர்வாக அனுமதியும்,

(ஆ) மேற்படி தொகை ரூ.5,74,00,000/-ஐ பிரிவு குறியீடு 20-21-07ல் கணக்கு தலைப்பு எண்.412-400-200ல் (பூங்கா மற்றும் விளையாட்டு திடல்) நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“18.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.20/2024,நாள்.18.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.51/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**பொ.சு.து.ந.க.எண்.பி2A/3759/2021**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.03.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:170/2024** **பொருள் எண்.62**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - அம்மா உணவகம் - அரசாணையின்படி அம்மா உணவகங்களில் பணிபுரியும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தினக்கூலி ரூ.300/- லிருந்து ரூ.325/- ஆக உயர்த்தி வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-1 முதல் 15 வரையுள்ள 200 கோட்டங்களிலும் மற்றும் 7 அரசு மருத்துவமனைகளிலும் தற்போது 392 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட அம்மா உணவகங்களில் பணிபுரியும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.300/- வீதம் தினக்கூலியாக இன்றைய தேதி வரை வழங்கப்பட்டு வருகிறது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின், 28.01.2022 நாளிட்ட கடிதத்தின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் அம்மா உணவகம் தொடங்கப்பட்ட போது சென்னை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் 2012-13 ஆம் ஆண்டு தினக்கூலி சமையலர்க்கு ரூ.240/- ஆகவும் துணை சமையலர்க்கு ரூ.213/- ஆகவும் இருந்த போது அம்மா உணவகங்களில் அனைவரும் அனைத்து பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலை இருந்த காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அம்மா உணவகங்களில் பணிபுரிந்து வரும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தினக்கூலி ரூ.300/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் சென்னை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் 2021-2022 ஆம் ஆண்டு தினக்கூலி சமையல் செய்பவர்களுக்கு ரூ.418/- ஆகவும் மற்றும் உதவி சமையல் செய்பவர்களுக்கு ரூ.370/- ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், கடந்த 8 ஆண்டுகளாக உறுப்பினர்களுக்கு தினக்கூலியினை உயர்த்தி வழங்காத காரணத்தினாலும், தற்போது ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வினாலும், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கீழ் இயங்கி வரும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அம்மா உணவகங்களில் பணிபுரிந்து வரும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தினக்கூலி தொகையினைரூ.325/-ஆக உயர்த்தி வழங்கியுள்ள காரணத்தினாலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அம்மா உணவகங்களில் பணிபுரியும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களின் தினக்கூலியினை ரூ.300/- லிருந்த ரூ.325/- ஆக உயர்த்தி வழங்கவும் மற்றும் தினக் கூலியினை ரூ.325/- ஆக உயர்த்தி வழங்கும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.3.07 கோடியினை மாநகராட்சி நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் அரசிடம் அனுமதி கோரப்பட்டது.

அரசாணை (4D) எண்:10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.06.2022-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர்/ஆணையர் அவர்களினால் அளிக்கப்பட்ட முன்மொழிவு அரசினால் ஏற்கப்பட்டு, கீழ்கண்ட நிபந்தனைகளின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அம்மா உணவகங்களில் பணிபுரியும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களின் தினக்கூலியினை ரூ.300/-லிருந்து ரூ.325/- ஆக உயர்த்தி வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

1. The additional Expenditure will be borne by the Greater Chennai Corporation from its General fund. The Government will not bear any additional cost in future.
2. The salary and establishment cost including this expenditure should not exceed 49% of the total revenue of the Greater Chennai Corporation.

மேற்கண்ட அரசாணையின் படி அம்மா உணவகங்களில் பணிபுரியும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தினக் கூலியினை ரூ.325/- ஆக உயர்த்தி வழங்கும் பட்சத்தில் ஏற்படும் செலவினம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

| துறை | மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றிற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தினக்கூலி (ரூ) | 365 நாட்களுக்கு ஆகும் செலவினத்தொகை (ரூ) (1x2x365) | அரசாணையின்படி வழங்க வேண்டிய தினகூலி (ரூ) | 365 நாட்களுக்கு ஆகும் செலவினத்தொகை (ரூ) (1x4x365) | கூடுதல் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| | **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| **அம்மா உணவகம்** | 3184 | 300 | 34,86,48,000.00 | 325 | 37,77,02,000.00 | 2,90,54,000.00 |

**எனவே,**

1. **அரசாணை** *(4D)* **எண் :10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 10.06.2022 ன்படி தினக்கூலியினை ரூ.300/- லிருந்து ரூ.325/- ஆக உயர்த்தி வழங்கவும்,**
2. **அத்தினக்கூலியினை 01.04-2024 முதல் உயர்த்தி வழங்கவும்,**
3. **அத்தொகையினை90-*91-03/210-10-06*-08 என்ற கணக்கு குறியீட்டில் மண்டலங்களில் செலவினம் செய்யவும்,**

**மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

"20.06.2024 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.**34/2024, **நாள்.**20.06.2024**-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**"

"21.06.2024 **அன்று நடைபெற்ற நிலைக்குழு** *(வ.வி.ம.நி.)* **கூட்டத்தில் தீர்மான எண்**.66/2024, **நாள்**.21.06.2024**ன்படி இதற்கு நிலைக்குழு** (வ.வி.ம.நி.) **பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பொ.சு.து.கா.ம.பி.ந.க.எண்.அ2/ 0092 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.04.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:171/2024** **பொருள் எண்.63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத் துறை - கால்நடை மருத்துப் பிரிவு - மண்டல அளவில் கால்நடை மருத்துவம் சம்மந்தப்பட்ட பணிகளை ஒருங்கிணைக்க - மண்டலத்திற்கு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவிபுரிய (Unskilled) திறனற்ற என்ற வகைப்பாட்டின் கீழ் - மொத்தம் 16 நபர்களை புதியதாக சுய உதவி குழுக்கள் மூலமாக பணியில் ஈடுபடுத்தி கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதார துறை, கால்நடை மருத்துவப் பிரிவின் கீழ் செயல்படும் 5 நாய் இனக்கட்டுபாட்டு மையங்கள், நான்கு இறைச்சிக்கூடங்கள், நான்கு செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்கள் மற்றும் இரண்டு மாட்டுத்தொழுவங்கள் என மொத்தம் 15 கால்நடை மருத்துவ மையங்களில் 17 நிரந்தர மற்றும் தற்காலிக கால்நடை உதவி மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். இம்மையங்கள் அனைத்தும் கால்நடை உதவி மருத்துவர்களின் நேரடி மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

மேலும், கூடுதலாக ஒவ்வொரு மண்டலத்திலும் கால்நடை உதவி மருத்துவர்கள் கால்நடை மருத்துவம் பணிகளான இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு கருத்தடை அறுவை சிகிச்சைக்காக தெரு நாய்களை பிடிக்கும் பணி, பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்கும் பொருட்டு சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து அகற்றும் பணி, இறைச்சிக்கடைகளை ஆய்வு செய்யும் பணி மற்றும் மண்டல நல அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து சுற்றிதிரியும் மாடுகளை பிடித்து கட்டுப்படுத்தும் பணி ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்பொழுது மண்டலங்களில் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு நேரடி உதவியாளர்கள்/ கால்நடை ஆய்வாளர்/ மேற்பார்வையாளர் இல்லாததால் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை கள ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்வதில் சிரமமான நிலை உள்ளது.

ஆகவே மண்டலத்திற்கு ஒருவர் வீதம் சிறப்பு பணிகளுக்கு ஒருவர் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவிபுரிய என மொத்தம் 16 நபர்களை சுய உதவி குழு மூலம் பணியமர்த்திட வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் தினசரி மண்டலங்களுக்கு நேரில் சென்று நாய் பிடிக்கும் வாகனங்கள் சரியான நேரத்தில் புறப்படுவதையும், நாய் பிடிக்கும் பணியாளர்களின் வருகையை உறுதி செய்யவும், அனைத்து புகார்களின் மீது நாய் இனக்கட்டுப்பாட்டு விதிகளுக்குட்பட்டு நாய்கள் பிடிக்கப்படுவதை உறுதி படுத்தவும், பதிவேடுகளை முறையாக பராமரிக்கவும், தினசரி நாய் பிடிக்கப்பட்ட நாய்களின் விவரங்களை தெரிவிக்கவும், மண்டல அளவில் பொது மக்களுக்கும் விலங்கின ஆர்வலர்களுக்கும் பிராணிகள் வதை தடுப்பு சட்டம் 1960 மற்றும் நாய் இனக்கட்டுப்பாட்டு சட்டம் 2023 ஆகியவற்றை விளக்கி சொல்வதற்கும் மண்டல கால்நடை உதவி மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்பார்வையிட வேண்டும்.

தினசரி மாடு பிடிக்கும் வாகனங்கள் சரியான நேரத்தில் புறப்படுவதையும், அனைத்து புகார்களின் மீது நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யவும், மாட்டின் உரிமையாளர்களால் இடையூறு ஏற்படா வண்ணம் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் இப்பணியை மேற்கொள்வதற்கும் சுகாதார ஆய்வாளர்களுடன் இணைந்து மேற்பார்வையிட வேண்டும். மற்றும் மண்டலம் தோறும் மாடுகளை கணக்கெடுக்கும் பணி மற்றும் உரிமம் வழங்கும் பணி மேற்கொள்ளப்படும் போது அப்பணியில் ஈடுபடவேண்டும்.

அனைத்து அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகளின் பொழுதும் பிற மண்டலங்களிலிருந்து கால்நடை பிடிக்கும் வாகனங்களையும், ஊழியர்களையும் ஒருங்கிணைத்து கால்நடைகளை கட்டுப்படுத்தும் பணியை மேற்கொள்ள மண்டல நல அலுவலர்கள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் அறிவுறுத்தலின் படி மேற்பார்வையிட வேண்டும்.

பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்கும் பொருட்டு சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து அகற்றும் பணியின் போது கால்நடை உதவி மருத்துவர், கோட்ட சுகாதார ஆய்வாளர்களின் அறுவுறுத்தலின்படி மேற்பார்வையிட வேண்டும்.

பொது மக்களுக்கு சுகாதாரமான இறைச்சியை வழங்குவதை உறுதிபடுத்தும் பொருட்டு இறைச்சிக்கடைகளை ஆய்வு செய்யும் பணியின் போது கால்நடை உதவி மருத்துவர்கள் உடன் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கடந்த 01.02.2024 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வரவு செலவு திட்ட ஆலோசனைக்கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டதில், கூடுதல் தலைமை செயலர்/ ஆணையர் அவர்கள் கால்நடை ஆய்வாளர்/ மேற்பார்வையாளர் பணியாளர்களை சுய உதவி குழுக்களின் வாயிலாக ஈடுபடுத்திட அறிவுறுத்தியுள்ளார்.

15 மண்டலங்கள் மற்றும் சிறப்பு பணிகளுக்கு ஒருவர் என கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவிபுரிய *Unskilled* - என்ற வகைப்பாட்டின் கீழ் அரசாணை எண்.(2D)No.36 நாள்.16.06.2023 Labour Welfare and Skill Development(J1) Department பக்க எண்.3ல் (Unskilled ) தனிபயிற்சி வேண்டிராத தொழிலாளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

மேற்கண்ட விவரப்படி மாநகராட்சியில் பணியாற்றும் *Unskilled* என்ற வகையினருக்கு மாத ஊதியம் ரூ.13,000/- என்றும், தினசரி கூலி ரூ.500/- என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அகவிலைப்படி குறித்து கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Average Consumer Price Index of Chennai City**

Consumer Price Index for the year 2010 (Base 2001= 100) = 161
Average CPI for the year 2022

| | |
|---|---|
| January | 126.4 |
| February | 123.7 |
| March | 123.2 |
| April | 124.8 |
| May | 128.4 |
| June | 127.8 |
| July | 127.0 |
| August | 127.4 |
| September | 129.0 |
| October | 129.9 |
| November | 129.7 |
| December | 130.4 |
| Total | 1527.7 |

Total 1527.7 / 12 = 127.31 x 2.5 (linking factor) = 318

| | |
|---|---|
| As per Explanation–II (i).318-161 | 157 points x Rs.31 |
| Therefore DA | = Rs.4867/- per month |
| As per column I = Basic rate Schedule Column 3 (ii) | Rs.13,000 + D.A.4867/- |
| Total | Rs.17,867/- per month/26 |
| Per day | Rs.687/- (Rounded) |

**தினக்கூலி கணக்கீடு *As per G.O.(2D) No.36 Dated: 16.06.2023***

| வ. எண். | பதவியின் பெயர் | பணியாளர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய தினக்கூலி 05.07.2023 முதல் *(including DA)* | ஒரு மாதத்திற்கு ரூ. *(687 x 31)* | ஒரு வருடத்திற்கு ரூ. *(Col.3 x 5 x 12 months)* |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | *Unskilled* (திறனற்றவர் வகைப்பாடு) | 16 | 687 | 21297 | 40,89,024/- |

ஆகவே 15 மண்டலங்கள் மற்றும் சிறப்பு பணிகளுக்கு ஒருவர் என கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவிபுரிய *Unskilled* - என்ற வகைப்பாட்டின் கீழ் சுய உதவி குழு மூலம் 16 நபர்களை பணியில் ஈடுபடுத்த கீழ்காணும் இனங்களுக்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

எனவே,

1. பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப் பிரிவின் சார்பில் *16* நபர்களை சுய உதவி குழுவின் மூலம் பணியில் ஈடுபடுத்திடவும்,
2. 16 நபர்களை கொண்டு கால்நடை மருத்துவம் சம்மந்தப்பட்ட பணிகளான தெரு நாய்களை பிடிக்கும் பணி, சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து அகற்றும் பணி மற்றும் கோட்ட சுகாதார ஆய்வாளர்களுடன் ஒருங்கிணைந்து சுற்றிதிரியும் மாடுகளை பிடிக்கும் பணி ஆகியவற்றை மேற்கொள்ளவும், மண்டல கால்நடை உதவி மருத்துவர்களின் நேரடி கட்டுப்பாட்டில் இப்பணியினை மேற்கொள்ளவும்,
3. மேற்கண்ட பணிக்காக சுய உதவி குழு உறுப்பினர்களுக்கான தொகையை ஒரு வருட காலத்திற்கு, அரசாணை எண். *G.O.No.(2D) 36, Labour Welfare & Skilled Development(J1) Department, Date:16.06.2023*-ன்படி, நிர்ணயிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.*687/-*ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும், 01.04.2024 முதல் இப்பணியை செயல்படுத்தவும், மேலும் ஆண்டு தோறும் இப்பணியை புதுப்பித்துக்கொள்ளவும்,
4. உறுப்பினர்களுக்கான ஊதியத்தை பிரிவு குறியீடு எண். *40-43-*02 கணக்கு தலைப்பு எண். 210-*10-06-02 – Payment to casual Health Workers* என்ற கணக்கு தலைப்பில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்வதற்கும்,
5. *Unskilled* என்ற பணியில் நிர்ணயித்த குறைந்த பட்ச ஒரு நாள் ஊதியம் நபர் ஒருவருக்கு ரூ.*687/-* என நிர்ணயம் செய்யவும், இதன் மூலம் ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு தொகையாக ரூ.*21,297/-*ஐ (*687 x 31*) வழங்கிடவும், இதற்கான செலவீனத்தொகையை ஓர் ஆண்டிற்கு *16* நபர்கள் *x* ரூ.*687 x 12* மாதங்கள் = ரூ.*40,89,024/-* (ரூபாய் நாற்பது இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து இருபத்து நான்கு மட்டும்) வழங்கவும்,
6. சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை குழுவிலிருந்து நீக்கி, அவருக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை சுய உதவிக்குழுவின் மூலம் நியமித்துக்கொள்ளவும்,

7. இந்த உறுப்பினர்கள் பணி செய்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட கால்நடை உதவி மருத்துவர்களிடமிருந்து வருகை அறிக்கை மீதான சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணிபுரிந்த நாட்களுக்கான தொகையை கணக்கிட்டு வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.35/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.59/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பொ.சு.து.கா.ம.பி.ந.க.எண்.அ2/ 0206 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.03.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:172/2024** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப் பிரிவு - தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் SHG மூலம் 1,2,3,4,7,11,12,13,14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் மாடு பிடிக்கும் பணிக்கு 5 உறுப்பினர்களை அமர்த்துவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகளை பிடித்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் மாட்டுத் தொழுவங்களில் அடைக்க மண்டலம்-5,6,8,9 மற்றும் 10 ஆகிய மண்டலங்களில் தலா 5 மாடு பிடிக்கும் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

கூடுதலாக மண்டலம் - 1,2,3,4,7,11,12,13,14 மற்றும் 15 ஆகிய 10 மண்டலங்களில் மாடு பிடிக்கும் பணியில் ஈடுபடுத்த தலா 5 உறுப்பினர்களை பணியில் அமர்த்த பெருநகர சென்னை மாநகராட்சியின் 2024 – 2025 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை, அறிவிப்பு எண்.32 –ல் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலங்களில் தற்போது மாடுகள் பிடிக்கும் பணிக்காக பிரத்யேகமாக பணியாளர்கள் இல்லாத நிலையில் சுற்றித்திரியும் மாடுகளை பிடிக்கும் பணியினை சீரிய முறையில் மேற்கொள்ள தனியாக பணியாளர்களை நியமிக்க வேண்டிய அவசியம் வேண்டியுள்ளது.

ஆகவே, மண்டலம்-1,2,3,4,7,11,12,13,14 மற்றும் 15 ஆகிய 10 மண்டலங்களில் தலா 5 மாடு பிடிக்கும் பணியாளர்களை தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் (SHG) சுய உதவிக் குழுக்கள் மூலம் பணியில் ஈடுபடுத்த அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-1,2,3,4,7,11,12,13,14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் பொது சுகாதாரத்துறையில் தற்காலிக தினக்கூலி பணியாளர்கள், சுய உதவி குழுக்கள் மூலம் 5 உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் மூலம் மாடு பிடிக்கும் பணியை மேற்கொள்வதற்கும்,
2. மண்டலம்-1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14 மற்றும் 15 ஆகிய அனைத்து மண்டலங்களிலும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறையின் அரசாணை எண்.36-ன்படி ATTENDER என்ற பணியில் நிர்ணயித்த குறைந்த பட்ச ஒரு நாள் ஊதியம் நபர் ஒருவருக்கு ரூ.687/- (ரூபாய் அறநூற்று எண்பத்தேழு மட்டும்) என நிர்ணயம் செய்யவும், இதன் மூலம் ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு தொகையாக ரூ.20610/-ஐ (687 x 30) வழங்கிடவும், பின்னர் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2024-2025 ஆம் நிதி ஆண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்படவுள்ள அத்தொகையை தினக்கூலியாக நாள் ஒன்றிற்கு கணக்கிட்டு வழங்குவதற்கும்,
3. மண்டலங்கள் 1 முதல் 15 வரையுள்ள மாடு பிடிக்கும் பணியாளர்கள் பணி செய்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட கால்நடை உதவி மருத்துவர் மற்றும் மண்டல நல அலுவலர்களிடமிருந்து வருகை அறிக்கை பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணிபுரிந்த நாட்களுக்கான தொகையை கணக்கிட்டு வழங்குவதற்கும், மாடு பிடிக்கும் உறுப்பினர்கள் பணியில் ஈடுபடும் பொழுது சம்மந்தப்பட்ட கோட்ட சுகாதார ஆய்வாளர் அவர்களின் மேற்பார்வையில் பணி செய்யவும்,
4. மண்டலம் 1 முதல் 15 வரை உறுப்பினர்களுக்கான ஊதியத்தை மேற்கண்ட மண்டலங்களின் பகுதி கணக்கு குழுமத்தின் மூலம் குறியீட்டு எண். 30-32-02 கணக்கு தலைப்பு எண். 210-10-06-02 – Payment to casual Health Workers என்ற கணக்கு தலைப்பில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும்,

5. மண்டலம் 1 முதல் 15 வரை மாடு பிடிக்கும் பணியில் ஈடுபடும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை குழுவிலிருந்து நீக்கி, அவருக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை மண்டல நல அலுவலர் மற்றும் மண்டல கால்நடை உதவி மருத்துவர்களின் அனுமதி பெற்று அக்குழுவில் நியமித்து கொள்ளவும்,
6. ஆண்டு தோறும் வட்டார துணை ஆணையர்களின் ஒப்புதல் பெற்று சுய உதவி குழு உறுப்பினர்களின் பணிக்காலத்தை புதுப்பித்துக்கொள்ளவும்,
7. மேற்கண்ட மண்டலங்களில் உள்ள மாடு பிடிக்கும் வாகனத்தை இயக்குவதற்கு தேவையான ஓட்டுநர்களை சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் நியமிக்க நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.36/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.60/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பொ.சு.கா.பி.ந.க.எண்.அ2/ 0327 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.05.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:173/2024** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவு - நாய் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மையங்களில் - தனியார் கால்நடைமருத்துவர்களின் கருத்தடை அறுவை சிகிச்சைகட்டணத்தை உயர்த்தி வழங்கிட அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த, அவை பிடிக்கப்பட்டு, பிராணிகள் வதை தடுப்பு சட்டம் 1960, நாய் இனக் கட்டுப்பாடு விதி *(2023)*-க்குட்பட்டு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் பேசின் பாலம், லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாபேட்டை, மீனம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய ஐந்து இடங்களில் நாய் இனக்கட்டுப்பாடு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் மண்டலங்களிலிருந்து பிடித்து வரப்படும் தெரு நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்படுகின்றது. இம்மையங்களில் மேற்கொள்ளப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை ஒன்றிற்கு தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு ரூ.100/- என 2015-ஆம் ஆண்டு முதல் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வந்தது.

மன்றத் தீர்மான எண்.570/2020, நாள்.25.08.2020-ன்படி, இக்கட்டணம் உயர்த்தப்பட்டு ஆண் நாய் ஒன்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக ரூ.*200/-* எனவும் பெண் நாய் ஒன்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக ரூ.*300/-* எனவும் உயர்த்தி தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கூடுதல் தலைமை செயலர் / முதல் அமைச்சரின் செயலர் – 1 அவர்கள் தலைமையில் நாய் இனக்கட்டுப்பாடு திட்டம் குறித்து ஆய்வு கூட்டம் 04.04.2024 அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சையின் எண்ணிக்கையையும், தரத்தையும் உயர்த்தும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் கருத்தடை அறுவை சிகிச்சை ஒன்றிற்கு தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை கட்டணத்தை பரிசீலித்து உயர்த்தி வழங்கிடுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ் நாடு அரசின், அரசாணை எண். Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare (AH3) Department, G.O.4(D) No.01, Dated:17.03.2023-ன்படி நாய் இனக்கட்டுப்பாடு பணியினை மேற்கொள்ளும் தன்னார்வல தொண்டு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நாய் ஒன்றிற்கு ரூ.1650/- என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு அதனை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தொகையில் நாய் பிடிக்கும் பணி மற்றும் அவற்றை பிடித்த இடத்திலிலேயே மீண்டும் விடுவித்திட ரூ.200/- எனவும், மருந்து, உணவு, அறுவை சிகிச்சை செலவு, அறுவை சிகிச்சைக்கு முன்னும், பின்னும் பராமரிப்பு செலவுக்கு என ரூ.1,450/- எனவும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ள ரூ.1,450/- கட்டணத்தில் ஒரு நாய்க்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள செலவழிக்கப்படும் தோராயத் தொகை பின்வருமாறு:

| வ. எண் | விவரங்கள் | தோராய செலவினத் தொகை (ரூ.) |
|---|---|---|
| *1.* | 5 நாட்களுக்கான உணவு | *250* |
| *2.* | அறுவை சிகிச்சை மற்றும் பிற மருந்துகள் | *250* |
| *3.* | நாய் பிடிக்கும் ஊழியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களின் ஊதியம் | *450* |

| | | |
|---|---|---|
| 4. | மின்சாரம் மற்றும் பராமரிப்பு செலவு | 100 |
| 5. | அறுவை சிகிச்சை கட்டணம் | 400 |

ஆகவே தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சையின் எண்ணிக்கையையும், தரத்தையும் உயர்த்தும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் பேசின் பாலம், லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாபேட்டை, மீனம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய ஐந்து நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் கருத்தடை அறுவை சிகிச்சை ஒன்றிற்கு தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை கட்டணம் உயர்த்தப்பட வேண்டியுள்ளது.

ஆண் நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதைக் காட்டிலும், பெண் நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய அதிக நேரமும், சிரத்தையும் தேவைப்படும். மேலும் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அதிக அளவில் பெண் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்வது நீண்ட கால பலன் அளிக்கக்கூடியது. ஆகவே, பெண் நாய் ஒன்றிற்கு ரூ.450/- எனவும் ஆண் நாய் ஒன்றிற்கு ரூ.350/- எனவும் அறுவை சிகிச்சை கட்டணத்தை உயர்த்தி வழங்கிட வேண்டியுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு அறுவை சிகிச்சை கட்டணத்தொகையை உயர்த்தி வழங்கிடவும்,

2. பெண் நாய் ஒன்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கட்டணத்தொகையான ரூ.300/- ஐ உயர்த்தி ரூ.450/-ஆக வழங்கிடவும்,

3. ஆண் நாய் ஒன்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கட்டணத்தொகையான ரூ.200/- ஐ உயர்த்தி ரூ.350/- ஆக வழங்கிடவும்,

4. மேலும் இச்செலவினத்தொகையை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வந்த பிரிவுக் குறியீடு எண் 40-43-02 மற்றும் கணக்குத்தலைப்பு எண் 210-20-07-02 (Incentive other-Staff) என்ற கணக்குத்தலைப்பில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு. நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.37/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.61/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**சுதுநக.எண். B2/ 1462/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.04.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:174/2024** **பொருள் எண்.66**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை மற்றும் மருத்துவ சேவைகள் துறைக்கு தேவையான 136 எண்ணிக்கையிலான கணினி பதிவாளர்கள் M/s. Sri Balaji Agencies நிறுவனத்தின் மூலம் 15.05.2023 முதல் 14.05.2024 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தப்பட்டது - இப்பணியினை மேலும் 15.05.2024 முதல் 14.07.2024 வரை இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்புசெய்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மான எண்.676/2022, நாள்.28.12.2022 மற்றும் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 03.05.2023 நாளிட்ட ஆணையின்படியும், பொது சுகாதாரத்துறை மற்றும் மருத்துவசேவைகள் துறைக்கு தேவையான 136 எண்ணிக்கையிலான கணினி பதிவாளர்கள் M/s. Sri Balaji Agencies நிறுவனத்தின் மூலம் 15.05.2023 முதல் 14.05.2024 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**அட்டவணை எண்.1**

**M/s. Sri Balaji Agencies -(From 15.05.2023 To 14.05.2024)**

| Sl.No | Name of the Post | Remuneration per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges (1+2+3) (Rs) | GST 18% (1+2+3+4) (Rs) | Total ) (Rs) | Required Staff | Cost for One year (Rs) (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operator | 12,630 | 1642 | 410 | 734.10 | 2775 | 18191 | 136 | 2,96,87,875 |

கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 21.02.2024 நாளிட்ட ஆணையின்படி மேற்கண்ட பணியாளர்களை வெளிநிறுவனம் மூலம் பணியமர்த்த அடுத்த ஒப்பம் கோரப்பட்டு 18.04.2024 அன்று ஒப்பம் திறக்கப்பட்டுள்ளது.

தற்போது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு 19.04.2024 அன்று தமிழகத்தில் வாக்கு பதிவு நடைபெற்று, 04.06.2024 அன்று வாக்கு எண்ணிக்கையும் நடைபெற உள்ளது. தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிகள் தற்போது அமலில் இருப்பதால், தற்போது புதியதாக கோரப்பட்டுள்ள புதிய ஒப்பத்தினை இறுதி செய்ய இயலாத நிலை உள்ளது.

The Tamil Nadu Transparency Tender Act-1998 Section 10 (2) விதியின்படி ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தினை Tender Accepting Authority யின் அனுமதி பெற்று 25% வரையில் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அடுத்த ஒப்பம் இறுதி செய்யும் வரையில், பொதுமக்களுக்கு மேற்கண்ட இந்திய மருத்துவ சேவைகள் தொடர்ந்து கிடைக்க ஏதுவாகவும், அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட பணியாளர்களை, பணியமர்த்தும் பணியாணையினை M/s. Sri Balaji Agencies நிறுவனத்திற்கு 15.05.2024 முதல் 14.08.2024 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டு கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு அனுப்பப்பட்டதில், கூடுதல் ஆணையர்(சுகாதாரம்) அவர்களிள், 16.04.2024 நாளிட்ட குறிப்பில் இந்த பணி நீட்டிப்பினை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண் -2**

**இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய தேவைப்படும் நிதி விவரம் பின்வருமாறு**

| Sl.No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges (Rs) | GST 18% (1+2+3+4) (Rs) | Total (1+2+3+4+5) (Rs) | Required Staff | Cost for 2 months (Rs) (6x7x2m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operators | 12630 | 1642 | 410 | 734.1 | 2775 | 18191 | 136 | 49,47,952 |

**அட்டவணை எண். 3**

**பணி நீட்டிப்பு விவரம்**

| | |
|---|---|
| Total Contract Value | ரூ. 2,96,87,875 |
| 25% of Contract value | ரூ.74,21,969 |
| Extension work value | ரூ. 49,47,952 |

ஒப்பந்த மதிப்பிற்கான 25% தொகை ரூ.74,21,969/-க்கு பணி நீட்டிப்பு தொகை ரூ.49,47,952/-யானது (-) 33.3% குறைவாக உள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை மற்றும் மருத்துவசேவைகள் துறைக்கு தேவையான 136 எண்ணிக்கையிலான கணினி பதிவாளர்கள் M/s. Sri Balaji Agencies நிறுவனத்தின் மூலம் 15.05.2023 முதல் 14.05.2024 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தப்பட்டது. இந்த பணியாணையினை 15.05.2024 முதல் 14.07.2024 வரை 2 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்தமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
2. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.49,47,952/- (ரூபாய் நாற்பத்தி ஒன்பது லட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி இரண்டு மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
3. மேற்கண்ட நிறுவனத்தினர் ஏற்கனவே பிணை வைப்பு தொகை செலுத்தியுள்ள நிலையில், பணி நீட்டிற்பிற்கு பிணை வைப்புத்தொகை பெறுவதில் இருந்து விலக்களிக்கவும் மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-35-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.38/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.62/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******

**சுது.நக.எண். B2/1463/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.04.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:175/2024** **பொருள் எண்.67**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை, மண்டலம்-4,5,6,9,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்களுக்கு (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) தேவையான ஆயுஷ் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 15.05.2023 முதல் 14.05.2024 வரை M/s. Sri Balaji Agencies நிறுவனத்தின் மூலம் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டது - இப்பணியினை மேலும் 15.05.2024 முதல் 14.07.2024 வரை இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில், முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 19.05.2023 நாளிட்ட ஆணையின்படி, மண்டலம்-4,5,6,9,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தங்களுக்கு (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) தேவையான ஆயுஷ் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 15.05.2023 முதல் 14.05.2024 வரை M/s. Sri Balaji Agencies நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை எண் -1**

**M/s. Sri Balaji Agencies 15.05.2023 to 14.05.2024**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %)(Rs) | Administrative Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 1350864 |
| 2 | Yoga and naturopathy-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 1350864 |
| 3 | Unani-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 5 | 2251440 |
| 4 | Siddha-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 1350864 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 4 | 1801152 |
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 3 | 523476 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 3 | 523476 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 6 | 1046952 |
| 9 | Multipurpose worker | 8000 | 1040 | 260 | 558 | 1774 | 11632 | 17 | 2372928 |
| | Total | | | | | | | 47 | 1,25,72,016 |

கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 15.03.2024 நாளிட்ட ஆணையின்படி மேற்கண்ட பணியாளர்களை வெளிநிறுவனம் மூலம் பணியமர்த்த அடுத்த ஒப்பம் கோரப்பட்டு 04.04.2024 அன்று தொழில்நுட்ப ஒப்பம் திறக்கப்பட்டது.

தற்போது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு 19.04.2024 அன்று தமிழகத்தில் வாக்கு பதிவும், 04.06.2024 அன்று வாக்கு எண்ணிக்கையும் நடைபெற உள்ளது. தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிகள் தற்போது அமலில் இருப்பதால், தற்போது புதியதாக கோரப்பட்டுள்ள புதிய ஒப்பத்தினை இறுதி செய்ய இயலாத நிலை உள்ளது.

The Tamil Nadu Transparency Tender Act-1998 Section 10 (2) விதியின்படி ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தினை Tender Accepting Authority யின் அனுமதி பெற்று 25% வரையில் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அடுத்த ஒப்பம் இறுதி செய்யும் வரையில், பொதுமக்களுக்கு மேற்கண்ட இந்திய மருத்துவ சேவைகள் தொடர்ந்து கிடைக்க ஏதுவாகவும், அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட பணியாளர்களை, பணியமர்த்தும் பணியாணையினை M/s. Sri Balaji Agencies நிறுவனத்திற்கு 15.05.2024 முதல் 14.08.2024 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டு கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு அனுப்பப்பட்டதில், கூடுதல் ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 16.04.2024 நாளிட்ட குறிப்பில், இந்த பணி நீட்டிப்பினை 14.07.2024 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண் -2**

**இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய தேவைப்படும் நிதி விவரம் பின்வருமாறு**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %)(Rs) | Administrative Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 2 months Rs (6x7x2m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 225144 |
| 2 | Yoga and naturopathy-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 225144 |
| 3 | Unani-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 5 | 375240 |
| 4 | Siddha-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 225144 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 4 | 300192 |
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 3 | 87246 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 3 | 87246 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 6 | 174492 |
| 9 | Multipurpose worker | 8000 | 1040 | 260 | 558 | 1774 | 11632 | 17 | 395488 |
| | Total | | | | | | | 47 | 2095336 |

**அட்டவணை எண். 3**

**பணி நீட்டிப்பு விவரம்**

| | |
|---|---|
| Total Contract Value | ரூ. 1,25,72,016 |
| 25% of Contract value | ரூ. 31,43,004 |
| Extension work value | ரூ. 20,95,336 |

ஒப்பந்த மதிப்பிற்கான 25% தொகை ரூ.31,43,004/-க்கு பணி நீட்டிப்பு தொகை ரூ.20,95,336/-யானது (-) 33.3% குறைவாக உள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, மண்டலம்-4,5,6,9,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்களுக்கு (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) தேவையான ஆயுஷ் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள் M/s. Sri Balaji Agencies நிறுவனத்திற்கு 15.05.2023 முதல் 14.05.2024 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்த பணியாணை வழங்கப்பட்டது இந்த பணியாணையினை 15.05.2024 முதல் 14.07.2024 வரை 2 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்தமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

2. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.20,95,336/- (ரூபாய் இருபது இலட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரத்து முன்னூற்றி முப்பத்தி ஆறு மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,

3. மேற்கண்ட நிறுவனத்தினர் ஏற்கனவே பிணை வைப்பு தொகை செலுத்தியுள்ள நிலையில், பணி நீட்டிற்பிற்கு பிணை வைப்புத்தொகை பெறுவதில் இருந்து விலக்களிக்கவும் மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ள அனுமதிக்கும்,

4. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.39/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.63/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******

**சு.து.நக.எண். B2/ 1464/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.04.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:176/2024** **பொருள் எண்.68**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையில் செயல்பட்டு வரும் இரண்டாண்டு உதவி செவிலியர் பட்டயபடிப்பு (ANM Course) பயிற்சிக்கு தேவையான முதல்வர் மற்றும் இதர பணியாளர்கள் மற்றும் தொற்றுநோய் மருத்துவமனை பணிகளுக்கு தேவையான மருத்துவ சார் பணியாளர்கள் (Para Medical Staff) ஒப்பந்த அடிப்படையில் M/s. Janishree Corporate Services Pvt ltd, நிறுவனத்தின் மூலம் 15.05.2023 முதல் 14.05.2024 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தப்பட்டது - இப்பணியினை மேலும் 15.05.2024 முதல் 14.07.2024 வரை இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மான எண்.667/2022, நாள்.28.12.2022 மற்றும் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 03.05.2023 நாளிட்ட ஆணையின்படியும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் மருத்துவமனை, சிறப்பு மது மறுவாழ்வு மையம் மற்றும் பயிற்சிக்கு தேவையான கீழ்க்கண்ட பணியாளர்கள் M/s. Janishree Corporate Services Pvt ltd, நிறுவனத்தின் மூலம் 15.05.2023 முதல் 14.05.2024 வரை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**அட்டவணை எண்.1**

**M/s. Janishree Corporate Services Pvt Ltd – -(From 15.05.2023 To 14.05.2024)**

| Sl.No | Category of Staff | Remuneration on per Month (Rs) | EPF (13%) | ESI (3.25 %)(Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Number of Staff | Total 12 months Rs (7x8x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Staff nurses | 18000 | 0 | 0 | 1440 | 3499 | 22939 | 14 | 3853752 |
| 2 | X- Ray Technician | 12000 | 1560 | 390 | 1116 | 2712 | 17778 | 1 | 213336 |
| 3 | Counselor | 15000 | 1950 | 488 | 1395 | 3390 | 22223 | 1 | 266676 |
| 4 | Physiotherapist | 15000 | 1950 | 488 | 1395 | 3390 | 22223 | 1 | 266676 |
| 5 | Yoga teacher | 13000 | 1690 | 423 | 1209 | 2938 | 19260 | 1 | 231120 |
| 6 | FNA | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 8 | 1208832 |
| 7 | MNA | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 8 | 1208832 |
| 8 | Principal | 30000 | 0 | 0 | 2400 | 5832 | 38232 | 1 | 458784 |
| 9 | Tutor | 18000 | 0 | 0 | 1440 | 3499 | 22939 | 8 | 2202144 |
| 10 | Warden | 17000 | 0 | 0 | 1360 | 3305 | 21665 | 1 | 259980 |
| 11 | Clerk cum Typist | 10790 | 1403 | 351 | 1004 | 2439 | 15987 | 2 | 383688 |
| 12 | Cook | 9570 | 1244 | 311 | 890 | 2163 | 14178 | 3 | 510408 |
| 13 | Cook Assistant | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 3 | 453312 |
| 14 | Laundry plant Operator | 9410 | 1223 | 306 | 875 | 2127 | 13941 | 1 | 167292 |
| 15 | Laundry plant Helper | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 1 | 151104 |
| 16 | Tutor (for DMLT Course) | 21000 | 0 | 0 | 1680 | 4082 | 26762 | 2 | 642288 |
| 17 | Telephone Operator | 10800 | 1404 | 351 | 1004 | 2441 | 16000 | 2 | 384000 |
| | | | | | | | | 58 | 1,28,62,224 |

கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 21.02.2024 நாளிட்ட ஆணையின்படி மேற்கண்ட பணியாளர்களை வெளிநிறுவனம் மூலம் பணியமர்த்த அடுத்த ஒப்பம் கோரப்பட்டு 04.04.2024 அன்று தொழில்நுட்ப ஒப்பம் திறக்கப்பட்டது.

தற்போது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு 19.04.2024 அன்று தமிழகத்தில் வாக்கு பதிவும், 04.06.2024 அன்று வாக்கு எண்ணிக்கையும் நடைபெற உள்ளது. தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிகள் தற்போது அமலில் இருப்பதால், தற்போது புதியதாக கோரப்பட்டுள்ள புதிய ஒப்பத்தினை இறுதி செய்ய இயலாத நிலை உள்ளது.

The Tamil Nadu Transparency Tender Act-1998 Section 10 (2) விதியின்படி ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தினை Tender Accepting Authority யின் அனுமதி பெற்று 25% வரையில் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அடுத்த ஒப்பம் இறுதி செய்யும் வரையில், பொதுமக்களுக்கு மேற்கண்ட இந்திய மருத்துவ சேவைகள் தொடர்ந்து கிடைக்க ஏதுவாகவும், அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட பணியாளர்களை, பணியமர்த்தும் பணியாணையினை M/s. Janishree Corporate Services Pvt ltd நிறுவனத்திற்கு 15.05.2024 முதல் 14.08.2024 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டு கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு அனுப்பப்பட்டதில், கூடுதல் ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 16.04.2024 நாளிட்ட குறிப்பில், இந்த பணி நீட்டிப்பினை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் நீட்டிப்பு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண் -2**

**இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய தேவைப்படும் நிதி விவரம் பின்வருமாறு**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF (13%) | ESI (3.25 %)(Rs) | Admin Charges (8%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Number of Staff | Total 2 months Rs (7x8x2m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Staff nurses | 18000 | 0 | 0 | 1440 | 3499 | 22939 | 14 | 642292 |
| 2 | X- Ray Technician | 12000 | 1560 | 390 | 1116 | 2712 | 17778 | 1 | 35556 |
| 3 | Counselor | 15000 | 1950 | 488 | 1395 | 3390 | 22223 | 1 | 44446 |
| 4 | Physiotherapist | 15000 | 1950 | 488 | 1395 | 3390 | 22223 | 1 | 44446 |
| 5 | Yoga teacher | 13000 | 1690 | 423 | 1209 | 2938 | 19260 | 1 | 38520 |
| 6 | FNA | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 8 | 201472 |
| 7 | MNA | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 8 | 201472 |
| 8 | Principal | 30000 | 0 | 0 | 2400 | 5832 | 38232 | 1 | 76464 |
| 9 | Tutor | 18000 | 0 | 0 | 1440 | 3499 | 22939 | 8 | 367024 |
| 10 | Warden | 17000 | 0 | 0 | 1360 | 3305 | 21665 | 1 | 43330 |
| 11 | Clerk cum Typist | 10790 | 1403 | 351 | 1004 | 2439 | 15987 | 2 | 63948 |
| 12 | Cook | 9570 | 1244 | 311 | 890 | 2163 | 14178 | 3 | 85068 |
| 13 | Cook Assistant | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 3 | 75552 |
| 14 | Laundry plant Operator | 9410 | 1223 | 306 | 875 | 2127 | 13941 | 1 | 27882 |
| 15 | Laundry plant Helper | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 1 | 25184 |
| 16 | Tutor (for DMLT Course) | 21000 | 0 | 0 | 1680 | 4082 | 26762 | 2 | 107048 |
| 17 | Telephone Operator | 10800 | 1404 | 351 | 1004 | 2441 | 16000 | 2 | 64000 |
| | | | | | | | | 58 | 21,43,704 |

**அட்டவணை எண். 3**

**பணி நீட்டிப்பு விவரம்**

| | |
|---|---|
| Total Contract Value | ரூ. 1,28,62,224 |
| 25% of Contract value | ரூ. 32,15,556 |
| Extension work value | ரூ. 21,43,704 |

ஒப்பந்த மதிப்பிற்கான 25% தொகை ரூ.32,15,556/-க்கு பணி நீட்டிப்பு தொகை ரூ.21,43,704/-யானது (-) 33.3% குறைவாக உள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையில் செயல்பட்டு வரும் இரண்டாண்டு உதவி செவிலியர் பட்டயபடிப்பு பயிற்சிக்கு தேவையான முதல்வர் மற்றும் இதர பணியாளர்கள் மற்றும் மருத்துவமனை பணிகளுக்கு தேவையான இதர மருத்துவ சார் பணியாளர்கள் (Para Medical Staff) ஒப்பந்த அடிப்படையில் M/s. Janishree Corporate Services Pvt ltd நிறுவனத்தின் மூலம் 15.05.2023 முதல் 14.05.2024 வரை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டது. இந்த பணியாணையினை 15.05.2024 முதல் 14.07.2024 வரை 2 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்தமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
2. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.21,43,704/- (ரூபாய் இருபத்தி ஒரு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து எழுநூற்றி நான்கு மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
3. மேற்கண்ட நிறுவனத்தினர் ஏற்கனவே பிணை வைப்பு தொகை செலுத்தியுள்ள நிலையில், பணி நீட்டிப்பிற்கு பிணை வைப்புத்தொகை பெறுவதில் இருந்து விலக்களிக்கவும் மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-35-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.40/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.64/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******

**B.R.R.C.No.B4/6052/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *01.12.2023* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:177/2024** **பொருள் எண்.69**

**Greater Chennai Corporation - Bus Route Roads Department - Sports Development Authority of Tamil Nadu - Hosting of the Indian Racing Festival of the Chennai Formula Racing Circuit in Chennai - Estimate prepared - Administration Sanction obtained - Tenders settled - Work under progress – Additional works requested by SDAT & Consultant Racing Promotions Private Limited – To be executed – Additional estimates prepared – To accord Administrative sanction and to ratify action taken to call short E- tender in anticipation approval – For approval**

As per the G.O. (Ms) No.70, dated 06.10.2023, the Hosting of the Indian Racing Festival of the Chennai Formula Racing Circuit in Chennai is to be held in December 2023, Sports Development Authority of TamilNadu (SDAT) is conducting the India's first on street Night Formula 4 racing event namely "Chennai Formula racing circuit"

The race is being conducted from Island roads through Flag Staff road Anna Salai (Jn of Flag Staff road to Swamy Sivananda Salai), Swamy Sivananda Salai, Kamaraj Salai (from Napiar Bridge to Island ground).

Anna Salai is maintained by Highways Department. Highways Secretary has given NOC to execute the work at Anna Salai, during the meeting held at Secretariat on 02.11 2023.

Member Secretary, SDAT letter dated 19.06.2023 and 31.07.2023, has given their requirement from Greater Chennai Corporation.

1) Profile Correction
2) BT overlaying by milling existing road for 3.5KM length of Circuit as per FIA Guidelines.
3) Utility pipes crossing for electrical and OFC Cables few locations in track
4) Median Removal and Traffic signals as per demolition plans.
5) Track development as per design inside the island ground, pavement or Surface course (CC/BT) for pit garages, paddock, Pits for services Media centre and Accessible area to VIP lounges (TTDC area).

Based on the requirements of SDAT tentative estimates have been prepared to execute the work as follows:

**Table 1:**

| S.No | Name of the Road / Location | Nature of Work | Estimate 2023 - 24 |
|---|---|---|---|
| 1 | Nappier Bridge (From War Memorial to Swami SivananthaSalai Junction) (Ch 650-1375M) in Zone 9 | Relaying the Road with DBM and BC after cold milling by paver finisher with traffic improvement work for forming formula 4 race track | 14400000.00 |
| 2 | Swamy Sivananda Salai (From the junction of napier Bridge Road tonJn of Anna Salai) (Ch 1375 to 2550) in Zone 5 & 9 | | 16500000.00 |
| 3 | Anna Salai (From junction of Swami Sivanatha Salai to Junction of Flag Staff Road) in (Ch 2550- 3705) in Zone 9 | | 19200000.00 |
| 4 | Flag Staff Road and Island Ground in Zone 5 | | 23900000.00 |
| | | Total | 74000000.00 |

In the G.O (Ms) No.70, dated 06.10.2023, it is stated that an amount of Rs.6.00 cr to be meet out from the GCC funds for carrying out the works related to the road formation and other activities with respect to the racing circuit route. Whereas the estimates prepared for an amount of Rs. 7.40 cr based on the site requirements and for which Administrative sanction has been was obtained from the Council resolution no.612/2023 dated 29.11.2023. The tenders for executing the work is called and the work order is issued to the contractors and the works are being carried out for tendered out amount and they are at different stages.

Member Secretary, SDAT letter dated 24.11.2023, has given their requirement as for Racing track specification requirements the additional work to be carried out for the Track Development. After meeting held on 24.11.2023 by High level Co ordination Committee meeting letter from Member Secretary, SDAT requirement as follows.

1. As per SDAT track conditions, the requirement longitudinal slope and camber slope to provided as maximum 2%. But in GCC the slope is between 2.50 to 3%. Hence the profile correction is required.
2. As per the SDAT and Racing Promotion Pvt Ltd, the track to be formed with higher graded bitumen grade of Polymer modified bitumen (PMB -70) grade instead of VG-30 grade bitumen.
3. Centre median and Footpath to be removed to maintain the even width and necessary HDPE pipe to be provided for EB cable and pipe line.
4. Adam Bridge to be reworked.

As per the SDAT and Racing Promotion Pvt Ltd requirement, RPPL gave a design report and Hyderabad test report they insisted to relay the racing track work with Polymer Modified Bitumen (PMB)-70 grade bitumen instead of VG-30 grade bitumen for laying 40mm thick bituminous concrete in the racing circuit route. The PMB-70 grade bitumen is typically used on road pavements, particularly those that are intended to with stand heavy-duty traffic and extreme weather conditions. The polymer additives enhance the binders elastic properties, reducing the risk of cracking and rutting. This improved flexibility ensures smoother, safer & more comfortable driving experiences. The roads constructed with PMB demonstrate superior resistance to rutting and fatigue. Hence PMB-70 grade bitumen may be used instead of VG-30 grade bitumen for laying bituminous concrete 40mm thick in the racing circuit route. The cost of laying Bituminous concrete (BC) using VG-30 grade bitumen is Rs.471.81 per Sqm and the cost of BC using PMB-70 grade bitumen works out to Rs.593.80 per Sqm. Hence the estimate cost drastically increased from the sanctioned amount of Rs.7.40 cr.

At this juncture, the Addl.Chief Secretary, Youth Welfare and Sports Development and Addl.Chief Secretary/Commissioner, GCC along with Member Secretary, SDAT, GCC & Racing Promotions Private Limited (RPPL) Officials inspected the racing circuit route on 24.11.2023. After the inspection the Member Secretary, SDAT and RPPL have requested to carryout additional works for pit garages, Snatch gap, Fire service, First aid center, food court, back office, media gallery, driver lounge, gold & platinum paddock required along the racing circuit route in order to fulfill the requirements and submitted

revised alignment drawing with the required details on the above for conducting the event successfully.

The lists of additional works to be executed along the racing circuit route are given below:

**Table 2:**

| Sl.no | Name of the location | Description of work executed in addition to original estimate |
|---|---|---|
| 1 | Flag staff road | Milling and laying of DBM & BC to a length of 300m.<br>Providing GSB, WMM,DBM & BC to a length of 20m foundation work inside island ground.<br>Providing HDPE pipe 200mm dia inside island ground.<br>Providing precast drain and EB cable laying inside island ground.<br>Providing Saucer drain inside island ground. |
| 2 | Anna salai (From Flag staff road to Swamy Sivanantha salai Juntion) | Dismantling of centre median and footpath.<br>Providing M40 grade concrete in centre median and footpath removed locations.<br>Providing HDPE pipe 200mm dia additionally as per the revised drawing.<br>Providing Dense Bituminous Macadam (DBM) for profile correction. |
| 3 | Swamy Sivanantha salai | Dismantling of footpath to a length of 600m and widening with GSB,WMM &DBM.<br>Dismantling of centre median to a length of 520m including removal of Stainless steel handrail and proving M40 grade concrete.<br>Providing HDPE pipe 200mm dia in 3 locations additionally as per the revised drawing.<br>Providing Dense Bituminous Macadam (DBM) for profile correction.<br>Adam bridge (bifurcated one) connecting deck slab concreting work.<br>Snatch gap locations (3 nos)- laying BC with the same level of track. |
| 4 | Island ground, Kamarajar salai & Neppiar bridge | Interlocking block flooring at Island ground entrance.<br>Demolition of footpath at Kamarajar salai in two locations.<br>Demolition of Island compound wall.<br>Removal of centre median at kamarajar salai & providing M40 grade concrete.<br>Providing HDPE pipe 100mm dia for dewatering of stagnated water near TTDC hotel inside Island ground,.<br>Laying Wet Mix Macadam 100m X 30m of size for gallery.<br>Leveling work at concert area and control room area.<br>Providing Dense Bituminous Macadam (DBM) for profile correction. |

For carrying out the above requirements, additional estimates have been prepared based on the requirement of racing circuit with the chainages tabulated below:

**Table 3:**

| S.No | Name of the Road / Location | | Additional Estimate amount in Rs. |
|---|---|---|---|
| 1 | Flag Staff Road and Island Ground in Zone 5 | BRR.C.No.B4/6052/2023-1<br>Relaying the road with DBM and BC with PMB70, after cold milling by paver finisher for Formula 4 Race track at Flag Staff Road at (Muthu Samy Salai Junction to Ch0-150m) in Dn-60,Zone - 5. | 45,00,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 1 | Flag Staff Road and Island Ground in Zone 5 | BRR.C.No.B4/6052/2023-2<br>Relaying the road with DBM and BC with PMB70, after cold milling by paver finisher for Formula 4 Race track at Flag Staff Road (Ch150m to Ch 300m) in Dn-60,Zone - 5. | 45,00,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-3<br>Formation of Island Ground (20m) GSB,WMM,DBM and BC with PMB70, paver finisher & Leveling Work with Formula 4 Race track at & Island Ground in Dn-60, Zone - 5. | 42,00,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-4<br>Additional Improvement work for Pipe Line Work, Chamber Work, Concrete Work, EB Cable Work and Preacast Drain Work for Formula 4 Race track at Island Ground in Dn-60, Zone - 5. | 47,80,000.00 |
| 2 | Anna Salai (From junction of Swami Sivanatha Salai to Junction of flag Staff Road) in (Ch 2550 – 3705) in Zone 9 | BRR.C.No.B4/6052/2023-5<br>Dismantling and Duct Pipe Laying Work at Formula 4 Race track at Anna Salai ( From junction of Swami Sivanantha Salai to Junction of Flag Staff Road) in Dn-60&114 , Zone - 5&9. | 29,52,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-6<br>Relaying the road with DBM and BC with PMB70,after cold milling by paver finisher with traffic improvement work for Formula 4 Race track at Anna Salai ( From junction of Swami Sivanantha Salai to Junction of Flag Staff Road) in Dn-60 &114 , Zone - 5&9 CH - 2550 to CH - 2930 (Reach 1) | 46,11,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-7<br>Relaying the road with DBM and BC with PMB70, by paver finisher with traffic improvement work for Formula 4 Race track at Anna Salai ( From junction of Swami Sivanantha Salai to Junction of Flag Staff Road) in Dn-60&114 , Zone - 5&9 CH - 2930 to CH -3310 (Reach-2) | 43,83,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-8<br>Relaying the road with DBM and BC with PMB70, by paver finisher with traffic improvement work for Formula 4 Race track at Anna Salai ( From junction of Swami Sivanantha Salai to Junction of Flag Staff Road) in Dn-60&114 , Zone - 5&9. CH - 3310 to CH - 3705 (Reach-3) | 43,83,000.00 |
| 3 | Samy Sivananda Salai( From the junction of Napier Bridge Road to Jn of Anna Salai) (Ch 1375 to 2550) in Zone 5 & 9 | BRR.C.No.B4/6052/2023-9<br>Additional Improvement work for Pipe Line Work, Chamber Work, Concrete Work for Formula4 Race track at Swami sivanantha salai in Dn-59&114, Zone - 5&9. | 48,97,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-10<br>Dismantling of Centre median and Relaying of DBM work after cold milling by paver finisher for Formula 4 Race track at Swami sivanantha salai in Dn-59 & 114, Zone - 5&9. (Ch -1376 - 1776M) | 48,67,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-11<br>Relaying the road with DBM & BC with PMB70,by paver finisher for Formula 4 Race track at Swami sivanantha salai in Dn-59&114, Zone - 5&9. (Ch -1777M -2176M) | 48,85,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | Samy Sivananda Salai( From the junction of Napier Bridge Road to Jn of Anna Salai) (Ch 1375 to 2550) in Zone 5 & 9 | BRR.C.No.B4/6052/2023-12<br>Relaying the road with DBM & BC with PMB70, by paver finisher for Formula 4 Race track at Swami sivanantha salai in Dn-59 & 114, Zone - 5&9. (Ch -2177M -2550M) | 48,90,000.00 |
| 4 | Napier Bridge (Kamarajar Salai) ( Fr on War Memorial to Swami Sivanantha Salai Junction) (Ch 650 - 1375m) in Zone 9 | BRR.C.No.B4/6052/2023-13<br>Relaying the road with DBM and profile correction for Formula 4 Race track near shed area at island ground in Dn-60, Zone - 5 | 48,60,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-14<br>Formation of track with GSB,WMM for Formula 4 Race track at island ground entrance in Dn-60, Zone - 5. | 47,70,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-15<br>Relaying the road with BC with PMB70, and laying conduit pipes at island ground for Formula 4 Race track at Kamarajar salai in Dn-60, Zone - 5. | 47,20,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-16<br>Relaying the road with BC with PMB70, for Formula 4 Race track at Kamarajar salai (Ch: 650 to Ch 1375) Reach -1 in Dn-60,Zone - 5. | 48,30,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-17<br>Relaying with DBM for profile correction at kamarajar salai for Formula 4 Race track in Dn-60 , Zone – 5 | 47,80,000.00 |
| | | BRR.C.No.B4/6052/2023-18<br>Providing interlocking paver blocks with necessary improvements at island ground for Formula 4 Race track in Dn-60, Zone - 5. | 47,00,000.00 |

**Table 4:**

The race is proposed to be held in Dec 9th and 10th 2023. The site was requested to be handed over to the Racing promotion Pvt Ltd on or before 02.12.2023 to enable inspection and certification by the Formula F4 racing team for test drive and correction. And also give time for arranging the racing circuit with other final safety mandatory arrangements. Hence, considering the emergency nature of work and very short duration available for execution the additional estimates have been prepared. Additional estimate are prepared dividing the works chainage – wise and categories – wise foe each 4 reaches (as mentioned in table 2) The 18 Package details are explained in table 3.

The total estimate amount for carrying out the additional works as per the table shown above is Rs. 8.25 cr. Due to the additional requirements the total project cost for executing all the works related to racing circuit route works out to Rs. 15.65 cr. This is Rs.9.65Cr more than the allotted amount of Rs 6.00Cr wide G.O (Ms) No.70 dated 06.10.2023. Detailed estimate enclosed in Annexure-. Mojar rate different is due to the BT laing by PMB 70 instead of VG 30.

| Detials of Additional Estimated required for Formula F4 Race circuit | | | | | |
|---|---|---|---|---|---|
| **Sl.no** | **Name of the road** | **Estimated Quantity (a)** | **Additional estimated quantity (Estimated Quantity+ Additional Quantity) (b)** | **Difference in excess (c ) (a-b)** | **Estimate Amount (d)** |
| 1 | Flag staffroad | 19535015.52 | 39037474.25 | 19502458.73 | 17980000 |
| 2 | Anna salai | 19446261.67 | 34324339.27 | 14991889.44 | 16329000 |
| 3 | Swamy Sivanadha salai | 13480233.82 | 33637733.76 | 18696352.7 | 19539000 |
| 4 | Kamaraj salai | 11776322.12 | 31301832.16 | 19525510.04 | 28660000 |
| **Total** | | **64237833.12** | **138301379.4** | **72716210.91** | **82508000** |

Hence the additional tenders may be called for each of the 18 work stated in the above table 3. In view of urgency, the above mentioned works may be carried out as per provision of section 16(d) TNTIT Act and Section 20 (2) TNTIT Rules 2000 and E-Tender may be called work order may be issued. Ratification of the council may be obtained for this additional work and also for seeking additional allocation of Rs.9.65Cr for this work.

**Hence**,

1. To accord Administration Sanction for Rs.8,25,00000/- for the additional work to be carried out fot the Formula 4 race circuit as mentioned in the above table.
2. To ratify action taken to call for short E tender for the above works in table 3 as per provision of 16 [d] TNTIT act
3. To allocate Rs.15.65 cr under Budget head code 412400801 (Black topped – BRR) to Bus Route Roads department so as to settle the payment to the contractors concerned.
4. To send a proposal to Member Secretary SDAT, to get additional funding G.O. for a amount of Rs. 8.25 Crores.

Sl.No. 1to 4 above, Council approval is requested through Standing Committee (Works) and Standing Committee (Taxation and Finance).

“19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 35/2024, நாள். 19.06.2024 ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.52/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**பூ.துந.க.எண்.பி2/408/2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:178/2024** **பொருள் எண்.70**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா மற்றும் சென்னை நதிகள் சீரமைப்பு திட்டங்கள் துறை - மண்டலம் - 9 மத்திய பக்கிங்காம் கால்வாய் *(Central Buckingham Canal* ஒட்டியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோர பகுதியில் 6 இடங்களில் புதியதாக பூங்காக்கள் மற்றும் அழகுப்படுத்தும் பணி மேற்கொள்ள மூலதன நிதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50,00,000/- க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -9க்குட்பட்ட மத்திய பக்கிங்காம் கால்வாயை *(Central Buckingham Canal)* ஒட்டியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி'க்குட்பட்ட பகுதியில் 6 இடங்களில் புதியதாக சாலையோர பூங்காக்கள் அமைத்து அழகுபடுத்தும் பணி மற்றும் இரண்டாண்டுகள் (2 *Years)* பராமரிக்கும் பணி மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமை செயலர் / உறுப்பினர் செயலர் / *CRRT* கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

மத்திய பக்கிங்காம் கால்வாய், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பூங்காக்கள் மற்றும் சாலையோர அழகுபடுத்தும் பணியினை மேற்கொள்ள இதற்கான மதிப்பீட்டினை கட்டிடக்கலை கலந்தாளுநர் மூலம் வடிவமைப்புடன் கூடிய விரிவான மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்ய, தமிழ்நாடு வாட்டர் இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனி *(TWIC)* லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் மத்திய பக்கிங்காம் கால்வாய் ஒட்டியுள்ள சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதியதாக 6 இடங்களில் பூங்காக்கள் மற்றும் அழகுபடுத்தும் பணிக்கான, விரிவான மதிப்பீடு அறிக்கையின் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு *2023* - 2024 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.4,50,00,000/-க்கு (ரூபாய் நான்கு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்.

| வ. எண் | பணிமேற்கொள்ளப்படும்இடம் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நாவலர்நகர்– லாக்நகர் | 61,87,425.40 |
| 2 | வாலாஜாசாலையிலிருந்துபாரதிசாலை | 1,21,96,467.70 |
| 3 | பாலாண்டியம்மன்கோயில்தெரு | 21,64,360.60 |
| 4 | சிங்காரவேலர்பாலத்திலிருந்து – கைலாசபுரம்பாலம் | 56,08,911.70 |
| 5 | பக்கிங்காம்கால்வாய்தெரு முண்டக்கண்ணிஅம்மன்பாலம் | 21,56,384.80 |
| 6 | கனால்பேங்க்ரோடு, மைலாப்பூர்பாலம் மந்தைவெளிபாலம் | 50,19,513.80 |
| | **பணியின்மதிப்புரூ.*(A)*** | **3,33,33,064.00** |
| | சரக்குமற்றும்சேவைவரி 18% | 59,99,951.52 |
| | மேற்பார்வைமற்றும்கண்காணிப்பு கட்டணங்கள் 10% | 33,33,306.40 |
| | சிறுபணிமேற்பார்வைசெலவினம் 2.5% | 8,33,326.60 |
| | தமிழ்நாடுதொழிலாளர்நலசேமநலநிதி 1% | 3,33,330.64 |

| | | |
|---|---|---|
| | இதரசெலவினம் 2.5% | 8,33,690.23 |
| | தரக்கட்டுப்பாட்டுசெலவினம் 1% | 3,33,330.64 |
| | | **1,16,66,936.03** |
| | **பணியின் மொத்தமதிப்பு ரூ.** | **4,50,00,000.00** |

எனவே, மண்டலம் -9, மத்திய பக்கிங்காம் கால்வாய் *(Central Buckingham Canal)* ஒட்டியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதியதாக 6 இடங்களில் பூங்காக்கள், அழகு படுத்தும் பணி மற்றும் இரண்டு ஆண்டுகள் பராமரிப்புக்கு மேற்கொள்ள *2023* – 2024 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4,50,00,000/- க்கு (ரூபாய் நான்கு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிலைக்குழு (பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 41/2024, நாள். 19.06.2024 ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.53/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.பி1/0245/2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:179/2024** **பொருள் எண்.71**

**ஒப்பம் - பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம்-09, கோட்டம்-125, லூப் சாலையில் புதிய மீன் அங்காடி கட்டும் பணியில் கூடுதல் பணிகளான Electrical works, Civil works (Paver Block & Granite Flooring) Compound wall, Security Room & Maintenance Room மற்றும் இதர பணிகளுக்காக திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் திருவாளர்.Abbundu Interiors and Constructions Private Limited, அவர்களுக்கு ஒப்பத்தினை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-09, கோட்டம்-125, லூப் சாலையில் புதிய மீன் அங்காடி கட்டும் பணியில் கூடுதல் பணிகளான Electrical works, C0ivil works (Paver Block & Granite Flooring) Compound wall, Security Room & Maintenance Room மற்றும் இதர பணியினை ரூ.4,96,70,000.00 மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள நிலைக்குழு வரி விதிப்பு (ம) நிதி தீர்மான எண்.14/2024, நாள்.29.01.2024ன்படி நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரப்பட்டது. விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-09 கோட்டம்-125, லூப் சாலையில் புதிய மீன் அங்காடி கட்டும் பணியில் கூடுதல் பணிகளான Electrical works, Civil works (Paver Block & Granite Flooring) Compound wall, Security Room & Maintenance Room மற்றும் இதர பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | நிலைக்குழு வரி விதிப்பு (ம) நிதி தீர்மான எண்.14/2024, நாள்.29.01.2024 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டது | **2023 -2024** ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ.4,01,39,422.23 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 72,25,096.00 |
| | (இ) தரக்கட்டுப்பாடு (1.0%) | ரூ. 4,01,394.22 |
| | (ஈ) த.நா.க.தொ.ந.வா. (1.0%) | ரூ. 4,01,394.22 |
| | (உ) எதிர்பாரா செலவு (2.5%) | ரூ. 10,02,693.33 |
| | (ஊ) மின் கட்டணம் | ரூ. 5,00,000.00 |
| | மொத்தம் | ரூ 4,96,70,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | 1. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர் , நாள் : 08.02.2024<br>2. தி இந்து நாள்: 03.02.2024<br>3. தினச் செய்தி நாள்: 03.02.2024 |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 12.02.2024 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதன நிதி |

| | | |
|---|---|---|
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | மூன்று ஒப்பம் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது |
| 11 | ஒப்பந்ததாரர் தகுதி வகுப்பு சான்று இணைத்துள்ளாரா-? | ஆம் |

மேற்கண்ட பணிக்காக தொழிற்நுட்ப ஒப்பம் 13.02.2024 அன்று திறக்கப்பட்டு மூன்று ஒப்பந்ததாரர்களில் *M/s. Meet Construction Pvt Ltd* அவர்கள் தொழிற்நுட்ப தகுதிப் பெறவில்லை, மற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர் என்று அறியப்பட்டது. ஆதலால் நிதி ஏல அட்டை (*Financial Bid*) *15.02.2024* அன்று திறக்கப்பட்டது.

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | **2023-2024** பணியின் அலுவலக மதிப்பு (*Rounded Off*) (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | **2023-2024**ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி |
|---|---|---|---|---|
| 1 | Abbundu Interiors and Constructions Private Limited | 4,01,40,000.00 | 4,27,49,100.00 | (+) 6.50 % அதிகம் |
| 2. | Andal Associates Private Limited | 4,01,40,000.00 | 4,35,51,900.00 | (+) 8.50 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர்.*Abbundu Interiors and Constructions Private Limited*, அவர்கள் *L1* ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | விலைக்குறைப்பு கோரப்பட்ட விவரம் | *L1* ஒப்பந்ததாரர் *2023-2024*ஆம் ஆண்டு *SOR*ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| *1.* | முதற்கட்ட விலை குறைப்பு | ரூ.*4,25,08,260/-* (+) *5.90%* அதிகம் |
| *2.* | இரண்டாம் கட்ட விலை குறைப்பு | ரூ.*4,22,67,420/-* (+) *5.30%* அதிகம் |
| *3.* | மூன்றாம் கட்ட விலை குறைப்பு | ரூ.*4,21,26,930/-* (+) *4.95%* அதிகம் |

மேற்படி மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு *2023-2024* ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)*4.95%*அதிகம், ஒப்பத் தொகை ரூ.*4,21,26,930.00* மற்றும் *18* சதவீத சரக்கு மற்றும் சேவை வரி ரூ.*75,82,847.40*ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.*4,97,09,777/-*க்கு ஒப்பம் வழங்க ஆணை வேண்டப்பட்டதில் இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் *21.02.2024* நாளிட்ட குறிப்பில் *"Renegotiate with L1 and Put up"* என அறிவுறுத்தியதை தொடர்ந்து கீழ்கண்டவாறு விலைகுறைப்பு பெறப்பட்டது.

| வ. எண் | விலைக்குறைப்பு கோரப்பட்ட விவரம் | *L1* ஒப்பந்ததாரர் *2023-2024*ஆம் ஆண்டு *SOR*-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| *1.* | நான்காம் கட்ட விலை குறைப்பு | ரூ.*4,20,86,790/-* (+) *4.85%* அதிகம் |

மேற்குறிப்பிட்டுள்ள பணியிணை, பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.4,96,70,000/-க்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பத்திற்கு 2023-2024 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.85% அதிகத்தில் ஒப்பப்புள்ளி உள்ளதால் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.5,19,67,894/-க்கு கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 07.03.2024 நாளிட்ட ஆணையின்படி திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பத்தினை திருவாளர்.Abbundu Interiors and Constructions Private Limited, அவர்களுக்கு வழங்கவும் மற்றும் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மேற்காணும் பணிக்கான பணியேற்பு கடிதத்தினை ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி கோப்பு அனுப்பப்பட்டது. மேலும் இப்பணியினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டி உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருந்ததால் அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்பந்ததாரருக்கு பணியேற்பு கடிதம் வழங்கப்பட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு மேயர் அவர்களின் 08.03.2024 நாளிட்ட குறிப்பில், மேற்கண்டுள்ள பணிக்கு மன்றத்தின் ஒப்புதல் பெற அடுத்த மாமன்ற கூட்டம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர் கோப்பினை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு 2023-2024 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி (+)4.85% அதிகத்தில் ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் கூடுதல் செலவினத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ) | தற்போதைய ஒப்பத்தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | (அ) கட்டுமான பணி செலவு | 4,01,39,422.23 | 4,20,86,790.00 |
| 2. | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | 72,25,096.00 | 75,75,622.20 |
| 3 | (இ) தரக்கட்டுப்பாடு (1.0%) | 4,01,394.22 | 4,01,394.22 |
| 4 | (ஈ) த.நா.க.தொ.ந.வா. (1.0%) | 4,01,394.22 | 4,01,394.22 |
| 5 | (உ) எதிர்பாரா செலவு (2.5%) | 10,02,693.33 | 10,02,693.33 |
| 6 | (ஊ) மின் கட்டணம் | 5,00,000.00 | 5,00,000.00 |
| | மொத்தம் | 4,96,70,000.00 | 5,19,67,894.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு 2023-2024 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.85% அதிகத்தில் ஒப்பப்புள்ளி உள்ளதால் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.5,19,67,894/-க்கு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் திருவாளர்.Abbundu Interiors and Constructions Private Limited, அவர்களுக்கு ஒப்புத்தினை வழங்கியதற்க்கு பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-09, கோட்டம்-125, லூப் சாலையில் புதியமீன் அங்காடி கட்டும் பணியில் கூடுதல் பணிகளான Electrical works, Civil works (Paver Block & Granite Flooring) Compound wall, Security Room & Maintenance Room மற்றும் இதர பணிகளுக்காக 2023-2024 ஆம் ஆண்டின்அலுவலக விலையின் படி பணிமதிப்பு தொகையைவிட (+)4.85% அதிகம் ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மதிப்பீட்டுத்தொகை ரூ.5,19,67,894/-க்கு திருத்திய நிர்வாக அனுமதியும்,

இப்பணிக்கான செலவீனத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அனுமதியும்,

2. மேற்காணும் பணிக்காக 2023-2024 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி, பணிமதிப்பு தொகையைவிட (+)4.85% அதிகம் ஒப்பத்தொகை ரூ.4,20,86,790.00 மற்றும் 18 சதவீத சரக்கு மற்றும் சேவைவரி ரூ.75,75,622.20ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,96,62,412/-க்கு (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூற்று பன்னிரெண்டு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர்.Abbundu Interiors and Constructions Private Limited, அவர்களுக்கு வழங்கியதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 42/2024, நாள். 19.06.2024 ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண் .54/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பின்னேற்பு அனுமதி அளித்துமன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ .6.ந.க.எண்.இ1/508/2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.06.2024 நாளிட்டகுறிப்பு**

**தீர்மான எண்:180/2024** **பொருள் எண்.72**

**ஒப்பம் – பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-70, கபிலர் தெருவில் புதியதாக நடுநிலைப்பள்ளி கட்டிடம் (G+2) கட்டும் பணிக்காக இரண்டு உறை முறையில் (Two Cover System) மின்னனு திறந்தவெளி ஒப்பம் (Online Open e-Tender) கோரப்பட்டு ஒப்பங்கள் பெறப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.Yogalakshmi Construction அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-70, கபிலர் தெருவில் புதியதாக நடுநிலைப்பள்ளி கட்டிடம் (G+2) கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | மன்றத்தின் தீர்மான எண். 73/2024, நாள்.22.02.2024 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-6 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2023-24ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை: | **ரூ.4,63,00,000.00** |
| அ) | பணிசெலவீனம் | ரூ. 3,70,53,711.00 |
| ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி1 8% | ரூ. 66,69,668.00 |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி %1 | ரூ. 3,70,537.00 |
| ஈ) | ஆலோசனை கட்டணம் %2.5 | ரூ. 9,26,342.00 |
| உ) | தரக்கட்டுபாட்டு செலவு 1% | ரூ. 3,70,537.00 |
| ஊ) | மற்ற எதிர்பாரா செலவு %2.5 | ரூ. 8,70,500.00 |
| எ) | மண் பரிசோதனை செலவு | ரூ. 38,705.00 |
| | **மொத்தம்** | **ரூ.4,63,00,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. தமிழ் நாளிதழ் - இந்து தமிழ் திசை நாள்.14.02.2023<br>2. ஆங்கிலம் நாளிதழ் - Deccan Chronicle நாள்.14.02.2023<br>3.பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள்.15.02.2023, |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 05.03.2023 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | ஆம், கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை நாள்.09.02.2024 |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | 3 ஒப்பங்கள் பெறப்பட்டது. |
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம். 13.03.2024 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) | **ரூ. 3,84,43,225.16** ஆகும், இத்தொகை 2023-2024ம் ஆண்டு அலுவலக விலையின்படி (+) 3.75 % கூடுதல் ஆகும். |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவு | வகுப்பு-1 |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம் | 20-28-00 / 412-40-04-02 ( Middle School) |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 3 மாதங்கள் |
| 15 | பணி காலம் | 24 மாதங்கள். |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-70, கபிலர் தெருவில் புதியதாக நடுநிலைப்பள்ளி கட்டிடம் (G+2) கட்டும் பணிக்கு 2023-24ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் படி ரூ.4,63,00,000/-ம் மதிப்பீட்டிற்கு கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின்13.02.2024 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு மன்ற தீர்மான எண்.73/2024, நாள்.22.02.2024 மூலம் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் மண்டலம்-6ன் மூலம் "**இரண்டு உறை முறையில்**" குறுகிய கால ஒப்பங்கள் கோரி, மண்டலம்-6ன் மூலம் "**ஒப்பங்கள் முடிவு செய்ய**" கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையில் "**இரண்டு உறை முறைகள்**" என்ற முறையில் ஒப்பம் கோரப்பட்டு இறுதி நாள்.01.03.2024 என்ற ஒப்ப அறிவிப்பு தமிழ் நாளிதழ் " இந்து தமிழ் திசை" மற்றும் ஆங்கிலம் நாளிதழ்" Deccan Chronicle" 14.02.2024 நாளிட்ட நாளிதழில், 15.02.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்டது.

இதனிடையே நிர்வாக நலன் கருதி ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய நாள்.29.02.2024ல் இருந்து 05.03.2024 என மாற்றம் செய்யப்பட்டும், ஒப்பம் திறக்கப்படும் நாள் 01.03.2024ல் இருந்து 06.03.2024 எனவும் திருத்தம் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஒப்ப திறப்பு நாளான 06.03.2024 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டதில் திருவாளர்கள்.Yogalakshmi Construction, திருவாளர்கள்.Thomas Iyadurai Infrastructure Pvt Ltd மற்றும் திருவாளர்கள். PTM Projects Pvt Ltd ஆகிய 3 ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் பெறப்பட்டன.

மேலும், பெறப்பட்ட 3 ஒப்பங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அவற்றில் திருவாளர்கள்.PTM Projects Pvt Ltd அவர்கள் ஒப்பத்தின் போது கோரப்பட்ட சில தொழில்நுட்ப ஆவணங்கள் கணினி மூலம் சமர்ப்பிக்காத நிலையில் அவரது ஒப்பம் மேற்கொண்டு பரிசீலிக்க இயலாத நிலை ஏற்பட்டு, மீதமுள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் மட்டுமே நிதி ஆவணம் திறக்க 08.03.2024 அன்று ஒப்புதல் பெறப்பட்டு 13.03.2024 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர்கள் | பணிக்கு அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை | 2023-24ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ஒப்ப சதவீதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள்.Yogalakshmi Construction, | ரூ.3,70,53,711.00 | ரூ.3,87,24,833.37 | (+) 4.51 % அதிகம் |
| 2. | திருவாளர்கள்.Thomas Iyadurai Infrastructure Pvt Ltd | ரூ.3,70,53,711.00 | ரூ.4,00,18,007.00 | (+) 8.00 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு திறக்கப்பட்ட நிதி ஆவணத்தில் திருவாளர்கள்.*Yogalakshmi Construction* அவர்கள் குறைந்த ஒப்ப சதவீதம் அளித்துள்ளார். அவர்கள் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.3,87,24,833.37 ஆகும். இத்தொகை 2023-24 ஆம் ஆண்டு அலுவலக விலைபட்டியல்படி (+)4.51% கூடுதலாகும்.

குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.*Yogalakshmi Construction*, அவர்களிடம், 13.03.2024 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் விலைக் குறைப்பு செய்ய கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.*Yogalakshmi Construction*, அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதத்தில் இருந்து குறைத்து (+) 3.75 சதவீதத்தில் பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து 13.03.2024 நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்.

மேற்கண்ட ஒப்ப விவரங்களின் அடிப்படையில் மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-70, கபிலர் தெருவில் புதியதாக நடுநிலைப்பள்ளி கட்டிடம் *(G+2)* கட்டும் பணிக்கான ஒப்பத்திற்கு அலுவலக விலையில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.*Yogalakshmi Construction* அவர்கள் அளித்த ஒப்பத்தொகையான ரூ.3,84,43,225.16 (+)3.75% கூடுதல் மற்றும் அதற்கான சரக்கு மற்றும் சேவை வரி *(GST 18%)* ரூ.69,19,780.53/-ம் சேர்த்து மொத்தம் ரூ.4,53,63,006/-ற்கு (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்தி மூன்று இலட்சத்து அறுபத்தி மூன்றாயிரத்தி ஆறு மட்டும்) திருவாளர்கள்.*Yogalakshmi Construction* அவர்களுக்கு ஒப்பத்தினை வழங்க நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> “19.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.44/2024, நாள். 19.06.2024 ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> “21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.55/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**இ.பொ.து.ம.செ.ப.நக. எண். சி1/ 177 / 2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:181/2024** **பொருள் எண்.73**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய வாகன பணிமனை - இரண்டாம் நிலை குப்பைகள், மண்டலம்-8 புளியந்தோப்பு குப்பை மாற்று நிலையத்திலிருந்து (TPF) கொடுங்கையூர் குப்பை மாற்று வளாகம் கொண்டு செல்வது - 365 நாட்களுக்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர்) உபயோகித்து ரூ.4,75,23,000/-க்கு வாடகை முறையில் பணி அமர்த்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வாகன பணிமனை, மண்டலம்- *8*க்கு உட்பட்ட தெருக்களில் இருந்து குப்பைகளை முதன்மையாக சேகரித்து, கனரக மற்றும் இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் கொண்டு புளியந்தோப்பு குப்பை மாற்று நிலையத்தில் *(TPF)* கொட்டப்படுகின்றது. மண்டலம்- *8* ன் தினசரி குப்பை சேகரிப்பு இலக்கு 470 மெட்ரிக்டன் ஆகும். அதில் *50* மெட்ரிக்டன் நெகிழி மற்றும் மறுசுழற்சி கழிவாகவும் தரம் பிரிக்கப்பட்டு பின்னர் 420 மெட்ரிக்டன் குப்பை புளியந்தோப்பு குப்பை மாற்று நிலையத்தில் கொட்டப்படுகிறது. குப்பைமாற்று வளாகத்தில் கொட்டப்படும் இந்த குப்பைகள் டாரஸ் வாகனங்களை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகின்றது. மேலும் குப்பை மாற்று வளாகத்திலிருந்து டாரஸ் குப்பைகளை ஏற்றுவதற்கும், குப்பைகளை ஒழுங்குபடுத்தி வைப்பதற்கும் ஹைட்ராலிக் எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மண்டலம் *8* லாரி நிலையத்தில் 4 எண்ணிக்கையிலான டாரஸ் வாகனங்களை கொண்டு மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு மூன்று வேளைகள் இயக்கப்பட்டு வந்தது. இவ்வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாகவும், மேலும் 2.5 இலட்சம் கி.மீ. தூரத்தை கடந்து, பராமரிக்க உகந்ததாக இல்லாததாலும் தமிழநாடு அரசு அரசாணை நிலை எண்.2275 உள்துறை (போக்குவரத்து-*E*), நாள்.10.10.1990 வழிகாட்டுதலின் படி தற்போது நிறுத்தப்பட்டுவிட்டன. இதன் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மண்டலம் | வாகன எண் | வாங்கிய வருடம் | வாகனத்தின் வயது | கொள்முதல் செலவு (ரூ.) | இதுவரை செலவு (ரூ.) | இதுவரை கிலோமீட்டர் ஓடியது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | TN22 CV 8957 | 18-Mar-12 | 10 Years 8 months | 18,51,475 | 37,06,519 | 2,72,632 |
| 2 | 8 | TN22 CV 4875 | 8-Feb-12 | 10 Years 9 months | 22,66,999 | 42,32,341 | 2,78,085 |
| 3 | 8 | TN22 CV 4871 | 8-Jan-12 | 10 Years 10 months | 22,66,999 | 31,24,592 | 2,86,295 |
| 4 | 8 | TN22 CV 4860 | 8-Feb-12 | 10 Years 9 months | 22,66,999 | 38,46,828 | 2,86,112 |

மேலும், மேற்குறிப்பிட்ட வாகனங்கள் குப்பை மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் சரியான சாலை மற்றும் வடிகால் அமைப்புகள் சீராக இல்லாத நிலையில் இயங்குவதால் வாகனங்களின் டயர்கள் மிகுந்த தேய்மானத்திற்கு உள்ளாகிறது. மேலும் மழைக்காலங்களில் வாகனங்களின் கியர்பாக்ஸ், கிளட்ச் அசெம்பிளி, *PTO* பம்ப், சஸ்பென்ஷன் அசெம்பிளிகள் போன்றவை விரைவில் பழுதடைகின்றது. இதன் காரணமாக, மேற்கண்ட வாகனங்களின் பழுது மற்றும் பராமரிப்புக்கான செலவினங்கள் அதிகம் ஏற்படுகின்றது.

தமிழ்நாடு அரசு அரசாணை நிலை எண்.2275 உள்துறை (போக்குவரத்து-*E*), நாள்.10.10.1990ன்படி, அரசுத் துறைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் வயது, வாகனம் ஓடும் கிலோமீட்டர்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சான்றுகளின் கீழ் லாரி போன்ற டீசல் வாகனங்கள் 10 ஆண்டுகள் அல்லது 2.5 லட்சம் கிலோமீட்டர்கள் நிறைவடைந்து இருந்தால்

(சாதாரண சாலை நிலைகளின் ஓட்டம்) அவ்வாகனங்களை கழிவு செய்யலாம் *(Condemnation)* என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதின் பேரில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் கழிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், குப்பை மாற்று நிலையத்தில் 24 மணி நேரமும் இயங்கும் எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி போன்ற உபகரணங்களும் 10 வருடங்களைக் கடந்து பணி செய்து கொண்டிருந்ததால் அவைகளும் அடிக்கடி பழுதடைந்து அவற்றை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு அதிகப்படியான செலவீனங்கள் ஏற்பட்டு குப்பைகள் அதிகம் தேக்கமடைந்து சுற்றுச் சூழல் மாசு ஏற்பட்டதையடுத்து அவைகளும் கழிவு செய்யப்பட்டு விட்டன.

மேற்கூறிய நிகழ்வுகளினால், மண்டலம்-*8* ன் குப்பை மாற்று நிலையத்தில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை பழைய வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு சரிவர கொண்டு செல்ல முடியாத நிலையில் குப்பை மாற்று நிலையத்தில் பெருமளவு குப்பை தேக்கமடைந்தது. அதனால் சுற்றுச்சூழல் பாதித்து அருகில் உள்ள பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். இந்தச் சூழ்நிலையை சமாளிக்க, புதிய டாரஸ் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொள்முதல் செய்ய மாநகராட்சிக்கு கீழ்கண்டவாறு பெரும் செலவீனம் ஆகுமென விரிவாக கணக்கிடப்பட்டது.

| வரிசை எண் | வாகனம் / உபகரணங்கள் வகை | தயாரிப்பு | தேவையான எண். | தற்போதைய சந்தை விலை சரக்கு மற்றும் சேவை வரி உட்பட | மொத்த செலவு |
|---|---|---|---|---|---|
| 1 | Double Axle HMV Taurus | Ashok Leyland | 5 | Rs. 48,60,000 | Rs.2,43,00,000/- |
| 2 | Hydraulic Excavator with back hoe | BEML | 1 | Rs. 71,40,000/- | Rs. 71,40,000/- |
| 3 | Bobcat Backhoe Loader B900 With Standard tyre – CEV Stage | JCB | 1 | Rs. 37,36,800/- | Rs. 37,36,800/- |
| | | | | Grand Total | Rs.3,51,76,800/- |

இந்நிலையில் ஒரு வருட காலத்திற்கு குப்பை மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு குப்பைகளை எடுத்து செல்ல ஒரு மெட்ரிக் டன் எடைக்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆகும் தோராயமான இயக்கச் செலவு ரூ.*332.64/-* (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) மற்றும் 2021 ஆம் வருட பருவகால பேரிடர் காலத்தில் இவ்வாறு பெருமளவு தேங்கிய குப்பையை அகற்ற தனியாருக்கு வாடகை முறையில் டிப்பர் வாகனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 175/- / மெட்ரிக்டன் (உபகரணங்கள் இல்லாமல்) மேலும், ஒரு எக்ஸ்கவேட்டர் வாகனத்திற்கு ஒரு ஷிப்டுக்கு (8 மணி நேரம்) ரூ. 1*2600/-* மற்றும் முன்பளு தூக்கி இயந்திரத்திற்கு ஒரு ஷிப்டுக்கு (8 மணி நேரம்) வாடகை ரூ. 60*80/-* (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக*)* என்ற முறையில் கணக்கிட்டபோது குப்பையை அகற்ற ஒரு மெட்ரிக்டன்னுக்கு ரூ. *255.68/-* (அல்லது) 256/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக*)* மட்டுமே ஆனதாக கணக்கிடப்பட்டது. இந்த விலை அன்றைய எரிபொருள் விலையில் கணக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஒரு வருடத்திற்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு எடுப்பதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியால் தொகை சேமிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய தரவுகளை கருத்தில் கொண்டு, மாநகராட்சி வாகனங்கள் மூலம் குப்பைகளை அகற்றுவதற்கு ஆகும் செலவு, தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி குப்பைகளை எடுக்க ஏற்படும் செலவை விட சுமார் *20.78*% அதிகம் என தெரியவந்ததையடுத்து தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு எடுப்பது மிகவும் சிக்கனமானது என்பதையும், கணிசமான அளவு பணத்தை மிச்சப்படுத்துவது மட்டுமின்றி, குப்பைமாற்று வளாகத்தில் எந்தத் தேக்கமும் இல்லாமல் குப்பைகளை அகற்ற முடியும் என்பதையும் மேற்கண்ட கணக்கீடுகள் தெளிவாகக் காட்டுகிறது. எரிபொருள் *(Diesel)*, மசகு எண்ணெய் *(Oil)* செலவு, வாகன உதிரி பாகங்கள், பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவுகள் போன்றவற்றில்

ஏற்படும் செலவீனத்தில் சேமிக்கவும் அதன்பின் குப்பை மாற்று நிலையத்தில் குப்பைகள் தேங்காமல் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கவும் முடியும் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டு மேற்பார்வை பொறியாளர்(இ) அவர்களின், 05.06.2023 நாளிட்ட பணி ஆணையின்படி தனியார் நிறுவனத்திற்கு 12.06.2023 முதல் 365 நாட்களுக்கு மண்டலம் – 8ன் குப்பை மாற்று நிலையத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு கண்காணித்ததில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. அதனடிப்படையில் மண்டலம்-8ன் குப்பை மாற்று நிலையத்திற்கு ஒரு மெட்ரிக்டன்னிற்கு ரூ. 302.08/-(சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) ஒரு வருட காலத்திற்கு தனியார் வாகனங்களை கொண்டு குப்பைகளை அகற்றலாம் என முடிவு செய்து அவ்வாறே மின்னணு ஒப்பம் கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி எந்தவித பிரச்சனையுமின்றி அன்றைய குப்பைகள் அன்றைக்கே அகற்றப்பட்டு குப்பை மாற்று வளாகம் தூய்மையாக பராமரிக்கப்பட்டது. மேலும் மேற்கூறிய ஒப்பம் கோரப்பட்ட நாள் முதல் தற்போது வரை எரிபொருள் உபயோகம் மிகவும் கணிசமாக குறைந்துள்ளது ஒப்பம் கோரப்பட்டதிலும் (-31.29%) கணிசமான தொகை சேமிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆணை 16.05.2024 அன்று முடிவுற்றது.

புதிய பணி ஆணை மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் (இ,பொ.,து. ம.வா.ப .ந.க.எண்.சி1 / 076/2024) 14.03.2024 அன்று 153 நாட்களுக்கு (64260 MTs) வழங்கப்பட்டு 17.05.2024 அன்று முதல் நடைமுறையில் உள்ளது. தற்போதைய ஒப்பம் தோராயமாக வரும் 16.10.2024 உடன் முடிவடைய உள்ள நிலையில் 16.10.2024க்கு பிறகு அல்லது ஒப்பத்தொகை முடிவுறும் போது மேலும் 365 நாட்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். எனவே, மண்டலம்-8 குப்பை மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் கொட்டும் குப்பை வளாகத்திற்கு தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி) வாடகை முறையில் இயக்க தலா ஒரு மெட்ரிக்டன் ரூ. 310/- (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) வீதம் 365 நாட்களுக்கு {ரூ.310 x 153300 மெட்ரிக்டன் = ரூ.4,75,23,000/- (18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் நான்கு கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்) ஆகும்.

மேற்கண்ட செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் .40-41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-80-04-00 Hiring chargesஎன்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்.

எனவே,

1. மண்டலம்-8 குப்பை மாற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை வளாகத்திற்கு குப்பையை மாற்ற தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி) வாடகை முறையில் அமர்த்தி தலா ஒரு மெட்ரிக்டன்னிற்கு ரூ.310/- வீதம் ஒரு நாளைக்கு 420 மெட்ரிக்டன் என்ற அளவில் 365 நாட்களுக்கு 153300 மெட்ரிக்டன் குப்பையை அகற்ற (365 days x Rs.310/- x 420 MTs) ரூ.4,75,23,000/- (18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் நான்கு கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்) செலவீனத்தில் தகுதி வாய்ந்த மற்றும் குப்பை அகற்றும் பணியில் முன்அனுபவம் பெற்ற ஒப்பந்ததாரர்களை மின்னணு ஒப்பம் மூலமாக நியமித்து பணி மேற்கொள்ளவும்,

2. இதற்கான செலவீனம் ரூ.4,75,23,000/-ஐ (ரூபாய் நான்கு கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) இயந்திர பொறியியல் துறையின் 2024-25 ஆம் நிதி ஆண்டிற்கான, ஆய்வுவாகனப் பணிமனை (40-41-10) கணக்கு குறியீட்டு எண் 230-80-04-00 Hiring Charges என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.46/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.75/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**இ.பொ.துந.க.எண்.எம்1/2615/2022 சிப்பம்-1 -5**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:182/2024** **பொருள் எண்.74**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம்1 முதல் 8 வரை சேகரிக்கப்படும் குப்பைகளை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டி சமன் செய்யும் பணி - 5 எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்கள் (D80 A12 அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரம் என நிர்ணயம் - மின்னணு ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்கள் மூலம் 5 எண்ணிக்கையில் புல்டோசர் உபகரணங்கள் ஒரு வருட காலத்திற்கு 3300 மணி நேரத்திற்கு வாடகை முறையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டது- ஒரு வருட காலம் 23.05.2024 அன்றுடன் முடிவடைய உள்ள நிலையில் தேர்தல் நடத்தை விதி நடைமுறையில் உள்ளதால் மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி ஏற்கனவே அளிக்கப்பட்ட பணி ஆணையில் 25% நீட்டிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் 1 முதல் 8, அயப்பாக்கம், வானகரம், கோயம்பேடு வணிக வளாகங்கள் ஆகியவற்றிலிருந்து காம்பாக்டர் மற்றும் டாரஸ் உபகரணங்கள் மூலம் தனியார் ஒப்பந்ததாரர், திருவாளர்கள். ராம்கி மற்றும் மாநகராட்சியால் சேகரிக்கப்படும் குப்பைகள் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 190 எண்ணிக்கையிலான வாகனங்கள் மூலம் பகல் வேளையிலும், 175 எண்ணிக்கையிலான வாகனங்கள் மூலம் இரவு வேளையிலும் குப்பைகள் கொட்டப்படுகின்றன. இவ்வாறு நாள் ஒன்றிற்கு சேகரிக்கப்படும் மொத்த குப்பைகளின் எடை தோராயமாக 2400 மெட்ரிக் டன்னாகும். அன்றாடம் கொட்டப்படும் குப்பைகளை உடனுக்குடன் சமன் செய்வது மிகவும் அவசியமானதாகும்.

தற்பொழுது, தோராயமாக 250 ஏக்கர் அளவிலான இடத்தில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. குறைந்த அளவிலான இடம் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான உபகரணங்கள் மட்டுமே இருப்பதால், அடிக்கடி வாகனங்கள் நீளமான வரிசையில் குப்பை கொட்டுவதற்காக காத்திருப்பதால் நேர விரயம் ஏற்படுகிறது எனவும் இரண்டாம் நடைக்கு வாகனங்கள் சென்று வர இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் அன்றாடம் கொட்டப்படும் குப்பைகளை உடனுக்குடன் சமன் செய்து குப்பை கொட்டும் வளாகத்திற்கு செல்லும் வாகனங்கள் தங்கு தடையின்றி விரைவாக உள்ளே சென்று குப்பைகள் கொட்டுவதற்கு உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு செய்வதால் மண்டலம்-5, 6 மற்றும் 8 ல் உள்ள குப்பை மாற்றும் நிலையங்களில் சேருகின்ற குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்படுவதுடன், குப்பை மாற்று நிலையங்களில் குப்பைகள் சேருவது தவிர்க்கப்படும். மேலும், குப்பை ஏற்றி செல்லும் வாகனங்கள் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை மீது செல்லும் போது ஏற்படும் பழுதுகளான டயர் பஞ்சர், ஸ்பிரிங் பிளேட்டுகள் உடைதல் மற்றும் இதர வாகன பழுதுகள் சமன் செய்யப்பட்ட வழியில் செல்லும் போது வெகுவாக குறையும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதற்கு தீர்வு காண கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு தேவையான புல்டோசர் உபகரணங்களை இயந்திரப் பொறியியல் துறை மூலம் மின்னணு ஒப்பம் கோரி வாடகை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அறிவுறுத்தப்பட்டது. திடக்கழிவு மேலாண்மை கையேட்டில் *(Municipal Solid Waste Management Manual)* பிரிவு 4.5.4.10.1 அட்டவணை 4.8ல் உள்ள வழிகாட்டுதலின்படி தேவைப்படும் புல்டோசர் உபகரணங்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டு ஓராண்டிற்கு வாடகை அடிப்படையில் பணி அமர்த்துமாறு மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்களால் கோரப்பட்டது.

மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்கள் அனுப்பியிருந்த கடிதத்தின் அடிப்படையில் பகல் நேர பணிக்கு மூன்று புல்டோசர்களும் இரவு நேர பணிக்கு இரண்டு புல்டோசர்களும் தனித்தனியே மூன்று மாத காலத்திற்கு குறுகிய கால ஒப்பம் கோரப்பட்டு புல்டோசர் உபகரணங்கள் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இப்பணி காலமானது விரைவில் முடிவடைய இருந்த நிலையில், மண்டலம் 1 முதல் 8 வரையிலான மண்டலங்கள் மற்றும் அயப்பாக்கம், வானகரம், கோயம்பேடு வணிக வளாகங்கள் ஆகியவற்றிலிருந்து கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்கென 5 எண்ணிக்கையிலான *D-80 A12* அல்லது அதற்கு இணையான வகை புல்டோசர்களை ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரம் என நிர்ணயித்து 5 உபகரணங்களுக்கு தனித்தனியே மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

தற்போது உள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் *5* எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்கள் (பகல் நேர பணிக்கு மூன்று டோசர்களும் இரவு நேர பணிக்கு இரண்டு டோசர்களும்) ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரத்திற்கு என நிர்ணயித்து மின்னணு ஒப்பம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த தோராய மதிப்பீட்டு தொகை கணக்கிடப்பட்டு கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான தொகையானது, தொழில்நுட்ப தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் கொண்ட குழு மூலம் நிர்ணயிக்கப்பட்டு துணை ஆணையர் (வ (ம) நி) அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலைப்புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது ஒரு புல்டோசர் உபகரணத்தினை (*D80* அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) வாடகை முறையில் பணியமர்த்த ஒரு மணி நேரத்திற்கு ரூ.2,147/- (*GST 18%* உட்பட) என்பதன் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| Sl. No | Equipment details | Qty | Hire Charges per dozer per hour (Incl. 18% GST) (Rs.) | Hire Charges per dozer for a period of 3300 hours (Incl. 18% GST) (Rs.) | Total Hire Charges for 5 dozers for a period of 3300 hours (Incl. 18% GST) |
|---|---|---|---|---|---|
| 1 | Bulldozer (D80 or quivalent A12 Model) | 5 No's | 2,147/- | 70,85,100/- | 3,54,25,500/- |
| Total Hiring Charges for 5 Nos. of Bulldozers D80 equivalent dozing capacity for a period of 3300 hours (Incl 18% GST) | | | | | 3,54,25,500/- |

மேலே தெரிவிக்கப்பட்ட புல்டோசர் உபகரணமானது வெளிச்சந்தையில் அதிக இடங்களில் பயன்பாடு இல்லாத காரணத்தினால் ஒரு சில தனியார் நிறுவனங்கள் மட்டும் ஓரிரு உபகரணத்தை சொந்தமாக வைத்துள்ளனர். இதனால், ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே ஒப்பம் கோருவதனால் அதிக அளவில் ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் பங்கேற்க வழி வகை செய்வதோடு ஒரே ஒப்பந்ததாரரை பணியமர்த்துவதால் 5 உபகரணங்களையும் பணி அமர்த்துவதில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு, தேவைப்படுகின்ற 5 புல்டோசர் உபகரணங்களை ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே கீழ்க்கண்டவாறு ஒப்பம் கோரி பணிகளை மேற்கொள்ள மன்றத் தீர்மான எண்.045/2023, நாள்.30.01.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| Sl. No | Equipment details | File No. | Qty | Total Hire Charges for a period of 3300 hours (Incl 18% GST) |
|---|---|---|---|---|
| 1 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-4 point. | M.E.D.C.No.M1/2615 /2022 Package-1 | 1 No | 70,85,100/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-5 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-2 | 1 No | 70,85,100/- |
| 3 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours)** for day shift for Zone-6 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-3 | 1 No | 70,85,100/- |
| 4 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-7 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-4 | 1 No | 70,85,100/- |
| 5 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-8 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-5 | 1 No | 70,85,100/- |

உபகரணங்களின் பணி திறனை மண்டலம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் பொறியாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை தலைமையிடத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின்படி பெறப்படும் பட்டியை இயந்திர பொறியியல் துறை தலைமையிடத்தின் மூலம் தீர்வு செய்யவும் மன்றத் தீர்மான எண்.045/2023, நாள்.30.01.2023ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மின்னணு ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்கள் மூலம் கீழ்கண்டவாறு புல்டோசர் உபகரணங்கள் ஒரு வருட காலத்திற்கு 3300 மணி நேரத்திற்கு வாடகை முறையில் பணியமர்த்தப்பட்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

| Sl.No | Description | File No | Name f the Contractor | Rate Per Hour | Total Amount for 3300 Hours | Work Commenced on | 1 year to be Completed on |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year 3300 **hours**) for day shift for Zone-4 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-1 | M/s Karayya Developers | 2063.82 | 68,10,606/- | 24.05.2023 | 23.05.2024 |
| 2 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-5 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-2 | M/s Bala Enterprises | 2063.82 | 68,10,606/- | 25.05.2023 | 24.05.2024 |
| 3 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours)** for day shift for Zone-6 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-3 | M/s Dayavu Engineering Enterprises | 2063.82 | 68,10,606 | 24.05.2023 | 23.05.2024 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-7 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-4 | M/s Dayavu Engineering Enterprises | 2063.82 | 68,10,606/- | 24.05.2023 | 23.05.2024 |
| 5 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-8 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-5 | M/s Dayavu Engineering Enterprises | 2063.82 | 68,10,606/- | 24.05.2023 | 23.05.2024 |

மேற்கண்ட அட்டவணையின்படி ஒப்பந்ததாரர்கள் 24.05.2023 முதல் புல்டோசர் உபகரணங்களை பணியில் ஈடுபடுத்தியுள்ளனர். இப்பணிக்கான ஒப்பந்த காலம் 23.05.2024 அன்றுடன் முடிவடைய உள்ள நிலையில் விரைவில் பாராளுமன்றத் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகவுள்ள நிலையில் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டவுடன் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்படும் என்பதாலும், தேர்தல் நடத்தைவிதி விலக்கப்பட்டபின்னரே மன்றக் கூட்டம் நடைபெறும் என்பதாலும், பணியின் அவசரம் அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்ட பணி ஆணையின் அடிப்படையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர் நோக்கி மேலும் 792 மணி நேரத்திற்கு(ஒவ்வொரு உபகரணத்திற்கும்) ஒப்ப விதிகளின்படி பின்வரும் விவரங்களின் அடிப்படையில் காலநீட்டிப்பு செய்து வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| பணியின் விவரம் | செலவுத் தொகை ஒரு உபகரணத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு *(Including GST)* ரூ. | காலநீட்டிப்பு செய்யப்படும் நேரம்*(Hrs)* | 1 உபகரணத்திற்கு 792 மணி நேரம் காலநீட்டிப்பு செய்ய ஆகும் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. | |
|---|---|---|---|---|
| Hiring of 1 Nos of Bulldozer (D80 or equivalent A12 Model) | 2063.82 | 792hrs | 16,34,545.44 | |
| **Total Hire Charges for hiring of 5 Nos of Bulldozer's** | **2063.82** | **792Hrs (for each Equipment)** | **5 x** 16,34,545.44 = | **81,72,727.20 Say 81,72,727/-** |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், காலநீட்டிப்பு செய்யப்படும் காலத்திற்கு 5 எண்ணிக்கையில் உபகரணங்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கான செலவுத் மொத்தம் ரூ.81,72,727/- *(GST 18%* உட்பட) (ரூபாய் எண்பத்தோரு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூற்று இருபத்தேழு மட்டும்) ஆனது இப்பணிக்கான மொத்த ஒப்பத் தொகையான ரூ.3,40,53,030/-ல் 25%க்கும் குறைவாக (24%) உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி *(Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000)* மன்றத்தின் பின்னேற்பினை எதிர் நோக்கி கால நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 15.03.2024 நாளிட்ட ஆணை பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையிடம் கட்டுப்பாட்டின் இயங்கும் ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: *230-800-400* என்ற தலைப்பின் கீழ் கூடுதல் நிதி பெற்று *2022*-2023 மற்றும் 2023 - *2024* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மண்டலம் 1 முதல் 8 வரையிலான மண்டலங்களிலிருந்து மற்றும் அயப்பாக்கம், வானகரம், கோயம்பேடு வணிக வளாகம் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்ய 5 எண்ணிக்கையிலான *(D80 A12* அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) புல்டோசர் உபகரணங்களை ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரத்திற்கு என நிர்ணயித்து ஐந்து சிப்பங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நிலையில் இப்பணிக்கான ஒப்பந்த காலம் 23.05.2024 அன்றுடன் முடிவடைய உள்ள நிலையில் விரைவில் பாராளுமன்றத் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகவுள்ள நிலையில் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டவுடன் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்படும் என்பதாலும், தேர்தல் நடத்தைவிதி விலக்கப்பட்ட பின்னரே மன்றக் கூட்டம் நடைபெறும் என்பதாலும், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மொத்த ஒப்ப தொகையில்25% மிகாமல் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி *(Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-*2000) 792 மணி நேரத்திற்கு(ஒவ்வொரு உபகரணத்திற்கும்) ரூ.81,72,727/- *(GST 18%* உட்பட) (ரூபாய் எண்பத்தோரு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூற்று இருபத்தேழு மட்டும்) மதிப்பீட்டில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி காலநீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

| Sl. No | Equipment details | File No. | Qty | Hire Charges Per Hour Rs. | Hours to be Extended | Total Hire Charges for Extended period of 792 hours (Incl. 18% GST) Rs. |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year 3300 **hours**) for day shift for Zone-4 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-1 | 1 No | 2063.82 | 792 | 16,34,545.44 |
| 2 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-5 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-2 | 1 No | 2063.82 | 792 | 16,34,545.44 |
| 3 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours)** for day shift for Zone-6 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-3 | 1 No | 2063.82 | 792 | 16.34.545.44 |
| 4 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-7 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-4 | 1 No | 2063.82 | 792 | 16,34,545.44 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-8 point. | M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-5 | 1 No | 2063.82 | 792 | 16,34,545.44 |
| **Total Hire Charges for 5 Nos of Bulldozers for Extended period of 792 hours for Each Equipment** | | | | | | 81,72,727.20 Say 81,72,727/- |

2. இதற்கான பட்டியை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை தலைமையிடத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின்படி இயந்திரப் பொறியியல் துறை தலைமையிடத்தின் மூலம் பட்டித் தொகையினை தீர்வு செய்யவும்,
3. இனம்-1 ஏற்பின் காலநீட்டிப்பு காலத்திற்கான தொகையில் 2% தொகையினை பாதுகாப்புத் தொகையாக சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு ஒவ்வொரு சிப்பத்திற்கும் தனித்தனியே உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
4. இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை தலைமையிடம் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-800- 400 என்ற தலைப்பின் கீழ் 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.47/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.76/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**S.W.M.C.No.A7/4640/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:183/2024** **பொருள் எண்.75**

**Greater Chennai Corporation-Solid Waste Management Department-Collection of Municipal Solid Waste from Zones V & VI of Greater Chennai Corporation and Transportation of the Municipal Solid Waste to Landfill sites or to Waste Processing Facilities on Public Private Partnership Mode on Key Performance Indicators (KPI's) based Cost of service delivery model (CSDM) – Tamil Nadu Infrastructure Development Board (TNIDB) approval obtained – Accorded Administrative Sanction from Government in anticipation of ratification of council–Submission of Draft RFP document to TNIDB- For Ratification Approval.**

Greater Chennai Corporation comprises of 15 zones with 200 wards administratively and spread over an area of 426 SqKms. Currently, it generates about 6150 tons of municipal solid waste per day from 15 zones.

Out of 15 zones of Greater Chennai Corporation 11 zones was privatised already and after seeing the service delivery and satisfactory performance of the concessionaires in these 11 privatized zones, the people/RWA's and Elected representatives are expecting same quality of sanitation & waste management services in zone 5 & 6. Hence, it was decided to privatize Zone 5&6. Also it is pertinent to note that, Zone-5 & 6 has high population density & high floating population, narrow roads & streets and high number of Government offices such as Secretariat, Honourable High Court, Rajiv Gandhi General Hospital, Central Railway Station and institutions of importance including very high footfall commercial areas. Hence, to further improve the quality of sanitation & Waste management services and reduce the cost-of-service delivery, it was prudently decided to privatize the conservancy services in the zone 5 & 6.

Further, the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department has instructed to appoint a Technical Consultant-cum-Transaction Advisory Firm to prepare DFR for various solid waste management projects such as establishment of Waste to Energy Facility, Bio-CNG Plants, Compost plants, Material Recovery Facility, Sanitary Landfill facility and also the Collection and transportation of municipal solid waste from Zone 5&6 TNUIFS Letter dated 03.06.2022 received from E-Mail. The Consultant was engaged for the above projects through TNUIFSL after due tendering process vide revised letter of Intent to M/s Sandhya Strategin Investment Advisory.

The Consultant submitted the Draft Feasibility Report for Collection and Transportation of municipal solid waste for 5&6 on 05.04.2023. The DFR was approved by the Expert Committee on 05.06.2023, after following the due process where various services to be delivered by the concessionaire, cost of the project, indicative key performance indicators along with the proposed project period of eight years etc., was deliberated by the Committee of Experts. The members of Expert Committee were drawn from Anna University, IIT Chennai, TNPCB, TNIDB, TNUIFSL. The Expert Committee recommended to conduct the Stakeholders meeting for the proposed project in line with the Terms of Reference (ToR) of the consultant. The stake holders meeting was conducted on 16.06.2023 for Zone 5&6, along with Regional Deputy Commissioner (North and Central) for the project.

In continuation to the above the Detailed Feasibility Report (DFR) was prepared and submitted by the consultant after incorporating the comments and suggestions obtained from the stakeholders meeting. The final DFR was sent to TNIDB Additional Chief Secretary/Commissioner letter dated.24.08.2023 seeking approval for the project along with project structuring on 24.08.2023.

Subsequently, initial meetings with Tamil Nadu Infrastructure Development Board (TNIDB) was held on 10.08.2023 & 04.09.2023.In the meeting chaired by Chief Executive Officer, Tamil Nadu Infrastructure Development Board (TNIDB) on 20.09.2023, it was decided that the project period of the proposed project shall be ten years instead of eight years, as by extending the project period the initial cost of the project gets reduced bringing less financial burden on GCC.

Hence, based on the TNIDB consultation the cost of the project was computed by considering the project period as 10 years and the revised project proposal was placed for approval to TNIDB meeting on 17.11.2023 held under the Chairmanship of Finance Secretary-Government of Tamil Nadu. In the meeting dated 17.11.2023, the Project proposal along with the project structuring was presented by considering the following factors:

1. The project period shall be for 10 years instead of 8 years.
2. The project shall be less costly as the cost of doing conservancy operations by the Concessionaire shall be lower than the cost of GCC. The Cost/MT for GCC is Rs.7112.95 whereas for the proposed project of Zone 5&6, the Cost/MT is Rs.5362.22/MT.
3. Out of 3996 workers, 2043 are permanent workers, shall be redeployed in the nearby GCC operated zones where GCC performs conservancy activites and 1953 temporary workers (NULM workers) shall be absorbed by the Concessionaire to the maximum extent possible by the concessionaire as per their norms.
4. The payment to the concessionaire shall be 50% as Fixed payment and 50% as performance-based payment. The performance of the concessionaire shall be evaluated against pre-set 43 Key-Performance Indicators which shall be monitored to deliver service as per the concession agreement.
5. The Initial Annual Quote shall range from Rs.230 crores to Rs.250 crores.

TNIDB had approved the same (Minutes of the Meeting chaired by Principal Secretary – Finance Government of Tamilnadu, 17.11.2023) and was communicated to GCC on 20.12.2023. Based on the TNIDB approval, the Consultant has submitted the Final Detailed Feasibility Report to GCC on 28.12.2023

Under these circumstances, the Administrative Sanction has been obtained from the Government of Tamil Nadu for the proposed project, vide G.O.(D).No.41, Municipal Administration and Water Supply (MC.I) Department, Dated.06.03.2024 in anticipation of ratification of the Council. The Salient features of the project (Zone V & VI) along with Broad Scope of work, Project cost and Total Life Cycle Cost are furnished hereunder:

**Project Area Details**

| Particulars | Zone-5 | Zone-6 | Total |
|---|---|---|---|
| Population (2011 Census) | 6,19,440 | 6,47,580 | 12,67,020 |
| Population (2023) (Resident) | 8,25,429 | 8,62,274 | 16,87,703 |
| Population (2023) (Resident+ Floating) | 9,90,515 | 9,05,388 | 18,95,903 |
| Population (2032) (Resident) | 10,37,950 | 10,84,285 | 21,22,235 |
| Population (2032) (Resident+ Floating) | 12,45,540 | 11,38,499 | 23,84,039 |
| Area (Sq. Km) | 21.81 | 17.11 | 38.92 |
| Road length (Km) | 257.23 | 380.27 | 637.50 |
| Population density (2011) (Persons/km sq.) | 28,402 | 37,848 | 33,125 (average) |
| Population density (2023) (Persons/km sq) | 37,846 | 50,396 | 44,121 (average) |
| Population density (2032) (Persons/km sq.) | 47,590 | 63,371 | 55,481 (average) |
| Waste generation 2023 (MT/Day) | 683 | 561 | 1,244 |
| Waste Generation 2032 (MT/day) | 768 | 631 | 1,398 |
| Average Distance of wards from Kodungaiyur Disposal Site (km) | 8 | 8 | 8 |

**Scope of Work of Concessionaire :**

- Door to Door collection of MSW from Households, Collection of MSW from commercial establishments.
- Manual and Mechanical Street Sweeping of all roads in Zone V & VI.
- Secondary Storage of waste using RC bins. Establishment of Static Compactors.
- Management of Secondary Storage Points
- Secondary Transportation of waste from RC bins by Refuse Compactors and Static Compactors to the decentralized and centralized processing facilities/dump site.
- Collection, transportation and storage of Domestic Hazardous Waste (DHW) at DHW deposition centres.
- Collection and transportation of garden waste/horticultural waste from households, garden/parks, commercial space etc
- Clearance of Hot spots, canal & riverbanks, carcass waste removal, provision of priority services team. Cleaning and disinfection of RC bins.
- Maintenance of Litter free corridor, mass cleaning, Burial Ground cleaning, Slum mass cleaning
- Operation and Maintenance of Battery-Operated Vehicles (BoV) parking stations and Vehicle workshop.
- Setting up of on-line Management Information System (MIS), Command and Control Center. Setting of compliant redressal system.
- Conducting Information Education and Communication (IEC) awareness for the public related to MSW collection and transportation.

**Scope of Work of GCC :**

- Providing the land required for setting of Battery-operated Vehicle (BoV) parking stations, Static Compactors and Vehicle Parking & Workshop.

Setting up of Domestic Hazardous waste deposition centres.

**Project Capital cost:**

The project capital cost to be incurred by the Concessionaire from year one to year ten are given below;

| Year | Y-O-Y Capital Requirement in Rs. Crore | Year | Y-O-Y Capital Requirement in Rs. Crore |
|---|---|---|---|
| 2023 | 120.42 | 2028 | 44.44 |
| 2024 | 0.96 | 2029 | 6.33 |
| 2025 | 5.70 | 2030 | 6.66 |
| 2026 | 5.69 | 2031 | 5.86 |
| 2027 | 8.14 | 2032 | 3.22 |
| Total Capital cost requirement | | | 207.42 |

**Project Operation and Maintenance Cost :**

The project Operation and Maintenance cost for First Year and the remaining years are given below;

| Particulars | Cost in Rs. Crore |
|---|---|
| First Year: Operation and Maintenance Cost | 204.45 |
| Year Two to Year Ten: Operation and Maintenance Cost | 2367.13 |
| Total Operation and Maintenance cost for the project. | 2571.58 |

Total Project Life Cycle Cost:

The Project Life Cycle cost for the proposed project period of ten years is given below

| Particulars | Cost in Rs. Crore |
|---|---|
| Project Life Cycle Cost | 2963.79 |

**Initial Annual Quote (IAQ) :**

The Initial Annual Quote i.e. bid variable shall range of Rs.230 to Rs 250 crs. As indicated in the TNIDB minutes of meeting dated 17.11.2023.

The G.O(D).No.41, Municipal Administration and Water Supply (MC.I) Departement, dated 06.03.2024, stipulates that after the completion of the bidding process, the GCC shall solicit Government Approval for exact project value and funding requirement.

As approved by TNIDB, the Project is having ten (10) years of Concession Period and slated to be implemented through the Design, Build, Finance, Operate and Transfer (DBFOT) model under Public-Private Partnership (PPP) mode.

Hence,

(1) To approve the project proposal for privatization of Collection and Transportation of solid waste from Zones 5 and 6 to the processing facilities / land fill site, for which Administrative Sanction has been obtained from Government of Tamil Nadu in anticipation of the ratification of the council.

(2) To send the draft RFP document to TNIDB for approval.

(3) While approving it should be ensured that existing GCC employees are suitably accomadated in the other needy places in the Zones of their order of preferance in Education, Parks & Play Field, Health other GCC Department and the non Privitazed Zones.

(4) As and when the tenders are finalized after due process the overall outlay may be got approved by the appropriate level of Approval.

Sl.No.1 to 4 above, ratification approval of the Council is requested, through Standing Committee (Public Health), Standing Committee (Taxation &Finance)

“20.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.48/2024, நாள்.20.06.2024-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“21.06.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.77/2024, நாள்.21.06.2024ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

******

**Br.D.C.No.B3/1508/2001**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:184/2024** **பொருள் எண்.76**

**Greater Chennai Corporation- Bridges Department – Proposed construction of ROB in lieu of existing level crossing LC2 at Km 2/10-14 near Korukkupet Railway Station in div 42 & 47, Zone- IV – Requested the TNUIFSL to appoint Consultants for preparation of Detailed Project Report (DPR) – TOR received from TNUIFSL – Approval of TOR and application for availing grant fund for Consultancy assignment from PDGF submitted to TNUIFSL – Council Resolution requested by TNUIFSL – For Approval.**

TNUIFSL was requested to appoint a Consultant for preparation of DPR for construction of ROB in lieu of existing level crossing LC2 at Km 2/10-14 near Korukkupet Railway Station in div 42 & 47, Zone-IV, vide this office letter dated03.05.2024.

TNUIFSL requested the Greater Chennai Corporation vide letter dated.27.05.2024, to give the concurrence on Terms of Reference (ToR) and to submit the Grant application so as to get the approval of the PDGF committee for appointing Consultants for the above project and also to furnish the Council resolution.

Further TNUIFSL informed that the consultancy assignment will be taken up by them subject to the approval of Project Development Grant Fund (PDGF) Committee.

It is submitted that, this ROB project is to be executed jointly with Railways on 50:50 cost sharing basis and the Railway portion of the work will be executed by the Railways and both the approaches are to be executed by the Greater Chennai Corporation (GCC Portion only).

As the Railways proposed to use the 1x54m span RDSO type Bow String Girder in the Railway portion, the DPR preparation shall be limited to approach portion (GCC portion).

The draft ToR prepared by the TNUIFSL for the above project has been scrutinized and approved. The TOR along with the Grant application form has been sent to TNUIFSL vide letter dated.27.05.2024.

As requested by the TNUIFSL Council resolution for appointing a Consultant for Preparation of Feasibility Report, Detailed Project Report (DPR) and Bid documents for construction of ROB approaches (GCC portion only) in lieu of existing level crossing LC2 at Km 2/10-14 near Korukkupet Railway Station in div 42 & 47, Zone- IV has to be furnished to TNUIFSL to proceed further.

Hence, approval of the Council is requested for appointing a Consultant for Preparation of Feasibility Report, Detailed Project Report (DPR) and Bid documents for construction of ROB approaches (GCC portion only) in lieu of existing level crossing LC2 at Km 2/10-14 near Korukkupet Railway Station in div 42 & 47, Zone- IV through TNUIFSL.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**ம.அ.5ந.க.எண்.3494/2024**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:185/2024** **பொருள் எண்.77**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-13, வார்டு-60, அங்கப்பன் நாயக்கன் தெரு - மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள உருது பெண்கள் நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-5, பகுதி-13, வார்டு-60க்கு உட்பட்ட அங்கப்பன் நாயக்கன் தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள உருது பெண்கள் நடுநிலைப்பள்ளி மிகவும் பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள நடுநிலைப்பள்ளியானது சுமார் 50 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். எனவே, இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்து உள்ளதாலும் மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் இருப்பதாலும், உருது பெண்கள் நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடிப்பது அவசியமாகிறது.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரைதளம் = 23.75மீ x 12.40மீ = 294.5 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ.1347.36/-

எனவே, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-60, அங்கப்பன் நாயக்கன் தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள உருது பெண்கள் நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 18.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.21/2024ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 19.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.47/2024ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1078/2024**

**கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 22.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:186/2024** **பொருள் எண்.78**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-05, பகுதி-13, வார்டு – 57 க்கு உட்பட்ட அண்ணா (பி) தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுப் பணிமனையில் இயங்கி வந்த தோட்ட கழிவு செயலாக்க மையம் இயங்கிய இடத்தில் - தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் பொதுமக்களுக்கு அடுக்குமாடி கட்டிடம் கட்டப்பட வேண்டி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய அனுமதி.**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர் அவர்கள், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச்செயலாளர் / ஆணையாளர் அவர்கள், முதன்மை செயலாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, உறுப்பினர் – செயலாளர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி வட்டார துணை ஆணையர் (வடக்கு) ஆகியோருடன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-05, பகுதி-13, வார்டு – 57 க்கு உட்பட்ட அண்ணா (பி) தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது பணிமனையில் இயங்கி வந்த தோட்ட கழிவு செயலாக்க மையம் இயங்கிய இடத்தினை 19/06/2024 அன்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

கள ஆய்வு மேற்கண்ட போது, பொது பணிமனையில் இயங்கி வந்த தோட்ட கழிவு செயலாக்க மையம் கடந்த சில வருடங்களாக பயனற்ற நிலையில் உள்ளது என கண்டறியப்பட்டது. எனவே, பயனற்ற நிலையில் உள்ள தோட்ட கழிவு செயலாக்க மையத்தை அகற்றி ஏற்கனவே தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் பொதுமக்களுக்கு அடுக்குமாடி கட்டிடம் கட்டப்பட இட ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் கூடுதல் இடம் தேவைப்படுவதால் பயனற்ற நிலையில் உள்ள தோட்ட கழிவு செயலாக்க மையத்தில் 1.28 ஏக்கர் இடத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வழங்க கலந்து ஆலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இது குறித்து நிலம் வழங்குதல் சம்மந்தமாக மேல் நடவடிக்கை மேற்கொள்ள 19.06.2024 அன்று மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடைமைத்துறைக்கு மண்டலம் 5லிருந்து கோப்பு அனுப்பப்பட்டது,

இது தொடர்பாக இவ்வலுவலக கடிதத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் மற்றும் உடைமைதுறை அவர்கள் புலத்தின் சரியான விஸ்தீரண அளவினையும் புலத்தின் நான்கெல்லை விவரத்தையும் தெரிவித்து பரிந்துரையுடன் வடக்கு வட்டார துணை ஆணையர் மூலமாக குறிப்பு அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் பொதுமக்களுக்கு அடுக்குமாடி கட்டடம் கட்ட புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர், பிளாக் எண். 68, சர்வே எண்கள். 7878/1 மற்றும் 7879/1-இல் 1.28 ஏக்கர் நிலம் கூடுதலாக தேவைப்படுவதால், மேற்படி கூடுதல் நிலத்தினை வழங்குவதற்கு 20.06.2024 அன்று ஸ்தலப்பார்வை செய்யப்பட்டது.

**மேலும், பிரஸ்தாப நிலங்கள் வருவாய் ஆவணங்களில் உள்ள பதிவுகள் பின்வருமாறு**

| Number | | Govt. Mitta Zamindari Inam | Dry, Wet Unassessed Promboke House-site | Extent by Town Survey | | | Adangal (UDS) Details | How the holding is utilised |
|---|---|---|---|---|---|---|---|---|
| Sur. Field | Sub. Div | | | Hectare | Area | Sq.Mtr | | |
| 7878 | 1 | மாநகராட்சி | தனியார் | 1 | 19 | 31.5 | கார்பரேஷன் பிரைவேட் | ஒர்க் ஷாப் ஸ்டோர் |
| 7879 | 1 | மாநகராட்சி | தனியார் | 0 | 12 | 41.0 | கார்பரேஷன் பிரைவேட் | சந்து |

மேற்படி நிலங்கள் மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களாகும். அதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 24, நாள்.21.02.2023-ன்படி, பிளாக் எண்.68, சர்வே எண்.7878/1 இல் 0.24.56 சதுர மீட்டர், புல எண் 7877/1-இல் 0.37.85 சதுர மீட்டர் மற்றும் சர்வே எண் 7877/2 இல் 0.01.40 சதுர மீட்டர் ஆக மொத்தம் 1.57 ஏக்கர் நிலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிலம் ஆகும்.

தற்போது சர்வே எண் 7878/1 மற்றும் 7879/1 இல் 1.28 ஏக்கர் நிலம் கூடுதலாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 7878/1-இல் 1.18 ஏக்கர் நிலமும் மற்றும் சர்வே எண் 7879/1இல் 0.10 ஏக்கர்ஆக மொத்தம் 1.28 ஏக்கர் நிலம் கூடுதலாக வழங்கப்பட உள்ளது.

அதன் நான்கு எல்லைகள் விவரம் பின்வருமாறு:

சர்வே எண் 7878/1

| | | |
|---|---|---|
| சர்வே எண் 7878/1 பகுதி நிலத்திற்கு | . | வடக்கு |
| அண்ணா (பி) ரோட்டிற்கு | . | தெற்கு |
| சர்வே எண் 7879/1 நிலத்திற்கு | . | கிழக்கு |
| சர்வே எண் 7878/1 பகுதி நிலத்திற்கு | . | மேற்கு |

<u>சர்வே எண்.7879/1</u>

| | | |
|---|---|---|
| சர்வே எண் 7879/1 பகுதி நிலத்திற்கு | . | வடக்கு |
| அண்ணா (பி) ரோட்டிற்கு | . | தெற்கு |
| சர்வே எண் 7880/1 நிலத்திற்கு | . | கிழக்கு |
| சர்வே எண் 7878/1 பகுதி நிலத்திற்கு | . | மேற்கு |

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு கூடுதலாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 1.28 ஏக்கர் நிலத்தில் தற்போது தோட்டக் கழிவுகள் மற்றும் இளநீர் குடுவைகள் மறுசுழற்சி மையத்திற்கான கொட்டகை (SHED) உள்ளது. ஆனால் தற்போது பயன்பாட்டில் இல்லை என துணை ஆட்சியர் / நிலம் மற்றும் உடைமைகள் துறை, வடக்கு வட்டார அலுவலகம் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2)த் துறை அரசாணை (நிலை)எண்.24, நாள்.21.02.2023ன்படி பிறப்பிக்கப்பட்ட மாமன்றத்தீர்மான எண்.425/2023, நாள்.31.08.2023-ன்படி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 1.57 ஏக்கர் நிலத்திற்கு கூடுதலாக 1.28 ஏக்கர் நிலம் கோரி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளதால், கூடுதலாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 1.28 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்க்கு கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு நில உரிமை மாற்றம் செய்ய பரிந்துரை செய்து மண்டல அலுவலர், மண்டலம் -5ன் குறிப்பு இத்துறையில் பெறப்பட்டுள்ளது.

<u>**நிபந்தனைகள்:-**</u>

1. இந்தப் பகுதியில் கட்டப்படும் கட்டிடங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கும் பக்கிங்ஹாம் கால்வாய் உள்ளிட்ட நீர்நிலை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கும் அதே பகுதியைச் சார்ந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும்.
2. மேற்கண்ட நிலத்திற்கு அரசால் நிர்ணயிக்கப்படும் நிலமதிப்பு தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.
3. மேற்கண்ட நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிலுள்ள கட்டிடங்களை இடிக்கும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டிட மதிப்பு தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட

மேம்பாட்டு வாரியத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

4. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் கோரியுள்ள நிலத்தினை பொருத்தவரையில், நிலம் தொடர்பான உரிய ஒப்புதல் *(At appropriate level)* பெறப்படவேண்டும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் கடைபிடிக்கப்படும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.
5. மேற்படி வார்டில் உள்ள ஆட்சேபணைக்குரிய புறம்போக்கு நிலத்தில். குறிப்பாக நீர்வழித் தடங்களுக்கு அருகிலுள்ள இடங்களில் வசிப்போருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

எனவே, மண்டலம் - 5, பகுதி - 13, வார்டு - *57*, புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர், பிளாக் எண். *68*, சர்வே எண்கள். *7878/1* மற்றும் *7879/1*-இல் 1.28 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 21.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீரமான எண்.78/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1079/2024**

**கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 22.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:187/2024** **பொருள் எண்.79**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-05, பகுதி-13, வார்டு – 57 க்கு உட்பட்ட அண்ணா (பி) தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது பணிமனையில் மத்திய லாரி நிலையம் இயங்கிய இடத்தினை - பல்வேறு விளையாட்டுகளுக்கான விளையாட்டு மைதானம் அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு அனுமதி .**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர் அவர்கள், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச்செயலாளர் / ஆணையாளர் அவர்கள், முதன்மை செயலாளர், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, உறுப்பினர் - செயலாளர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி வட்டார துணை ஆணையர் (வடக்கு) ஆகியோருடன் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-05, பகுதி-13, வார்டு–57க்கு உட்பட்ட அண்ணா(பி) தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது பணிமனையில் இயங்கி வந்த மத்திய லாரி நிலையம் இயங்கிய இடத்தினை 19.06.2024 –அன்று கள ஆய்வு மேற்கொண்டனர்,

இவ்வலுவலக 19.06.2024 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-05, பகுதி-13, வார்டு - 57 க்கு உட்பட்ட அண்ணா (பி) தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது பணிமனையில் இயங்கி வந்த மத்திய லாரி நிலையம் இயங்கிய இடத்தில் பல்வேறு விளையாட்டுகளுக்கான விளையாட்டு மைதானம் அமைக்க முன்நுழைவு அனுமதி வழங்க ஏதுவாக மேற்படி புலத்தின் வருவாய் ஆவணங்களையும், புலத்தின் சரியான விஸ்தீரண அளவினையும் புலத்தின் நான்கெல்லை விவரத்தையும் தெரிவித்து குறிப்பான பரிந்துரையினை வடக்கு வட்டார துணை ஆணையர் மூலமாக இத்துறைக்கு உடனடியாக அனுப்புமாறு மண்டல அலுவலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) மூலமாக, மண்டல அலுவலர், மண்டலம் - 5 அவர்களால் 21.06.2024 நாளிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறிப்பில், வடசென்னை பகுதியில் வாழும் பொதுமக்களின் நலன் கருதி விளையாட்டு மைதானம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் அமைத்திட புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர், பிளாக் எண்.68, சர்வே எண்,7880/1 மற்றும் 7881-இல் 2.34 ஏக்கர் நிலத்தினை வழங்குவதற்கு 20.06.2024 அன்று ஸ்தலப்பார்வை செய்யப்பட்டது.

**மேலும், பிரஸ்தாப நிலங்கள் வருவாய் ஆவணங்களில் உள்ள பதிவுகள் பின்வருமாறு**

| Number | | Govt. Mitta. Zamindari, Inam | Dry, Wet, Unassessed, Promboke, House site | Extent by Town Survey | | | Adangal (UDS) Details | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|---|---|
| Sur. Field | Sub. Div | | | Hectare | Area | Sq. Mtr | | |
| 7880 | 1 | மாநகராட்சி | தனியார் | 1 | 10 | 52.0 | கார்பரேஷன் பிரைவேட் | பள்ளி - விளையாட்டுத் திடல் |
| 7881 | 0 | மாநகராட்சி | நில மாற்றம் விலக்களிக்கப்பட்டவை | 0 | 40 | 14.0 | கார்பரேஷன் பப்ளிக் | ரோடு |

மேற்படி நிலங்கள் மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் ஆகும். சர்வே எண் 7880/1 -இல் 1.71 ஏக்கர் நிலமும் மற்றும் 7881 இல் 0.63 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 2.34 ஏக்கர் நிலம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>அதன் நான்கு எல்லைகள் விவரம் பின்வருமாறு:</u>

<u>சர்வே எண் 7880/1</u>

| | | |
|---|---|---|
| சர்வே எண் 7881 பகுதி நிலத்திற்கு | , | வடக்கு |
| அண்ணா (பி) ரோட்டிற்கு | , | தெற்கு |
| சர்வே எண் 7879/1 பகுதி நிலத்திற்கு | , | மேற்கு |
| சர்வே எண் 7880/1 பகுதி நிலத்திற்கு | , | கிழக்கு |

<u>சர்வே எண் 7881</u>

| | | |
|---|---|---|
| சர்வே எண் 7880/1 பகுதி நிலத்திற்கு | , | வடக்கு |
| சர்வே எண் 7880/1 பகுதி நிலத்திற்கு | , | தெற்கு |
| சர்வே எண் 7881/1 பகுதி நிலத்திற்கு | , | கிழக்கு |
| சர்வே எண் 7880/1 பகுதி நிலத்திற்கு | , | மேற்கு |

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் விளையாட்டு மைதானம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள 2.34 ஏக்கர் நிலத்தில் தற்போது மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த வாகனம் மற்றும் தேவையற்ற பொருட்கள் *(SCRAP)* சேகரிக்கும் இடமாகவும் மற்றும் தற்போது விளையாட்டு மைதானமாகவும் உள்ளது என துணை ஆட்சியர் நிலம் மற்றும் உடைமைத்துறை, வடக்கு வட்டார அலுவலகம் அவர்களால் விஸ்தீரண அளவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் பெரிய அளவிலான பல விளையாட்டு மைதானம் அமைப்பதன் மூலம் இப்பகுதியில் உள்ள சிறுவர் மற்றும் பொதுமக்களுக்கு பெரிதும் பயன் உள்ளதாக அமையும் என்பதால் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்க பரிந்துரை செய்து மண்டல அலுவலர், மண்டலம் - 5ன் குறிப்பு இத்துறையில் பெறப்பட்டுள்ளது.

<u>**நிபந்தனைகள்:-**</u>

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இந்நிலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினரால் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்ட பின்பு தொடர் பராமரிப்புக்காக பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.
2. மேற்படி நிலம் எக்காரணம் கொண்டும் எதிர் காலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படாது.
3. மேற்படி நிலம் எத்தகைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படுகிறதோ அத்தகைய பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
4. இந்த முன்நுழைவு அனுமதி அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.
5. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி விளையாட்டு மைதானம் உள்ளிட்ட அனைத்து உடைமைகளும் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இருக்கப்பட வேண்டும்.

எனவே, மண்டலம்-05, பகுதி-13, வார்டு-57, புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர், பிளாக் எண்.68, சர்வே எண்.7880/1 மற்றும் 7881-இல் 2.34 ஏக்கர் நிலத்திற்குட்பட்ட அண்ணா (பி) தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது பணிமனையில் இயங்கி வந்த மத்திய லாரி நிலையம் இயங்கிய இடத்தில் பல்வேறு விளையாட்டுகளுக்கான விளையாட்டு மைதானம் அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 21.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீரமான எண்.79/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1080/2024**

**கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 22.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:188/2024** **பொருள் எண்.80**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-05, பகுதி-13, வார்டு – 57 க்கு உட்பட்ட அண்ணா(பி) தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக் கூடம், அம்மா உணவகம், சுகாதார ஆய்வாளர் அலுவலகம் மற்றும் வரி வசூலிப்பவர் அலுவலகம் இயங்கி வருகிறது - மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது - மற்றும் வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி அச்சகமும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது - இதனை அகற்றி வால்டாக்ஸ் சாலை முகப்பில் புதியதாக சமுதாய நலக் கூடக் கட்டிடமும் அதன் பின்புறம் புதியதாக சென்னை மாநகராட்சி அச்சகம் கட்டவும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு அனுமதி.**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் அவர்கள், முதன்மை செயலாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, உறுப்பினர் - செயலாளர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (வருவாய் மற்றும் நிதி), மற்றும் வட்டார துணை ஆணையர் (வடக்கு) ஆகியோருடன் மண்டலம்-05, பகுதி-13, வார்டு - 57 க்கு உட்பட்ட அண்ணா(பி) தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக் கூடம், அம்மா உணவகம், சுகாதார ஆய்வாளர் அலுவலகம், வரி வசூலிப்பவர் அலுவலகம் மற்றும் வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி அச்சகம் இயங்கிய இடங்களை 19.06.2024 அன்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

கள ஆய்வு மேற்கண்ட போது அண்ணாபிள்ளை தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக் கூடம், அம்மா உணவகம், சுகாதார ஆய்வாளர் அலுவலகம், வரி வசூலிப்பவர் அலுவலகம் மற்றும் வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி அச்சகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது என கண்டறியப்பட்டது. எனவே மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சமுதாய நலக் கூடம், அம்மா உணவகம், சுகாதார ஆய்வாளர் அலுவலகம், வரி வசூலிப்பவர் அலுவலகம் மற்றும் வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி அச்சகம் ஆகியவற்றை அகற்றி வால்டாக்ஸ் சாலை முகப்பில் புதியதாக சமுதாய நலக் கூட கட்டிடமும், அதன் பின்புறம் புதியதாக சென்னை மாநகராட்சி அச்சகமும் அமைக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர் அவர்களால் பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் இப்பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. இது குறித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடைமைத்துறை அவர்களுக்கு 19.06.2024 அன்று கோப்பு மண்டலம் 5லிருந்து அனுப்பப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 19.06.2024 நாளிட்ட கடிதத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் (ம) உடைமைதுறை அவர்கள் புலத்தின் சரியான விஸ்தீரண அளவினையும் புலத்தின் நான்கு எல்லை விவரத்தையும் தெரிவித்து வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களின் பரிந்துரையுடன் கோப்பு அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டது.

இது தொடப்பாக பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகம் மற்றும் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர், பிளாக் எண் 68, சர்வே 7880/1-இல் 0.52 ஏக்கர் நிலம் தேவைப்படுவதால், மேற்படி நிலத்தினை வழங்குவதற்கு 20.06.2024 ஸ்தலப்பார்வை செய்யப்பட்டது .

பிரஸ்தாப நிலம் வருவாய் ஆவணங்களில் பின்வருமாறு பதிவுகள் உள்ளன.

| Number | | Govt. Mitta Zamindari Inam | Dry, Wet Unassessed Promboke House-site | Extent by Town Survey | | | Adangal (UDS) Details | How the holding is utillsed |
|---|---|---|---|---|---|---|---|---|
| Sur. Field | Sub. Div | | | Hectare | Area | Sq.Mtr | | |
| 7880 | 1 | மாநகராட்சி | தனியார் | 1 | 10 | 52.0 | கார்பரேஷன் பிரைவேட் | பள்ளி-விளையாட்டுத் திடல் |

மேற்படி நிலம் மாநகராட்சிக்கு சொந்தமான நிலமாகும். சர்வே எண் 7880/1இல் 0.52 ஏக்கர் நிலம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும்,

அதன் நான்கு எல்லைகள் விவரம் பின்வருமாறு:

சர்வே எண் 7880/1

| | | |
|---|---|---|
| சர்வே எண் 7880/1 பகுதி நிலத்திற்கு | - | வடக்கு |
| அண்ணா (பி) ரோட்டிற்கு | - | தெற்கு |
| சர்வே எண் 7880/1 பகுதி நிலத்திற்கு | - | மேற்கு |
| வால்டாக்ஸ் ரோட்டிற்கு | - | கிழக்கு |

எனவே, சமுதாய நலக் கூடம், அம்மா உணவகம், சுகாதார ஆய்வாளர் அலுவலகம் மற்றும் வரி வசூலிப்பவர் அலுவலகம் மற்றும் வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி அச்சகம் ஆகியவற்றை அகற்றி 0.52 ஏக்கர் இடத்தில் வால்டாக்ஸ் சாலை முகப்பில் புதியதாக சமுதாய நலக்கூட கட்டிடமும், அதன் பின்புறம் புதியதாக பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகமும் அமைக்க துணை ஆட்சியர், நிலம் மற்றும் உடைமைத்துறை வடக்கு வட்டார அலுவலகம் அவர்களால் விஸ்தீரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் மேற்கண்ட சென்னை மாநகராட்சி அச்சகம் தரம் உயர்த்தப்படும் என்று மாண்புமிகு மேயர் அவர்களால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி சமுதாய நல கூடம் மற்றும் சென்னை மாநகராட்சி அச்சகம் மேலே குறிப்பிட்ட 0.52 ஏக்கர் நிலப்பரப்பில் பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் கட்டப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும் நிலையில் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏதுவாக அமையும் என்பதினால் பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் இப்பணி மேற்கொள்ள முன் நுழைவு அனுமதி அளிக்க கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்க பரிந்துரை செய்து மண்டல அலுவலர்-5ன் குறிப்பு இத்துறையில் பெறப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்:-**

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இந்நிலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினரால் கட்டிடம் கட்டி முடித்த பின்பு தொடர் பராமரிப்புக்காக பெருநகர சென்னை மாநகராட்சி வசம் கட்டிடத்தை ஒப்படைக்க வேண்டும்.
2. மேற்படி நிலம் எக்காரணம் கொண்டும் எதிர் காலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படாது.
3. மேற்படி நிலம் எத்தகைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படுகிறதோ அத்தகைய பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
4. இந்த முன்நுழைவு அனுமதி அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.
5. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி விளையாட்டு மைதானம், சமுதாய நலக் கூடம் மற்றும் மாநகராட்சி அச்சகம் போன்ற அனைத்து உடைமைகளும் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இருக்கப்பட வேண்டும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்-5, பகுதி-13, வார்டு-57க்கு உட்பட்ட சமுதாய நலக் கூடம், அம்மா உணவகம், சுகாதார ஆய்வாளர் அலுவலகம் மற்றும் வரி வசூலிப்பவர் அலுவலகம் மற்றும் வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி அச்சகம் ஆகியவற்றை அகற்றி 0.52 ஏக்கர் இடத்தில் வால்டாக்ஸ் சாலை முகப்பில் புதியதாக சமுதாய நலக் கூட கட்டிடமும், அதன் பின்புறம் புதியதாக சென்னை மாநகராட்சி அச்சகமும் அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்க நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 21.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.80/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5.ந.க.எண்.சி2/4111/2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:189/2024** **பொருள் எண்.81**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, துப்புரவு துறை, பகுதி-12,13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை துப்புரவு பணி மேற்கொள்ள - நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக 03.07.2024 முதல் 02.11.2024 வரை 4 மாதங்களுக்கு 963 எண்ணிக்கையிலான அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12,13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள பகுதிகளில் துப்புரவு பணிகளான தெருக்களில் கூட்டுவது, குப்பைகளை அகற்றுவது மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு 2106 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 15.02.2024 ஆணையின்படி மேற்கண்ட பணியாளர்களில் உள்ள காலிப்பணியிடங்களை 1061 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் நியமனம் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு மன்றத் தீர்மான எண்.72/2024, நாள்.22.02.2024-ன்படி தற்காலிக SHG துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்கண்ட மன்ற தீர்மானத்திற்கான பணிக்காலமானது 30.06.2024 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

மண்டலம்-5 ஐ சார்ந்த பகுதிகளில் சென்னையில் முக்கிய பழமை வாய்ந்த இராயபுரம், பிராட்வே, எம்.சி ரோடு, வண்ணாரப்பேட்டை, எழும்பூர் போன்ற பகுதிகள் உள்ளடக்கியதாகும். மேலும், கடற்கரை சாலைகள், தலைமைச் செயலகம், நேவல் கேஸ், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் ரிப்பன் கட்டிட வளாகத்தில் சென்னை மாநகராட்சி பணியாளர்களை கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தவிர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5க்கு உட்பட்ட பகுதிகளில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, அரசு கண் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை, சென்னை தீவுத் திடல், சென்ட்ரல் இரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், பிராட்வே பேருந்து நிலையம், மூலக்கொத்தளம் இடுகாடு, சென்னை பெருநகர் குற்றவியல் நீதிமன்றம், அல்லிக்குள வளாகம் மற்றும் நீதிமன்றம், பீச் ஸ்டேஷன் இரயில் நிலையம், பழமை வாய்ந்த இந்து கோவில்கள், பழமை வாய்ந்த மசூதிகள், அரண்மனைக்கார தெரு, கிருஸ்துவ ஆலயம், சென்னை துறைமுகம், சென்னை எழும்பூர் அருங்காட்சியகம், பூங்காக்கள், விளையாட்டு திடல், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் ஆகியன உள்ளன. மேற்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்வதால் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட மன்ற தீர்மானத்தின் பணிக்காலமானது 30.06.2024 அன்று முடிவடைய உள்ளது.

மண்டலம்-5, வார்டு-49 முதல் 63 வரை, TPF, LFZ, TASK FORCE ஆகிய வார்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 2106 ஆகும். இதில் கடந்த 01.03.2024 முதல் 30.06.2024 வரை சுமார் 1061 காலிபணியிடங்களுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் வயது முதிர்வு, தன்விருப்ப ஓய்வு, இறப்பு, பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வு காரணங்களால் கூடுதலாக 37 பணியிடங்கள் காலியாக உள்ளது. தற்போது கோட்டம்-49 முதல் 63 வரை TPF, LFZ, TASKFORCE ஒதுக்கப்பட்டுள்ள 2106 பணியாளர்களில் 965 பணியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் தற்போது 1141 காலிப்பணியிடங்களாக உள்ளது.

**துப்புரவு பணியாளர் தேவைப் பட்டியல் கணக்கீடு:**

| பகுதி எண் | வார்டு எண் | ஒப்பளிக்கப்ட்ட நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 10.05.2024 அன்று பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 31.05.2024 அன்று காலி பணியிடம் | தற்போது கோட்டம் வாரியாக குழுக்களில் பணிபுரியும் SHG துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 12 | 49 | 102 | 44 | 58 | 46 |
| | 50 | 130 | 36 | 94 | 67 |
| | 51 | 90 | 50 | 40 | 51 |
| | 52 | 126 | 48 | 78 | 56 |
| | 53 | 153 | 51 | 102 | 111 |
| | TPF | 34 | 19 | 15 | 19 |
| 13 | 54 | 109 | 48 | 61 | 50 |
| | 55 | 87 | 47 | 40 | 31 |
| | 56 | 101 | 46 | 55 | 35 |
| | 57 | 188 | 69 | 119 | 102 |
| | 60 | 187 | 58 | 129 | 96 |
| | LFZ | 42 | 19 | 23 | 38 |
| 14 | 58 | 158 | 85 | 73 | 82 |
| | 59 | 170 | 116 | 54 | 84 |
| | 61 | 169 | 85 | 84 | 66 |
| | 62 | 120 | 62 | 58 | 50 |
| | 63 | 117 | 75 | 42 | 44 |
| | TASK FORCE | 23 | 7 | 16 | 0 |
| **மொத்தம்** | | 2106 | 965 | 1141 | 1028 |

| | |
|---|---|
| ஒப்பளிக்கப்பட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 2106 |
| தற்போது பணிபுரியும் நிரந்தர பணியாள்ர்களின் எண்ணிக்கை | 965 |
| நிரந்தர துப்புரவு பணியார்கள் காலிப்பணியிடம் | 1141 |
| சுலாப் பணியாளர்களின் எண்ணிக்கை | 43 |
| நிரப்பப்படவேண்டிய SHG துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 1098 |
| தற்போது பணிபுரியும் SHGதுப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை (அதாவது நிதி ஆண்டு 2024-25, ஏப்ரல்- 16 முதல் மே-15 வரையுள்ள காலகட்டம்) | 963 |

தற்போது மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு காலிபணியிடங்களுக்கு அண்டை வீட்டு குழுக்கள் மூலம் தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்து துப்புரவு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மன்றத் தீர்மான எண்.645/2023, நாள்.29.12.2023ன்படி 43 எண்ணிக்கையிலான சுலாப் பணியாளர்களை நியமனம் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் மண்டலம் – 5ல் உள்ள இலவச கழிப்பிடங்களை பராமரிக்கும் பணிகள் தனியார் மயம் செய்யப்பட்ட காரணத்தால் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் காலிபணியிடத்தில் 43 எண்ணிக்கையிலான சுலாப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். எனவே, மண்டலம் – 5ல் நிரப்படவேண்டிய 1141 எண்ணிக்கையிலான பணியாளர்களில் 43 எண்ணிக்கையிலான சுலாப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டது போக மீதமுள்ள 963 (நிதி ஆலோசகர் ஆணையின்படி) காலிபணியிடங்களை தற்போது பணிபுரிந்து வரும் தற்காலிக SHG துப்புரவு பணியாளர்கள் மற்றும் கூடுதலாக ஏற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு அண்டை வீட்டு குழுக்கள் மூலமாக பணியமர்த்தி தொடர்ந்து பணி மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மைத்துறையின் சுற்றறிக்கையின்படி துப்புரவு பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.687/- தினக்கூலி வழங்கலாம் என குறிப்பிடப்பட்டு உள்ளது. எனவே 963 பணியாளர்களுக்கு 03.07.2024 முதல் 02.11.2024 வரை 123 நாட்களுக்கு ரூ.687X963X123 = ரூ.8,13,74,463/- (ரூபாய் எட்டு கோடியே பதிமூன்று இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து நாநூற்று அறுபத்தி மூன்று மட்டும்) தேவைப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பணிக்காக கணக்கு குறியீட்டு எண்.40-41-03, கணக்கு தலைப்பு எண் 210-100-601ன் கீழ் தீர்வு செய்ய வேண்டி உள்ளது.

மேலும், இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மண்டலம் – 5 வார்டு குழுவின் பின்னேற்புக்குட்பட்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி 12,13 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் 963 பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் 03.07.2024 முதல் 02.11.2024 வரை 4 மாதங்களுக்கு தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு அவசரம் அவசியம் கருதி 03.07.2024 முதல் தினக்கூலி வழங்க அனுமதி வேண்டியும்,

2) எதிர் வரும் காலத்தில் மண்டலம்-5 துப்புரவு பணியானது தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் இப்பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் அண்டை வீட்டு குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் இப்பணியாணையினை ரத்து செய்ய அனுமதி வேண்டியும்,

3) அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் பணிக்கப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை 963 க்கு மிகாமல் கோட்டங்களின் தன்மைக்கு ஏற்றவாறு தற்காலிக துப்புரவு பணியாளர்களை மண்டல அலுவலர்-5 அவர்களின் அளவிலேயே கோட்டங்களுக்கு இடையே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வேண்டியும்,

4) கூடுதலாக ஏற்பட்ட காலிபணியிடங்களுக்கு அண்டை வீட்டு குழுக்கள் மூலமாக பணியமர்த்திக்கொள்ளவும்,

5) தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பணியாளர்கள் தொடர்ந்து முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை என்றால் அவர்களை பணி மற்றும் குழுவிலிருந்து நீக்கம் செய்திடவும் அவர்களுக்கு பதிலாக வேறு பணியாளர்கள் குழுக்கள் மூலமாக நியமிக்க அனுமதி வேண்டியும்,

6) மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.687/- வீதம் 963 பணியாளர்களுக்கு 03.07.2024 முதல் 02.11.2024 வரை 123 நாட்களுக்கு ஆகும் செலவு தொகை ரூ.687 X 963 X 123 = ரூ.8,13,74,463/- (ரூபாய் எட்டு கோடியே பதிமூன்று இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து நாநூற்று அறுபத்தி மூன்று மட்டும்) ஆகும். மேலும் எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்படும் ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

7) மேற்படி பணிகளுக்கான செலவு தொகையை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210-100-601ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.49/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 21.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.81/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.11.பொ.சு.து.ந.க.எண்.எச்2/ 589 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:190/2024** **பொருள் எண்.82**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11 –பொது சுகாதாரத்துறை, கோட்டம்-143 முதல் 155 வரை - கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள சுயஉதவிக்குழு வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக களப்பணியாளர்கள் 238 தொழிலாளர்களின் பணிக்காலம் 07.07.2024 உடன் முடிவடைவதால் மேலும், 09.07.2024 முதல் ஆறு மாத காலத்திற்கு பணி நீடிக்க நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வளசரவாக்கம் பகுதியானது 143 முதல் 155 வரையிலான 13 கோட்டங்களை உள்ளடக்கியது. இதில் தோராயமாக 3121 சாலைகள்/ தெருக்கள், 65,686 வீடுகளும் 1,63,619 குடியிருப்புகளும், சுமார் 4.33 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதிகளில் உள்ள கூவம் ஆறு, விருகம்பாக்கம் கால்வாய், நொளம்பூர் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி தடையற்ற நீரோட்டத்தை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படாமல் இருக்க மற்றும் கொசு உற்பத்தியாகாமல் தடுக்கவும், மேலும் 132.4கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால்வாய் மற்றும் ஆறு கால்வாய்களில் ஆகாயத்தாமரை அகற்றவும், கொசு உற்பத்தியை தடுக்க சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 05.03.2022 நாளிட்ட வார்டு வரையறைக்கான ஆணையின்படி கோட்டங்களுக்கிடையே சில பகுதிகள் மாற்றம் பெற்றுள்ளதால் மண்டலம்-11ல் பகுதி-32, 33 மற்றும் 34-க்குட்பட்ட கோட்டங்களான 143 முதல் 155 வரை தேவையான பொதுசுகாதார நோய் தடுப்பு கள பணிகளுக்கு 225 தற்காலிக களப்பணியாளர்களை பணியமர்த்தப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது.

மன்றத் தீர்மன எண்.363/2023, நாள்.30.06.2023ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை மண்டலம்-11, கோட்டம் 143 முதல் 155 வரை சுகாதார களப்பணியினை மேற்கொள்ள பணியமர்த்தப்பட்ட 238 தற்காலிக களப்பணியாளர்களின் 09.07.2023 முதல் 07.07.2024 வரை நீடித்துப் பெறப்பட்ட பணிக்காலம் 07.07.2024 அன்றுடன் முடிவடைகிறது.

பொதுசுகாதாரத்துறை சார்ந்த நோய்கள் தடுப்பு பணிகளான மழை நீர் தேங்கும் வகையில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றுதல், சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடிக்கும் பணி, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யும் பணிகள், பருவமழை தொடங்க இருப்பதால் கொசு உற்பத்தி தடுக்கும் பணிகளான மருந்து தெளித்தல், புகைப்பரப்பும் பணிகள் மேற்கொள்ள அவசியமாகிறது. மேலும், பெருந்தொற்று காலங்களில் கொரோனா நோயாளி வீடுகளில் தினந்தோறும் சென்று கண்காணிக்கும் பணி, பேரிடர் காலங்களில் அனைத்து பொது சுகாதார பணியினை மேற்கொள்ளுதல் மற்றும் இது போன்ற எண்ணற்ற பொது சுகாதாரத்துறை சார்ந்த அனைத்து பணிகளையும் மேற்கொள்ளும் பணியாளர்கள் மிகவும் இன்றிமையாததாகும்.

மண்டலம்-11, கோட்டம்-143 முதல் 155 வரையுள்ள 13 கோட்டங்களில் 60 பூங்காக்கள், 77 அரசு அலுவலக கட்டிடங்கள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள் 92, வழிபாட்டுத்தலங்கள் 164, புதிய கட்டிடங்கள் 706 மற்றும் 26 அம்மா உணவகங்கள் உள்ளன.

மாநகர நல அலுவலர் அவர்களின், 16.06.2022 நாளிட்ட சுற்றறிக்கையின்படி மண்டலம்-11ல் மாடுகளை பிடிக்கும் பணிக்கு சுயஉதவிக்குழு மூலம் பணியமர்த்தப்பட்ட 225 தற்காலிக களப்பணியாளர்களில் 10 பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-11 கோட்டம்-143 முதல் 155 வரை 13 கோட்டங்களில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை 85516 உள்ளன, இதனை 170 குறுவட்டங்களாக பிரிக்கப்பட்டு ஒரு செக்டார் பணியாளர்களுக்கு 500 வீடுகள் வீதம் 170 செக்டார் பணியாளர்கள் பணி செய்கின்றனர். மழை நீர்க்கால்வாய்கள் மற்றும் பக்கவாட்டு கால்வாய்கள் மொத்த நீளம் 265 கி.மீ இக்கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கும் பணிக்கு 5 கி.மீட்டருக்கு ஒரு பணியாளர் வீதம் மொத்தம் 51 பணியாளர்களும், வாகனங்களில் புகைப்பரப்பும் பணிக்கு 4 பணியாளர்களும் கூவம் ஆறு மற்றும் விருகம்பாக்கம் கால்வாய்களில் ஆகாய தாமரைகள் அகற்றுதல் மற்றும் மருந்து தெளிக்கும் பணிக்கு 7 பணியாளர்களும் அத்துடன் மாடுபிடிக்கும் பணிக்கு 10 பணியாளர்களும் பணிபுரிகின்றனர். சுகாதார துறையில் மேற்கண்ட அனைத்து பணிகளுக்கும் மொத்தமாக 242 பணியாளர்கள் தேவைப்படுகின்றது. அவற்றில் நிரந்தர பணியாளர்கள் 4 பணியாளர்கள் உள்ளனர். மேலும் தற்போது சுகாதாரம் சம்மந்தப்பட்ட பணிசெய்ய 238 பணியாளர்கள் தேவைப்படுகின்றது.

எனவே, மண்டலம்-11ல் கோட்டம் வாரியாக தேவைப்படும் பணியாளர்களின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையின்படி,

**அட்டவணை - I**

| விவரம் | 143 | 144 | 145 | 146 | 147 | 148 | 149 | 150 | 151 | 152 | 153 | 154 | 155 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வீடுகளின் எண்ணிக்கை | 7555 | 5158 | 6610 | 7055 | 8110 | 6640 | 6580 | 7664 | 5684 | 5610 | 6610 | 5600 | 6840 | 85516 |
| செக்டார்களின் எண்ணிக்கை | 15 | 13 | 12 | 14 | 16 | 13 | 13 | 15 | 11 | 11 | 13 | 11 | 13 | 170 |
| மழைநீர் கால்வாய்/ பக்கவாட்ட கால்வாய் நீளம் (km) | 17 | 17 | 24 | 22 | 25 | 26 | 16 | 20 | 24 | 16 | 20 | 20 | 15 | 262 |
| கொசு மருத்து தெளிக்கும் பணி/ மழைநீர் கால்வாய்/ தூர் வாரும் பணிகள் | 3 | 3 | 5 | 4 | 5 | 5 | 3 | 4 | 5 | 3 | 4 | 4 | 3 | 51 |
| வாகனம் மூலம் புகை பரப்பும் பணி | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 4 |
| விருகம்பாக்கம் கால்வாய் / கூவம் ஆறு தூர் வாரும் பணி | 2 | 2 | 0 | 2 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 7 |
| மாடு பிடிக்கும் பணி | 0 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 10 |
| மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | 21 | 19 | 18 | 22 | 23 | 20 | 16 | 20 | 17 | 15 | 18 | 16 | 17 | 242 |
| நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 1 | 0 | 0 | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 |
| தற்போது தேவைப்படும் சுய உதவிக்குழு பணியாளர்களின் எண்ணிக்கை | 20 | 19 | 18 | 21 | 21 | 20 | 16 | 20 | 17 | 15 | 18 | 16 | 17 | 238 |

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 13.06.2023 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, விவரப்பட்டியல் வரிசை எண்.64ல் குறிப்பிட்டுள்ளவாறு தற்காலிக சுகாதார களப்பணியாளர்களுக்கு ஊதியம் 01.04.2023 முதல் ரூ.424/-லிருந்து ரூ.522/ஆக உயர்த்த மாநகர நல அலுவலர் அவர்களின் சுற்றறிக்கையின்படி அந்தந்த மண்டலத்திலேயே உயர்த்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

மாநகர நல அலுவலர் அவர்களின் 03.10.2023 நாளிட்ட கடிதத்தில், அரசாணை எண். (2D)36, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (J1) துறை, நாள் 16.06.2023ன்படி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைப்படி சேர்த்து தினக்கூலியாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.687/- என மன்ற தீர்மான எண் 516/2023, நாள்.29.09.2023ல் உயர்த்தி அனுமதி பெறப்பட்டுள்ளதால் அதனடிப்படையில் ஊதியம் உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 05.07.2023 முதல் உயர்த்தப்பட்ட தினக்கூலி வழங்கப்பட்டது.

எனவே, மண்டலம்-11ல் சுகாதாரப்பிரிவில் சுயஉதவிக்குழு மூலம் பணியமர்த்தப்பட்ட தற்காலிக சுகாதாரப் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு நியமித்துக் கொள்ள ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ | அட்டவணையின்படி மண்டலம்-11, பகுதி-32, 33 மற்றும் 34-க்குட்பட்ட கோட்டங்களான 143 முதல் 155 வரையிலான 13 கோட்டங்களிலும் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணிக்காக தற்காலிக மலேரியா பணியாளர்களை நாளொன்றிற்கு ரூ.687/-வீதம் ஆறு மாத காலத்திற்கு சுயஉதவிக்குழு மூலம் 238 தற்காலிக மலேரியா பணியாளர்களை 09.07.2024 முதல் 04.01.2025 வரை (6 மாதங்கள்) பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும், |
| ஆ | இப்பணிக்கான செலவினம் 238x180x687=2,94,31,080/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து முப்பத்தோராயிரத்து எண்பது மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும், |
| இ | இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-32-02 மற்றும் கணக்கு குறியீடு 210-10-06-02 நிரந்தரமற்றவர் சம்பளம் சுகாதார பணி என்ற தலைப்பின் 2024-2025 நிதியாண்டில் 2,94,31,080/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து முப்பத்தோராயிரத்து எண்பது மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யவும், |
| ஈ | இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-32-02 மற்றும் கணக்கு குறியீடு 210-10-06-02 நிரந்தரமற்றவர் சம்பளம் சுகாதார பணி என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும், |
| உ | தற்போது மன்ற தீர்மான எண்.516/2023, நாள்.29.09.2023ன்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.687/-யை தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு வழங்குவதற்கும், பின்னர் 2024-2025ஆம் நிதியாண்டில் இத்தொகையை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதியும், இதற்குரிய கூடுதல் தொகையினை மேற்கண்ட “ஈ” இனத்தில் குறிப்பிட்டுள்ள கணக்கு குறியீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யவும், |
| ஊ | இப்பணிக்கு ஒப்பம் கோருவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கையிலிருந்தும் விலக்கு அளிக்கவும், |

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.50/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 21.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீரமான எண்.82/2024ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ம.அ.6.நக.எண்.இ1/4207/2024</u>**

**<u>கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 22.06.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:191/2024** **பொருள் எண்.83**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்கு உட்பட்ட நம்மாழ்வார் பேட்டை சுப்பராயன் முதல் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக் கூட கட்டிடத்தினை இடித்து அகற்றவும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்டும் பணிக்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கும் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட நம்மாழ்வார்பேட்டை சுப்பராயன் முதல் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக்கூட கட்டிடமானது 1972ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1974ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் பொது மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் கொளத்தூர் மற்றும் எழும்பூர் தொகுதிக்குட்டபட்ட நீதிமன்ற வழக்குக்குட்பட்ட மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களை பாதுகாக்கப்பட்டு வருகிறது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் மேற்கண்ட சமுதாய நலக் கூடமானது பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாமல் மூடிய நிலையிலயே சுமார் 13 ஆண்டுகளுக்கு மேல் உள்ளதால் இப்பகுதி வாழ் ஏழை எளிய மக்கள் பயன்படுத்த முடியாமலும் மேலும் இக்கட்டிடமானது பராமரிப்பின்றி மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேற்கண்ட நம்மாழ்வார்பேட்டை சுப்பராயன் முதல் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக் கூட கட்டிடமானது பொதுமக்கள் கோரிக்கைக்கிணங்க இடித்து அகற்றும் பணி அவசியமாகிறது. இக்கட்டிட வளாகமானது 1865.95 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ளது .

இதில் அமைய பெற்றுள்ள கட்டிடமானது தரை தளம் 610.10 சதுர மீட்டரும், முதல் தளம் 610.10 சதுர மீட்டரும் உள்ளது. எனவே இப்பழுதடைந்த கட்டிடத்தில் உள்ள மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களை வேறொரு இடத்தில் மாற்றி வைத்து இக்கட்டிடத்தை இடித்து புதியதாக கட்டும் பணி அவசியமாகிறது.

தற்போது நம்மாழ்வார்பேட்டை சுப்பராயன் முதல் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக்கூட கட்டிடமானது கட்டிடத்துறையின் 07.07.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் உள்ளவாறு மதிப்பீட்டினை நிர்ணயிக்க வேண்டியுள்ளதால் சமுதாய நல கூடத்தினை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ3,000,00/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட நம்மாழ்வார்பேட்டை சுப்பராயன் முதல் தெருவில் அமைந்துள்ள சமுதாய நல கூட கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| 1. சமுதாய நல கூடம் இடிக்கும்பணி | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-75க்குட்பட்ட நம்மாழ்வார் பேட்டை சுப்பராயன் முதல் தெருவில் அமைந்துள்ள சமுதாய நல கூடகட்டிடம் |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1973 – 1974 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் 610.10 சதுர மீட்டர்<br>முதல் தளம் 610.10 சதுர மீட்டர்<br>மொத்தம் 1220.20 சதுர மீட்டர் |

| | | |
|---|---|---|
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1865.95 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தகமதிப்பு ? | ரூ.2,88,781.04/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதியதாக சமுதாய நல கூடம் அமைக்கும் பணி |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மாமன்ற உறுப்பினர் அவர்கள் |

எனவே,

1. மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட நம்மாழ்வார் பேட்டை சுப்பராயன் முதல் தெருவில் அமைந்துள்ள சமுதாய நல கூடகட்டிடத்தை இடிக்கவும் ,
2. மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட நம்மாழ்வார்பேட்டை சுப்பராயன் முதல் தெருவில் அமைந்துள்ள சமுதாய நல கூடகட்டிடத்தை இடித்து அகற்றிய இடத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்ட பின் அக்கட்டிடத்தினை, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், மேலும் அடிநிலம் மற்றும் கட்டிடத்தின் உரிமை, பெருநகர சென்னை மாநகராட்சி வசம் மட்டுமே இருக்க வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்டும் பணிக்கு அரசின் அனுமதியை எதிர்நோக்கி முன்நுழைவு அனுமதி வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 19.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.48/2024ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**<u>ம.அ.6ந.க.எண்.இ1/ 4213 /2024</u>**

**<u>கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 22.06.2024 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:192/2024** **பொருள் எண்.84**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள சமுதாய நல கூட கட்டிடத்தை இடித்து அகற்றவும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்டும் பணிக்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கும் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள சமுதாய நலக் கூடம் கட்டிடம் சுமார் 1423.861 சதுர மீட்டர் நிலப்பரப்பில் 2001ஆம் ஆண்டு கட்டப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், பொதுமக்களின் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடிப்பது அவசியமாகிறது.

கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 01.09.2023 நாளிட்ட சுற்றறிக்கையின்படி தற்போதுள்ள கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் 10,000 சதுர அடி முதல் 15,000 சதுர அடி வரை கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள சமுதாய நலக் கூட கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள சமுதாய நல கூடம் கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2001 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரை தளம் 506 சதுர மீட்டர்<br>முதல் தளம் 506 சதுர மீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1,423.861 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ.5500879.74 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் உள்ளது |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மாண்புமிகு மேயர் அவர்கள் |

எனவே,

1. மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள சமுதாய நல கூடம் கட்டிடத்தை இடிப்பதற்கும்,

2. மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, சந்திரயோகி சமாதி சாலையில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடம் கட்டிடத்தை இடித்து அகற்றிய இடத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்ட பின் அக்கட்டிடத்தினை, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், மேலும் அடிநிலம் மற்றும் கட்டிடத்தின் உரிமை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் மட்டுமே இருக்க வேண்டும், என்ற நிபந்தனைக்குட்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்டும் பணிக்கு அரசின் அனுமதியை எதிர்நோக்கி முன்நுழைவு அனுமதி வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 19.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.49/2024ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.6.ந.க.எண்.இ1/ 4106 /2024**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:193/2024** **பொருள் எண்.85**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6 – பகுதி-17, வார்டு- 75, சுப்புராயன் 2வது தெருவில் அமைந்துள்ள பழுதடைத்த நகர நல வாழ்வு மையம் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சுப்புராயன் 2வது தெருவில் அமைந்துள்ள நகர நல வாழ்வு மையம் பழுதடைந்த கட்டிடம் சுமார் 237.45 சதுர மீட்டர் நிலப்பரப்பில் தரைதளம் மற்றும் முதல் தளம் 1960ஆம் ஆண்டு கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இக்கட்டிடம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் புற நோயாளிகள் நலனை கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடித்து கட்டுவது அவசியமாகிறது.

தற்போதுள்ள கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் (கது.ந.க.எண்.பி1/1805-1/2023) குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் 5000 முதல் 7500 சதுர அடி வரை கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6, பகுதி-17 வார்டு-75க்குட்பட்ட சுப்புராயன் 2வது தெருவில் அமைந்துள்ள நகர நல வாழ்வு மையம் பழுதடைந்த கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு-75, சுப்புராயன் 2வது தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நகர நல வாழ்வு மையம் கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1960 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைதளம் – 237.45 சதுர மீட்டர்<br>முதல் தளம் 237.45 சதுர மீட்டர் (474. 90) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 474. 90 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 96037.29/. |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | நகர நல வாழ்வு மையம் புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மாமன்ற உறுப்பினர் |

எனவே,

1. மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சுப்புராயன் 2வது தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நகர நல வாழ்வு மைய கட்டிடத்தை இடிப்பதற்கும்,
2. மண்டலம்-6, பகுதி-17 வார்டு-75, சுப்புராயன் 2வது தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நகர நல வாழ்வு மைய கட்டிடத்தை இடிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 1,50,000-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 20.06.2024 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 22.06.2024 அன்று தீர்மான எண்.51/2024ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********